# மனோகரி

அல்லது

# மரணத் தீர்ப்பு

ஆசிரியை



சகோதரி வி. பாலம்மாள்

காபிரைட்

ஸ்ரீமதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

1—0—0 வெளிநாடு 1—4—0
(தபாற் கூலி வேறு.)

O-,3MBL1,M
N134
113256

# மனோகரி

அல்லது

# மரணத் தீர்ப்பு

ஆசிரியை

சகோதரி வி. பாலம்மாள்

(சாணக்ய சாகஸம், உண்மைக்காதல், திலகவதி, பரோபகாரம், விருந்தில் விலங்கு, அவள் இஷ்டம், மன்னிப்பு, பணச்செருக்கு இவைகளின் ஆசிரியை.)

ஸ்ரீமதி பிரசுராலயம்,

சென்னை.

1934

## “ தமிழ் நாடு ”

கற்பக மலரின் ஓர் இதழாகிய “மன்னிப்பு” என்ற சிறந்த புத்தகமொன்று வரப்பெற்றோம். இக்கதை பெரியதோர் நாவலா யில்லாவிட்டாலும் படிக்கப் படிக்க இன்பந் தரும் எளிய இனிய நடையில் சிறந்ததோர் கதையாயிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஒழுக்கத்தின் சிறப்பையும், ஒழுக்கங் குன்றுவதால் மனிதர் அழியும் தன்மையையும் சகோதரி படம் பிடித்தாற்போல் கதையில் விளக்கியிருப்பது போற்றத் தக்கது. மேலும் இல்லற வாழ்க்கையின் மேன்மை யாவருள்ளத்திலும் தெளிவாகப் படும் முறையிலும் இக்கதையை எழுதி யிருப்பதால், பெண்கள் இத்தகைய புத்தகங்களைப் படிக்க வேண்டியது அவசியமாகும். குடும்ப நிர்வாகம் போன்றவைகளில் பெண்களுக்கு ஆண்களைவிட அதிகத் திறமையு முண்டென்பதையும் இக்கதை நிரூபிக்கிறது.

## “ இந்தியா ”

சகோதரி வி. பாலம்மாள் இயற்றிய “மன்னிப்பு” (கற்பக மலர் 3) என்னும் சிறு கதை நமது பார்வைக்கு வந்தது. மனித வாழ்வின் பல அரிய உண்மைகள் இச் சிறு கதையின் மூலமாக வெளி வந்துள்ளன. கதையின் வசன நடை அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ளத் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. இச் சிறு கதையைப் பொதுவாக அனைவரும் முக்கியமாகப் பெண்மணிகளும் வாங்கிப் படிக்கவேண்டிய தவசியம்.

———

# தமிழ் நாடு

## மதிப்புரை

---

### கற்பக மலர்

சகோதரி பாலம்மாளை ஆசிரியையாகக்கொண்டு வெளியிடப் பெற்றுவரும் கற்பக மலர் என்ற சிறுகதைப் புத்தகங்களில் 'விருந்தில் விலங்கு', 'உற்சவம்' என்னும் இரு சிறு கற்பனைக் கதைகளைக் கொண்டு ஒரு புத்தகமும், 'அவள் இஷ்டம்', 'கல்லட்டிகை', 'ஒப்பந்தம்' என்ற மூன்று சிறு கதைகள் கொண்டதோர் புத்தகமுமாக முதலிரு இதழ்கள் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். 'சிந்தாமணி' என்ற மாசிகையைத் திறம்பட நடத்தித் தமிழ் நாட்டில் சிறப்புற்று விளங்கும் சகோதரி பாலம்மையின் கதை எழுதும் திறமையைப்பற்றி நாம் அதிகம் விளக்கத் தேவையில்லை. நமக்குக் கிடைத்துள்ள முதற் புத்தகத்தில் தன் உண்மை நிலையையும் யோக்கியதையையும் மறைத்து, படாடோபங் காட்டித் தன்னைப் பெரிய மனிதனுக்கிக் கொண்டு ஊரை யேமாற்றி வாழ்வோரின் பரிதாபகரமான முடிவைப்பற்றியும், டாம்பீகச் செலவின் கேட்டைப் பற்றியும் எளிய நடையில் தெளிவுற விளக்கப்பட்டுளது. தவிர, இந்நூல்களின் மூலம் உலகில் நடைபெறும் அக்கிரமங்கள், மோசக் கருத்துகளை விளக்கி, அவ்விதம் தீயவழியில் ஈடுபடுமுன் மனச்சாட்சி தடுமாறுங் கோலத்தையும் கண்ணாடி போன்று ஆசிரியை எடுத்துக்காட்டி யிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. இரண்டாவது புத்தகத்தில், பொதுவாக சமூகத்தில் ஆண் பெண்களிடம் உள்ள குறைகளையும், அசட்டுத் தனத்தையும் கதை மூலம் எடுத்துக் காட்டியுள்ளது இரு சாராருக்கும் நல்வழி போதிப்பதா யிருக்கிறது.

இதில் விளக்கப்பெற்றிருக்கும் 5 சிறு கதைகளும் ஐந்து அரிய சமூக சீர்திருத்த கதா ரத்தினங்களென்றால் மிகையாகாது.

# கற்பக மலர்

(இனிய சிறு கதைகள்)

ஆசிரியை

சகோதரி வி. பாலம்மாள்

| | | | | |
|---|---|---|---|---|
| விருந்தில் விலங்கு | உள் நாடு | ... 0-3-0 | வெளி நாடு | 0-4-0 |
| அவள் இஷ்டம் | ,, | ... 0-3-0 | ,, | 0-4-0 |
| மன்னிப்பு | ,, | ... 0-4-0 | ,, | 0-5-0 |

(தபாற்கூலி வேறு)

இவர் யார் (அச்சில்)

## கிடைக்கும் இடங்கள்.

மெஸர்ஸ். ஹெக்கின்பாதம் கம்பெனி } ரயில்வே புக்ஸ்டால்
சுதேசமித்திரன் } கள்.

சென்னை—ஸ்ரீமதி பிரசுராலயம், திருவல்லிக்கேணி.

ரங்கூன்—நவீன கதா புக் டிபோ.

கொழும்பு—K. W. சங்கரன் பிள்ளை, 281.
2-வது டிவிஷன், மராதானை.

---

## கற்பக மலர் சிறு கதைகள்.

இரண்டு ரூபாய் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்பவருக்கு தபாற் செலவின்றி (இரண்டு ரூபாயும் செல்லுபடி யாகும்வரை) புத்தகங்கள் வெளியானதும் உடனுக்குடன் அனுப்பித்தரப்படும்.

மானேஜர்,
ஸ்ரீமதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

# மனோகரி

## அல்லது

# மரணத் தீர்ப்பு

——:(o):——

## 1-வது அதிகாரம்

ஆ தெய்வமே! ஐயோ கடவுளே! ஆகா என் தலை விதியே! நான் ஒரு மூடன். அல்ல, நான் ஒரு பாதகன், கொலைகாரன், கொடும்பாபி, சண்டாளன். அல்ல, நான் ஒரு மூடன்தான். நான் மூடனாக இல்லா திருப்பின் இவ்விதம் செய்து முடிப்பேனா? செய்ததை யெண்ணி இவ்வாறு மனந்துடிப்பேனா? சகிக்கொணு மனத் துயரடைவேனா? இனி அழுதாற் பயனென்ன? நொந்தா லாவதென்ன? சென்று போனதைச் சிந்தித்துப் பல னென்ன? எது எப்படி நடக்கவேண்டுமென்று கடவுளால் விதிக்கப்பட்டிருந்ததோ அது அப்படியே நடந்து விட்டது. மனிதன் தான் என்ற அகம்பாவ புத்தியால் தனக்கு நேரிடும் கஷ்டசுகங்களுக்குத் தானே காரணமென்று நினைக்கின்றான். ஆனால் மனிதனின் வாழ் நாட்களில் நேறக்கூடியவைகளை யெல்லாம் கடவுள் பிரபஞ்சமென்ற பனை ஏட்டில் தலை விதி என்ற தலைப்பின்கீழ் அமைப்பு என்ற எழுத்தாணி கொண்டு ஊழ்வினை என்ற விஷயங்களை எழுதி வினைப்பயன் என்ற முத்திரையிட்டு விடுகிறார். மெய்ஞானிகளும் முனீச் வரர்களும் வினைப்பயன் என்ற முத்திரையை ஆன்மஞான மென்ற ஆயுதத்தால் உடைத்து உள்ளிருக்கும் கட்டளையை

நன்கறிந்துகொண்டு "எல்லாம் ஈசன் செயல்" "அவனன்றி அணுவுமசையாது" என்று சுக துக்கங்களைச் சமமாகப் பாவித்து நடந்துகொள்கிறார்கள். பேதை மனிதன் தன் இஷ்டம்போலவே தனது வாழ்நாட்களைக் கடத்திவிடலா மென்றெண்ணி இதற்கு எதிரிடையான காரியங்கள் (ஊழ் வினையால்) நடை பெறும்போது தெய்வத்தை நொந்து தத்தளிக்கின்றான், மனம் பதைக்கின்றான். ஒவ்வொருவ னும் தான் செய்த காரியங்களால் விளையும் நன்மை தீமை களை யனுபவிக்காமல் தப்பமுடியுமா? நான் செய்த தவறுக்கேற்ற பயனை யனுபவிக்குந்தறுவாயில் வீணாகப் பிரலாபிப்பதாலும் வாய்விட்டலறுவதாலும் ஆவதென்ன? அப்பப்பா! எவ்வளவு பயங்கரமான செய்கை, எவ்வளவு பரிதாபகரமான முடிவு! ஐயோ! நினைக்க நினைக்க என் நெஞ்சம் பதைபதைக்கின்றதே! என்னால் சகிக்க முடிய வில்லையே. நான் படுந்துயரத்திற்குக் காரணம் யாதென்பதை நான் வெளியிட்டாலன்றி ஒரு காலத்திலும் அது வெளி வரப் போவதே இல்லையே. நான் அதை வெளியிடாமல் அடக்கி வைப்பதெப்படி? என்னைப்போல் யாராவது இத் தகைய காரியஞ்செய்து மீளாப் பாபத்திற்கும் மாளா நரகத் திற்கும் ஆளாய்விடக் கூடுமென்ற எண்ணத்தால் என் துக்ககரமான சரித்திரத்தை வெளியிடத் துணிகின்றேன். வாசகர்களே! இப்பாதகன் சரித்திரத்தை ஏன் படித்தோ மென்று என்னை யிகழாதீர்கள். என்னை மன்னியுங்கள்! என்னிடம் இரக்கங் கொள்ளுங்கள். நீங்கள் சாந்த சித்தத் துடன் யோசித்தால் நான் செய்த தவறுக்கு என் தலைவிதி காரணமன்றி நான் ஒன்றுக்கும் காரணமல்ல என்ற உண்மையை நன்கறிந்து கொள்ளுகிறீர்கள் அன்றோ? இக்காரணத்தால் உங்கள் புனிதமான மனதில் என்னைப்

பற்றிச் சிறிதேனும் பரிதாபப்படுங்கள். அதனாலாவது என் ஆன்மா சாந்தியடையட்டும்.

அறிவாளிகளே! உலகில் உங்களிடையே பெரும்பாலும் வழங்கும் சொற்களில் முக்கியமானதும், உங்கள் வாழ்க்கைக்கு வேர் போன்றதும், உங்கள் சுக சந்தோஷங்களுக்கு ஆதாரமானதும் உங்களை ஒரு நிலைப்படுத்தி வாழச் செய்வதும், இம்மை மறுமைக் குரியவற்றையளிப்பதும், கூட்டுறவையும், ஒற்றுமையையும் ஒருங்கே விளைவிப்பதும், உலகவின்பத்திற்கு மூலாதாரமாயிருப்பதும், மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாததும், உலக இயக்கத்திற்கு மூலகாரணமாகவும் இருக்கும் அன்பு என்ற அரும்பொருளை நீங்கள் நன்கறிவீர்கள். நேயர்களே! அன்பு என்றால் என்ன? அன்பு எத்தனை வகை கொண்டது? அன்பில் உள்ள சூட்சுமம் என்ன? அன்பை எவ்விதங் கொண்டாடுவது? ஒரு பொருளின்மீது அளவு கடந்துண்டாகும் ஆர்வத்தை அன்பு என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆம், ஒன்றின் மீதுண்டாகும் பற்றுதலை அன்பு என்றே சொல்லலாம். ஆனால் அவ்வன்பைச் செலுத்துவதில் பாகுபாடு உண்டல்லவா. தாயிடத்தன்பு, மனைவியிடமன்பு, மக்கள்மீது அன்பு, பெற்றோரிடமன்பு, உற்றோரிடமன்பு, ஊராரிடமன்பு. இவ்வன்பில் ஓரிடத்துண்டான அன்பை ஓரேவிதத்தில் செலுத்துதல் நியாயமன்றி அன்பை மாற்றி மாற்றிக் கைகொள்வதால் நன்மையுண்டா? ஓரிடத்திலுண்டான அன்பு பங்கப்படுமாயின் அப்பொருளை அடியோடு மறந்துவிடுதலும் சாத்தியமற்றதா யிருக்கின்றதே. மனிதவாழ்க்கை அன்புமயமானது. அதைக் குழவிப் பருவமிருந்து கிழப்பருவம்வரைக் கைப்பற்றி நடத்தல்

அவசியம். அன்பை முன்னிட்டுச் செய்யும் காரியங்கள் நன்மை விளைவிப்பனவாயிருத்தல் வேண்டும். அன்பு என்றால் அதன் முடிவு ஆனந்தமயமாக இருக்கவேண்டாமா? அன்பின் முடிவு கொலை! அன்பின் முதிர்ச்சி அளவற்ற துயர்? அன்பின் பயன் நரகக்குழி! அன்பின் பயன் உயிர் வதை என நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? நல்ல அதிருஷ்ட மென்பதே இன்னதென் றறியாது துரதிருஷ்டத்திற் கென்றே பிறந்திருக்கும் நான் இவ்வன்பை—புனிதமான அன்பை—ஒப்புயர்வற்ற அன்பைக் கொண்டேன். நான் ஒரு பொருளில் என் முழு அன்பையும் செலுத்தினேன்; ஒரு சிறிதும் சலனமென்பதற்று ஓரே நிலையிற் பற்றுதல் வைத்துச் சிந்தித்திருந்த பொருள்—என் மெய்யன்பிற்கு நிலைகளமா யிருந்த பொருள்—என் கைக்கெட்டாது என் கண்காணப் பிறர் வசப்படுமாயின் இதுகண்டு என் மனம் சகிப்பதெங்ஙனம்? என்றால் அன்பு செலுத்தப்பட்டு வந்த பொருளை நான் கைகொள்ள மாட்டாதவனானேன். இதனால் இக்கொடிய துக்கம் என் அறிவைக் கெடுத்து விட்டதென்று எண்ணாதீர்கள். என்னைக் கெடுத்ததும், என் அறிவைக் கெடுத்ததும், என் வாழ்க்கையைக் கெடுத்ததும், என் நல்லொழுக்கத்திற்கு ஏற்ற பயன் கிடைக்காமற் செய்ததும், என்னை இந்நிலைக் காளாக்கியதும் அன்பே யாகும். அன்பை எதுவரையில் எம்முறையில் உபயோகிப்ப தென்ற பாகுபாடில்லாது நான் அதை உபயோகித்தேன். ஓரே பொருளில் அன்பை ஓரே விதமாகச் செலுத்துதலே நீதியாகும். அன்பைப் பலவிதங்களில் உபயோகித்தல் மூடச் செயல் என்பதை நான் அறியாமற் போனேன். அதனால் இப்பொழுதேற்பட்டிருக்கும் முடிவுகண்டு திகைப் படையவும் ஆச்சரியப்படவும் இடமே இல்லை.

அன்பர்களே! நான் எனது பாலியப்பருவம் முதல் ஓர் அழகிய பூங்கொடியிடத்தில் என் அன்பைச் செலுத்தினேன். அக்கொடியை என் வீட்டில் வைத்துப் படரச் செய்யலாமென்றிருந்தேன். அதற்கு என் நன்னெறியாகும் தண்ணீர் விட்டுப் பாதுகாக்கவெண்ணினேன். அது என் வசப்படும் காலத்தை எதிர்பார்த்து அதன்மீது என் கை படாது வெகு ஜாக்கிரதையுடன் கவனித்திருந்தேன். காற்றில் அசைந்தாடி வளர்ந்து வந்த அவ்விளங்கொடி பந்தலிற் படரவேண்டிய தருணத்தை யடைந்தது. உயர்ந்த பந்தலின்மீது தங்கு தடையற்றுப் படர்ந்து நறுமலர் கொண்டு விளங்கவேண்டிய அக்கொடியின் பெயர் என்ன தெரியுமா? நான் நேசித்த இளங்கொடி இன்று மலர்ந்து நாளை வாடிவிடும் பச்சைக்கொடி யன்று. ஒரு காலத்தில் மலர்களைச் சொறிந்து மறு காலத்தில் இலைகளை யுதிர்த்துவிடும் இளங்கொடியல்ல. என் மனதில் வேரூன்றி, என் தோளிற் படர்ந்து என் வீட்டை யலங்கரிக்கவிருந்த நறுமலர் கொண்ட பொற்கொடியின் பெயர் மனோகரி. நான் மனோகரியை நேசித்ததற் கேற்றவாறு அவளும் என்னிடம் அன்பு கொண்டிருந்தாள். இளமைப் பருவமிருந்து விளையாட்டின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இந்நட்பு வயது முதிர முதிரச் சற்றும் மாறாத நிலையில் எங்கள் மனதில் வேரூன்றிக் கொண்டே வந்தது. மனோகரி என்னை அத்தை மகன் என்ற முறையில் நேசித்தாள். அவளைக் காட்டிலும் வயதில் முதிர்ந்தவனாகையால் என் அன்பானது ஆரம்பம் முதல் மனோகரியிடம் காதல் ரூபமாகவே பரிணமித்து வந்தது. பந்து முறையை யுத்தேசித்து மனோகரிக்கேற்ற கணவன் நானே என்று ஊரார் சொல்லும் சொற்கள் என்னைப் பரவசப்படுத்தின. இச்சொற்களால் நான் கரைகடந்த

சந்தோஷ வெள்ளத்திலாழ்ந்து கிடந்தேன். என் மனம் சிந்தித்திருப்பதை — நான் எண்ணியிருப்பதை — எடுத்துரைக்குமிச் சொற்களை தெய்விகச் சொற்களாகும் ஆகாய வாணி யெனமதித்து உள்ளம் பூரித்தேன்; பெருமகிழ்ச்சி கொண்டேன்; பேரின்ப நிலையடைந்தேன்; பேரானந்த மடைந்தேன். இருந்தும் இதற்கிடையே என் மனம் அடிக்கடி அதைரியப்பட்டு வந்த காரணத்தையும் நான் தெரிவித்தலவசியமே. அதாவது, துரதிருஷ்டத்திற்கென்றே பிறந்துள்ள எனக்குக் கடவுள் அங்க லக்ஷணத்தையும் முக வசீகரத்தையு மளித்திருந்தாரன்றி அழகை இரட்டிக்கச் செய்வதும் குரூபத்தை மறையச் செய்யக்கூடிய திறமை கொண்டதுமான செல்வப் பெருக்கைமட்டும் ஒரு சிறிது மளிக்காமல் என்னை வஞ்சித்திருந்தார். எனக்குச் சிறு வயதிலேயே என் தந்தை இறந்துவிட்டமையால் என் தாய் என்னுடன் என் மாமன் வீட்டிலேயே வசித்து வந்தாள். மாமன் மகள் என்ற வழியில் நான் மனோகரியை யடைவது பொருத்தமானதாயினும் அவளுடைய வனப்பிற்கும் அவள் தந்தையின் செல்வத்திற்கும் நான் மருமகனாக ஏற்படல் முடியுமா வென்பதை நான் நினைக்குங்கால் என் மனோரதம் எவ்விதம் முடியுமோ வென்று நானடிக்கடி சிந்திப்பேன். அப்பொழுது என் மனத்திலுள்ள சந்தோஷமெல்லாம் மாயமாய் விடும்; நம்பிக்கை இருந்த விடந்தெரியாது ஓடி ஒளிந்து விடும். நெடுநேரம் ஒன்றுந்தோன்றாத நிலையி லிருப்பேன். பணமே! உன் பிரபாவந்தானென்னே? ஆகா உன்னாலன்றோ பலர் வஞ்சிக்கப்படுகின்றனர். அச்சமயம் என் மனதைத் திடப்படுத்தக் கூடிய எண்ணமொன்று உதிக்கும். அதாவது, 'கைநிறைந்த பொருளிலும் கண் நிறைந்த கணவனே மேல்' என்பதை மனோகரி அறிவாள்

என்பதே. தக்க படிப்பும், வனப்பும் நற்குணமுமுள்ள ஆடவனுக்குப் பெரும் பொருள் இல்லாதது ஓர் குறையாக ஆகாதென நான் தெளிவேன். இத்தைரியத்தால் கவலைக் கடலினின்றும் கரையேறி வந்து விடுவேன். ஏன்? நான் நினைக்கும் சமாதானம் சரியானது தானே? இருந்தபோதிலும் நான் அடிக்கடி சந்தேகம் கொள்ளப் போதிய காரணமும் வளர்ந்து கொண்டே வந்தது. ஏனெனில், நமது சமூகத்தில் பெண்ணின் தீர்மானங்கொண்டே மருமகனைத் தேர்ந்தெடுத்தல் வழக்கமில்லையன்றோ. பெண்கள் சுதந்திரம் என்று பேசித்திரியும் அயல்நாடுகளிலும் பெற்றோர் இஷ்டப்படிக்கே பெண்ணின் மணம் நடைபெறுகிறதன்றி பக்குவ வயதடைந்திருந்தும் பெண்மக்கள் தமக்கேற்ற கணவனைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய சுதந்திரம் பெறுவது துர்லாபமாகஇருக்கின்றதே. அவ்விதமாக விவாகமென்ற சடங்கை, ஆயுள் முடிய நீக்கப்படாத—நீக்கமுடியாத—கட்டுப்பாட்டை உலக விவகாரம் ஒரு சிறிது மறியாத பேதைப் பருவத்திலிருக்கும் பெண்பாலின் இஷ்டப்படி விடுவதிலும் விளையக்கூடிய தீங்குகள் பல. இதற்கேற்றபடி மனோகரியின் தந்தை தன் மகளைப் பெரும் பணக்காரனொருவனுக்கு மணம் முடிக்கக் கருதியிருந்தார். மனோகரியின் அண்ணனும் நானும் ஒரே கலாசாலையிற் படித்த பள்ளித் தோழர்களாவோம். மனோகரியின் தாய்க்கு என்னையே மருமகனாயடைய வேண்டுமென்பது விருப்பம். இக்காரணங்களால் அவ்விருவரும் மனோகரியை எனக்கே மணம் செய்விக்க வேண்டுமென்று தீர்மானித்து ராதாகிருஷ்ணனையும் இதற்குடன்படும்படி வற்புறுத்தி வந்தார்கள். இதனால் மனோகரி எனக்குக் கிடைப்பாளென்று எண்ணி மனக்களிப்புடன் காலங் கழிக்கலானேன்.

## 2-வது அதிகாரம்

துன்பமே சரணமென்றடைய விருக்கும் என் வாழ்நாளில் நான் மனமகிழ்ந்த நாள் அந்நாள் ஒன்றே. அந் நந்நாளை இன்று, இச்சமயம் நினைப்பேனாயினும் எனக் களவற்ற சந்தோஷமுண்டாக்குமானால் அந்நாளின் உயர்வை என்னென்று எடுத்துரைப்பேன். அந்நாளைப் போலவே எந்நாளும் இருந்திருக்குமாயின் என்னைப்போல் பாக்கிய சாலியான மனிதன் வேறு உளனோ. நான் பந்நாட்களா கச் சிந்தித்தும் இடை யிடையே சந்தேகத்தால் மனந்தவித் தும் ஒருவாறு மனந்தெளிந்தும் எதிர்ப்பார்த்திருந்த காரி யம் கைகூடுமென்ற சொல்லை நான் செவியாறக் கேட்பேனா யின், எனக்கே தம் பெண் மனோகரியை மணம் முடிப்பதாக ராதாகிருஷ்ணன் என் தாயிடம் அறிவிப்பாராயின், 'மனோ கரியை விவாகிப்பதில் உனக்குப் பிரியந்தானே', என்று தாய் என்னைக் கேட்பாளாயின் இதுவன்றோ நான் எதிர்ப் பார்த்திருந்த நந்நாளாகும். மனோகரியை மருமகளாயடைய வேண்டுமென்பதே தனது நெடுநாளைய விருப்பமென்று என் தாய் தன் தமையனிடம் தெரிவித்தாள். கூடியசீக்கிரம் எனக்கும் மனோகரிக்கும் விவாகத்தை நடத்திவிடுவதெனத் தீர்மானிக்கப்படவே நான் இன்பக்கடலிலாழ்ந்துகிடந்தேன்.

வாசகர்களே! ஒரு காரியம் இனிது நடைபெறுவதற்கு மனிதப்பிரயத்தினம் அவசியமா, அல்லது தெய்வயத் தினம் முக்கியமா என்று யோசிப்போமாயின் இரண்டும் முக்கியமென்றே சொல்லல் வேண்டும். இவ்விரண்டில் முந்தி ஆரம்பிப்பது மனிதப்பிரயத்தினமா அல்லது தெய்வயத்தினமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போ மாயின் எது முந்தி எது பிந்தி என்று நம்மால் தீர்மானிக்க

முடியாமலிருக்கிறது. தெய்வத்தின் செயலில்லாது மனிதன் மனதில் ஒரு எண்ணம் உதிக்குமா? மனிதனின் முயற்சியில்லாமல் தெய்வச் செயல் கை கூடுமா? தெய்வச்செயலும் அதனுல் ஏவப்பெற்ற மனிதப் பிரயத்தினமும் சில சமயம் வீணாய் விடுகின்றனவே. ஓகோ! சரிதான். இவ்விரண்டையும் மாறுபடச் செய்யும் தன்மையைத்தான் ஊழ்வினையென்றும் காலபல மென்றும் பெரியோர் சொல்லுகிருர்களோ. ஒரு காரியத்தில் மனிதன் மெத்த உற்சாகத்துடன் முயற்சித்து அது கை கூடுவதற்கான அறிகுறிகளும் ஏற்பட்டபின், கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லை என்ற நியாயப்படி அக்காரியம் நடைபெருது தடைபடுமானுல் அதனுலேற்படுந் துக்கத்தை சகிப்ப தெங்ஙனம்? இச்சமயம் தலைவிதியென்றும் கால பலமென்றும் வேதாந்தம் பேசுவீர்களாயின் இச்சமாதானம் எனக்குத் தேவையில்லை. நான் இதை ஒப்புக்கொள்ள முடியாது. சுக சந்தோஷங்களுடனிருக்கும் சமயம் மனிதனுக்கு வேதாந்த உபதேசம் அவசியமேயன்றி மனத்துயருடன் வருந்தும் சமயம் வேதாந்தத்திற்கு இவன் செவி சாய்ப்பானே? என் சந்தோஷகரமான சந்தர்ப்பத்தை இக் காலபலம் நெருக்கிற்று. மகனுக்கு விவாகம் முடித்துக் காண வேண்டுமென்று அவாவுற்றிருந்த என் தாய் திடீரென நோய் வாய்ப்பட்டு வருந்தலானுள். உள்ளூர் வைத்தியம் பயனளிக்கவில்லை. தக்க வைத்தியர்களைக் கொண்டு பரிசோதித்ததில் என் தாய்க்குக் காசநோய் ஏற்பட்டுள்ளதென்றும், ஜனச் சந்தடியற்றுக் கடலோரத்திலிருக்கும் குமாரபுரமென்ற ஊருக்கு நோயாளியையழைத்துச் சென்ருல் விரைவில் குணமேற்படு மென்றும் அறிந்தேன். இனி அரைக்கணமும் தாமதமின்றி புறப்பட வேண்டுமென்றும் இல்லையேல் என் தாய் பிழைப்பதரிது

என்றும் வைத்தியர் என்னை துரிதப்படுத்தினர். விவாகத்தைமுடித்துக்கொண்டு இரண்டு வாரம் கழித்துக் குமாரபுரம் செல்லலாமென்று மனோகரியின் தந்தை வற்புறுத்தினர். மனோகரியை மனைவியாயடைய நான் நெடு நாட்களாகப் பெருந்தவம் புரிந்து வருகின்றேனாயினும், இக்காரியம் கைகூடவேண்டுமே என்று நான் சிந்தித்துருகியது உண்மையாயினும், சர்வாங்க சுந்தரியாக—பொறுமையே பூஷணமாக—அடக்கமே ஆபரணமாக—அழகே உருவாக—அன்பே வடிவாக—எனது சுக வாழ்க்கைக்கு நிலைக்களமாக—எனது மெய்யன்பிற் கிருப்பிடமாக விளங்கும் மனோகரியின் திருவுருவம் என் மனக்கண் முன்னிலையில் செவ்வனே வரையப்பட்டிருந்ததாயினும், மனோகரியின் தீங்குரல் என் செவிகளுக்கும் திருமேனி என் கண்களுக்கும் இனிய சம்பாஷணை என் மனதிற்கும் இடைவிடாது பெரும் விருந்தளித்து வந்ததாயினும் எனக்கு என் தாயை கவனித்தல் முக்கியமாகத் தோன்றியதல்லாது அச்சமயம் என் விவாகம் எனக்கு முக்கியமாகத் தோன்றவில்லை.

மனோகரி பருவமடையும் தருணமாதலால் விவாகத்தை முடித்துக்கொண்டு குமாரபுரம் செல்லல் சிலாக்கியமென்று என் தாயும் என்னிடம் தனிமையில் ஞாபகப்படுத்தினள். இச்சமயம் விவாகம் தடைபடுவதில் என் தாய்க்குச் சிறிதும் சம்மதமே கிடையாது. இப்பொழுது சம்மதித்திருக்கும் தன் சகோதரன் பிறகு தன் தீர்மானத்தை மாற்றி விட்டால் என்ன செய்வதென்றஞ்சினள். ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நோகச் சுமந்து பெற்றுப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்து 'நான்' என்று சொல்லிக் கொள்ளக்கூடிய தன்மையை எனக்களித்த என் கண் கண்ட தெய்வமாகிய என் அன்னை நோய் வாய்ப்

பட்டிருக்க என் மனது விவாகத்திற் பிரியப்படுமா ? தாயின் தேக சுகம் கெட்டாலும் கெடட்டும் நமது விவாகமே முக்கியம் என்று நான் நினைக்கவில்லை. அன்பர்களே ! ஆரம்பத்திலேயே அன்பைப்பற்றி உங்களுக்குக் கூறியிருக்கிறேன். உலகில் அன்பே முக்கியமானாலும் "அன்பு" என்ற அரிய உணர்ச்சியை நீங்கள் முதன் முதல் தெரிந்து கொண்ட இடமெது? அன்பைப் போதித்த புத்தகம் எது? அன்பைப் பயின்ற கலாசாலை எது ? அன்பிற் கிருப்பிடமெது ? அன்பின் உற்பத்தி எங்கே ? வாயிலுள்ள ஆகாரத்தைக் கூட்டி விழுங்க அறியாத வயதில் எனக்கு அன்பென்ற தத்துவத்தைப் போதித்தது எனதன்னையின் திருமுகமே யன்றோ. தாயிடத்திருந்து உண்டான அன்பு படிப்படியாகப் பரவி முடிவில் கடவுள் திருவடியிலும் லயிக்கச் செய்யும் தன்மையையு மளிக்குமானால் தாயிடத்துள்ள அன்பிற்கு மற்றவை எதிர் நிற்குமோ.

பருவ வயதை யடைந்தபின் என் அன்பைக் காதல் என்ற முறையில் நான் மனேகரியிடம் செலுத்தினேனாயினும் பேதைப் பருவத்தில் அன்பென்ற விதை விதைத்த என் அன்னையின் தேக சுகத்தைக் காட்டிலும் என் விவாகமே முக்கியமாக எனக்குத் தோன்றவில்லை. என் தாய் குணமடைந்த பின்பே என் விவாகம் நடக்க வேண்டும் என்று பதிலளித்து மறுதினமே என் அன்னையுடன் குமாரபுரம் சென்றேன். அங்கு அன்னைக்கு வேண்டிய பணிவிடைகளைச் சற்றும் தவறின்றிச் செய்து வந்தேன். தக்க பயிற்சியுள்ள ஆயுர்வேத வைத்தியர்களைக் கொண்டு மருந்தளிக்கச் செய்தேன். தாய் குணமடைய வேண்டுமென்ற சிந்தனையுடன் பரிகாரம் தேடி வந்ததில் இதற்கிடையே ஒரு மாத காலம் சென்றது. நான் அரும் பாடு

பட்டும் குணமாவதற்கு பதிலாக நோய் அதிகரிக்கத் தொடங்கிற்று. மனோகரியின் தந்தை தம் தங்கையின் தேக சுகம்பற்றி அடிக்கடி விசாரித் தெழுகியதுடன் என் செலவிற்கு ஏராளமாகப் பணமும் அனுப்பி வந்தார். என் தாய் பிழைத் தெழுவாள் என்று நான் நினைத்த தல்லாது இறந்து விடுவாளென நான் கனவிலும் கருதிய வனல்ல. தாயின் அன்பு சேய்க்கு இன்றியமையாத தாகையால் என்னை விடுத்து என் தாய் இறக்கத் துணி யாள் என்று நம்பியிருந்தேன். என்னை அரைக் கணமும் பிரிந்திருக்கச் சகியாத என் அன்னை என்னை அனாதை யாக்கிப் பரமபதமடைவாளென்று நான் எவ்வாறு எண்ண முடியும்? இளம் வயதில் தந்தையைப் பறி கொடுத்த துர்ப் பாக்கியசாலியாகிய வெனக்குத் தந்தையாகவும் தாயாகவு மிருந்து என்னைப் பரிபாலித்து நன்மதி போதித்துத் தக்க கல்விப் பயிற்சியுமளித்து என்னைக் கற்றோர் மதிக்கும் நிலையில் வைத்திருக்கும் என் அருமைத் தாய் என்னை விட் டுப்பிரிய மனந்துணியாளென்று நம்பியிருந்தேன்.—ஐயோ! பாபி யமன் என்னை வஞ்சித்து என் தாயின் உயிரைப் பறித்துச் சென்றான்! நான் அனாதையானேன். இனி யெனக்கு உற்ற பந்துவைக் காண முடியுமோ. நான் மனங்கலங்கியும் என் முகம் வாடியும் இருக்குமாயின் அவை களைக் கண்டு சற்றும் சகியாத என் தாய்க்கு நான் அச் சமயம் ஓலமிட்டழும் சத்தம் மட்டும் செவிக்கேறாது போயிற்று. என் செய்வேன்! 'அம்மா! அம்மா!!' வென்று அலறினேன். 'என் அன்னையே!' என்று கூவி அழைத்தேன். 'தாயே ஒரு வார்த்தையேனும் பதிலளிக்க மாட்டாயா' என்று மன்றாடினேன். என் அன்னையின் திருவடித் தாமரைகளைத் தொழுதேன். என்னை யன்புடன் ஏந்தி

வளர்த்த எனதன்னையின் கரங்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு ஓவென்றழுதேன், புலம்பினேன். 'என் குழந் தாய். என் கண்மணியே. என் செல்வமே. என் தவப் பயனே !' என்று அருமையாயழைக்கும் குரலை நான் இனி கேட்பதெப்படியென்று கதறினேன். மெய்சோர்ந்தேன். மனமுடைந்தேன். செய்வதின்னதென்றறியாது மயங் கினேன். கண்ணீர் ஆருய்ப்பெருக, என் கால் தடுமாற, கைகள் நடுக்குற, வாய் அலற என் பெற்ருளின் திரு மேனியில் தீ மூட்டினேன். என்னைச் சுமந்ததற்கு இதுவே கைம்மாறு என்பதாக என தன்னையின் திருவயிற்றில் நெருப்பிட்டேன். எனதன்னையின் உடலிலிருந்தெழும் பெருந்தீயும் அன்புமயமாக என்னை நோக்கி ஆசீர்வதிப்பது போலவே தோன்றிற்ருயின் பெற்றெடுத்த அன்னையின் பெருமை இத்தகையதென்று எடுத்துரைக்கவுமியலுமோ.

---

## 3-வது அதிகாரம்

முற்றுந் துறந்த முனிவராயினும் பெற்ற தாயை மறக்க முடியுமோ ? பெற்ற தந்தைகூடத் தன்னைப் பணியக் கூடிய சன்னியாசியும் அன்னையைக் கண்டால் அவள் அடி வணங்கவும் அவளுக்கு ஈமவிதி முடிக்கவும் கடமைப்பட் டிருப்பின் பெற்ருளின் பெருமையைப் பேசவுமியலுமோ ? ஆற்றுவாரற்று அழாதேயெனத் தேற்றுவாரற்று அனுதை யாக எனதன்னையின் மரணச் சடங்கை முடித்து அஸ்தி யைக் கங்கைமாநதியிற் போடும் நிமித்தம் மறுநாளே காசிக்குச் சென்றேன். புனித நதியின் நீராட்டமும் சாதுக்

களின் சகவாசமும் விசுவநாதர் விசாலாக்ஷியின் தரிசனமும் என் மனக் கவலையைத் தணித்துவந்தன. தாயையிழந்த துக்கத்தை ஒருவாறு மறந்து வருஷம் முடிய நடத்தவேண்டிய கிரியைகளையும் அவ்விடத்திலேயே நடத்தி முடித்தேன். இதற்கிடையே ஒரு வருஷகாலம் ஒரு நொடிப் பொழுதிற் கழிந்தது. என் மனத் தடுமாற்றத்தாலோ, அல்லது ஊழ்வினையாலோ, எக்காரணம் பற்றியோ காசிக்குப் புறப்பட்டதுமுதல் வருஷம் முடிய நான் இருக்குமிடம்பற்றியும் என் க்ஷேமத்தைப் பற்றியும் என் மாமனுக்கு ஒரு வரியும் எழுதாமலிருந்துவிட்டேன். அவ்வாறே நான் முழுதும் மறந்திருப்பேனாயின்—உலக வாழ்க்கையை வெறுத்திருப்பேனாயின்—உலகப்பற்றை ஒழித்திருப்பேனாயின்—இத்துன்பம் விளைந்திருக்குமா? மாய வாழ்க்கையை வெல்லுதல் மனிதருக்குச் சுலபமானதோ? மனதை யடக்கவேண்டுமென்றும், ஆசையை யொழித்து ஆன்மஞானமடைய வேண்டுமென்றும் வேதாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன. “வாழ்வாவது மாயம்” என்றும், “உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பாராமல் என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே” என்றும், “காதற்ற ஊசியும் வாராது காண் கடர்வழிக்கே” என்றும், “காண்பது மழிந்துபோகும் காயமு மழிந்துபோகும்” என்றும் பெரியோர்கள் பாடியிருக்கின்றார்கள். ஜன சமூகத்தின் நிலையை யுற்று நோக்கினால் எட்டாத பழம் புளிக்குமென்ற கதைப்படி நாடிய பொருள் கைகூடாது போமாயின் முடிவில் அவர்களுக்குச் சிறிதளவு ஞானமேற்படுவதன்றி ஆரம்பத்திலேயே ஆசையை யணுகவொட்டாது தடுக்கக்கூடிய சக்தியை ஜனங்கள் பெற்றிருப்பதாகக் காணப்படவில்லை. ஆசை யென்ற மொழி முதன்முதலில் ஏற்பட்டு அஃதில்லாமை நிராசையென

வழங்குகிறது. ஞானம் எதற்கு? அஞ்ஞானத்தைத் தொலைக்க. வெளிச்சமெதற்கு? இருளைப் போக்க. புண்ணியமெதற்கு? பாபத்தைத் தணிக்க. இதனால் கடவுள் சிருஷ்டியில் எல்லாமடங்கியே இருக்கின்றது. "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" என்றால் பற்றுதலும் ஆசையுமற்ற மனதில் முயற்சி யேது? பகவான் கண்ணன் 'கர்மாவைச் செய்யக் கடமைப்பட்டுள்ளாய், ஆனால் பயனை எதிர்பாராதே' என்று உபதேசித்தார். பரோபகாரத்திலும் மறுமை வாழ்க்கையிலும், ஜன சமூக ஊழியத்திலும், தேசத் தொண்டிலும் பயனைக் கருதாது நடத்தல் அவசியமாயினும் மனிதன் சொந்த விஷயத்தில் அவன் முதன் முதலில் நினைப்பது பயனைப்பற்றிய சிந்தனையையே. பயனை முதன்மையாகக் கொண்டதே இல்லறமாம். என்னைப்போல் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமென நினைப்பதே சமூக ஊழியம். பயனை யடையமாட்டாது பரிதபிப்பவருக்கு உதவிபுரிவதே உபகாரம். தனது வாழ்க்கையைப் பயனடையச் செய்து முடித்தவர்களுக்கே பிறருக்கு உதவி புரியும் சக்தி யேற்படுகின்றது. மனைவி மக்களுடன் வாழ்ந்து பெற்றோரைப் பேணிக் கடவுளை வழிப்பட்டு நடத்தலே இல்லறம். பெண்ணாசை பெருங்கேடு என்பதை ஆன்மஞானிகள் நிரூபித்தால் அதை இல்வாழ்க்கையில் அனுஷ்டிக்க முடியுமா? இல்லாளைக் கொண்டதே இல்லறமாகையால் இவ்வுலக வாழ்விற்கும் உலக சிருஷ்டிக்கும் பெண்ணே அதிதேவதையாக விளங்குகிறாள்.

நாகரிக உலகிலும் பெண்பிரபஞ்சமாகவே இருக்கின்றது. கடவுள் பெண்ணை எதற்காகப் படைத்தார் என்று வினவினால் 'ஆடவனுக்காக' என்ற பதில் கிடைக்கின்றது. இந்த உண்மையை யறிந்தே வியாபாரிகள்

ஆடவருக்கான பொருள்களை விளம்பரம் செய்வதென்றால் அதனிடையே அழகிய பெண்பாலின் உருவத்தைச் சித்திரிக்கின்றார்கள். பெண்மக்கள் சிற்றின்பக் கருவிகள் என்பதை நிச்சயிக்க வேண்டுமானால் தற்காலம் காட்டப் படும் சினிமா படக்காட்சிகளும் அயல் நாட்டுக் கதை களும் போதிய சான்றாக இருக்கின்றன. மதபோதனையும் பூர்வ சரித்திர ஆராய்ச்சியும், முன்னோர்களின் பெரு மையும் இந்தியத்தாயின் உயர்வும், இந்தியப் பெண்களின் ஒப்பற்ற வாழ்க்கையும் இந்திய நாகரிகமும் இன்னதென்று நானறிந்து கொள்ளமுடியுமோ. கலாசாலைகளில் கட்டுக் கட்டாகப் புத்தகங்களைப் படித்துத் தள்ளினேனாயினும் அயலான் ஒருவன் நீ யார் என்று கேட்டால் நான் நாகரிக உலகில் வாழும் மனிதன் என்று சொல்வே னல்லாது இந்தியன் என்று கம்பீரமா யுரைக்கக் கூடிய வன்மை என்னிடத்திற் கிடையாதே. நீ ஏன் இந்தியனா யிருக்கவேண்டுமென்றால் பதிலளிக்கத் தெரியாதே. ஆங்கிலப் புத்தகத்தை ஆதாரமாக்க வியலுமல்லாது பார் புகழ்ந் துரைக்கக் கூடிய பாரதமாதாவின் அந்தஸ்தை, பாரத சக்தியை யெடுத்துரைக்கும் நிலைமை என்னிட முளதோ? அயல் நாட்டுப் பெண்கள் அதிமேதாவிகளென்றும் இந் தியப் பெண்கள் மந்த புத்தியுள்ளவர்களென்றும் நினைத் திருக்கும் பேதைமக்களிடையே உயர்நோக்க மேற்பட வழியேது? தாமிழந்த உயர்வை மீண்டும் பெறுவதற்கான முயற்சி கொண்டுள்ள தேசாபிமானிகளின் உழைப்பைப் பின்பற்றுவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் சுயநல வாதிகளின் மத்தியில் நானொருவன்றானே. எனக்கு முக்கிய உத்தேசமும் மாறாச் சிந்தனையுமாக விருப்பது என்னவென்பதை நீங்கள் அறிவீர்கள். அதை நான்

இவ்வொரு வருஷகாலமாகத் தள்ளிவைத்ததற்குப்பெருமை பாராட்டிக்கொள்ளல் நியாயமானதே. தாய்க்குச் செய்ய வேண்டிய வருஷக் கருமம் முடிந்ததும் சிறிது சிறிதாக மனோகரியின் திருவுருவம் என் மனக்கண்முன் தோன்ற வாரம்பித்தது. சாமுத்திரிகா சாஸ்திரப்படி அழகே உருவாக்கப்பெற்ற மனோகரியின் செவ்விய விதழ்களில் தவழும் கபடற்ற இளநகையை, களங்கமற்ற புன்சிரிப்பை நினைவுறலானேன்.

வீணா கானமோ! வேணுவின் (புல்லாங்குழல்) தொனியோ! குயிலின் ஓசையோ எனத்தோற்றும் மனோகரியின் குரலோசை என் செவிகளில் ஒலிக்கத் தொடங்கியது. அர்த்த புஷ்டியும் ஆராய்ச்சியும் தீர்க்க தரிசனமும் தேசாபிமானமும் கொண்டுள்ள அன்னாளின் சம்பாஷணைகள் என் நினைவிற்கு வந்தன. மின்னல் போலொளியும் கன்னங்கறுத்த விழியும் அமுதமொழியும் அன்ன நடையும் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தின் நிறமும் அமைதியுற்ற மனமும் கொண்டுள்ள மனோகரியை என்மனம் நாடி நின்றது. என் ஹிருதயேச்வரியாகிய மனோகரியை மணந்து என் வாழ்நாளை இன்பமயமாக, ஆனந்த மயமாக, உற்சாக மயமாக, உள்ளன்பு மயமாக, ஒற்றுமை மயமாக, உயர்வாக நடத்தக் கருதினேன். என் மனத்திற்கிசைந்த மங்கை நல்லாள் மனோகரியுடன் இல்லறம் நடத்துவதால் மரண மடைந்த என் தாயின் ஆன்மாவுக்கும் திருப்தியுண்டாகுமென எண்ணினேன். ஹிந்துக் குடும்பவாழ்க்கையினுடையவும் ஹிந்து விவாக முறையினுடையவும் இந்தியப் பெண்மணிகளுடையவும் லட்சியமறியாது கேவலம் சிற்றின்ப வாழ்க்கையிலீடு

படுவதே இல்லறமெனக் கருதும் நவநாகரிக வாலிப உலகத்திற்கு என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யாது, என் கருத்துக்கிசைந்த மனோகரியுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தத் தீர்மானித்தேன். மனைவிக்கு மணவாளனளிக்கக் கூடிய மனமொற்ற வாழ்விற்கும் கௌரவத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்றவள் என் மனோகரியே என எண்ணி மனமகிழ்ந்தேன். இல்லறத்தைச் சிறப்புடன் நடத்தவேண்டுமென்றும் அதில் என் கடமையை நன்குணர வேண்டுமென்றும் தீர்மானித்தேன்.

தோழர்களே!

மங்கை யொருத்தியை மணந்து வாழ்வதில் கஷ்டமென்ன விருக்கிறதென்று நினையாதீர்கள். "இல்லறமல்லது நல்லறமில்லை" எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு—
மிறந்தார்க்கு—மில்வாழ்வானென்பான்றுணை"

என்ற முதுமொழியைக் கவனித்தீர்களா? அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு விதப் புருஷார்த்தங்களையும் நமக்களிப்பது இல்லறமே. இல்லாள், அர்த்தாங்கி, (Better Half) என்றும் ஏற்பட்டுள்ள மனைவி எனக்குற்ற பணிவிடை செய்யுங்கால் பணியாளாகவும், யோசனை கூறுங்கால் மதி மந்திரியாகவும், உண்டியளித்துபசரிக்குங்கால் தாயாகவும், இன்பமளிக்குங்கால் காமக்கிழத்தியாகவும், மக்களை வளர்க்குங்கால் ஆரம்ப ஆசிரியனாகவும் நடந்து கொள்ள வேண்டுமானால் அவ்வாறு அவள் நடந்துகொள்ளும்படிச் செய்தல் எனது புத்தியைப் பொறுத்திருக்கிறதன்றோ? எனக்களவற்ற இன்பமளிக்கும் மெல்லிய உடல்

அடுப்பங்கரை அனலில் வாடவேண்டி யிருப்பதையும் குடும்பக் காரியங்கள் செய்யும்போது அவளது அழகிய நெற்றியில் அரும்பும் வியர்வைத் துளிகளையும் நான் சகிக்க வேண்டுமே. வீட்டு வேலை செய்பவள் நமக் கடிமை என்ற எண்ணத்துடன் குடும்ப நிர்வாகத்தில் அவளுக்களிக்கவேண்டிய அதிகாரம், சுதந்திரம், சமத்துவம் இவைகளை நானளிக்கத் தவறுவேனாயின் என் குடும்பம் நன்கு நடைபெறுமா? என் வீடு தேடிவரும் விருந்தினரை யுபசரிப்பதில் அவளுக்கேற்படும் சிரமத்தை நான் பொருட்படுத்தக்கூடுமா? பெண்பால் ஆனாலும் மனித சமூகத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்தால் அவளுக்கும் ஆறறிவும் ஆராய்ச்சியும் ஆற்றலும் உண்டு என்பதை நான் தள்ள முடியுமா? என தில்லமாகும் ஆஸ்தானத்தில் எனதுள்ளமாகும் சிம்மாசனத்தில் வீற்றிருந்து என் குடும்பமாகும் அரசியலை நடத்தும் அரசி என் மனைவியென்றும், அம்முறையில் அவளுக்கு நான் பெருமதிப்பு வைத்துப் பணிந்து நடக்கக்கூடிய சந்தர்ப்பம் பல வுண்டென்றும் நான் அறிந்திருத்தல் அவசியமன்றோ?

என் கொள்கைக்கு மாறான குணம் அவளிட மிருப்பின் மெய்யன் பென்ற பாசங் கொண்டு அவளை என் வசப் படுத்திக்கொள்ளல் சுலபமானதோ? என் நிலைமைக்கும் வருமானத்திற்கும் ஏற்றபடி நடந்துகொள்ளும்படி எனக் கவள் மீதுள்ள அன்பை வரையறைக்குட்படுத்தல் எளிதோ? சுத்த ஆகாயமும் சுகாதாரமும் கல்விப் பயிற்சியும் நற்சகவாசமும் ஓய்வும் உற்சாகமும் அவளுக்குக் கிடைக்கச் செய்வதில் நான் சிரத்தை யெடுக்காமலிருக்க வியலுமோ? ஆனால், பெற்றோரைப் பேணல், அண்ணன் தம்பிகளை ஆதரித்தல், சகோதரிகளைக் கவனித்தல் இவைகளால் மனைவி

யின் மதிமுகமும் வாடாமலிருக்கவேண்டுமே யென்று மனந் தவித்தல் போன்ற கஷ்டங்கள் எனக்கில்லை. என் குடும்ப நிர்வாகத்தில் முழு அதிகாரத்தையும் வகிக்கக்கூடிய தன்மையையும் மனேகரி பெற்றிருந்தாள். என் ஆசைக் களஞ்சியம், அன்பின் நிலைகளம், இன்பக்கடல், இணையற்ற செல்வம், ஒப்பற்ற துணை, உயர் நவரத்தினம் என நான் மதித்துள்ள மனேகரி பெண்மக்கட்குரிய படிப்பைப் படித்திருந்தாள். அதிருஷ்ட தேவதையை அணுகி ஆனந்தத்துடன் வாழ்ந்திருக்க வேண்டுமென்ற ஆவல் என்னைத் தன் வசப்படுத்திக்கொள்ளலாயிற்று.

---

## 4-வது அதிகாரம்

நான் காசியிலிருந்து என் மாமன் வீடு வந்தபொழுது மனேகரியின் விவாகத்திற்கு வேண்டிய காரியங்கள் நடந்து கொண்டிருந்தன.

மனேகரி திரண்ட செல்வத்திற் பிறந்த பெண் என்பதை ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறேன். என் தாய் இறந்த மறுமாதத்தில் என் மாமனும் இறந்து விட்டதால் வாசுதேவன் அக்குடும்பத்திற்கு சர்வாதிகாரியாக விளங்கினன். தங்கையின் விவாகத்தை மிகச் சிறப்புடன் நடத்த வேண்டுமென்ற ஆசையால் பெரும்பணச் செலவை அவன் பொருட் படுத்தவே இல்லை. கலியாணச் செலவுக்கெனப் பதினயிரம் ரூபாய் எடுத்து வைத்தான். விவாக சமயத்திற்கென மனேகரிக்கு அளவற்ற ஆபரணங்களும், ஆடைகளும் வாங்கப்பட்டன. பந்துக்களனைவரும் நான்கு தினங்களுக்கு முன்னதாகவே கூட்டங் கூடினர். மணப் பந்தல் வெகு

விமரிசையாக ஜோடிக்கப்பட்டது. விவாகத்திற்கு வரும் விருந்தினர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு சங்கீத நிபுணர் பலர் தருவிக்கப்பட்டனர். வாசுதேவனுக்குத் தற்கால சீர்திருத்தங்களில் நம்பிக்கை யிருப்பினும் விவாக விதியை மட்டும் முன்னோர்க ளனுசரித்துவந்த முறைப் படியே நடத்த விரும்பினான்.

வீட்டிற்குள் தலைமறைவாக இருந்தவண்ணம் என் மாமி எல்லாவற்றையும் கவனித்து வந்தாள். வேறு சகாய மின்மையால் சகல காரியங்களையும் முதன்மையாய் நின்று வகித்தவன் நானே. மனோகரிக்கு எத்தகைய ஆபரணங் களில் விருப்பமென்பதும் எவ்வித உடைகளில் ஆசை என்பது மெனக்குத் தெரியும். அவள் மனதிற்குத் திருப்தி யளிக்கக்கூடியதாக ஒவ்வொரு பொருளையும் தேர்ந் தெடுத்தேன். வாசுதேவன் செய்யும் காரியங்களிலும் கூட இருந்து உதவி புரிந்தேன். முகூர்த்தத்திற்குரிய நாளில் முகூர்த்த வேளையும் கிட்டிற்று. விலையுயர்ந்த ஆடையா பரணங்களா லலங்கரிக்கப்பெற்று, ஆடும் மயிலோ, அசையும் பொற்கொடியோ, தேவ கன்னிகையோ, கந்தர்வமாதோ என விளங்கும் மனோகரி மணவரையில் வந்து நின்றாள். நான் ஊர் வந்ததுமுதல் அன்றுவரை மனோகரியைப் பார்த்த வனன்று. பருவ வயதடைந்து மணம் முடிக்கவிருக்கும் பெண்கள், வீட்டினுள்ள தந்தை கண்ணிலும் படாமல், தலைமறைவாக இருப்பது எங்கள் சமூக வழக்கமானதுபற்றி மனோகரியின் குரலையும் நான் கேட்க இடமில்லாமலிருந்தது. இதற்குமுன் நான் அவளுடன்கூடவே இருந்திருக்கிறே னாயினும் அவள் அந்த சமயம் சிறுமியாக இருந்தாள். இப்போது அவள் பருவ வயதடைந்து வாலிபப் பருவ மென்னும் பூங்காவின் தலைவாயிலை யடைந்திருக்கிறாள்.

அவளுடைய பேரழகும் ஒளியும் கண்ணைக் கவர்ந்தன. அவள் தேகவனப்பும் முகவிலாசமும் மனோகரமாயிருந்தன. நடுத்தர உயரமும் அதற்கேற்ற பருமனும், சிகப்பும், அதற்கேற்ற லட்சணமும், அடக்கமும், ஆழ்ந்த சிந்தையும், கொவ்வைக் கனியொற்ற அதரமும், நல்முத்தைப்போன்ற பல்வரிசையும், நீண்டுவளைந்த விழிகளும், நீலநிறங்கொண்ட கேசபாசமும், மூன்றும்பிறையைப் பழிக்கும் நெற்றியும், வளைந்த புருவமும், நேத்திரானந்தகரமாக விருந்தன. குழவிப் பருவமிருந்தே வடிவழகமைந்த மங்கைக்குப் பருவ வயதிலுண்டாகும் வனப்பை வர்ணிக்க முயலுமோ. மகாலட்சுமியை மலர்மீது வீற்றிருக்கக்கொண்ட பாற்கடலைப் போல் அம்மணவரை விளங்கிற்று. மனோகரியின் வடிவைக் கண்டு மற்றப் பெண்கள் நாணித் தலைகுனிந்தார்கள். இவளை மணக்கும் மணவாளனே பாக்கியசாலியெனப் பலர் தமக்குள் பேசிக் கொண்டனர். விவாகச் சடங்குகள் இனிது முடிந்தன. இம்மை மறுமை, இரண்டிற்கு மின்பம் பயக்கக்கூடியது ஹிந்து விவாக முறையே ஆகும். பெற்றோரால் தக்கவாறு ஆராய்ச்சி செய்து மணம்புரிவிக்கப்படும் தம்பதிகளுக்கு மணவரையில் கூறப்படும் மந்திரங்களை ஒரு நாளும் பிரியாத, பிரியமுடியாத தொடர்பையும், ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தும் சட்டங்களேயன்றி வேறல்ல. இத்தகைய சீர்பெறுஞ் சடங்கில் ஏற்படும் மங்கிலியம் மங்கையர் கழுத்தில் அணியப்பெறுதவரை அன்னாரின் வாழ்நாள் வீணென்பதில் தடையில்லை. சுபாவத்தில் அழகியான மனோகரி மங்கிலியம் சூட்டப்பெற்றதும் முன்னிலும் பதின்மடங்கு பிரகாசித்தாள். மணமாலையும், மங்கிலியமும் கழுத்தில் விளங்க மனோகரி எல்லோரையும் அடிபணிந்து ஆசீர்வாதம் பெற்றுக் கடைசியாக மணவரைக்குச் சற்று மறைவாக

நின்று கொண்டிருக்கும் தன் தாயை நமஸ்கரித்தாள். அச் சமயம் மனோகரியின் கண்களில் இரண்டொரு திவிலை கண்ணீர் உண்டாயிற்று. என் மாமியும் பலபலவெனக் கண்ணீர் சொறிந்தாள். என்னையன்றிப் பிறர் ஒருவருமிதை யறியவில்லை என்பது கண்டு நான் மனந் தெளிந்தேன்.

---

## 5-வது அதிகாரம்

வெளி நாடு செல்லும் கப்பல் சென்னை துறைமுகம் விட்டு அசைந்தாடிய வண்ணம் புறப்பட்டது. மெல்ல மெல்லக் கரையை விட்டுப் பிரிந்து செல்லச் செல்லத் துறையில் நின்றிருந்த ஜனங்களின் கண்களில் கண்ணீர் பெருக வாரம்பித்தது. டெக் என்று கூறப்படும் மேற்றட்டில் நின்று கொண்டிருந்த ஜனங்கள் கைக்குட்டையை விசிறி அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டார்கள். படிப் படியாக மல்லீசுவரர் கோவில் கோபுரம், லைட் ஹௌஸ், ஹை கோர்ட்டு, கபாலீசுரர் கோபுரம், செந்தோம் சர்ச், இவைகள் மறைந்தன. கப்பல் கருங்கடலின் மத்தியிற் செல்லச் செல்ல எனதழகிய தாய் நாட்டின் ஒப்பற்ற தோற்றமும் சிறிது சிறிதாக மறைந்தது.

"தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே", என்றார் பாரதியார். "பெற்ற தாயும் பிறந்த நன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்ததுவே" என்றிருக்கப் பெற்ற தாயை யிழந்ததுடனில்லாது என் தாய் நாட்.டின் வாசமும் எனக்கொழிந்துவிட்டது. அதிருஷ்ட மற்ற மகனைத் தன் மடிமீதிருத்தப் பாரதத்தாய் மனம் கொள்ளவில்லைபோலும்! நான் இருண்ட பாதையில் தனி

வழி நடக்கும் கோலற்ற குருடனானேன். என்னைக் கண்டு இரக்கங் கொள்வார் யார்? என் நிலை கண்டு பரிதபிப்பார் யார்? என் மனவேதனையைத் தீர்ப்பார் யார்? அஞ்சாதே யென எனக்கபயமளிப்பார் யார்? கலங்கிய என் மூளையைத் தெளிவிப்பார் யார்? இல்லை, இல்லை, நிச்சயமாயில்லை, இனி வழியில்லை, கதியில்லை, மதியில்லை, தோற்றமில்லை, சுகமில்லை, சந்தோஷமில்லை, பேரில்லை, பெருமையில்லை, புகழில்லை, புண்ணியமில்லை, கண்ணியமில்லை, அருளில்லை, பொருளில்லை, அன்பில்லை, ஆசையில்லை, நன்மை இல்லை, நம்பிக்கையில்லை, உற்சாகமில்லை, உணர்ச்சியில்லை, நல்லுணவில்லை, உறக்க மில்லை, பாசமில்லை, தாய்நாட்டு வாசமில்லை, பட்சமில்லை, பந்துக்களில்லை. நாசம், நாசம், வேரோடு நாசம், தீராக் கவலை, தெளியாத்துன்பம், மாறாத்துயரம். அட பாழுஞ் சன்மமே, சூழும் விதியே, காலக்கொடுமையே, கருணையற்ற தெய்வமே, இனி எங்குய்வேன், என் குறையை யார்க்குறைப் பேன். கஷ்டம்! கஷ்டம்!!

நேயர்களே, நானடைந்துள்ள நிலையை என்னென் றெடுத்துரைப்பேன்! ஐயோ! என் நெஞ்சு துடிக்கின்றதே! மனந்தடுமாறுகிறதே! நா வரளுகிறதே! கண் இருளு கிறதே; மெய் சோறுகிறதே, ஜனசமூகத்தில், மானிட வாழ்க்கையில் ஏற்படக்கூடிய கவலைகளொன்று மென்னைப் பாதிக்கவில்லை. எது என் மனதை இடைவிடாது சுட் டெரிக்கக் கூடியதோ, எது என் வாழ் நாளை இன்பமென்ற இடம் விட்டு அடியோடு பெயர்த் தெறிந்ததோ, எது என்னை இடைவிடாது சூழ்ந்திருக்கிறதோ, எது என்னைத் தனக்கே பலியாக ஒப்புக்கொண்டதோ, எது என் பெயரை மாசுபடச் செய்ததோ, எது என்னை இக்கதிக் காளாக் கியதோ அந்தக் கவலையை, அதன் காரணத்தை நானென்வ்வா

றெடுத்துரைப்பேன். இனி நான் ஜனசமூகத்திற் கேற்ற வனன்று. உலக வாழ்விற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சந்தோஷ மயமான உலகில் துக்கமயமாகக் காலங்கழிக்கப் பிறந்தவன் நான் ஒருவனே. கடல் நடுவே பிரயாணம் செய்யும் பிரயாணிகளனைவரும் ஆனந்த மயமாக அகண்ட வெளியின் அதிசயத்தோற்றங்கண்டு ஆனந்தித்தவண்ணமிருக்க, எங்கு செல்கிறோம், எதற்காகச் செல்கிறோம், எங்கு தங்கப்போகிறோம், என்ன செய்யப் போகிறோம் என்ற உணர்ச்சியின்றி நான் சென்று கொண்டிருந்தேன். உலகில் இன்பமும், துன்பமும் முதிர்ச்சியடையுங்கால் ஒரே நிலையை யடைகின்றனவென்பது வழக்கம். இன்பப் பெருக்கால் பலர் தம்மை மறந்திருக்கத் துன்பத்தையே இருப்பிடமாகக் கொண்ட நானும் மெய் மறந்திருந்தேன். அக்கப்பலிற் செல்லும் கூலியாட்களும் தாங்கள் வெளி நாட்டில் அளவற்ற பொருள் சம்பாதித்துத் தாய்நாடு திரும்பலாமென்ற தைரியத்துடனேயே நரகக்குழி போன்ற விடத்தில், துர்நாற்றம் நிறம்பிய கீழ்த் தட்டில் அடைபட்டுக் கிடந்தார்கள். ஆனால், அவர்களிடத்துள்ள உற்சாகத்தில் அணுவளவும் என்னிடமிருந்ததில்லையென்றால் நீங்கள் நம்புவீர்களா? வேளா வேளைக்குக் குளித்து உண்டு உறங்கி மேற்றட்டில் உலாவி, புத்தகம் படிப்பதிலும், கடற்காட்சி காண்பதிலும், சீட்டு விளையாடுவதிலும், சம்பாஷிப்பதிலும் ஊக்க முள்ளவர்களாகப் பிரயாணிகள் காலங்கழித்தார்கள். பிரிந்து வசித்த கணவனைக் காணப்போகும் மங்கையரிடமும், உத்தியோகம் நாடிச்செல்லும் வாலிபர்களிடமும், பணம் பறிக்கச் செல்லும் போலிவேஷதாரிகளிடமும், வெளி நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செல்வதில் சிரத்தையுள்ள கனதனவான்

களிடமும் சந்தோஷம் குடிகொண்டிருக்க, அக்கப்பலில் மனத்துயரால் மகிழ்ச்சியற்ற பிரயாணி நானொருவனே இருந்தேன். நன்மை தீமையின்ன தென்றறியாது சமத்துவ திருஷ்டியுடன், அசைந்தாடும் கப்பலில் தட்டித் தடுமாறி ஓடி விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களிடைய கோலா கலத் தொனியும் என் செவிக்கேறவில்லை. அங்குள்ள கனதனவான்களின் நற் சம்பாஷணைகளிலும் என் மனம் செல்லவில்லை. நம்பிக்கையும், உற்சாகமும், தீர்மானமும், சந்தோஷமும் கொண்டு விளங்கிய பிரயாணிகளிடையே மனச்சாந்தியால் விலகப்பட்டவன், ஆசையால் வெருக்கப் பட்டவன், ஆனந்தத்தால் தள்ளப்பட்டவன், உலகவாழ்வில் ஒதுக்கப்பட்டவன், துற்பாக்கியத்தால் சூழப்பெற்றவன், துரதிருஷ்டத்தில் ஆழ்த்தப்பட்டவன், அதிருஷ்டத்தால் வஞ்சிக்கப்பட்டவன், சோகக்கடலாகும் பாலைவனத்தில் சிந்தையாகும் சுடுமணல் தீய்க்க—ஆம்லாசனையாகும் கதிரவ னொளி உச்சியைப் பிளக்க—நரக வாழ்வாகும் கரை குறித்து—மனவேதனையாகும் வெப்பத்திலடிபட்டு—நிரா சையாகும் நீர் வேட்கைக்கு நம்பிக்கையாகும் குளிர் ஜல மற்று—தன்னந்தனியனாக மனம் வெறுத்தவனாக—மரணத் தையே வரவேற்பவனாக—மனத்துயரை மறக்க முடியாதவ னாகச் செல்லும் பிரயாணி நான் ஒருவனே. என்னிடம் என் மாமி ஏன் பேசவில்லை. எல்லோரும் என்னை ஏன் அலக்ஷிய மாகக் காணவேண்டும். மணவரை விட்டெழுந்ததும் மனோகரி கண்ணீர்விட்ட காரணமென்ன? இச் சம்பவங் கள் என் மனதைப் புண்படுத்தின. நான் எங்கிருந்து புறப்பட்டேன்? எப்போது புறப்பட்டேன்? என்று கப்ப லேறினேன்? எதற்காக வெளிநாடு செல்கிறேன்? இனி நான் செய்ய வேண்டியது யாது? எதிர்காலத்தில் நடை

பெற விருப்பன எவை? என் வாழ் நாளில் முடி வென்ன? இவைகளை ஒரு சிறிது மறியாது பல சமயம் மரணத்திற்கொப்பான மூர்ச்சை யடைந்து அன்ன ஆகாரமற்று நடைப்பிணம்போல் கப்பலில் நடந்து திரிந் தேன். ஐயோ! என் தாயே! என் தாய்நாடே! என் ஆசையே! என் காதலே! என் நட்பே! என் தீர்மானமே! என் தலைவிதியே! என் மனமே! ஆ என் வாழ்நாளே! ஆகா என் ஜன்மமே! ஐயோ என் நெஞ்சமே! என்னை வஞ்சித்த துரதிருஷ்டமே! இரக்கமற்ற உலகமே! ஆ என் மனோகரி! மனோகரி!! மனோகரி!!!

---

## 6-வது அதிகாரம்

கப்பல் துறைமுகம் வந்து நின்றதும் கரையிலிறங்கி நின்றேன். என் பள்ளித் தோழனொருவன் என்னைக் கண்டதும் ஓடோடியும் வந்து கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் விடுத்தான். நெடுநேரம் ஒன்றும் பேச முடியாது நான் திணறினேன். மேனாட்டில் நான் சட்டப் பரீட்சைக் குப் படித்த காலத்தில் மாதவன் என்னுடன் கூடப் படித்த வன். நாங்களிருவரும் ஓரே அறையில் வசித்து ஓரே இடத்தில் புசித்து ஒரு நொடியும் பிரியாத உற்ற நண்பர்க ளானோம். நாங்கள் இந்தியா திரும்பியதும் மாதவன் வெளி நாடு சென்று தன் தொழிலை நடத்தி வந்தான். நான் நடுவில் இரண்டு வருஷகாலம் சொந்த ஊரில் தங்கியதிலிருந்து அவனிடம் கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ள வில்லை.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக் கண் களைவதா நட்பு"

என்றபடி எனது அந்தகார நிலையில் என்னைத் தேற்றி என் மனதை நிலைப்படுத்தி என் வாழ்நாளைச் சமூக ஊழியத்தில் கழித்தலவசியமென போதித்தவன் எனதாருயிர் நண்பனாகிய மாதவனேயாகும். அவனுடைய பிடிவாதத்தாலும் என் பொழுதை ஒரு விதத்தில் தொலைக்கவேண்டியிருந்தமையாலும், என் தீராத் துக்கத்தை ஏதேனுமொரு வழியில் மறக்கவேண்டிய தவசியமா யிருந்ததாலும் நானும் என் நண்பனுடன் அந்நகரில் பாரிஸ்டர் என்ற பெயர் வகித்துக் காலங்கழிக்க முற்பட்டேன். பயனை எதிர்பாராது எது காரியம் செய்யினும் அளவற்ற பயன் கிடைப்பது உண்மையன்றோ? நான் நியாயவாதித் தொழில் புரிய ஆரம்பித்ததிலிருந்து ஆயிரமாயிரமாக வருமானங்கிடைக்கலாயிற்று. நல்வழியிற் சேர்த்த பொருளைச் சேமித்து வைப்பதால் நற்காரியங்களுக்கும், தேசத்தொண்டிற்கும், சமூக ஊழியத்திற்கும் பொதுப் பணத்தை எடுக்காது சுதந்திரத்துடனும் தாராள சிந்தையுடனும் அக்காரியங்களைச் செய்து முடிக்கலாமென என் நண்பன் மாதவன் செய்த உபதேசத்தால் என் வருமானத்தை மீத்து வந்தேன். எனக்கு என் சொந்த வாழ்க்கையில் ஒருவித சுகமும் லட்சியமுமிருந்ததில்லை யானாலும், என் மனதிற்கு ஊக்கமும் உற்சாகமு மிருந்ததில்லையானாலும், எனக்கும் ஓர் இல்லமென்றும், குடும்பமென்றும், வேலையாட்களென்றும் ஏற்பட்டிருந்ததுடன் தன்னந்தனியனாக விருக்கும் என்னையும் என் வருமானத்தையும் சுயநலத்திற்குபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய சிலரும் நண்பர்களென்ற முறையில் என்னைச் சூழ்ந்து கொள்ளப் பின்வாங்கவில்லை.

ஒருவாறு எனதாருயிர் நண்பன் மாதவனின் முயற்சியால் நானிவ்வாறு காலங் கழித்தேன். பழைய ஞாபகங்கள் அடிக்கடி எனக்கேற்படாவண்ணம் ஒழிந்த நேரங்களில் உயர் கிரந்தங்களைப் படித்துவந்தேன். திருவாசகம், திருக்குறள், அருட்பா இவைகளை ஆராய்ச்சி செய்வதிலேயே என் ஞாபகத்தைச் செலுத்தினேன். என் வீட்டை, அதன் அமைப்பை ஆச்சிரமவாசத்திற் கொப்பாகச் செய்துகொண்டேன். வீட்டைச் சுற்றி இளங்கொடிகளையும், பூஞ்செடிகளையும் பயிரிட்டு அவைக்கு என் கையாலேயே தண்ணீர் விட்டு வளர்த்து, அம்மலர் கொண்டு எம்பிரானைப் பூசித்து வந்தேன். என் தோழன் மாதவனுடன் சம்பாஷிப்பதிலும் என் காலம் நற்காலமாகவே நடைபெற்றது.

உலகின்கண்ணுள்ள மானிடரின் கஷ்ட சுகங்களைக் கவனியாது, சிந்தனைகளை லட்சியம் செய்யாது, நிற்காது, நிலைக்காது, தங்காது, தாமதியாது, உறங்காது, ஓய் வெடுக்காது, திரும்பிப்பாராது, தயக்கமுறாது, தயவில்லாது, சலிப்பில்லாது, சாவகாசமில்லாது ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் பொருள் எது தெரியுமா? உங்களையறியாது உங்கள் வாழ்நாளை விழுங்கும் பொருளை நீங்களறியாதிருப்பீர்களா? அதுதான் கால சக்கிரம் எனப்படும். சிலர் உணர்ந்தும் பலர் உணராதும் சென்றுகொண்டிருக்கும் அக்கால சக்கிரத்தினல் மூன்று வருஷகாலம் சென்றிருந்தது. எனக் களவற்ற துயரமேற்பட்டிருந்தும், இனி சுக சந்தோஷங்கள் இம்மியளவு மில்லை யென நான் அறிந்திருந்தேனுயினும், விருப்பு வெறுப்பற்று, மரக்கட்டைக்கும் உயிரிழந்த சவத்திற்கும் சமானமாக என் வாழ்வு நடைபெற்றதாயினும், மரணத்தை நான் மனமகிழ்ச்சியுடன் எதிர்பார்த்தவனுயினும் ஆன்மஹத்தி (தற்கொலை) செய்து

என்னுயிரை மடித்துக்கொள்ள நான் ஒரு சமயமும் துணிந்தவனன்று.

நான் எவ்வளவு மறந்தாலும் மறக்க முயன்றாலும் மனோகரியின் க்ஷேமத்தை யறியவேண்டுமென்ற ஆவல் என்னைவிட்டு நீங்கவில்லை. ஒருவருமறியாது நான் புறப்பட்டு வந்தபின் என் மாமியிடமிருந்தோ அல்லது வாசுதேவனிடமிருந்தோ நான் க்ஷேம சமாச்சார மறிவதெப்படி? முடிவில் என் மாமிக்கு ஓர் கடிதமெழுதினேன். பதில் கிடைக்கப் பதினெட்டு நாட்களாயின. நான் மெத்த அவாவுடன் பதில் கடிதத்தை எதிர்பார்த்திருந்தமையால் கடிதங் கிடைக்காத ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம் போல் தோன்றிற்று. இஷ்டர்களே! இத்தகைய சந்தர்ப்பங்கள் பல உங்கள் வாழ்நாளில் ஏற்பட்டிருக்கக்கூடும். 'என்னருமைக் குழந்தைக்கு ஆசீர்வாதம்' என்று அன்பே உருவாக அமைத்து உங்கள் பெற்றோர் எழுதிய கடிதத்தை நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். 'அன்புள்ள நண்பா!' என்று எழுதும் தோழனின் கடிதங் காணாது உங்கள் மனம் வாட்டமுற்றிருக்கலாம். 'எனதாருயிர் நாத' என்றும், 'எனதருமைக்காதல' என்றும் உங்கள் காதலி எழுதுங் கடிதம் எச்சமயம் கைக்குக் கிடைக்கப்போகிறதென்று நீங்கள் ஏங்கி ஏங்கிச் சத்தங் கேட்கும் தருணமெல்லாம் தபாற்காரனோவெனத் தாவியெழுந்து தெருவழியெட்டிப் பார்த்தவண்ணமிருந்திருக்கலாம். இன்று ஒரு வேளை கிடைக்காதோ வெனத் திகைப்படையுஞ் சமயம் எதிர்பார்க்குங் கடிதமளிக்கப்படின் சந்தோஷித்தும், அஃதில்லாவிடில் தபாற்காரனையும் எழுதவேண்டியவர்களையும் நிந்தித்துமிருக்கலாம். ஆனால் நான் எதிர் பார்த்தது இத்தகையக் கடிதங்களன்று!

என் மனத் திடனை யழித்து மீண்டும் துன்பக்கடலில் ஆழ்த்தி, என்னை அறிவிலியாக, அவிவேகியாக, அக்ஞானியாக, மூடனாக, முன் யோசனையற்றவனாக, முழுமோசம் போனவனாக, பாபியாக, பாதகனாகச் செய்யவிருக்கும் பதில் என் கைக்கெட்டியது. அன்பு என்பதைப்பற்றி ஆரம்பத்திலேயே விரிவாய்க் கூறியிருக்கிறேன். தாய் மக்களிடத்திலும், சகோதர சகோதரிகளிடத்திலும், கணவன் மனைவியிடத்திலும், குரு சீடர்களிடத்திலும் பரஸ்பரம் இவ்வன்பென்பதில்லாவிடில் உலக வியக்கம் நடைபெறமாட்டாது. அன்பு உயர் குணமுள்ளதாயினும், துர்ப்பாக்கியவானாகிய எனக்கு அன்பு ஒரு குடிமயக்கமாகவும், கோரச் செயலுக்கு மூலகாரணமாகவும் ஏற்பட்டது கண்டு நீங்கள் அன்பை—மெய்யன்பை—வெறுத்து விடாதீர்கள். மேன்மக்களே! "அன்பே சிவம்" என்றார் அறிஞர். இவ்வன்பே நேயர்களிடம் நட்பு என்றும், காதலியிடம் காதலென்றும், கடவுளிடம் பக்தியென்றும், நற்கருமங்களிற் பற்றுதலென்றும், குருவினிடம் தாழ்மையென்றும், ஆன்றோர்களிடம் பணிவு என்றும், தேசத்தாயிடம் பாசமென்றும், தேசமக்களிடையே அபிமானமென்றும் பெயர்படைத்து மனித வாழ்க்கையில் பல உருவமாகப் பரவியிருக்கின்றது. அபகீர்த்தியை விலக்கி ஆன்மஞானம் போதித்து அழியாப்புகழளித்துப் பேரின்பப் பயனை விளைவிக்கும் இவ்வன்பை, அதன் உயர்வை நாசப்படுத்துவதற்காக, எனது நாசத்திற்காக, என் குல நாசத்திற்காக, அல்ல அல்ல, என் அன்பிற்குரிய பொருளின் நாசத்திற்காக, நான் மீண்டும் கைகொண்டேன். அமுதமென விஷத்தை யன்போடு அருந்தினேன். மலர்மாலையெனக் கரு நாகத்தைக் கழுத்திலணிந்தேன். இருளை வெளிச்சமென ஏமார்ந்

தேன். தீமையை நன்மையென மதித்தேன். அபகாரத்தை உபகாரமென்றெண்ணினேன். அன்பைப் பேரன்பென்னும் வாளினால் வெட்டி வீழ்த்தினேன், வேரறுத்துத் தள்ளினேன்.

பெரியோர்களே! அன்பினால் நான் கெட்டேனா, அன்பு என்னால் கெடுக்கப்பட்டதா? அதை நான் தீயவழியிலுபயோகித்தேனா, அல்லது அன்பு என்னை அவ்வழியில் தூண்டிற்றா என்பதை நீங்கள் நிதானித்தறிந்து அதையெனக்கு இப்பொழுதாகிலும் தெரிவியுங்களேன்!

அன்பின் தூண்டலால் நான் அளவற்ற ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பதிற் கடிதங் கண்டதும் என் மனமொடிந்தது, மெய்சோர்ந்தது; திகைத்தேன், திடுக்குற்றேன்.

"பாரிச வாயுவினால் நடமாட்டமற்று படுத்த படுக்கையாக விருக்கிறேன். வாசுதேவன் அவன் மனைவியுடன் சென்னையிலிருக்கிறான். அவன் மனைவி கிராமவாசத்தில் விருப்பமற்றவளாகையால் என் மகன் சென்னைவிட்டு இங்கு இரண்டொரு நாள் தங்கவும் முடியாத நிலைமையிலிக்கிறான். ஆங்கிலம் பயின்று தற்கால நவநாகரிக முறையில் வளர்ந்த பருவப் பெண்ணை மணந்தால் தன் வாழ்நாள் குறை வென்பதில்லாமல் ஆனந்தமாகக் கழியுமென வாசுதேவன் நினைத்ததை நான் தடுத்துப் பேசவில்லை. இப்போது அவனிருக்கும் நிலைமை எதிர்பார்த்திருந்தவண்ண மில்லையெனத் தெரிகிறது. ஆகையால் நான் அவனை எதிர்பார்ப்பதிற் பயனில்லை. என் நோய் இனி குணப்படமாட்டாது. இக்கொடிய வியாதியினின்று நான் தப்பித்தெழ வேண்டுமென்ற ஆசையுமெனக்கில்லை. என் வாழ்நாளின் கடைசி காலம் நெருங்கி

வருகின்றது. நான் வாசுதேவனையும் மனோகரியையும் பெற்று அருமை பெருமையுடன் வளர்த்த சமயம் அவ்விருவரின் தலைவிதியும் இவ்வாறு இருக்குமென்று நான் எண்ணியதில்லை. என்ன செய்வேன். என் வயிறு செய்த புண்ணியம் அவ்வளவேபோலும். நீ எங்களை விட்டுச் சென்ற மூன்று வருஷங்களுக்குப் பிறகேனும் ஞாபகப் படுத்திக்கொண்டு ஒரு கடிதமெழுதியது பற்றிச் சந்தோஷிக்கிறேன். இக்கஷ்டங்களையெல்லாம் காணாது உன் மாமன் சென்றுவிட்டார். அவர் புண்ணியம் செய்தவர். உன் தாயும் நற்கதியடைந்து விட்டாள். அவ்விருவர்களின் மிகுந்த ஆயுளையும் நான் சுமந்து திரிகிறேன். கடவுள் கருணையுள்ளவராயின் இத்துடனாவது என்னைத் தமது திருவடி நிழலிற் சேர்த்துக்கொள்வாரென நம்புகிறேன். நான் உன்னை என் பெற்ற பிள்ளையிலும் பதின்மடங்கு வாஞ்சையுடன் வளர்த்தேன். நாத்தி, மதனி என்ற வேற்றுமை யில்லாது ஒரு தாய்வயிற்றுப் பெண்கள் போல் உன் தாயும் நானும் மனமொற்று இருந்தோம். அதெல்லாம் பழைய கதை. உன் மனம் இப்படி மாறி விட்டதைப்பற்றி என்னாலொன்றும் சமாதானமுரைக்க முடியாதென்பது நீயறிந்த விஷயம். பொறுமையும் நற்குணமும் விவேகமும் பெற்று சாந்தமே உருவாக விளங்கும் உனக்கு நான் போதிக்கக்கூடியதொன்றுமே கிடையாது. பந்துபாசமென்பது மானிட வாழ்க்கையைப் பற்றியிருக்கும் நீண்டு சுருண்ட கொடிபோன்றது. இவ்வுலக வாழ்க்கையை நீத்தபோதிலும் மீண்டும் நம்மை அதே குடும்பத்திற் பிறக்கச் செய்வது இப்பாசமே. அவ்வாறிருக்க நீ உயிருடன் எங்களை வெறுத்துவிட்ட துக்கத்தை நான் நினைக்க நினைக்க என் மனம் சகிக்கவில்லை. கடைசியாக உன்னை

ஒரு முறை காணவேண்டுமென்பது என் கோரிக்கை. மரணப்படுக்கையிலிருக்கும் என்னை யுத்தேசித்தாவது நீ புறப்பட்டு வருவாயென நம்புகிறேன். பிறகு உன் இஷ்டம்''

என என் மாமி எழுதியுள்ள கடிதத்தைப் பன்முறை படித்தேன். மனோகரியின் யோகக்ஷேமத்தைப் பற்றி அதில் ஒன்றுமே குறிப்பிட்டிராதது கண்டு மனம் வருந்தினேன். என் மாமி வேறு துணையின்றி நோய்வாய்ப்பட்டு மரணத்தை எதிர்பார்த்திருக்கும் சமயம் இதைக்காட்டிலு மதிக சமாச்சாரம் தெரிந்துகொள்ளல் சாத்தியமில்லையென ஒருவாறு மனந்தெளிந்தேன். இனி நான் என்ன செய்யவேண்டுமென்ற யோசனையிலாழ்ந்தேன். இதற்கிடையே, 'எல்லாவற்றையும் துறந்து இந்தியத் தாயின் எல்லையையும் கடந்து வந்தபின் மீண்டும் அதையேன் நினைக்கிறாய்' என்று நல்லறிவு என்னைக் கண்டித்தது. 'உற்ற பந்துவென்ற முறையில் உன் கடமையை நீ செய்யவேண்டாமா' என்று மனம் என்னைத் தூண்டியது. நல்லறிவும் மனமும் போராடத்தொடக்கியதும் இவ்விரண்டிற்குமிடையே அகப்பட்டு இந்திரியங்களும் மூளையும் தங்கள் செயலற்றுக் கிடந்தன. நெடுநேரம் மதி மயங்கிக் கிடந்தேன். "பாழும் மனமே! சூழும் பாசமே! ஆ கடவுளே! என்னை இங்ஙனம் வருந்தச்செய்தல் ஞாயமோ! உமக்கு என் மீது வர்மமோ! எள்ளளவும் கருணையென்பதே கிடையாதோ! கருணாநிதியென்று நீர் பெயர் பெற்றதும் பொய்யோ!'' எனப் புலம்பிய வண்ணம் ஓர் விதத் தீர்மானத்தைச் செய்து முடித்தேன்.

---

# 7-வது அதிகாரம்

அன்று அவ்வூரில் ஒரு திருவிழா நடந்துகொண்டிருந்தது. அந்தி தேவதை சூரியனைத் தனது சென்னிற வுடலா லணைத்துக் கொண்டதும் சுக்கில பக்ஷத்திய சந்திரன் ஆகாயத்தின் அகண்ட வெளியில் தனது ஆதிபத்தியத்தைச் செலுத்தலானான். மாசை விளைவிக்கும் மேகங்கள் சிறிதுமில்லாமையால் நட்சத்திரப் பரிவாரங்களால் சூழப்பெற்ற வெண்மதியின் ஏகாதிபத்தியம் ஏதேச்சாதிகாரத்துடன் ஆகாயவெளியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பூரணமான வெண்ணிலாவின் ஒளியால் ஆகாய வீதி நிறைக்கப் பெற்றிருந்தது. ஏழை எளியவர் பணக்காரர் என்ற பாரபட்சமின்றி தெருக்களிலுலாவும் மாந்தர் மீது தனது குளிர்ந்த கிரணங்களை ஏராளமாக வாரி வாரி இறைத்தவண்ணம் வானிடையே பூரண சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தான்.

ஊருக்கு நடுவே பிரவாகிக்கும் நதியானது சில விடங்களில் இனியகீதம்போல் ஒலித்தும், சிலவிடங்களில் தனது அழகிய சிறு அலைகளால் மெள்ளத் துள்ளிக் குதித்தும், பல விடங்களில் சலசலவென்று உரக்கச் சத்தமிட்டும் கட்டுப்பாடின்றி சுதந்திரத்துடன் நெடுகச் சென்றுகொண்டிருந்தது. தெருக்களில் சிலர் தெய்வபக்தியாலும் அச்சமயம் தம் மனதிற்குண்டாகும் உற்சாகத்தாலும் கடவுளின் குணவிசேஷங்களை உரத்த குரலிற் பாடிக்கொண்டிருந்தனர். சந்திரனொளி கண்டு மனம் பூரித்தவர்களாகச் சிறுவர் சிறுமிகள் தெரு நடுவே மனம்போல் ஓடி ஆடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். நறுமலர் சூடித் திலகமணிந்து ஆபரணம் பூண்டு கோவிலுக்குச் சென்றுகொண்டிருக்கும் பருவ

மங்கையரின் புதிய உடைகளின் ஒளி ஒருபுறம், தாவிக் குதித்தோடும் பாலர்களின் காற் சிலம்பொலி ஒருபுறம், கடவுள் பக்தி கடுகளவுமின்றி மாதர்தம் மதிமுகத்தைக் காதவழிக்கப்புற மிருந்தேனும் கண்டு களித்தலே முக்கிய நோக்கமாக வந்துள்ள உற்சாக புருஷர்கள் உடலிலும், உடையிலும் பூசப்பெற்ற நறுமணங்களின் வாடையொரு பக்கம். 'சங்கரனே, ஐங்கரனே' எனத் துதித்து நடக்கும் பக்தர்களின் குரலோசை மறுபக்கம். துக்கமென் பதை யறியாதவர்களின் முகத்தில் எவ்வளவு தெளிவு! அவர்களன்றோ புண்ணியம் செய்தவர்! அவர் மனத்தி லன்றோ பரிசுத்தத் தன்மை நிலைக்கும்! அவர்களனுபவிக்கும் ஆனந்தமன்றோ உண்மையான ஆனந்தம்! துக்கமய மாகிய காட்டுத் தீயால் வெந்து நீராகியிருக்கும் எனக்கு—என் மனதிற்கு—இவ்வித சுகானுபவங்கள் தெரிவதெப்படி? எனது கேடுகெட்ட மனதில் விசனமென்னும் பெருந்தீயானது பெருமூச்சென்னும் பெருங் காற்றால் மோதப்பட்டு தனக்குள் என்னையடக்கி முடிவில் என்னை நீராக்கி விடாதவரை அணையுமோ? ஆகா! எங்கு பார்த்தாலும் சந்தோஷம். எத் திசையிலும் ஆனந்தம். ஜீவராசிகளிடம் மகிழ்ச்சி, சந்திரனொளி இன்பமயம், நட்சத்திரக் கூட்டம் நேர்த்திரானந்தமயம், மந்த மாருதம் சுகமயம். துளிர்த்துத் தழைத்து வளர்ந்த மரங்களின் பொந்துகளில் உட்கார்ந்து சத்தமிட்டுக்கொண்டிருக்கும் பட்சிகளிடமும் ஆனந்தம். தண்மதியின் வெண்ணிலவைத் தனது உன்னதத் திருமார்பில் அணிந்து பூதேவி சந்தோஷமாய்ப் பிரகாசிக்கின்றாள். ஆலயம் செல்லும் அன்னைமார்களிடத்திலும் தெருத் திண்ணைகளில் வீற்றிருந்து குடும்ப யோகக்ஷேமங்களைப் பேசிக்கொண்டிருக்கும் முதியவரிடத்தும் தெருநடுவே விளையாடும்

அறியாப்பிள்ளைகளிடத்தும் ஆற்றோரத்திலுட்கார்ந்து நிலவினொளியைக் கண்டானந்தித்த வண்ணம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் அன்னியோன்னிய தம்பதிகளிடத்தும் பஜனை செய்துகொண்டிருக்கும் பக்தர்களிடத்தும் தாயினிடுப்பிலுட்கார்ந்து இளநகை புரியும் சேய்களிடத்தும் சந்தோஷமயம், உற்சாகமயம், இன்பமயம். அகண்ட பரிபூரண சச்சிதானந்த விக்கிரமாக விருக்கும் கடவுளின் சிருஷ்டியில் வந்துள்ளவர்களில் — சந்தோஷமாகக் காலங் கழிக்கும் ஆன்மகோடிகளில் அவரவர் வினைக்கேற்ற கஷ்ட சுகமிரண்டையும் கலந்தனுபவிக்கும் மானிட வர்க்கத்தில்—துக்கமே சரணமென்றடைந்து காலங்கழிக்கும் எனக்கு இன்ப வெள்ளத்திலமிழ்ந்தெழக்கூடிய ஆற்றல் இல்லையன்றோ. தலைகுனிந்த வண்ணம், என் வழியைப் பார்த்த வண்ணம், நோயாளியின் தேக சுகத்தைச் சிந்தித்த வண்ணம் பேய் பிடித்தவன்போல், பித்தங்கொண்டவன்போல், அறிவிழந்தவன்போல், ஆவேசங்கொண்டவன் போல் நடந்து சென்றேன். என் மாமன் வீட்டின் தலைவாயிலடைந்தேன்; வீட்டிற்குட் சென்றேன். அரைவாசிக் கதவு திறந்திருக்கும் அறையொன்றின் வாயிற்படியில் நின்றுகொண்டு அவ்வறையை நோக்கினேன்.

அறையின் நடுவே விரிக்கப்பட்டிருந்த கம்பிளியின் மீது யமனுடன் வாதாடிக் கொண்டிருக்கும் என் மாமி கண்மூடிப் படுத்திருந்தாள். நோயாளிக்கருகில் கைகளைக் கொண்டு தன் தலையைத் தாங்கிய வண்ணம் உட்கார்ந்திருந்த பெண் உருவமொன்றை கண்டேன். அவ்வுருவம் எலும்புக் கூடாக விருந்ததன்றி சதைப்பற்றுள்ள மனித வுருவாகத் தோற்றவில்லை. ஆத்திக் குச்சிபோன்ற கைகால்களும், கூன் விழுந்த முதுகும், ஒளி

யற்ற கண்களும் கொண்ட அவ்வுருவம் நோயாளியை இழுத்துச் செல்ல வந்திருக்கும் மிருத்யு தேவதையோ என்றெண்ணக் கூடியதாயிருந்தது. பயங்கரமாக விருக்கும் அவ்வடிவத்தை விளக்கு வெளிச்சத்தில் உற்று நோக்கினேன். சிறிது நேரம் ஒன்றுமே விளங்கவில்லை. மீண்டும் கவனித்துப் பார்த்தேன். இறுதியிலறிந்து கொண்டேன்! அவள் அவள்தான்—அவளே அவள். அவள் யாரென நினைக்கின்றீர்கள். அவள்தான் அவள்! என்னை முன்னம் நன்ருக அறிந்துள்ளவள், என்னுல் நன்கறியப்பட்டிருந்தவள். என்னுடன் இளம் வயதில் ஓடி விளையாடினவள். என்னுடன் பழகியவள். என் ஆசைக்கிருப்பிடமாக இருந்தவள். எனதாவித் துணையாக என்னுல் என் மனத்துள் மதிக்கப் பெற்றிருந்தவள். என்னுயிர் போன்றவள். என் மாமன் மகள். அவளே மனேகரி! மனேகரி!! தெய்வக் கன்னிகை போல் அழகு மிகுந்திருந்த மனேகரி அவள்தான். அவள் மனேகரி யெனக் கண்டதும் என் மனம் பதைபதைத்தது, உயிர் துடித்தது, உடல் நடுக்குற்றது. இதே வடிவத்துடன் அவள் ஆதியில் இருந்திருந்தால் நானவளை நேசித்திருப்பேனே? என்ன கோரம்! மூன்று வருஷங்களில் எவ்வளவு மாறுதல்!

நான் மனேகரி இவளே என்றறிந்தேன். என் மனவேதனை நான் மறந்திருந்த துக்கம் இரண்டும் மீண்டும் பொங்கி யெழுந்தன. அச்சமயம் நான் கடவுளைத் துதிக்கத் தொடங்கினேன். "அனுதரட்சக, ஆபத்பாந்தவ, தீனபந்தோ, ஜகதீசா, கருணைக் கடலே. என்னை மன்னித்து விடும். எனக்கு ஆறுதலளியும், என்னைக் காப்பாற்றும். என் மனதிலுள்ள பரிசுத்தத் தன்மையைக் காப்பாற்றும். நான் யாரை அடையவேண்டு மென்று அருந்தவம் புரிந்தேனே, அவ்

வெண்ணத்தைத் துறந்தேனே, அல்ல, துறக்க நேர்ந்ததோ அப்பேர்ப்பட்டவளை நான் என் கண்ணால் இப்பொழுது, அதுவும் இவ்வித நிலையிற் காணும்படி என் விதித்தீர்! ஆ!' கடவுளே! என் உடல் நரகக்குழியில் விழட்டும். சிறுகச் சிறுகக் கனிந்துவரும் உமிக்காந்தலில் இப்பாழ்பட்ட சரீரம் கருகிப் போகட்டும். என் இதயம் வெடிக்கட்டும். என் மூளை சிதறிப்போகட்டும். இவைகளால் எனக்குச் சிறிதும் விசனமென்பதில்லை. ஆனால்—மனேகரியை—என் மனேகரியை, மாசற்ற மனேகரியைமட்டும் கை விடாதீர். அவளைக் காப்பாற்றும். அவள் பாற் கருணை கூறும். அவளுக்கு முன்னிருந்த பொலிவையும், வடிவத்தையும் அளித்து அவளைச் சுக சந்தோஷத்துடன் வாழச் செய்யும். இதுவே என் சங்கல்பம். இதுவே என் கோரிக்கை. இதையே நான் விரும்புவது. என்னைப்பற்றி நான் அணுவளவும் கோரப் போவதில்லை. இது உண்மை. இது சத்தியம், சத்தியம்."

---

## 8-வது அதிகாரம்

ஒருவாறு மனதைத்திடப்படுத்திக்கொண்டு அவ்வறைக்குட சென்று 'மாமீ' என்றழைத்தேன். மனேகரி என்னைக் கண்டதும் திடுக்கிட்டெழுந்து வேறிடம் செல்ல நினைத்தாள். மனேகரியைக் கண்டதும் எனக்கு எவ்விதத் தோற்றங்களும் சங்கடமும் உண்டாயினவோ அவ்வாறே அவளுக்கும் உண்டாயிருக்கக்கூடும். "ஆனால், அந்த மனேகரி, ஆருயிர் தோழி யென்றும், அருமை காதலி யென்றும், ஆசைக் களஞ்சிய மென்றும், இன்பக் கடலென்றும், இன்னுயிர்த் துணைவி யென்றும் நான் மனப்பால்

குடித்திருந்த அந்த மனோகரி—இவளல்லவே. சிறு வயதில் தன் சிறு கரத்தால் தொடுக்கப்பெற்ற பூமாலையை என் கழுத்திலிட்டு விளையாடிய அந்த மனோகரி இவள் அல்லவே. பூந்தோட்டத்தினிடையே மரக்கிளையில் கட்டப் பெற்ற சிறு ஊஞ்சலில் என்னுடனுட்கார்ந்து உல்லாசமாக ஆடிய அந்த மனோகரியல்லவே. நானே அவளுக்கேற்ற கணவனென பந்துக்களும் ஊரிலுள்ளவர்களும் பேசிய அந்த மனோகரி இவளல்லவே. 'தாய்க்குப் பின் தாரமென்றபடி நீ நடந்து கொள்ளல் வேண்டும்' என்று என் தாய் கூற அதைக் கேட்டுப் புன்னகையுடன் தலை குனிந்து வணங்கிய மனோகரி இவளல்லவே. நோய் வாய்ப்பட்டிருந்த தாயை நான் வெளியூருக்கு அழைத்துச் சென்ற சமயம் தெருவின் கதவருகில் மறைந்து நின்று காதல் பொழியும் கடைக்கண் பார்வையால் எனக்கு விடையளித்தனுப்பிய மனோகரி இவளல்லவே. இவள் மனம் இச்சமயம் எப்படியிருக்கின்றதோவென நான் ஏன் சிந்திக்கவேண்டும்" என்றிவ்வாறு நான் யோசித்து நின்றதும் குழந்தையின் அழுகுரல் ஒன்று அடுத்த அறையினின்றும் உண்டாயிற்று. குழந்தையினழுகையைக் காரணமாகக் கொண்டு மனோகரி அவ்வறையினின்றும் வெளிச் சென்றுவிட்டாள்.

வாசகர்களே! மனோகரியை மனதால் நான் சிந்தித்தல் தகுமோ. அவளை நான் கண்ணெடுத்துக் காணவும் துணிவேனோ. "பாருக்குள்ளே நல்லநாடு, எங்கள் பாரதநாடு" என்று ஸ்ரீமான் பாரதியார் பாடித் துதித்த இப்பழம் பெரும் நாட்டிற் பிறந்த புண்ணியம் என்னை விட்டு விலகுமோ. "ஆரியர் வசித்தது மின்னாடு, குலநாரியர் வசிப்பது மின்னாடு, இந்த பாரினில் பெரும்புகழ் கொள்ளும் நாடு பாரதநாடு" என்று என் சகோதரி யொருத்தி பாடியுள்ள

நன்னாட்டில் நான் பிறந்தவனன்றோ. நான் என் தாய் நாட்டின் பெருமையை உணராதிருக்கலாம், என்னாட்டின் நடையுடை பாவனைகளை நானறவே விட்டொழித்திருக்கலாம். தாய் நாட்டிற்குத் தொண்டுபுரியாது சுயநலமே பிறவிப்பயனெனன நான் காலங்கழிக்கலாம். ஆனால் காமக் குரோதங்களை வென்று, தனக்கென வாழாது, சீரிய கல்வியும் ஒழுக்கமும் ஞானமும் பெற்று வாழ்ந்த என் மூதாதைகளின் இரத்தம் என்னுடம்பில் இன்றளவும் ஓடிக்கொண்டிருக்க நான் என் அறிவை மட்டும் இழந்துவிடுவேனோ? என் மனதைச் சிதறவிடுவேனோ. பாரத மாதாவின் அருந்தவப் புதல்விகளின் பெருமை யறிந்து அவர்களைக் கண்ணியப் படுத்தாதவரை பாரத புத்திரனென்ற பெயரை நான் வகித்தல் கூடுமோ. மனோகரியை நான் இச்சமயம் பார்க்கும் பார்வை பரிசுத்த முற்றது. நினைக்கும் மனம் களங்கமற்றது.

அவளை நான் வேறுவிதமாகச் சிந்தித்தல் அடுக்குமோ. இந்தியாவின் பெருமை இந்தியப் பெண்களின் கற்பினால் பாதுகாக்கப்படுகின்றதென அயல் நாட்டாராலும் புகழ்ந்துரைக்கப்படும் பாரத நாட்டிற்குப் பெரும் பழிச்சொல் விளைவிக்க என் மனம் துணியுமோ. என் ஆரிய சகோதரிகளிடம், என் தாய் நாட்டிற்கு எல்லையற்ற கண்ணியமளிக்கும் புண்ணியவதிகளிடம், மாசற்ற மங்கைமார்களிடம் நான் நன்மதிப்புடன் நடக்கக் கற்றது என் தாயின் நல்லுபதேசத்தாலன்றோ. எனக்கென, என்மனைவியென குறிக்கப்பட்டிருந்தவள் இந்த மனோகரியே யானாலும், இவள் இப்போது அந்த மனோகரியல்லள்.

# 9-வது அதிகாரம்

மனோகரி வெளியிற் சென்றதும் நோயாளியினருகில் உட்கார்ந்து மீண்டும் 'மாமீ' என அழைத்தேன். அச்சமயம் மனோகரியின் தாய் நித்திரையிலிருந்ததை நானறியாது 'மாமீ? இதோ நான் வந்து விட்டேன்' எனக் கூறினேன். இவ்வுரத்த சத்தத்தால் அவள் தூக்கம் கலைந்து விட்டது. 'வா, அப்பா! என் குழந்தாய், என் செல்வமே, நான் வளர்த்தெடுத்த கண்மணியே, என் கடிதங்கண்டு உன் மனமிறங்கியதோ. என்னை நீ மறவாமலே இருந்தாயோ; என் மகனே, உன் முகப்பொலியும் வடிவும் எங்கொளித்த தப்பா. உன்னை இன்னானெனக் கண்டுபிடிக்கவும் கூட வில்லையே. உன்னை இக்கோலத்திற்காணும் நான் பாபி யன்றோ. சீராட்டித் தாலாட்டி வளர்த்து உன்னை முடிவில் இக்கதிக்காளாக்கிய பாதகியைக் காணவும் உன் மனம் துணிந்ததோ! அப்பா!' என்று அலறியழுதாள், நெடுநேரம் பிரலாபித்தாள். "சென்ற கதையை நினைத்தல் சரியன்று. இச்சமயத்தில் நீங்களிவ்வாறு மனக்கலக்க மடைவது தகாது, மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றதை மறந்துவிடுங்கள், இனி நடக்கவேண்டியதைக் கூறுங்கள். எனக்கு நற்புத்தி புகட்டுங்கள்" என்று நான் மன்றாடினேன். தனது அளவற்ற துக்கத்தை யொருவாறு உள்ளடக்கி என் மாமி பேசலுற்றாள்.

"மகனே, எனக்கு வாழ்நாள் குறுகிவிட்டது. மன நோயால் வருந்துவதைவிட மடிவதையே நான் விரும்புகிறேன். என் இரு குழந்தைகளும் உன்னுடன் பிறந்த பிறவிகளென்பதை நான் சொல்லவேண்டுவதில்லை. உன்னை யல்லாது என் மக்களைப் பட்சத்துடன் கவனிக்கக்கூடிய

பந்து வேறு கிடையாது. அவர்களைக் கைவிடாதே. மரணத் தறுவாயில் நான் கேட்டுக்கொள்வதை மறந்து விடாதே" என்ருள்.

நான் :—நீங்கள் இதுபற்றிச் சிந்தையுற வேண்டாம். மனேகரியும், வாசுதேவனும் என் உடன்பிறப்புக்களன்றி வேறில்லை. கடவுள் கிருபையால் நீங்களும் பிழைத்தெழுந்து விடுவீர்கள். எல்லாம் அனுகூலமாகவே இருக்கும்.

மாமி :—நான் பிழைக்க மாட்டேன், பிழைத்திருக்கவும் பிரியமில்லை. குழந்தைகளை யனுதைகளாக்கிச் செல்கிறேமே என்ற வருத்தம் மட்டும் பாதிக்கிறது. ஆனல் வாசுதேவன் ஆண்மகன். அவன் தன் மனத்திற்கேற்ற பெண்ணை விவாகித்துச் சுகமாக வாழ்கிருன். தற்கால நாகரிகமுறையில் வளர்ந்த என் மறுமகள் மாமியை மதித்து நடந்துகொள்ளத் தெரிந்துகொள்ளாவிடினும் கணவனை யனுசரித்து நடக்கவாவது கற்றிருப்பாளென்றே நினைக்கிறேன். முடிவில் என் அருஞ்செல்வம் மனேகரியை நினைத்தால்மட்டும் அதற்கொரு முடிவும் எனக்குத் தென்படாமலிருக்கிறது.

நான் :—தாயாருக்குப் பெண்களிடத்திற்ருன் பிரியமதிகம். மனேகரிக்கு என்ன குறை? அவள் புருஷன் உமாபதி பெரும் பணக்காரன். பெரிய வம்சத்திற் பிறந்தவன். மனேகரியும் அறிவிற் சிறந்தவள். அவளைப்பற்றி கவலையுறுவதேன்?

மாமி :—ஐயோ! அது தெரியாதோ உனக்கு. நீ மனேகரியின் விவாகம் முடிந்த மறுதினமே சென்று விட்டாய். நீ கப்பலேறிச் சென்றதாக ஒரு வாரங்கழித்துக்

கேள்விப்பட்டோம். உன் கடிதம் வரும்வரை நீ எங்கிருக்கிறாயென்பதும் எனக்குத் தெரியாது. உனக்கும் இவ்விடத்திய விஷயங்கள் தெரிய இடமில்லை. என் மனோகரியை நினைத்தால், அவள் நிலைமையை நினைத்தால், அவள் கஷ்டத்தை நினைத்தால் பெற்றெடுத்த வயிறு பற்றியெரிகின்றதே, என்ன செய்வேன். இக்கொடுமையை என்னென்று சொல்வேன். உன் மாமன் புண்ணியவான். அவர் ஒன்றுங் காணாது பரமபதமடைந்து விட்டார். நான் பாபி, இருக்கிறேன். என்னாலும் கண்டு சகிக்க இனி இயலாது. பாழும் உயிர் எளிதிற் போகமாட்டாது ஊசலாடுகின்றது. நான் மனோகரியை வளர்த்த காலத்தில் அவள் குணத்தையும், வடிவழகையும் கண்டு மனம் பூரித்திருந்தேன். கன்னிக்கேற்ற கணவன் கைவசமிருக்கிறானென்று களித்தேன். (இச்சொல் வந்ததும் 'மாமீ! வேண்டாம், வேண்டாம், மறந்து விடுங்கள். அதை மறந்துவிடுங்கள். அது வேறு உலகம். இது வேறு ஜன்ம மன்றோ! வேண்டாம், சென்றவைகளைப் பேசவேண்டாம்' என மறுத்துக் கூவினேன்.) மனோகரிக்குக் கிடைத்துள்ள கணவன் கொடியன், பெருங் குடியன், வேசிக்கள்ளன். கொண்ட பெண்டாட்டியாயிற்றே என்ற பிரியம் சிறிதுமவனுக்கில்லை. அவன் ஒருகாலும் என் மகளை ஒருவிதத்திலும் வாழ விடானென்பது நிச்சயம். அவளுடைய கஷ்டத்திற்கு அவனே காரணம். முடிவில் என்றேனு மொருநாள் என் மனோகரி துர்மரணமாக மடியப்போகிறாள், அல்லது குடி வெறியில் அவனே என்றேனும் ஒரு நாள் அவளைக் கொன்றுவிடவும் கூடும்! (மனோகரிக்

குத் துர்மரணம், மனோகரியைக் கொலை செய்தல் என்ற சொற்கள் என் செவியிற் பட்டதும் என்னை யறியாது என் உடல் நடுக்குற்றது. மெய்பதறிற்று. நா உலர்ந்தது, தலை சுழன்றது, புத்தி தடுமாறிற்று. 'ஆ! கடவுளே' என்று வாய்க்குள் மெதுவாகக் கூறிக்கொண்டேன்.) மனோகரி சுகப்படாமற் போனாலும் சித்திரவதைப் படாமலிருப்பாளானால் நான் சற்று ஆறுதலடைவேன். கட்டிவைத்தடிப்பதும் உதைப்பதும் குரவளையைப் பிடிப்பதும் இவ்வாறு அத்துஷ்டன் என் கண்மணியை வதைக்கிறானே! என் மனோகரிக்கு ஒரு வழியுமில்லையே, என் குழந்தையை நான் படுகுழியில் வீழ்த்திவிட்டேனே. பாதகனிடம் பலியிட்டு விட்டேனே. பிறர் பேச்சைக் கேட்டுப் பெருமோசம் போனேனே.

**நான்:**—மாமீ! மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். மனோகரியைக் கண்டதும் எனக்கு மிக்க பயமுண்டாயிற்று. நெடு நேரம்வரை அவளை நான் மனோகரியென அறிந்து கொள்ள முடியாமற்போயிற்று. பெண்ணாகப் பிறந்தவளுக்குச் சகல சுகபோகங்களுமளித்து இம்மை மறுமை யிரண்டிற்கும் நல்வழி காட்டி நற்புகழளிப்பவன் கணவன் என்றும் அவனே கையெடுத்துக் கும்பிடும் தெய்வமென்றும் நம்மில் கருதப்படுகின்றது. இவ்வாறே நமது பெண்மணிகளும் இளமைப் பருவமிருந்து போதிக்கப்படுகின்றார்கள். இதிகாச புராணங்களும் இதையே ஓலமிடுகின்றன. அத்தகைய கணவன் அவிவேகியாக, முரடனாக, குடியனாக, வெறியனாக, வேசிக்கள்வனாக இருப்பானாயின் அப் பெண்ணின் கஷ்ட நிஷ்டூரங்களைக் கணக்கிட்டு

வைக்கவும் முடியுமோ? எல்லாம் விதிவசம். அன்றெழுதிய எழுத்தின்படிதானே நடக்கும்.

மாமி:—என் மனோகரி முந்தி எப்படியிருந்தாள்? இப்போதிருக்கும் ஸ்திதியை நீ கவனித்தாயா? பொறுமையும் நற்குணமும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கும் என் மனோகரி கணவன் வீட்டில் கண்ணுங் கண்ணீருமாய்க் காலங்கழிக்கிறாள். வாசுதேவன் அவளைப்பற்றிச் சிந்திப்பதுமில்லை. அவனுண்டு, அவன் மனைவியுண்டெனக் காலங்கழிக்கிறானன்றிக் கலியாணமானதிலிருந்து தாய் என்றும் தங்கையென்றுமிருப்பதாகவும் அவன் கருதவில்லை. என் மருமகளும் மனோகரியை கவனிக்க மாட்டாள். அஷ்ட தரித்திரங்களான அவள் பிறந்த வீட்டுப் பெருங் கூட்டம் புற்றீசல் போல் அவ்வீட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. என் மகள் அங்கு சென்றால் அவர்களுக்குக் குற்றேவல் புரிந்து கூழ் குடிக்கலாமன்றி வேறில்லை. நான் இறந்த செய்தி தெரிந்தால் இருநத விடத்தில் எனக்காக என் மகன் ஒருமுறை தலை முழுகுவான் என்பதில் சந்தேகமில்லை! குழந்தாய்! நமது மனோகரிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை கிருஷ்ண விக்கிரகம் போலிருக்கிறான். கோடிதுக்கம் குழந்தை முகத்தில் நீங்குமன்றோ. அவன்தான் மனோகரிக்கு ஜீவாதாரமாக விருக்கிறான். அவனை நீ பார்க்கவில்லையே.

நான்:—இல்லை. நான் பார்க்கவில்லை.

மாமி:—நல்லது என் கண்மணியே! உன்னை ஒரு சமாசாரங் கேட்கிறேன், எனக்கு விடையளிப்பாயா?

நான்:—மாமி! நீங்கள் என்னை இவ்விதம் சந்தேகிக்கலாமா. நான் அன்னியனா? உங்களால் வளர்க்கப்பட்டவனன்ரு, எதை வேண்டுமானுலும் கேளுங்கள், பதிலளிக்கிறேன்.

மாமி:—உன் தாய் இறந்ததும் நீ காசிக்குப் போனது உண்மைதானு?

நான்:—அதில் சந்தேகமென்ன. நான் காசிக்கே சென்றிருந்தேன்.

மாமி:—உனக்கு இவ்வூர் வீரபத்திரனின் மகளைத் தெரியுமோ. குமாரபுரத்திற்கடுத்த விஷ்ணுபுரத்தில் தன் மாமன் வீட்டிலிருந்தாளே ?

நான்:—யாரது ? விஷ்ணுபுரத்திலா, அவள் யார்? அவளைப் பற்றி என்ன விசேஷம் ?

மாமி:—அவளுக்கு ஐந்து வயதிற் கலியாணமாயிற்று. ஆருவது ஆண்டில் அவள் கணவன் இறந்துபோனுன். அவளுக்கு இப்பொழுது வயது பதினெட்டு இருக்கலாம்.

நான்:—ஐயோ பாபம்! அப்பெண் விதவையானுளா? பிறகு அவளைப்பற்றி என்ன விசேஷம் ?

மாமி:—விசேஷமென்னவிருக்கிறது ? அவள் திடீரெனக் காணுமல் மறைந்தாள். அதுபற்றி ஜனங்கள் பலவாறு பேசிக்கொண்டார்கள்.

நான்:—சரிதான். ஊராருக்கென்ன வேலே. ஒழிந்த சமயத்தில் வாய்க்கு வந்ததை வம்பளப்பார்கள். அதனுல் நமக்கென்ன கவலே.

மாமி:—நமக்கென்ன கவலையா! அவ்வாறு நடந்திராவிடின் நீ இப்படித் தனியாய்க் காலங்கழிக்கவும் என் குழந்தை இவ்வாறு கஷ்டப்படவும் நேர்ந்திராதே.

நான்:—நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே? சற்று தெளிவாய்க் கூறுங்கள்.

மாமி:—என்னென்று சொல்வேன். உன் தாய் மரணமடைந்ததை யறிந்து உடனே புறப்பட்டு வரும்படி உன் மாமன் உனக்குக் கடிதமெழுதினார். பதில் வரவில்லை. நேரில் குமாரபுரம் சென்று உன்னை யழைத்துவரப் புறப்பட்டார். அச்சமயம் அங்கிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் உன் தாய் இறந்ததும் அப்பெண்ணுடன் எங்கோ ஓடிவிட்டதாக எழுதப்பட்டிருந்தது. இதே மனக்கவலையில் உன் மாமன் உயிர்விட்டார். இனி உன்னை யெதிர்பார்க்கக் கூடாதென்று வாசுதேவன் மனோகரியை முன்யோசித்திருந்தபடி உமாபதிக்கே அளித்துவிட்டான். என்ன இருந்தாலும் நீ அவ்விதம் செய்திருப்பாயா என்ற சந்தேகமெனக்குண்டு.

நான்:—சிவ! சிவ! இந்தப்பழியும் பாக்கியிருந்ததோ மாமி! நான் ஒன்றையுமறியேனே. என் தாய் இறந்த மறுதினமே நான் காசிக்குச் சென்றுவிட்டேன். இது சத்தியம், என்னை நம்புங்கள்.

“ மனோகரிக்கு வேறிடத்தில் விவாகம் நடைபெற்றதற்கு இதுவே காரணம். உன்னைக்கேட்டால் நீ என்ன கோபிப்பாயோ வென்றெண்ணி நானும் அச்சமயம் உன்னுடன் பேசாதிருந்தேன். வாசுதேவன் வேற்றுமையாய் நடந்ததற்கும் உன்னுடன் ஒருவரும் முகங்கொடுத்து வார்த்தையாடாதிருந்ததற்கும் இதுவே காரணம். கடைசி

யில் என் குழந்தை தலைமீது விடிந்ததே" என்று அலறி என் மாமி மூர்ச்சையடைந்தாள். அவளுக்கு மீண்டும் நினைவு வர நெடுநேரஞ் சென்றது.

---

## 10-வது அதிகாரம்

என் மாமி, தனது மனத்துயரை அடக்கமாட்டாது தத்தளித்தாள். மெத்தப் பிரயாசையுடன் படுக்கை விட்டெழுந்து உட்கார்ந்தாள். என்னைக் கண்டதும் மனேகரி அடுத்த அறைக்குச் சென்றுவிட்டதால் அது வரை நானே நோயாளிக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து களைப்பை ஆற்றினேன். அச்சமயம் என் தாய் மரணப்படுக்கையில் இருந்த ஞாபகமெனக்குண்டாயிற்று. என் மாமியை மெதுவாய்த் தூக்கி திண்டின்மீது சாய வைத்தேன். "குழந்தாய்! நீ இப்பொழுது அந்த ஊரில் என்ன செய்துகொண்டிருக்கிருய்" என்று மாமி என்னை வினவினுள். பாரிஸ்டர் தொழில் புரிவதாகவும் மனச்சாந்தி தவிர்த்து மற்றவகையில் ஒரு குறைவுமெனக்கில்லை என்றும் பதிலுரைத்தேன். "மனேகரமே! உன் அண்ணன் வந்திருக்கிருனே. அவன் உன் குழந்தையைப் பார்க்க வேண்டாமா? ஞானநந்தனை இங்கு எடுத்துவா அம்மா," என்று என் மாமி தன் மகளை அழைத்தாள்.

தாய் அழைத்த சத்தம் கேட்டு மனேகரி குழந்தையுடன் அவ்வறைக்கு வந்து குழந்தையைக்கீழிறக்கிவிட்டுக் கதவின் பின்புறமாகச் சற்று மறைந்து நின்ருள். இயற்கை சுபாவத்தாலும் சங்கோசத்தாலும் அவள் தலை குனிந்து நின்ருள். ஆகா, எவ்வித மாறுதல்! எத்தகையான மனமாற்றம்!!

மனக்கவலை என்றால் இன்னதென்றறியாது மனம் போனபடி ஓடி ஆடி விளையாடினகாலம் கடந்துவிட்டது. சம்பந்தா சம்பந்தமற்று வாய்க்கு வந்தவாறு உபயோகமற்ற விஷயங்களைப் பேசித்திரிந்த நாள் போய்விட்டது. காரண மற்றுச் சண்டையிட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம் சமாதானமடைந்த நாள் சென்றுவிட்டது. அனாவசியமாகக் கேள்விகளைக்கேட்டு பெரியவர்களைத் தொந்திரவுசெய்தநாள் ஓடிவிட்டது. அந்நாள்! அந்த நன்னாள், அருமையான நாள், களங்கமற்ற நாள், கவலையறியாத நாள், லாபநஷ்ட மற்ற நாள், மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருந்த நாள், அக்குழந்தைப் பருவம் இனி தவங்கிடந்து வேண்டினாலும் கிடைக்கப்போவதில்லை. குழவிப் பருவத்தில் உயர்ந்த கட்டிலின்மீதும், பெட்டிமீதும் ஏறி நின்று "என்னைப்பார்! நானும் உன்னைப்போல் உயரமாய்விட்டேன், இனி நான் குழந்தையல்ல, என்னை இனி பாப்பா என்று கூப்பிடாதே" என்று தன் தாயிடம் மனோகரி பேசிய நாள் வேறு. மனோகரி இப்பொழுது குழந்தையல்ல. சிறுமியல்ல, வாலிபப் பருவத்திலுள்ள பருவப் பெண், பிறன் மனையாள், ஒரு குழந்தைக்குத் தாயாகவிருக்கிறாள். பரபுருஷன் முன்னிலையில் நாணத்துடன் தலை குனிதல் பாரதப் பெண்களின் இயற்கை சுபாவம். இச்சமயம் என்னைக்கண்டு மனோகரி நாணமடைந்து தலைமைறைவாக நிற்பது நியாயமே. இதில் விசேஷ மொன்றுமே இல்லை. ஆனால், மனோகரி என்னைக்கண்டு மறைவில் ஓடி ஒதுங்கி நிற்கும் காலம் ஏற்படுமென்று நான் கனவிலும் நினைத்தவனல்ல. ஆ! அது ஒரு காலம், இது வேறு சமயம்.

குழந்தையை எடுத்து உச்சிமுகர்ந்து மடிமீதிருத்திச் சீராட்டினேன். எல்லா அம்சங்களிலும் மனோகரியின்

முழுச் சாயலையே ஒத்திருக்கும் ஞானாநந்தனுடன் சிறிது நேரம் விளையாடினேன். அப்பாலனின் புன்சிரிப்பும், களங்க மற்ற தோற்றமும், மதலைச் சொற்களும் என் மனதைத் தெளிவுறச் செய்தன. என் வாழ் நாளில் சில விநாடிகளையா வது சந்தோஷத்துடன் கழிக்கக்கூடிய பாக்கியம் அன்று எனக்குக் கிடைத்தது.

இக்காட்சியைக் கண்டதும் என் மாமிக்கு மனதிலிருந்த வருத்தம் உள்ளடங்கிக்கிடக்க மாட்டாது வெளிக் கிளம்பலாயிற்று. தன் பெண்ணின் துரதிருஷ்டத்தை விரித்துரைத்து அவளை நிந்தித்தாள். அவள் புருஷனுடைய துர்க்குணத்தையும், துர்ச்செய்கைகளையும் சொல்லி அவனை வாய்க்கு வந்தபடித் திட்டினாள். இதைக் கேட்டதும் மனோகரியின் முகம் மாறுதலடைந்தது. அவள் யார்? இந்தியப் பெண் அன்றோ! கணவனே தெய்வமெனப் பணியுங் கற்பரசிகளின் வழி வந்தவளன்றோ! புருஷன் தன்னை எவ்வளவு கொடுமையாய் நடத்தியபோதிலும் அவனைப் பிறர் தூஷிக்க ஹிந்துப் பெண் மனம் பொறுப் பாளோ! அறிவை வளர்க்கும் கல்விப் பயிற்சி யறவே ஒழிந்து உத்தியோகக் கல்வி நம்மிடையே வந்தபின் ஹிந்துக் குடும்பத்தில் இயற்கையாக ஏற்பட்டுள்ள மன மொற்ற வாழ்க்கை சிறிது சிறிதாகப் பங்கப்பட்டுக்கொண்டு வருவது சகஜமாய் விட்டிருக்கிறது. அனேகமாக நற்குணம் வாய்ந்த பெண்கள் கஷ்டப்படுவது சகஜத்திலும் சகஜமாய் விட்டதே. இதன் காரணம் யாது?

இதை யோசித்தால் நமக்கொன்றும் விளங்குவது மில்லை. படைக்கும் கடவுளாகும் பிரமன் ஒரு பெண்ணுக்கு அழகையும் நற்குணத்தையும் அமைக்க முற்படுங்கால் அதிலேயே ஆழ்ந்து தமது முழு நேரத்தையும் போக்கி

விடுகிறார். முடிவில் அவள் தலையில் விதியை நல்விதியாக எழுதச் சாவகாசமின்றி ஓடிவிடுகிறார் போலும். அல்லது வடிவழகிகளை சிருஷ்டிக்குங்கால் இதற்கு திருஷ்டிப் பரிகாரமாகவிருக்கட்டுமென்று அவர்கள் தலையில் துரதிருஷ்டத்தை பிரமன் வரைந்து விடுகிறாரா? இல்லையெனில், பெரும் பாலும் அழகும் நற்குணமுமுள்ள பெண்கள் துரதிருஷ்ட சாலிகளாக இருக்க நியாயமேது? புருஷன் கொடுமை ஒரு புறமும், "அதிருஷ்டமற்ற உன்னைப் பெண்ணாகப் பெற்றேனே" என்றும் 'இதற்கோ உன்னைச் சீரும் செல்வமுமாக வளர்த்தேன்' என்றும் பெற்றதாய்விடுங் கண்ணீர் மறுபுறமும், இதற்கிடையில் அதிருஷ்டமற்ற பெண்படுந் துயரை மாற்றுவார் யார்? மனோகரி கற்றறிந்த பெண். பொறுமையைப் பூஷணமாகக் கொண்டவள். தனது கஷ்ட வாழ்க்கைக்குத் தன் தலைவிதியே காரணமென்று மனம் பொறுத்திருப்பவள். அத்தகைய குணவதி தன் புருஷனைப் பிறர் நிந்தித்தால் அதைக்கேட்டு மனஞ் சகிப்பாளோ? "அம்மா! அதிருஷ்டமென்பதெள்ளளவுமில்லாத பெண்ணை நீ பெற்றுவிட்டு அயல்வீட்டுப் பிள்ளையை நிந்திப்பதால் ஆவதென்ன? இனி எனக்கு அவர்தான் கதி. கண்கூடாகக்கண்டு வரமளிக்கக்கூடிய தெய்வம் கணவனேயன்றி வேறுண்டோ? அவரின்றி வேறு துணை உலகிலெனக்கில்லவே இல்லை. அவர் நல்ல மனிதர்தான். என் துர்ப்பாக்கியத்தால் அவர் இவ்வாறு நடக்கிறார். என்றைக்கேனும் எனெக்கொரு நாள் நல்லகாலம் பிறவாமலிராது. என்னைக் கஷ்டப்படுத்துகிறாரன்றி மற்றப்படி அவரிடம் என்ன குறைவிருக்கிறது? அவர் என்னை எவ்வளவு துன்புறுத்தியபோதிலும் எனக்கது சகஜமாய்விட்டது. அம்மா! என் கணவனை இச்சமயம் சபிக்கலாமா? உங்கள் வாயால்

அவரை ஆசிர்வதியுங்கள், அவரை வாழ்த்துங்கள்" எனக் கூறி மனோகரி மாலை மாலையாகக் கண்ணீருதிர்த்து நின்றாள். இது கண்டு என் நெஞ்சமுருகிவிட்டது. "தங்காய்! அஞ்சாதே! அழாதே. உன் பொறுமைக்கொரு நாளும் குறைவில்லை, உனக்கு நற்காலமுண்டு. நீ உன் கணவனுடன் மேன்மையாக வாழ்வாய். உமாபதி நல்லவனே, துஷ்ட சகவாசத்தினாலும் குடிப் பழக்கத்தாலும் கெட்டுவிட்டான். இனித் திருந்திவிடுவான், நீ கண்ணீர்விடாதே அம்மா" என்று நான் அவளைச் சமாதானப் படுத்தினேன். இச் சமயம் என் மாமி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அவளால் பேச முடியவில்லை. நாக்குத் தடுமாறிற்று. தொண்டை அடைத்துக் கொண்டது. நெடுநேரம் அவதிப் பட்டு முடிவில் கைச் சாடையால் மனோகரியை அருகி லழைத்தாள். கண்ணீரை ஆறாய்ப்பெருக்கினாள். பெற்ற தாய்க்குத் தன் பெண்களிடத்தில், அதிலும் அதிருஷ்ட மற்ற பெண்ணிடத்தில், புருஷனுடைய கொடுமைக்காளான பெண்ணிடத்தில் உள்ள அபிமானமும் கவலையும் கொஞ் சமோ. அது இத்தகையதென்று எடுத்துரைக்க முடி யுமோ. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "என் மகனே! இவளைக் காப்பாற்று. உன் தங்கையை உன் உயிருள்ளவரை கைவிடாதே. பெண்ணுக்குத் தெய்வம் கணவனே! ஆனாலும் அவன் அநீதியாகக் கொடுமை செய்வானாயின் பெண்களை ஆதரித்தல் பிறந்த வீட்டாரின் கடமையே ஆகும். வீட்டிற் பிறந்த பெண் கண்ணீருங் கம்பலையுமாக இருக்க உடன் பிறந்தார் அவ ளைக் கவனியாதிருத்தல் பாவத்திலும் பெரும் பாவமாகும். உன் வாழ்நாள் உன் சகோதரியை யாதரிப்பதில் செலவிடப் படட்டும். வாசுதேவன் இவளை ஒருபோதும் கவனியான்.

அவன் மனைவிக்குக் கணவன் வீட்டாரென்றால் கசப்பு. நீ தான் மனோகரியை ஆதரிக்கவேண்டும்" எனக் கூறி "மனோகரம்! உன்னை உன் அண்ணன் கவனித்துக்கொள்வான். இவனை இன்று முதல் உன் அத்தை மகனென்று எண்ணாதே. எனது மூத்த பிள்ளை, உனக்குத் தமையனெனத் தெரிந்து கொள். நான் சொல்வது விளங்குகிறதா? ஒரு காலத்தி லும் பொறுமையை இழந்துவிடாதே. தற்கொலை செய்து கொள்ளத் துணியாதே. பொறுமை பெருமை தரும்" என்றுரைத்து, மனோகரியின் கையை என் கரத்தின்மீது வைத்து "இந்தா! இவளைக் காப்பாற்றுவதாக என்கையி லறைந்து சத்தியம் செய்து கொடு. உன் தங்கையைக் காப்பாற்று. இவளைக் கனவிலும் கைவிடாதே. மரணத் தறுவாயில் எனக்கு அபயமளித்திருப்பதை மறந்துவிடப் போகிறாய், ஜாக்கிரதை! நான் உன்னைப் பெற்ற பிள்ளையிலும் பதின் மடங்கு அன்பாய் வளர்த்ததற்கு நீ எனக்குச் செய்ய வேண்டிய பிரதியுபகாரமிதுவே" எனப் பேசி முடித்தாள்.

ஈதென்ன? கனவோ, நினைவோ, மனக்கலக்கமோ, கனவில் நினைவோ! மனோகரியின் காற்று வாடையும் கூடா தென்று தன்னந்தனியனாக, பரதேசியாக, அனாதையாக— யாருமறியாது அலைகடல் தாண்டி—நான் ஓடியிருக்க, அம் மனோகரி, அதே மனோகரி, இப்போது என் கையில் ஒப்புவிக் கப்பட்டிருக்கிறாள். அவளை இனி நான் ஆதரிக்கவேண்டுமே. விஷவாடை கூடாதென்றோடிய நான்காளகூட சர்ப்பத்தைக் கழுத்திலணியப்பெற்றேனே! இந்த நிலையில் நான் ஒன்றுந் தோன்றாதவனாக, சித்தரப்ரமை கொண்டவனாக, திகைப் படைந்தவனாக, நெஞ்சு படபடத்தவனாக, மனம் பதரிய வனாக, இருதயம் துடிப்பவனாக, இனி நடக்கவேண்டிய தென்னவென்பதை அறியாதவனாக, உன்மத்தனைப்போல்

உட்கார்ந்திருந்தேன். அவ்வறையில் சிறிது நேரம் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. சில வினாடி கழித்து நான் மனத்தெளிவடைந்தேன். கண்ணை விழித்தேன், சுற்றிலும் உற்று நோக்கினேன். "ஐயோ! அண்ணா! இனி நான் என்ன செய்வேன்! எங்கு செல்வேன்! என் துக்கத்தை யாரிடமுறைப்பேன். அனாதையாய் விட்டேனே! எனக்கினியார் துணை அண்ணா!" என்று வாய் விட்டலறி அழுது மனோகரி மூர்ச்சையானாள். ஏன்? என் கையில் மனோகரியை ஒப்புவித்த மறு நிமிஷத்திலேயே என் மாமி பரமபதமடைந்துவிட்டாள்! மனோகரி என்ற நாடகத்தில் நான் வேஷமிட்டு நடிக்கவேண்டிய காலம் நெருக்கிவிட்டது! யமதருமனாகும் சூத்திரதாரன் என் மாமியின் உயிராகும் திரைச்சீலையைத் தள்ளிக்கொண்டு கதையாரம்பம் கூறிச் சென்றுவிட்டான்! ஆனால், இவ்வளவிற்குமிடையில் உயிரிழந்து கிடக்கும் பாட்டியாரையும் மெய் மறந்துள்ள அன்னையையும் உயிர்ப்பிணமாக விருக்கும் என்னையும் சிறிதும் கவனியாது "அம்மா! அம்மா. பாப்பா! மாமா!" என்று பேசியும் கைதட்டிச் சிரித்தும் குழந்தை ஞானானந்தன் தன் பெயருக்கேற்கக் கவலையின்றி அவ்வறையில் ஓடி விளையாடிக்கொண்டிருந்தான்.

மனோகரியை நான் மணக்க முடியாதபடி என்மீது ஏற்பட்டிருந்த பெரும் பழியைக் கேட்டதும் என் மனம் புழுபோல் துடித்தும் என்மீது அபாண்டமான பெரும் பழியைச் சுமத்தியது யார் என்பதை நான் அறிந்து கொள்ளும் முன்னதாகவே என் மாமியின் உயிர் போய்விட்டதே! நான் ஊரிலில்லாதும் என்னிடமிருந்து நெடுநாள் கடிதமில்லாதுமிருந்ததால் மனோகரியை உமாபதிக்கே நிச்சயம் செய்துவிட்டதாகவன்றோ நான் இன்றுவரை எண்ணியிருந்

தேன். மனோகரியை மனைவியாக அடைய முடியவில்லையே என்ற துக்கத்தால் என் வாழ்நாளை பிரம்மச்சாரியாகவே கழிக்க முற்பட்டிருக்கும் எனக்குப் பெரும் பழியொன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்ததும் நான் பெருந்திகைப் புற்றுத் தவித்தேன். விதவையாயிருந்த பருவப்பெண்ணை நான் கடத்திச் சென்றதாக என்மீது பழிசுமத்திய பாதகன் யார் என்பதை யறிய வெண்ணினேன். இதனாலன்றோ என் மாமன் மனம் வருந்தி இறக்கவும், மனோகரி மற்றொரு வனை மணக்கவும், கணவனால் துன்புறுத்தப்படும் தன் அருமை மகளின் கஷ்டத்தைக்காணச் சகியாது என் மாமி மனம் நொந்து மாளவும் நேரிட்டது! 'ஒரு குடும்பமே சீர் குலையும் வண்ணம் வழிதேடிய பாதகனை நான் பழிக்குப் பழி தீர்த்துக்கொள்ளவும் வழியில்லையே' என்று நானும் அலறலானேன்.

---

## 11-வது அதிகாரம்

**வா**சுதேவன் தன் தாய்க்கு மரணச் சடங்குகளை முடித்த மறுதினமே தன் இருப்பிடத்திற்குச் சென்று விட்டான். உமாபதி மனோகரியைக் குடிவெறியிலடித்துத் தெருவாயிலில் தள்ளிவிடும் நாட்களில் மனோகரி தன் தாயின் வீடு வந்து இரண்டொரு நாள் தங்கி உடம்பிலுள்ள படு காயங்களை ஆற்றிக்கொண்டு மீண்டும் கணவன் வீடு செல்வது வழக்கம். இப்போது என் மாமி இறந்து விட்டதால் மனோகரிக்கு எள்ளளவும் ஆதரவின்றி அவள் கஷ்டம் முன் னிலும் இரட்டித்து விட்டது. உமாபதி எனக்குப் பள்ளித் தோழனைபடியாலும் அவன் கெடுவது துஷ்டர்களின்

சகவாசத்தாலென்பதை நான் அறிந்ததாலும் சில நாட்கள் அவ்வூரிலேயே தங்கியிருந்து உமாபதியை நல்வழிப்படுத்தி பிறகு செல்லலாமென நினைத்தேன். நானிவ்வாறு செய்யாவிடின் மனோகரியின் கஷ்டம் தீராது போவதுடன் என் மாமிக்கு நான் அளித்த வாக்குறுதியும் வீணாய் விடுமன்றோ! மனோகரியின் சுகவாழ்க்கைக்காக என்ன வழி தேடலாமென்பதே என் முழுநோக்கமாயிருந்தது. நான் தனி வீட்டில் வசித்தேனாயினும் பகல் நேரத்தை உமாபதியின் வீட்டிலேயே கழித்து வந்தேன். உமாபதிக்குத் தோட்டந் துறவுகளும் நெல்விளையும் நிலங்களும் ஏராளமாக இருந்தன. கூடாத ஒழுக்கத்தினருடன் கூடி, குடிக்கவும் தாசி வீடு செல்லவும் பழகியதிலிருந்து அவன் தனது பூஸ்திதிகளை நேரில் நின்று பராமரிப்பதில்லை. எஜமானின் இழிவான நிலையைக் கண்டு காரியஸ்தர்கள் தங்கள் மனம் போனபடி கணக்கெழுதிவைத்துத் தங்கள் வரையில் எதேஷ்டமாகக் கொள்ளை யடித்துப் பணம் சேர்க்கலானார்கள். காலாந்திரத்தில் வரவு குறைந்து செலவு மீறிவிட்டமையால் உமாபதி தனது அவசரச் செலவிற்காகப் பல விடங்களிற் கடன் வாங்கத் தலைப்பட்டான். அவன் வீட்டில் உயர்தரக் குடி வகைகள் நிறைக்கப்பட்டிருந்தன. அனாவசியமாயும் அக்கிரம வழிகளிலும் பணம் ஏராளமாகச் செலவு செய்யப்பட்டு வந்தும் மனோகரியின் நிலைமைமட்டும் பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. நல்ல ஆடையாபரணங்களில்லாவிடினும் நல்ல உணவுமின்றி அவள் கஷ்டப்பட்டாள். உமாபதி வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வாங்கிப் போடாது இலையின் கீழுட்கார்ந்து சமையல் சரியாயில்லை என்று சீறிவிழுவான். கலத்துச் சோற்றை மனோகரியின் தலையிற் கொட்டிக் கைகொண்ட வரையில்

அவளை அடித்துத் துன்புறுத்தாத நாள் மெத்தக் குறைவு தான். மனோகரி உயர் குணம்படைத்த உத்தமப் பெண் ஆவாள். அவள் கணவன் தன்னை எவ்வளவு துன்புறுத்திய போதிலும் மனஞ்சலியாது அவனை உபசரிப்பதிலேயே மனோகரி கண்ணுங் கருத்துமாயிருந்தாள். தன்னை யடிப்ப தால் அவன் கைநோகுமென்று நினைப்பாளன்றி தனது நிலைமைக்குச் சற்றும் வருத்தமுறாள். குடி மயக்கமில்லாத சமயத்தில் உமாபதி உயர் குணமுள்ளவனாகவே இருந்தான். அச்சமயம் தன் மகனை மடிமீதுவைத்துச் சீராட்டுவான். 'மனோகரி! மனோகரி!' என்று அடிக்கொருதர மழைப்பான். என்னுடன் அன்பாகச்சம்பாஷிப்பான். நான்சொல்லும்புத்தி மதிகளை அங்கீகரிப்பான். இனிக் குடிப்பதே இல்லை என்று என்னிடம் ஆயிரம் சத்தியம் செய்வான். குப்பைத்தொட்டி யில் படுத்திருக்கும் நாய்க்கு பூர்வஞானம் பிறந்து இனி எச்சிற்கலத்தை அணுகுவதில்லையெனக் கனவு காணுங்கால் தட்டென எச்சிற்கலம் விழும் ஓசை கேட்டதும் எவ்வாறு எழுந்து ஓடுமோ அவ்வாறே உமாபதியின் நல்லறிவும் அவன் நண்பன் யாரையேனும் கண்டால் உடனே மாறி விடும். சிலசமயம் தனியே இருந்தாலும் சிறிது நேரத்திற் கெல்லாம் நற்புத்தி மாறிவிடும். 'மனோகரி' என்று கூவுவான். தனக்கு அடியுதைகளை அளித்துக் கணவன் புத்திக்கும் நற்பெயருக்கும் குறைவு விளைவிப்பதான அப் பாழுங்குடியை மனோகரி தன் கையாலவனுக்களிக்க வேண் டும்! போகப் போக மயக்கம் தலைக்கு ஏற ஏறப் பிறர் உதவியின்றித் தானாகவே எடுத்துக் குடிக்கத் தொடங்கு வான். அருகிலிருக்கும் குழந்தையை காற்பந்தைப்போல் தூக்கியெறிவான். இக்கொடுமை சகிக்காது மனோகரி குறுக்கிடுவாளானால் அன்று உயிர் உண்டு இல்லையென

அவளை அடித்துத் துன்புறுத்துவான். சித்த சுவாதீன மற்ற பைத்தியக்காரனை அடக்கலாம், முரடனை வசப்படுத் தலாம், குடியனைச் சீர்திருத்தக் கடவுளாலும் இயலா தன்றோ? இருந்த போதிலும், மனோகரியின் கஷ்டத்தைச் சிறிதளவேனும் நீக்க எண்ணி உமாபதிக்கு ஒழிந்த நேரங் களில் நற்போதனைகளைச் செய்து வருவேன். தனிப்பட்ட முறையில் உமாபதி நற்குணமுள்ளவனே. ஆனாலும், துஷ்ட சினேகிதர்களின் கூட்டுறவினால் மிகவும் கெட்டு விட்டான். தாழ்மையாகவும் அன்புடனும் பள்ளித் தோழனென்கிற அபிமானத்துடனும் நான் செய்யும் உபதேசங்களனைத்தும் தோழர்களின் முகத்தைக் கண்டதும் இருந்த விடந்தெரி யாமற் பறந்தோடி விடும்! உயர் குணமும் நடையும் பொருந்தியவர்களின் ஜீவியத்தைச் சரித்திர ரூபமாக எடுத்துக்காட்டல் உலக வழக்கம். இது காரணம் பற்றியே நம்மிடையே வழங்கும் புராணக் கதைகள் நவநாகரிகமுற்ற இக்காலத்திலும் நம்மால் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. சாவித்திரியின் கதையையும், அனுசூயையின் சரித்திரத்தையும், சந்திரமதியின் வாழ் நாளையும் படிப்பதால் நமது பெண்மணிகள் கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமுங்கொண்டு நடக்க முற்படுவார்களென்பது நமது நம்பிக்கை. ஆனால், நிமிஷத்திற்கு நிமிஷம் புதிய மாறுதல்களைக் கொண்டு விளங்கும் இக்காலத்தில் நன் மையும் நன் நடவடிக்கையுமே கொண்டிருந்த பூர்விகச் சரித்திரங்களைப் படிப்பதால் மட்டும் போதாது. தற்காலத் திற்கேற்ற நவீன விஷயங்களையும் அறிதல் அவசியம். இதற்கு மேனாட்டு முறையில் நாவல் என்ற சொல் வழங்கு கின்றது. மேனாட்டார் தங்கள் சமூகத்திடையே ஆழ்ந்து கிடக்கும் ஊழல்களையும் சீர்திருத்தமற்ற நடவடிக்கை

களையும் எதிர்பாராது ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் காலத்திற் கேற்றவாருக எடுத்துக்கூறித் தங்கள் சமூகத்தையும் பெண்மணிகளையும் சீர்திருந்தச் செய்கின்ருர்கள். நாகரிக வாழ்க்கையில் நாம் கைகொண்ட பல வழக்கங்களில் நாவல் படிப்பதும் ஒன்ருகும். அயல்நாட்டுப் பழக்க வழக்கங்களையும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறும் மொழி பெயர்ப்புப் புத்தகங்களை நாவல் என்ற முறையில் நாம் படிப்பதால் பயன் யாது? மனோகரியின் சரித்திரத்தைக் தனிப்பட எடுத்துறைக்கக் கூடிய ஆற்றலும் நோக்கமும் என்னிடத்திற் கிடையா. என்போன்ற வாலிபர்களுக்கு உபயோகமாக ஏதேனும் விஷயங்கள் இருப்பின் அதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும் என்ற நோக்கத்துடன் என் சரித்திரத்தை எடுத்துறைக்க முன் வந்திருக்கிறேன். பெண்ணின் நலத்தையும், பெண்ணின் உயர்வையும், பெண்மணிகளின் மதிப்பையும், அவர்களது பரிசுத்த வாழ்க்கையையும், தியாகம் வாய்ந்த ஜீவிதத்தையும், உலக அனுபவமும் கல்வி அறிவும் பொருந்திய பெண் ஆசிரியர் கையிலுள்ள இறகுமட்டுமே எழுதக் கூடும்.

உமாபதியின் தோழர்களில் கார்த்திகேயன் என்பவன் தலை சிறந்து விளங்கினுன். சூதாடல், கள்ளுண்ணல், விலைமாதரில்லம் செல்லல் என்ற முக்குணங்களிலும் தனக்கு நிகர் ஒருவருமில்லையென்பதை நிரூபிக்க வேண்டுமென்பதே அவனது கொள்கையாகும். கார்த்திகேயனிடமும் பொருள் தேடக்கூடிய சாமர்த்தியம் அமைந்திருந்தது. பிறரை ஏமாற்றியோ புகழ்ந்தோ பொருள் பறிப்பான். இதற்குச் சாதகமாக தனவந்தர்கள்

பலர் அவன் கையிலகப்பட்டுப் பம்பரம்போல் சுழன்று திரிந்து, முடிவில் மூலையிலொடுங்கி விடுவது வழக்கம்.

கார்த்திகேயனால் அழிந்த ஜமீன்தார்களையும் மைனர்களையும் கணக்கிட்டு முடியாது. 'இப்பாவி எங்கள் குடியைக்கெடுக்கவந்துவிட்டானே' என்று பத்தினிப் பெண்கள் பதறியழுவார்கள். ஆனை வாயிலகப்பட்ட கரும்பு மீண்டாலும் கார்த்திகேயனிடமகப்பட்ட மனிதன் தப்பவே மாட்டான். ஒருவரும் அகப்படாத சமயம், ஏதேனும் ஓர் தொழில் செய்து பொருளீட்டிக் கொள்வான். தற்சமயம் இவன் வீசிய வலையில் உமாபதி அகப்பட்டுக் கொண்டிருந்தான். இவனை எப்படியேனும் துரத்தி விட்டால் உமாபதியின் நிலைமை சிறிதளவேனும் திருந்தி விடுமென்றே எனக்குத் தோன்றியது. உமாபதியின் வீட்டில் கார்த்திகேயன் சர்வாதிகாரம் பெற்று விளங்கினான். அவன் வீடுவருங்கால் உமாபதி வீட்டிலிருக்கவேண்டுமென்ற நிபந்தனை கிடையாது. வீட்டுக்குச் சொந்தக்காரனைப்போல் நடுவீட்டில் சற்றும் நாணமின்றி சட்டதிட்டத்துடன் உட்கார்ந்து வேலை ஆட்களை மனம்போனவாறு அதிகாரம் செய்வான். வேலையாட்கள் சம்பளத்திற்காகச் சேவகம்செய்கிறவர்களே யானாலும் தங்கள் எஜமான் என்ற முறையில் அன்புகொண்டு நடத்தல் வழக்கம். எஜமான் இட்ட வேலையை அவர்கள் எதிர்மொழியின்றிச் செய்து முடிப்பார்களாயினும் அக்குடும்பத்தில் நடைபெறும் காரியங்களிலுள்ள லாப நஷ்டங்களை அவர்கள் அறியாமலிருப்பார்களா? மனோகரிக்கு ஏற்படும் வசை மொழிகளுக்கும் தண்டனைகளுக்கும் கார்த்திகேயனே காரணமென்பதை அவர்களாலுமறிந்தேன். மனோகரியைக் கண்டு பேசுங் காலத்திலெல்லாம் அவள் தனக்கு அதிகக் கஷ்டம்

ஒன்றுமில்லை என்றும், கூடிய சீக்கிரம் தனக்கு நற்காலம் பிறந்து விடுமென்றும், துஷ்ட சகவாச மொழிந்தால் கணவன் சீர்திருந்தி விடுவானென்றும் சொல்லுவாளன்றித் தான் படுந்துன்பத்தை மனமாற என்னிடம் வெளியிடவே மாட்டாள். இவ்விதமிருந்தும் ஒரு நாள் அவள் தன்னை யறியாது அலறியழுததுடன் தன் கணவனை விட்டுக் கார்த்தி கேயன் பிரிந்து சென்றால் தனக்கு நற்கால மேற்பட்டு விடு மென்றும், குடிமயக்கத்தில் தன்னை அடித்து உதைத்து இம் சித்தபோதிலும் மனைவியென்ற பாசம் தன் கணவனுக்கு உண்டென்றும், கார்த்திகேயனிடம் உள்ள சில தோற்றங் களைக் காணுங்கால் தனக்குப் பெருத்த அச்சமுண்டாவ தாகவும், அவனுடைய துரபிப்பிராயத்தைத் தன் கணவன் தெரிந்துகொண்டவன் அன்றென்றும் இதுவிஷயம் வெளியிட முடியாததாயும் சகிக்க முடியாததாயும் இருக்கிறதென்றும், தன் காலம் முழுவதும் கஷ்டப்பட நேர்ந்தாலும் மானத் திற்குப் பழுதுவராதிருக்கவேண்டு மென்பதே தன் கவலை என்றும் கூறி மாலை மாலையாகக் கண்ணீருதிர்த்து நின்றாள். இது கண்டு என் மனம் வெதும்பிற்று. சொல்லொணக் கவலையையும் துயரையும் அடைந்தேன். செய்வதென்ன வென்றறியாது தவிதவித்தேன். கார்த்திகேயனை எவ்விதம் ஒழிப்பதென்று ஆத்திரமடைந்தேன்.

---

## 12-வது அதிகாரம்

இவ்வாறு மனோகரி தன் மனத்துயரை வெளியிட்டதும் அதைக் கேட்டு என் மனம் பரிதபித்தது. என் எதிரில் அவள் கண்ணீரை ஆறாகப் பெருக்கியவண்ணம் நின்றாள். என்னையறியாது என் வாய் பேசத் தொடங்

கிற்று. "மனோகரி, நீ இனி சிறிதும் கவலைகொள்ளாதே. என்னை நீ உறுதியாய் நம்பு. நான் உன்னைக் காப்பாற்றத் தவறமாட்டேன். மரணத் தறுவாயில் உன் தாய் உன்னை என் கையிலளித்து 'இவளைக் கைவிடாதே' என்று உறுதி மொழி பெற்றாளே. அதை நான் எவ்விதம் மறக்கமுடியும்? என்ன நேரிட்டாலும் நான் அஞ்சி ஒளியமாட்டேன். அவனால் உன்னை என்ன செய்யமுடியும்? இனி அவனை ஒரு மனிதனாகவும் நினைக்காதே. அவனைக் கண்டு பயப் படாதே. இன்று முதல் நீ கவலையின்றி தைரியத்துடன் இரு. நீ கஷ்டமின்றிச் சந்தோஷமாக வாழவேண்டும், உன்னை உயர்ந்த நிலையில் வைக்கவேண்டும் என்ற தீர்மானத் தாலேயே நான் இங்கு தங்கியிருக்கிறேன். அவனை எவ் விதத்திலேனும் ஒழித்துவிடுகிறேன், அஞ்சாதே! கண் ணீரைத் துடைத்துக்கொள்" என்றேன். இச்சமயம் உமாபதி திடீரென என் எதிரில் நின்றான். கார்த்திகேய னும் அவனுடன் இருந்ததைக்காண என் மனம் கோபத்தா லும் வெறுப்பாலும் துடிதுடித்தது. உமாபதி மிதமிஞ்சிக் குடித்திருந்தான். அவன் கண்கள் செவேலெனச் சிவந்து குழம்பி இருந்தன. தட்டித் தடுமாறி நின்றான். கண் மூடித்திறக்கும் முன் என் அருகில் நின்றிருந்த மனோகரியின் முதுகில் ஓர் அறை அறைந்து தலைமுடியைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளிக் காலால் உதைத்து உருட்டினான். குடிவெறி யில் அவன் அடிக்கும் அடிகள் மனோகரியின் வயிற்றிலும் முதுகிலும் மாறிமாறி விழுந்தன. பொறுமையே பூஷண மாகக் கொண்ட மனோகரி அவ்வடிகள் தாங்காது ஐயோ வென அலறியழுதாள். ஆறுமாதக் கருவுற்றிருக்கும் பெண் பாலைக் கணவனென்ற பாதகன் இவ்வாறு துன்புறுத்து வதைக்கண்டு நான் எப்படிச் சகிப்பேன்! இம்மிருகச்செயலைக்

கண்டு எவ்வாறு மனம் பொறுப்பேன். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? மனோகரியை அக்கொடியவனிட மிருந்து காப்பாற்றத் துணிந்தேன். கீழ் வீழ்ந்து கிடக்கும் மனோகரியை அப்பாதகனிடமிருந்து மீட்க வெண்ணி அவளை அப்புறப்படுத்துமாறு என் கைகள் என்னை யறி யாது தாவிச் சென்றன. இதுகண்டு உமாபதியின் கோபம் அதிகரித்தது. அவன் மனோகரியைக் குப்புறத்தள்ளிப் பல உதைகளைக் கொடுத்து முடிவில் அவள் முதுகின்மீது ஏறி நின்றான். “அடியாத மாடு படியாது” என்று கூறி கார்த்திகேயன் உமாபதியைத் தூண்டலானான். இக் கோரச் செயலைக் கண்டு எவ்வளவு நேரம் மனம் பொறுப் பேன். ஓடிச் சென்று உமாபதியைப் பிடித்திழுத்து அவனை ஒரு மூலையில் தள்ளிவிட்டேன். மனோகரி மூர்ச்சித்துக் கிடந்தாள். முகத்திற் குளிர்ந்த ஜலம் இறைத்து அவளை விழிக்கச் செய்தேன். இதற்குள் பின்கட்டிலிருந்த வேலைக் காரி ஓடிவந்து மனோகரியை ஆசுவாசப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்று படுக்கையிற் படுக்கவைத்தாள். இது வரை குடிமயக்கத்தாலும் நான் தள்ளிய வேகத்தாலும் மதிமயங்கிக் கிடந்த உமாபதி சிறிது மனத்தெளிவடைந்து எழுந்து வந்தான். என்னைக் கண்டதும் அவனுக்கு ஆத்திரம் பொங்கிற்று. “அட அயோக்கியப் பயலே, உன்னை இதுவரை மெத்த யோக்கியன் என்றல்லவா நான் நினைத்து ஏமார்ந்தேன். உன்னை நம்பி இவ்வீட்டில் நுழையவிட்டதே பிசகு. கண்காணாத தேசத்தில் மான ஈனமின்றி மனம் போல் நடத்திவந்தத் திருவிளையாடல்களை இங்குமா செய் யத்துணிந்தாய். சீச்சீ! மானங்கொட்ட பிணமே. கைம் பெண் ஒருத்தியைக் கற்பழித்து ஓடியது போதாதா! கணவன் கீழிருக்கும் மனோகரியையும் இழுத்துக்கொண்டு

ஓட நினைக்கிறாயா. அவளிடம் தனிமையில்—நான் இல்லாத சமயத்தில்—உனக்கென்னடா வேலை, என்னடா பேச்சு'' என்று உமாபதி என்னைத் திட்டினான். இது கேட்டு எரிகிற தீயில் எண்ணெய் வார்த்ததுபோல என் கோபம் பெருகிற்று. இருந்தும் சந்தர்ப்பத்தையனுசரித்து என் கோபத்தை யடக்கிக்கொண்டேன். "என்ன உமாபதி, நீ படித்தவன். பிரபுவம்சத்திற் பிறந்தவன். நீ இவ்வாறு நடந்து கொள்ளலாமா? சற்றேனும் பொறுமை வேண்டாமா? கர்ப்ப முற்றிருப்பவளை மனம்போனபடி முரட்டுத்தனமாக அடிக்கலாமா? நீ இவ்வளவு கோபங்கொள்ளும்படி மனோகரி செய்த தவறென்ன? வாயில்லாப் பிராணிகளை மனிதர் துன்புறுத்தா வண்ணம் ஜீவரக்ஷண சங்கங்கள் ஏற்பட்டிருக்க மனிதப் பிறவியைத் துன்புறுத்தல் நியாயமா? தாயில்லாப் பெண்ணை நீ தயவுடன் நடத்தவேண்டி யிருக்க சற்றும் இரக்கமின்றித் துன்புறுத்தலாமா?'' என்றேன். உமாபதி என்மீது சீறி விழுந்து, "அட! என்ன வேதாந்தம், என்ன போதனை, எவ்வளவு அடக்க வணக்கம்! திருட்டுப் பயலே! நீயா எனக்கு நல்லுபதேசம் செய்கிறாய்? பல நாட் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுபோல இன்று உன்னைக் கையும் களவுமாகக் கண்டு பிடித்துவிட்டேன். என்னிடமகப்பட்டுள்ள நீ எனக்கு உபதேசம் செய்கிறாயே. மனோகரியை நினைத்து நீ இவ்வீட்டை வட்டமிட்டுக் கொண்டிருக்கும் ரகசியம் இன்றல்லவோ வெளிப்பட்டது! உன்னை நான் நண்பனென்று நம்பிச் சற்று இடங்கொடுத்த தற்காக என் மனைவிமீது கை போட்டு விட்டாயே! என்னை எவ்விதத்திலேனும் ஒழித்து விடுவதாக மனோகரிக்கு தைரியம் சொன்னாயல்லவா. நல்லது, நானே உன்னை ஒழித்து விடுகிறேன் பார். மானங்கெட்ட நாயே! மானிடப்

பதரே! மூளையற்ற முண்டமே! இன்றே உன்னை ஒழித்திருப்பேன். போனால் போகட்டுமென்று உன்னை மன்னித்து உயிர்ப் பிச்சை யளித்திருக்கிறேன். என் வீட்டைவிட்டு வெளியே நட. ஓடிப்போய் விடு. இனி என் வீட்டு வாயிலை மிதிப்பாயானால் குண்டாந்தடி கொண்டு மண்டையை நொறுக்கி விடுவேன், பத்திரம்! நான் என் மனைவியை யடித்தால் உனக்கென்னடா. மனோகரி, மனோகரி என்று ஏனடா புலம்புகிறாய். நீ ஒழுங்காக நடந்திருப்பின் மனோகரியை மணந்திருக்க மாட்டாயா. ஊரான் பெண்டு என்பதில்லாது அவளுக்கு உபசாரம் செய்கிறாயே. உனக்கு மானவெட்க மென்பதில்லையா. ஓடு! ஓடு!! என் முன் நில்லாதே, காமப் பேய் பிடித்தலையும் மிருகமே!" என்று வாய்க்கு வந்தபடி சரமாரியாக உமாபதி என்னைத் திட்டினான். அவனுரைத்த இரண்டொரு வார்த்தைகள் என் மனதைப் பிளந்தன. கற்பலங்காரியான மனோகரிக்கு அபவாதங்கற்பிப்பது கேட்டு என் மனம் கொதித்தது. எனக்கு அச்சமயமேற்பட்ட கோபத்தில் உமாபதியை ஒரே அடியில் வீழ்த்தி அவன் உயிரை நமனுலகமனுப்பி விடலாமா என்று எண்ணினேன். "அடடா! என்ன கெட்ட புத்தி. கேடு கெட்ட யோசனை. உமாபதி இறந்தால் நஷ்டமடைபவர் யார்? மனோகரி விதவையாய் விடுவதற்காகவா நான் இவ்வளவு சிரமப்படுவது. சீ! எவ்வளவு கெட்ட யோசனை. கடவுளே, என்னை மன்னித்து விடும். மனோகரியை நல்ல நிலையில் வைப்பதன்றோ என் லக்ஷியம். உமாபதியும் மனோகரியும் மனமொற்று வாழ்வதைக் காண்பதன்றோ எனது கோரிக்கை" என்பதை நான் நினைத்ததும் உமாபதிமீது எனக்குண்டான கோபம் தணிந்து விட்டது.

"உமாபதி! மனோகரியை நீ மணந்து கொண்டதில் எனக்கு வருத்தமே கிடையாது. இது சத்தியம். அன்று முதல் அவள் என் தங்கை என்றே நான் மதித்திருக்கிறேன். விவாகமென்பது வினைப்பயனன்றி நாமாக நம்மிஷ்டம்போல் நடத்திக்கொள்ள முடியாது. மனோகரி எனக்கு அம்மான் மகளன்றி அயல் வீட்டுப் பெண் அன்று. அவளும் நீயும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதே என் விருப்பம். உனக்கு ஒரு தங்கை இருந்து அவளை அவள் புருஷன் கடுமையாய் நடத்தினால் அதை நீ உன் கண்ணாரக்கண்டு மனம்பொறுத்திருப்பாயா? பெண்என்றால் பேயும் இரங்கும் என்பார்களே. உனக்கு மட்டும் அவ்விதி விலக்கோ. உண்மை இன்னதென்று அறிந்து கொள்ளாது தாறுமாறாகப் பேசுகின்றாயே. நீ படித்த படிப்பும் உன் புத்தியும் ஏன் இவ்வாறு துர்வழியிற் புகவேண்டும். என்னை இன்னான் என்றும் மதியாது வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசுகின்றாயே. உன் மனதில் இரக்கமென்பது எள்ளளவு மில்லையே—காட்டு மிராண்டியைப்போல் நடந்து கொள்ளுகிறாயே. உண்மையில் ஒருவன் நல்லவனாக இருந்தபோதிலும் துஷ்ட சகவாசத்தால் அவன் கெட்டுவிடுவது நிச்சயம். நான் உன்னை மிகவும் பணிவுடன் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். கெட்ட சகவாசங்களை அறவே நீக்கிவிடு. கெட்ட வழக்கங்களை அடியோடு விலக்கிவிடு. அழகும் குணமும் ஒருங்கே அமையப் பெற்ற மனைவியுடன் நகமும் தசையும் போல் ஒற்றுவாழ். மனோகரியைத் துன்புறுத்தாது அவளை அன்புடன் நடத்துகிறாய் என்பதைக் கண்டால்தான் என் மனம் குளிரும். இதே கவலையில் என் மாமி இறந்து விட்டாள். இனியும் நீ இவ்விதமே கஷ்டப்படுத்தினால் மனோகரியும் மாண்டு விடுவது திண்ணம்! அவள் இறந்தபின்

நீ திருந்துவதாலும் பச்சாத்தாபப் படுவதாலும் ஒருபயனு மேற்படாது. 'மறந்து செத்தேன், உயிரே வா' என்றால் வருமா? என்னைக் காட்டிலும் உற்ற நண்பன் உனக்குக் கிடைக்க மாட்டான். நான் சொல்வதைக்கேள். உனக்கு எவ்வித உதவியையும் நான் செய்யத் தயார்'' என்றேன்.

"என்ன, என்ன? நீ என்னைக் காப்பாற்றுகிறாயா—நல்லது! இதற்காகவே நான் அவளை அவ்வாறு உதைத்தேன். அவள் உன்னால்தான் உதைபடுகிறாள். மனோகரி உனக்கு மனைவியாயிருக்க நான் சம்மதியேன்! மனைவியை அயலானுக்கு வழங்கி அதைக்கொண்டு பொருள் தேடும் கயவன் நான் அன்று! இதற்காகவே மனோகரி இறக்கத்தான் வேண்டும். நான் இன்று வீடு வரும்போது அவளிடம் நீ சொல்லிக்கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டே உள் நுழைந்தேன். உன் யோசனையைப் பட்டவர்த்தனமாக இப்பொழுதும் சொல்லிவிட்டாய். இன்னமும் நீ வெளியேறாது என்முன் நிற்கிறாய். மீண்டுமொருமுறை மனோகரி என்று சொல்வாயானால் உன் கண்காண உன் காலின் கீழேயே மனோகரியைக் கொன்றுவிடுவேன்'' என்று உமாபதி உரக்கக் கூறினான்.

"என்ன சொன்னாய்? மனோகரியைக் கொல்லப்போகிறாயா? அவள்மீது கைநீட்ட உனக்கு தைரிய முண்டா? உனக்கு வினாசகாலம் கிட்டிவிட்டது போலும்! தூக்கு மேடையைக் காணவிரும்புகிறாயா?'' என்று நான் சொல்லி முடிக்கு முன் உமாபதி என் கழுத்திற் கைபோட்டுக் காகர வென்று தள்ளிக்கொண்டு வந்து தெருவில் தள்ளிவிட்டு "இனி இவ் வீட்டில் காலடி வைத்தால் உன் உயிர் உன்னுடையதல்ல! மனோகரியென்று உன் ஊத்தை வாயால் உச்

சிரிப்பின் பற்களைத் தட்டிவிடுவேன். நல்ல மாடானால் உள்ளூரில் விலைப்போகாதா என்பதுபோல உனக்கும் கண்காணு தேசத்திற்கும் சரியன்றி இங்கு வால் ஆட்டாதே, பத்திரம்! ஓடிப்போ, உயிர்தப்பிப் பிழை!" என்று ஏசிப் பேசி என் முகத்தில் உமிழ்ந்துவிட்டு தெருக்கதவைத் தாளிட்டுக் கொண்டு வீட்டிற்குள் சென்றுவிட்டான்! சில வினாடிகள் எனக்கொன்றுமே விளங்கவில்லை. 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இன்று இவ்வாறு நேரிட்டதே! இனி என்ன செய்வது' என்று மனம் நொந்து உருகினேன். அன்று நான் அங்கு செல்லாமல் இருந்திருப்பேனாயின் இவ்விபரீதம் நடைபெற்றிருதன்றோ?

---

## 13-வது அதிகாரம்

நெடுநேரம் செய்வதென்ன வென்று விளங்காது பித்தனைப்போல் நடுத்தெருவில் திகைத்து நின்றேன். அத்தெருவில் நடமாடுவோர் என்னை கவனிக்கத் தலைப்பட்டனர். ஒருவாறு மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு என் வீடு சென்றேன். இரவு முழுதும் இதைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். உமாபதி மனோகரியை என்ன செய்கிறானோ என்று நினைக்குந்தோறும் என் குடல் நடுங்கிற்று. 'மனோகரியைக் காப்பாற்று' என்று என் மாமி உரைத்த சொல் என் காதில் ஒலிக்கவாரம்பித்தது. "கடவுளே, என் செய்வேன்! நானோ ஆடவன். மனோகரியோ அயலான் மனைவி—நான் இருப்பதோ கடல் கடந்தநாடு. இன்று நடந்த சம்பவத்தால் உமாபதிக்கு என்மேல் சந்தேக மேற்பட்டுவிட்டதே. கார்த்திகேயனை ஒழித்துவிடுவதாக நான் சொன்னதை அவன் விபரீதமாகக்

கருதிவிட்டானே. இனி இவ்வெண்ணத்தை மாற்றவும் வழி கிடையாதே. பொல்லாத காலத்திற்கு சந்தர்ப்ப சாக்ஷியமும் இப்படி ஏற்படவேண்டுமா? உமாபதியின்மீது குற்றமுரைக்க வழியேது. மனோகரி 'அவனை ஒழி. அவனை ஒழித்தால் நான் சுகப்படுவேன்' எனவும் 'அவனை ஒழித்து விட்டு மறுவேலை பார்க்கிறேன்' என நான் சொல்வதையும் கேட்டபின் உமாபதிக்கு என்மீது சந்தேகம் ஏற்படாதிருக்குமா? தன் மனைவியைப் பிறன் நேசிப்பதாக ஓர் ஆடவனுக்குச் சந்தேகமுண்டாய்விட்டால் அதைக் காட்டிலும் ஆத்திரப்படக்கூடிய விஷயம் வேறுளதோ. இன்றுவரை உமாபதி என்னிடம் மரியாதையுடன் நடந்துகொண்டு வந்ததுடன் நான் கூறும் புத்திமதிகளுக்கும் செவிசாய்த்து 'இனி நான் சரியாக நடக்கிறேன். குடிப்பதை விட்டு விடுகிறேன்' என்று சொல்லி வந்தானே. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போலன்றோ ஏற்பட்டு விட்டது. நான் இன்று கடைசியாகச் சொன்ன சொற்கள் மனோகரியின் உயிருக்கே உலைவைத்து விடும் போலிருக்கின்றனவே. கடவுளே, கடவுளே, உண்மையைக் கூறி உமாபதியின் சந்தேகத்தைத் தீர்ப்போமென்றால் இனி அவ்வீட்டில் நான் காலடி எடுத்துவைக்கவும் முடியாதே. இனி நான் இவ்வூரில் தங்குவதால் உமாபதியின் சந்தேக மதிகரிப்பதுடன் மனோகரிக்கும் துன்பம் அதிகரித்து விடுமன்றி சிறிதும் நன்மையில்லையே. கார்த்திகேயனால் தனக்கு மானபங்கம் நேரிடக்கூடுமென்று மனோகரி அஞ்சி அழுகிறாளே. அவனைப் பிரித்தால் கணவன் சீர்திருந்தி விடுவானென அப்பேதைப்பெண் எண்ணுகிறாளே. இதற்கு வழி என்ன? கார்த்திகேயனை எங்கு கண்டு பிடிப்பேன். உமாபதியைவிட்டு அவனை எப்படிப் பிரிப்பேன். ஊருக்

குத் திரும்பிச் செல்லவேண்டிய நாளும் நெருங்கிவிட்டதே" என்று எண்ணமிட்டபடி அன்றிரவைக் கழித்தேன். செய்வ தென்னவென்று விளங்காது விழித்தேன். "தான் ஒன்று நினைக்க தெய்வம் வேறு நினைத்தது" என்றபடி என் முயற்சி இவ்வாறு முடிந்ததற்கு அழுவதா அல்லது சிரிப்பதா?

## 14-வது அதிகாரம்

காலைக் கடனை முடித்து முன் அறையில் உட்கார்ந் தேன். "ஐயா! அவசரத் தந்தி!" என்று வேலையாள் கூறினன். அதில் 'அடுத்த கப்பலில் புறப்படு, நம்பர் 222-வது கேஸ் விசாரணைக்கு வருகிறது. நீ வராவிடில் தனக்கு ஜயிக்கா தெனக் கக்ஷிக்காரன் அஞ்சுகிறுன்' என்று மாதவன் தெரி வித்திருந்தான். "இனி அங்கு செல்லாமல் நான் தாமதிக்க முடியாது. பெருந்தொகையைப் பீஸ் பணமாக, அதிலும் முன் பணமாகப் பெற்றுக்கொண்டு விசாரணை சமயத்தில் நான் ஆஜராகாமல் ஜூனியரை அனுப்பலாமா. மாதவன் எனக்குச் சமானனுயிருந்தாலும் கக்ஷிக்காரன் ஒப்புக் கொள்ளமாட்டானே. நான் இங்குவிட்டுச் சென்றபின் உமாபதி மனேகரியை என்ன செய்வானே. நான் இங்கு தங்கினுல் உமாபதியின் சந்தேகம் உறுதிப்படுவதுடன் என்னை நம்பியுள்ள கக்ஷிக்காரனின் உயிரும் பொருளும் வீணுய் விடுமே. ஓ! தெய்வமே, கருணு நிதியே! பராபரக் கடவுளே! எனக்கு நல்லயோசனையைக் கொடுத்தருளும். நல்வழியைக் காட்டும்" என்று கடவுளைப் பிரார்த்தித்தேன்.

கடவுள் செயலை அறிவார் யார்? நான் சிறிதும் எதிர் பாராத சந்தர்ப்பத்தில் கார்த்திகேயன் என்முன் வந்து நின்றுன்! கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டதென அவனைக் கண்டதும் எனக்குண்டான சந்தோஷம் அளவு

கடந்ததாயிற்று. உடனே நான் எழுந்து நின்று அவனை உபசரித்து உட்காரவைத்து யோக க்ஷேமம் விசாரித்தேன்.

"என்ன ஸார், நீங்கள் பிராந்தி, விஸ்கி ஒன்றும் உபயோகப்படுத்துவதில்லையாமே. அது எப்படி முடியும் ஸார்? மனிதனுக்கு மன உற்சாகம் இன்றியமையாததல்லவா!" என்று கார்த்திகேயன் விசாரித்தான். 'உனக்குத் தேவையாயின் வரவழிக்கின்றேன்' என்று கூறி இரண்டு புட்டி பிராந்தியையும், நான்கு ஸோடா புட்டிகளையும் தருவித்து மேசைமீது வைத்தேன். குடியைக் குடிக்கக் குடிக்க அவனுக்கு ஆனந்தம் மேலிட்டு வந்தது. நான் தக்க சமயம் பார்த்து 'உனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லையா' என்று கேட்டேன். 'அதெல்லாம் வீண் துன்பம் ஸார்! கட்டினவனுக்கு ஒரு வீடு, கட்டாதவனுக்குப் பல வீடு; தெரிகிறதா!' என்முன். "நிரம்ப சரி! இவ்வாரக் கப்பலில் நான் ஊர் செல்லப்போகிறேன். மீண்டும் இப்பக்கம் திரும்பப் போவதில்லை. இவ்வூர்எனக்கு அலுத்து விட்டது" என்றேன்.

"என்ன இருந்தாலும் உமாபதி முரட்டுத்தனமாக மனைவியை அடித்தது பிசகுதான். போலீஸ்காரன் கண்டிருந்தால் அவனை இழுத்துச்சென்றிருப்பானல்லவா?" என்முன் கார்த்திகேயன்.

"மனைவியைக் கணவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இதுதானே நம்மவர் வழக்கம். எது எப்படியானாலும் இனி நான் அவ்வீட்டைப்பற்றிப் பேசப்போவதில்லை. எனக்கு இனி வேலை யதிகம். பிரயாணத்திற்கு ஆயத்தப்பட வேண்டும்" என்றேன்.

கார்த்திகேயன் சிறிது நேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தான். இதற்கிடையே மேசை மீதிருந்த இரண்டு புட்டிகளும் காலியாயின. "எனக்கும் இவ்வூர் அலுத்து

விட்டது. வருமானமே கிடையாது. சின்னப்பட்டி ஜமீன்தார், சிறுமலை மைனர், சிங்கண்ணன்பேட்டை ஜாகீர்தார் இவர்களெல்லாம் இருந்தவரை நமக்குக் குறைவே கிடையாதய்யா. பிடித்தாலும் புளியங் கொம்பு என்று, எனக்கு நடந்த உபசாரமும் மரியாதையும் கொஞ்சமா! நான் மோட்டார்கார் தவிர மற்ற தரித்திரம் பிடித்த வண்டிகளில் ஏறுவதில்லை ஸார். என்ன! நான் சொல்வது விளங்கிற்று? இந்த உமாபதி என்னப் பிரமாதம். இவன் கிடக்கிறான் பிச்சைக்கார பயல்! இவனால் என்னை நிர்வகிக்க முடியுமா? அவன் மகா அற்பப் பயல் ஸார். பையில் கையைப்போட்டால் வாரி வாரி இறைக்கவேண்டாமா. நீங்கள் இருக்குமிடத்தில் எனக்கு வருமானமிருந்தால் சொல்லுங்கள். நான் உங்களுடன் கூடவே வந்து விடுகிறேன்" என்று கார்த்திகேயன் விளம்பினான். இவ்வார்த்தையைக் கேட்டு நான் அடைந்த சந்தோஷத்தை வெளிக்காட்டாது "அங்கு வந்தால் எவ்வழியிலும் பிழைக்க வழியுண்டு, நல்லவருமானமுமுண்டு" என்றேன். "மெத்த நல்லது. அவ்வூரில் பெண்கள் வடிவழகிகளாக இருப்பார்களாம். குடிவகைகள் கொள்ளை மலிவாக மலிந்து கிடக்குமாம். அங்குள்ளவர்களெல்லாம் மாமிச உணவுதான் உண்பார்களாம். வைத்தியருக்குக் கை காட்டினால் 'இனி நீ மரக்கறி உண்ணவே கூடாது. இறைச்சி சாப்பிட்டால்தான் பிழைப்பாய்' என்று கூறுவாராம். இவை எல்லாம் மெய்தானா?" என்று கேட்டான். "எனக்கிவ்வழிகளிற் பழக்கமே கிடையாது. ஆனால் அவ்வூரில் நியாயத்திலோ அநியாயத்திலோ பொருளீட்டக் கூடிய சௌகரியங்கள் பல உள" என்றேன்.

"சரி, உங்களுடன் என்னையும் அழைத்துச் செல்ல முடியுமா? கப்பல் கேள்விக்கு எவ்வளவு பணம் தேவை?"

என்று கார்த்திகேயன் விசாரித்தான். "பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்ததாம்" என்றபடி கார்த்திகேயன் என்னுடன் வருவதாகச்சொன்னதும் என் கவலை யெல்லாம் மாயமாக மறைந்துபோயிற்று.

"உன்னை என்னுடன் அழைத்துச் செல்வதில் எனக்கும் சம்மதமே. கப்பற் செலவும் என்னுடையதாகவே இருக்கட்டும். உனக்கு இஷ்டமுள்ள வரை என் வீட்டிலேயே தங்கி யிருக்கலாம். ஞாயிறன்று கப்பல் புறப்படுகிறது. சனிக்கிழமை பகலில் நாம் இங்கிருந்து புறப்பட வேண்டும்.நீ என்னுடன் வருவதனால் நமது பிரயாணத்தைப் பற்றி வெளியிற் சொல்லக் கூடாது. உள்ளூரில் ஏதேனும் சில்லரைக் கடன்களிருந்தால் அதைத் தீர்த்து விடு. இந்தா பிடி! இந்த ஐந்நூறு ரூபாயை வைத்துக்கொள்" என்றேன். இது கண்டு கார்த்திகேயனுக்கு என்மீதில் அளவற்ற அன்பும் நம்பிக்கையும் உண்டானதுடன் என்னை மனமார வாழ்த்தினான்.

ஒரு கல்லில் இருகாக்கைகளை அடிப்பதுபோல, கார்த்திகேயனை நான் அழைத்துச் செல்வதால் அவனையும் திருத்தலாம், கார்த்திகேயனைப் பிரிவதால் உமாபதியும் திருந்துவான். இதுவே என் தீர்மானம். அனேகம் தனவந்தர்களுடைய பணத்திற்கும் மைனர்ப் பிள்ளைகளின் உடல் நலத்திற்கும் பெண்களின் கற்பு நெறிக்கும் கோடரிக் காம்பு போலிருக்கும் கார்த்திகேயனை நான் திருத்திவிடின் இதைக் காட்டிலும் சமூக ஊழியம் வேறுளதோ!

## 15-வது அதிகாரம்

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு மற்ற பணிக்கு" என்றார் ஒரு பெரியார். இந்தியர்கள் இப்பணியை மேற் கொண்டவர்கள். ஆனால் விதியை வெல்வார் யார்? இந்திய நாடு பிறநாடுகளுக்கு உணவையும் உடையையும் உதவியதாகப் பண்டையக் கதைகள் பகர்கின்றன. கதையைப் படித்தால் வயிறு நிறம்புமா? தற்சமயம் இந்திய நாடு பஞ்சம் பிணி இவைகளால் பரதவிக்கின்றது. ஏரும், கலப்பையும் எட்டச் சென்று விட்டன. கால் நடைகள் கண்கட்டு வித்தைபோல் மாயமாய் மறைகின்றன. நூற்றல் நெய்தல் என்ற சொற்கள் அருமருந்தாயிருக்கின்றன. இந்தியர்களைப் பிறநாடுகளில் வியாபாரம் செய்து பெரும் பொருள் திரட்டி வந்தார்கள் என்று நாம் கூறுவோமானால் அதை நம்புவார் யார்?

*"இந்தியக் கைத் தொழில் சிறப்பு." பக்கம். 14.

"பதினேழாம் நூற்றாண்டின் முடிவில் நேர்த்தியான பருத்தி நூல் சேலைகளும், சல்லாக்களும், சீட்டிகளும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏராளமான ஏற்றுமதி செய்யப்பட்டன. அங்குள்ள ஜனங்களுக்கு இச் சரக்குகள் மேல் அதிக விருப்ப முண்டாயிற்று. 1757-ல் கிளைவ் பிறபு மூர்ஷிதாபாத் சென்ற பொழுது 'இந்நகரம் லண்டனைப்போல் விசாலமும் ஜனத்தொகையும் ஐசுவரியமும் பெற்றுளது. ஒரு வித்தியாச மென்னவென்றால் லண்டன் நகரவாசிகளை விட இந்நகரவாசிகள் தனவந்தர்களாயிருக்கிறார்கள்'" என்றார்.

(பக்கம் 8.) "சிறந்த நெசவுத் தொழிலிலும் பலவித வர்ணங்களைக் கலப்பதிலும் உலோகங்களில் வேலை செய்

---

* இதன் விலை அணு 6. நம்மிடம் கிடைக்கும்.

வதிலும் பலவிதமான சித்திரவேலைகளிலும் பூர்வகாலம் முதல் இந்தியர்கள் பிரசித்தி பெற்றிருந்தார்கள்'' என்று பண்டிதர் வீபர் சொல்லுகிறார்.

"3000 வருஷங்களுக்கு முன் பாபிலோன் இந்தியாவோடு வர்த்தகம் செய்திருக்கிறது. கி. பி. 2000 வருஷங்களாக எகிப்த் தேசத்திய கல்லறைகளிலுள்ள பிரேதங்கள் உயர்ந்த இந்தியரவைச் சல்லாத்துணிகளால் சுற்றப்பட்டிருக்கின்றன. ரோமாபுரியில் இந்தியப் பண்டங்கள் ஏராளமாகப் பரவியிருப்பதால் ரோமாபுரியின் செல்வத்திற் பெரும் பாகம் இந்தியாவுக்குப் போய்விடுகிறது'' என்று பிளினி கூறுகிறார்.

(பக்கம் 9.) "டாக்காவில் நெய்யப்படும் ரவைச் சல்லாத் துணிகள் உலகப்பிரசித்தி பெற்றவை. 2000 வருஷங்களுக்கு முன்னரே இந்தியா நூல் நூற்பதிலும் நெசவுத் தொழிலிலும் அதிகத் தேர்ச்சியடைந்திருந்தது. இங்கிலாந்து 17-வது நூற்றுண்டில்தான் நெசவுத் தொழிலை ஆரம்பித்தது. (இம்பீரியல் கெஜட்டியர் ஆப் இந்தியா, வால்யூம் 3, பக்கம் 195ல்) "அனாதி காலமாக இந்தியர்கள் இரும்புவார்ப்படவேலைகளில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். டில்லிக்கு அருகாமையிலுள்ள இரும்புத்தூண் உலகில் பிரசித்தி பெற்றது. இது 1500 வருஷங்களுக்கு முன்பு செய்யப்பட்டது. உலகம் முழுவதிலுமுள்ள எந்த இரும்புத் தொழிற்சாலையிலும் இவ்வித வார்ப்பட வேலை செய்தல் அசாத்தியம்.''

(பக்கம் 11.) "ஏதென்ஸ் நகரிலிருந்த மகாபண்டிதர்களின் தெய்வ அறிவைவிட இந்தியர்களுக்குக் கடவுளைப் பற்றிய ஞானம் சிறந்திருந்தது.''

(பக்கம் 20.) "நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவில் செய்யப்பட்ட கப்பல்கள் மிக உறுதியாயிருந்தன. அவை ஆங்கிலேயர் கப்பல்களுடன் தேம்ஸ் நதிக்குச் சென்றன." (மிஸ்டர் டிக்பி).

(பக்கம் 23.) இந்தியக் கப்பலோட்டிகள் கத்தியவார் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு ஏடன், ஆப்பிரிகாவின் கிழக்குக் கரையோரம், மலாயா தீபகற்பம், இவ்விடங்களுக்குக் கப்பல்களை ஓட்டிவந்தார்கள். தற்காலக் கப்பலோட்டிகள் மேற்படியாரின் சந்ததிகள்தான்.

"1787-ல் 30 லக்ஷம் ரூபாய் பொறுமான ரவைச் சல்லாத்துணி டாக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது" என்று ஸர் ஹென்றி காட்டன் 1890-க்கு முன் எழுதியிருக்கிறார்.

"பட்டினிலாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித்திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்,"

என்றார் கவியரசர் பாரதியார்.

சென்ற நாட்களைப் பற்றிப் பேசிப் பயனென்ன? தற்சமயம் இந்திய மக்கள் வயிற்றுப் பிழைப்புக்கென அலைகடல் தாண்டிச் சென்று அலைந்து திரிந்து அரை வயிற்றுக்கும் இல்லாது தோலும் எலும்புமாகத் திரும்பும்போது வாய்திறக்கவும் வழியுண்டோ. நான் இருக்கும் ஊர் துறைமுகப்பட்டினம். அங்கு வாரமொருமுறை இந்தியாவிலிருந்து கப்பல் வருவது வழக்கம். அவைகளில் வருபவர்கள் பெரும்பாலும் ஏழைமக்களே ஆவார். இவர்கள் கூலிகளென அழைக்கப்படுவர். வேலை செய்யுமிடங்களில் விபசாரம் பெருகாமலிருப்பது அவசிய

மன்றோ. இதற்காக நூறு ஆண்பிள்ளைகளுக்கு 25 பெண் பிள்ளைகள் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை உண்டு. வந்துள்ள ஆண் பெண்கள் கணவன் மனைவியா, அல்லது ஜோடி சேர்க்கப்பட்டவர்களா என்பது கடவுளுக்கே வெளிச்சம். வாசகர்களே! நூற்றுக்கு 25 பெண்கள் என்றால் மற்ற 75 பெயர்களுக்கு வழி என்னவென்று என்னைக் கேட்டுவிடாதீர்கள். இதனால் சச்சரவும், அடிதடியும், கொலையும் எற்பட்டால் அதற்குப் பரிகாரமென்ன என்றும் சிந்திக்காதீர்கள். இக்கவலை அவ்வூராரிடம் ஒரு திவிலையும் கிடையாது. கூலிகளை இந்தியாவிலிருந்து திரட்டி வருவதற்கெனச் சிலர் அதிகாரம் பெற்றிருப்பர். இவர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும். கூலிகள் கப்பலைவிட்டிறங்கியதும் முதலாளிகள் அவர்களை மொய்த்துக்கொள்வார்கள். தேவையான ஆட்களை யழைத்துச் செல்வார்கள். அங்கு மரங்கள் நடுதல், பயிரிடல், ஆலைகளில் வேலைசெய்தல் போன்றப் பலவேலைகள் இடப்படும். அதிகாலை ஐந்து மணிமுதல், மாலை இருட்டும்வரை வேலைசெய்தால் ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆறு அணவும், பெண்களுக்கு நான்கு அணவும், சிறுவர் சிறுமியர்களுக்கு இரண்டு அணவும் அளிக்கப்படும். ஓய்வு நாட்களுக்குக் கூலி கிடையாது. இவ்வாறு பல வருஷங்களாக நடந்துவந்தது. முதலாளிகள் கூலிகளை அடித்து உதைத்துக் கடுமையாக வேலை வாங்குகிறார்களென்ற சொல் நாளுக்கு நாள் காட்டுத் தீ போல் பரவவே அரசாங்கத்தார் ஓர் சட்டமியற்றினார்கள். கூலிகளைப்பற்றிய குறைகளை விசாரித்தறியவும் அவர்களுக்குத் தேவையானதை எடுத்துரைப்பதற்குமாகச் சில கவுரவ உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு நான் தலைவனாக நியமிக்கப்பட்டேன். வேறு பல ஸ்தாபனங்

களிலும் சட்டசபையிலும் அங்கத்தினனாக இடம் பெற்றேன். எனது பாரிஸ்டர் தொழிலுடன் பொது ஸ்தான வேலைகளிலும் நான் ஈடுபட்டிருந்ததால் எனக்கு ஓய்வு, ஒழிவு இரண்டும் இல்லாமலிருந்தது. கவுரவ நீதிபதியாகிய என்னிடம் வரும் பல வழக்குகளிலிருந்து பல ஊழல்களைத் தெரிந்துகொண்டேன். வெளியில் சோற்றுக்கடையெனப் பெயரிடப்பட்டு விபசார விடுதிகள் மலிந்துகிடந்தன. நாடகக்கன்னியர் பலர் ஏமாற்றப்பட்டு உடல் நலம், உயரிய கற்பு இரண்டையும் பறிகொடுத்துச்சோற்றுக்கு வழியற்றுப் பிச்சை யெடுக்கவு முடியாது நோய்வாய்ப்பட்டு நடுத்தெருவில் நாதியற்றுக்கிடந்தனர். வீட்டில் வேலைசெய்யும் பணியாட்கள் அடிமைகளாகவே கருதப்பட்டதுடன் நினைத்த போது சிறுபிழைக்கும் அவர்களைப் பட்டினிபோடுவதும் அடிப்பதுமாகப் பலர் கொடுமைபுரிந்தனர். அங்கு குடி வகைகள் மலிந்து கிடந்ததுடன் பிறர்க்குக் குடியைப் பழக்குவதற்கெனவே சிலர் ஏற்பட்டிருந்தனர். கடைவீதிப் பொருள்கள் பெரும்பாலும் கலப்படமாகவே காணப்பட்டன. இரவு ஏழு மணிக்குமேல் நன்னெறியுள்ள ஆடவன் தெருவில் தலைகாட்டமுடியாதபடி விபசாரிகளும், விபசாரத் தரகர்களும் சுற்றியலைந்தார்கள். நான் சட்டசபை சென்றபின் இவ்வநீதிகளைத் தடுப்பதற்கான பல சட்டங்கள் இயற்றச் செய்தேன். என் கைப்பொருளைக்கொண்டும் பல சீர்திருத்தங்கள் செய்தேன். இக்காரியங்களில் என் தோழன் மாதவன் எனக்கு உதவி புரிந்துவந்தான். இவைகளால் என் மனம் ஒருவாறு சாந்தியடைந்து வந்தது. கார்த்திகேயன் இல்லாததால் உமாபதி ஒழுங்குடனிருப்பதாயும் மனோகரி துன்புறுதிருப்பதாயும் என் வேலைக்காரன் எனக்கு அடிக்கடிக் கடிதமெழுதி வந்ததால் மனோகரியைப்பற்றிய கவலை

யும் தணிந்துவிட்டது. பொதுக்காரியங்களுக்குச் செல விட்ட நேரம்போக மற்ற நேரத்தை எனது பூங்காவனத் தைத் திருத்துவதிலும், உயரிய நூல்களைப் படிப்பதிலும் செலவிடலானேன். நியாயாதிபதிகளுக்கு என்னிடம் அள வற்ற கௌரவமும், ஏழைகளுக்கு அன்பும், பொதுமக்க ளுக்கு நம்பிக்கையும், அரசாங்கத்திற்கு நன்மதிப்பும், பொது ஸ்தாபனங்களுக்கு ஆதரவும், தீ நெறியுள்ளவர் களுக்கு பயமும், துஷ்டர்களுக்கு அச்சமும், கக்ஷிக் காரர்களுக்கு நல்லபிப்பிராயமும், பெண்மணிகளுக்கு உடன் பிறந்தவன் என்ற நல் எண்ணமும் குடிகொண்டிருந் ததால் நான் என் மனத்துயரை மறந்து காலங்கழித்தேன். என் ஆயுள் முடிய இவ்விதமே நடந்திருக்குமானால்?

---

## 16-வது அதிகாரம்

அன்று பகல் முழுதும் வெப்பம் மிகுந்திருந்தும் மாலை நேரத்தில் குளிர்காற்று வீசத் தலைப்பட்டது. அந்தி தேவதையின் அழகைக் கண்டு களிப்பவன்போல் சந்திரன் தன தழகிய கிரணங்களை வீசியவண்ணம் வெளிவந்து கொண்டிருந்தான். சிறு அலைகளைக் கரையில் தள்ளிய வண்ணம் கடல் ஒலித்துக்கொண்டிருந்தது. கரையோரத் திற்பலவித வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவைகள் சில வற்றில் தாயும் மகளும், தந்தையும் மைந்தனும், கணவனும் மனைவியும், இவ்வாறு உட்கார்ந்துகொண்டு கடற்காற்றை ஆனந்தத்துடன் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். கட லோரமாகத் தண்ணீர் தமது காலில் படும்படி இளம் மண வில் பலர் நடந்துகொண்டிருந்தனர். மணலைக் குவித்தும்

அதை வாரி இறைத்தும் அங்கும் இங்குமாக ஓட்டம் பிடித்தும், சத்தமிட்டும் சிறுவர்கள் விளையாடித் திரிந்தார்கள். ஓரிடத்தில் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. மாணவர் பலர் தாம் எடுத்துவந்த புத்தகத்தைத் தலையின்கீழ் வைத்துப் படுத்திருந்தனர். ஓய்வு பெற நினைக்கும் குடும்பங்களும், ஒளித்துப் பேச விரும்பிய காமுகர்களின் ஜோடிகளும், அன்னியோன்னிய வாழ்க்கையுள்ள தம்பதிகளும், இயற்கை இன்பங்களைத் திரட்டிச் செல்லும் ஆசிரியர்களும், வரிக்கு இவ்வளவெனக் கணக்கிட்டுப் பணம் வாங்கும் நிருபர்களும், அகப்பட்டதைச் சுருட்டிச் செல்ல வட்டமிடும் திருடர்களும், 'கடலை, பட்டாணி, மசால்வடை, ஐஸ்கிரீம், ஆரஞ்சு, சாக்லெட், சோடா, காப்பி, டீ, பம்பாய் ஹல்வா!' என்று கூவித்திரியும் வியாபாரிகளும் நிறைந்திருந்தார்கள். நான் எப்போதும் இரவு பத்துமணிக்குமேல் கடற்கரைக்குச் செல்வது வழக்கமாயினும் அன்று மாலையிலேயே சென்றிருந்தேன். ஜனச்சந்தடி அதிகமாயிருந்ததால் சந்தடியற்ற இடம் ஒன்றைத் தேடி அங்கு அமர்ந்தேன். சிறிது நேரம் குளிர்ந்த காற்றைப் பருகி ஆனந்தித்தேன். அகண்டமான ஆகாயம், அதிலுள்ள நக்ஷத்திரங்கள், அவை நடுவிற் பிரகாசிக்கும் சந்திரன், பேரிரைச்சலிடும் பெருங்கடல் இவைகளையுற்று நோக்குங்கால் என் தாய்நாட்டில் நடைபெற்ற சம்பவமொன்று நினைவிற்கு வந்தது. உலகம் போற்றும் தவமுனிவர், தன்னலம் வெறுத்த தயாசீலர் மகாத்மா காந்தி அவர்கள் கடற்கரையில் தரிசனமளித்த காக்ஷி என் மனக் கண்ணுக்குப் புலப்பட்டது. கடற்கரையாகும் ஆகாய வீதியில், ஜனத்திரளாகும் நக்ஷத்திரங்களுக்கிடையே மகாத்மாவாகும் சந்திரன் உதயமாகிப் புன்னகையாகும் கிரணங்களை வீசியதும், 'மகாத்மா காந்திக்கு ஜேய்' என்று எழும்பிய

சத்தமாகியக் கடல் ஒலியை நினைக்க நினைக்க என் மனம் பரவசமடைத்தது. சாந்த சீலரின் உருவம் என் மனதில் நிலைத்ததும் என் மனமடைந்த சாந்தியை என்னென்றுரைப் பேன். நான் கசடறக்கற்ற வித்தைகளில் சங்கீதமும் ஒன்று. பல்வேறு வாத்தியங்களை வாசிக்கவும் வாய்ப்பாட்டுப் பாட வும் கற்றிருந்தேன். எனக்கு சங்கீதப் பயிற்சி யுண்டென் பதைப் பிறர் அறியாததால் கிராமபோன் பிளேட் எடுக் கும் கம்பெனிக்காரர் கையிலகப்படாது தப்பிவிட்டேன். இல்லையெனில் பிறருக்குத் தெரியக்கூடாதென்று ஒளித்து வைத்திருக்கும் என் பெயரும், அத்துடனில்லாது என் உருவப் படமும் மூலைக்கு மூலை முழங்கிக்கொண்டிருக்கு மன்றோ. என் மனம் உருகியதும்

"தேசமெங்கும் புகழ் வீசிடும் காந்தி
தனை நினைத்தால் மனம் பெறுவது சாந்தி
மாசற்ற குணமுள்ள மகாத்மா காந்தி
மானிடர் போற்றும் வேதாந்தி.

சத்திய நெறியுற்ற உத்தமவீரர்
சத்திய போரில் பேர் பெற்ற கம்பீரர்
தத்துவமே உருவான சரீரர்
மெத்த புகழ் பெற்ற தீரர்."

(ஆசிரியை இயற்றியது)

என்று வாய்விட்டுப் பாடினேன். என் கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. பரவசம் தாங்காது சிறிது நேரம் கண்களைமூடி பாரதத் தாயை தியானித்தபின் கண் திறந்தேன். ஆகா! என்னவென்று சொல்வேன்! என் முன்னால் சுமார் இருபது பிராயமுள்ள வடிவழகி ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அச் சமயம் என் மனம் அடைந்

திருந்த ஆவேசத்தை யனுசரித்து அவளை பாரதத் தாயோ அல்லது சத்திய தேவதையோ என்றெண்ணினேன். இல்லை, இல்லை, அவள் மானிடப் பெண்தான் என்று தெளிந்தேன். ஏனெனில் அவளிடம் நான்கு கரங்களும், கிரீடமும் காணப்படவில்லை. இமைகள் அசைந்தன. எழில் பெற்ற முகத்தில் காந்தி வீச அசைவற்றுப் பதுமை போல் என்முன் நிற்கும் இப்பெண் யார் எனத் திகைத்தேன். இரவு மணி எட்டடித்து விட்டதே. மாதவன் எனக்காக வீட்டில் காத்திருப்பானே. இரவில்—தனிமையான விடத்தில்—அழகெல்லாம் உருக்கொண்டு வந்தது போல இருக்கும் ஓர் கட்டழகியும் நானுமாகத் தனித்திருப்பதை யாரேனும் கண்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இரவில் தனியாயிருக்கும் பெண்பாலை யாரென்று தீர விசாரிக்காமல் வீடு செல்லவும் என் மனம் உடன்படவில்லை. இவள் என்னை நாடி வந்துள்ள காரணம் யாதாயிருக்குமோ? ஆபத்திலகப்பட்டு அதைத் தீர்த்துக் கொள்ள வந்திருப்பாளோ. ஒருகால் வேறு எண்ணத்துடன் இருப்பாளாயின்? இதை நினைத்ததும் என் தலை சுற்ற வாரம்பித்தது. "ஐயோ, எனக்கொன்றும் விளங்கவில்லையே. ஒரு நாளுமில்லாத திருநாளாக நான் ஏன் இன்று அந்தி நேரத்தில் இவ்விடம் வந்தேன்! வழக்கம்போல் நேரங்கழித்து வந்திருப்பின் இவ்வாபத்து நேர்ந்திராதே. கடவுளே! உமது மாயா ஜாலத்தைத் தகர்க்க என்னால் முடியுமோ. கபட நாடக சூத்திரதாரியான நீர் மரப் பாவைகளாகும் மனிதர்களை ஆட்டி வைக்கின்றீர்! சூத்திரதாரன் பின் நின்று பாவைகளை ஆட்டுகின்றான். நீரோ எங்கள் இதயத்தில் மறைந்திருந்து எங்களை ஆட்டுகின்றீர். சர்வ வ்யாபியாகிய நீர் திருக்கோயில் கொண்டெழுந்தருளி

யிருக்கும் இம்மானிட சடலத்திற்கு மெய்ஞானத்தை யளிக்காது பரிசோதித்தல் நீதியோ. பராபரனே! என்னைப் பாழ்நரகில் விழவிடாது காப்பாற்றும்!'' எனக் கடவுளை சிந்தித்தேன். அட! இதென்ன வீண்கவலை. மனோகரியை—என் மனோகரியை—என் இதயத்தில் வைத்துப் பூசித்து வந்த மனோகரியை—என் அன்புக்கிருப்பிடமாகிய மனோகரியை—என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட மனோகரியை—என் காதலியாகக் கருதியிருந்த மனோகரியை—என் மாமன் மகளாகிய மனோகரியை—மங்கையர்க்கரசியாம் மனோகரியை — அழகிற் சிறந்த மனோகரியை — என்னை நேசித்த மனோகரியை—என் மனதில் சித்தரித்துப் பதித்து வைத்திருந்த மனோகரியை—என் மனைவி யெனக் கருதி மகிழ்ந்திருந்த மனோகரியை—என் உயிருக்குயிரான மனோகரியை நான் என் சகோதரியாக ஏற்று அவளைக் காப்பாற்றுவதாக என் மாமிக்கு உறுதிமொழி தந்து அவ்விதமே நடந்துவரும் என் மனதை—உறுதிபெற்ற என் மனதை இனி ஒருவரால் கலங்கச்செய்தல் சாத்தியமானதோ. மனோகரியை நான் மணக்காது அவள் அயலானுக்கு வாழ்க்கைப் பட்டபின் அவளை என்னுடன் பிறந்தவளாகப் பாவிப்பதுடன் நில்லாது இனி என் வாழ்நாள் முழுவதையும் நித்தியப் பிரம்மசாரியாகவே கழிப்பதென்ற என் தீர்மானம் எங்கே போயிற்று. காமப் பேய் பிடித்தலையும் கயவர்களுக்கன்றோ அச்சம்'' என்று என் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு 'அம்மா, நீ யார்? எந்த ஊர்? எங்கு வந்தாய்? கடற்கரையில் நீ தனியே இருக்கும் காரணம் யாது? உனக்கென்ன தேவை?' என்று வினவினேன்.

மங்கை :—ஐயா, நான் பேராபத்திலகப்பட்டுப் பரிதபிக்கின்றேன். ஆதரிப்பாரற்று அலைகின்றேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்.

நான் :—அம்மா, என் வீட்டில் பெண்மக்கள் கிடையாது. இரவு நேரத்தில் நீ இங்கு அதிகநேரம் தாமதித்தல் ஆபத்தாய் முடியும். நீ எங்காவது செல்லவேண்டுமாயின் தெரிவி. என் வண்டியில் உன்னை யழைத்துச் சென்று நீ குறிப்பிடும் இடத்தில் உன்னை விட்டுவிடுகிறேன்.

மங்கை :—எனக்குப் புகலிடம் கிடையாது. நான் இவ் வூருக்குப் புதியவள். எனக்கு உற்ற பந்துக்கள் ஒருவருமே கிடையாது. நீங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்.

நான் :—அதைத்தான் கேட்கிறேன். உன்னை நான் எவ்விதத்தில் காப்பாற்றுவது? எனக்குள்ள சௌகரியத்தையனுசரித்து என்னால் கூடியவரை உனக்கு உதவியளிக்கத் தயாராக விருக்கிறேன். என்னைப் பிற மனிதனாகவும் வேறுவிதமாகவும் சந்தேகிக்காது உன் மனதிலுள்ளதை உள்ளபடி விளக்கிக் கூறு. நீ சொல்வது நியாயமாகவும் என் மனதிற்கேற்றதாகவு மிருப்பின் அதை நான் ஏற்றுக்கொள்வது நிச்சயம். ஆனால் முன்னதாக ஒன்றை நான் உனக்குத் தெரிவித்துவிடல் அவசியம். அதாவது நான் விவாகத்தை வெறுத்துத் தனியாகக் காலங்கழிப்பதாக நிச்சயித்திருக்கிறேன். என்னை உன் உடன்பிறந்தவனாகக் கருதி உன் மனதிலுள்ளதைச் சொல்லலாம்.

மங்கை:—என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று என்னைக் கைவிடாது—நான் ஆபத்திலகப்படாது காப்பாற்றவேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

நான் :—நீயோ அழகிற் சிறந்த பருவப்பெண். நித்தியப் பிரம்மசாரியாகிய நான் உன்னை என் வீட்டில் வைத்துக் காப்பாற்றினால் ஜனங்கள் அவதூறு பேசமாட்டார்களா ?

மங்கை :—அதற்குத்தான் நான் பயப்படுகிறேன். நான் ரூபவதியாயும் பருவப்பெண்ணாயு மிருப்பதால் வேறிடம் செல்ல அஞ்சுகிறேன். கல் எல்லாம் மாணிக்கக் கல் ஆகாது என்றபடி எல்லாரையுமே நம்பமுடிமோ ? என் கற்பைக் காப்பாற்ற வேண்டுமோயின் நான் கண்டவர்களை நம்பமுடியாது. உங்களிடமிருந்தால் நான் கவலையற்று என் தாயிடமிருப்பதுபோல நிம்மதியாகக் காலங்கழிப்பேன்.

நான் :—நீ சொல்வதெல்லாம் சரியே. ஆனால் உலகாபவாதத்தை கவனிக்க வேண்டாமா? "பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் கட்குடித்தான் என்பார்கள்" என்ற மூதுரை பொய்யாகுமா ?

மங்கை :—இம் மூதுரைகளெல்லாம் பரிசுத்த யுகங்களில் கூறப்பட்டவை. தற்காலம் வம்பர்களும், வீணர்களும் வாய்க்கு வந்ததைப் பேசித்திரிவதையே கடமையாகக் கொண்டுத் திரிகின்றார்கள். துணிந்து பேசும் பழி பாவங்களுக்கு இம் மூதுரையை உவமையிட்டுத் தாங்கள் சொல்வதை உறுதிப்படுத்துகின்றனர். பரிசுத்தத் தன்மையும் நல்லொழுக்கமும் அவரவர் பிறவிக் குணங்களாகும். ஈதன்றி "படிப்பது பாகவதம் இடிப்

பது பெருமாள் கோயில்" என்றபடி வாயாற் பேசும் பேச்சு வேறு, சொந்த நடவடிக்கைகள் வேறு என்று நடிக்கும் வேஷதாரிகளின் சொல்லைச் செவியிலேற்று, ஆபத்திலகப்பட்டுத் தத்தளிக்கும் ஜன்மத்தை ஆதரிக்காது அனுதரவு செய்தல் பெரும்பாவமன்றோ. இச்சமயம் நீங்கள் என்னைக் காப்பாற்றாவிடில் என்னைத் துஷ்டர்கள் மீண்டும் வளைந்து கொள்வார்கள். அதனால் நான் அடையும் துர்க்கதிக்கு நீங்களே காரணமாவதுடன் பெண்களுக் கணிகலனாயுள்ள கற்பை நான் இழந்து பரிதபிக்கும் பாபமும் உங்களையே சாருமென்பது சத்தியம்.

நான் :—இப்பெரிய பட்டினத்தில் என்னை நீ நம்புவதெப்படி? உன்னை நீதியான வழியில் காப்பாற்றக் கூடிய சக்தி என்னிடம் இருப்பதாக நீ நிதானித்தல் எங்ஙனம்? வஞ்சகர்களும், விடபுருஷர்களும், காமுகர்களும், வம்பர்களும், வீணர்களும் பெருகிவரும் உலகில்தானே நானும் வசிக்கின்றேன்.

மங்கை :—நான் கப்பலை விட்டிறங்கிய மூன்று நாட்களாக என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய உதவியற்று இவ்வூரில் ஓடித்திரிகிறேன். இனி உயிர் வாழல் வீண் எனத் தீர்மானித்து இக்கடலில் வீழ்ந்து உயிர் துறக்க வெண்ணி ஜன சஞ்சார மற்ற இடந்தேடி இங்குவந்தேன். தனியாயுட்கார்ந்திருக்கும் தங்களைக் கண்டதும் சற்று பயந்தேன். யாராயிருந்தாலும் நீங்கள் எழுந்து சென்றபின் கடலில் விழலாமென்று எதிரிலுள்ள படகுமரத்தின் மறைவில் ஒளித்திருந்தேன். தாங்கள் மகாத்மாவைக் குறித்துப்பாடி

விட்டு மெய் மறந்து பாரதத் தாயைத் துதித்துக் கொண்டிருந்தீர்கள். இந்திய அன்னையின் திருவயிற் றிலுதித்து உலகபூசிதரான மகாத்மாவை வழிபடும் தாங்கள் பரநாரீ சகோதரனாக இருக்கவேண்டுமென்றே நிதானித்து உங்களை யுற்று நோக்கிக் கொண்டிருந் தேன். இன்று பகல் நான் தெருவழிச் சென்றபோது "இவருக்கே வாக்குக் கொடுங்கள். தருமவான், பேருபகாரி, பொதுநல ஊழியர், தன்னலம் மறுத்தவர், பிறர்க்கென வாழ்பவர், ஆடம்பரமற்றவர், ஏழை பங்காளர்" என்று கூவிய வண்ணம் சிலர் தங்கள் கையில் ஓர் உருவப்படம் ஒட்டிய கொடியையும் அட் டையையும் ஏந்திக் கொண்டு வந்தனர். அப்படத் திலிருந்தவர் நீங்கள்தான் என்று விளங்கிற்று. வீணில் உயிர் விடுவதிற் பயனென்ன என்று தெளிந்து உங்களைச் சரணமென அடைந்தேன். என்னை இச் சமயம் காப்பாற்றுவிடில் நான் எனது முந்திய தீர் மானத்தை உறுதிப் படுத்த வேண்டியதுதான்! உங்கள் தாய் நாட்டில் உங்களுடன் பிறந்துள்ள சகோதரியைப் பேராபத்திற் சிக்கவிடுதல் தர்மமா?

இச்சொற்களைக் கேட்டதும் என் மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகிற்று. 'யாராயிருந்தால் என்ன? அபயம் என்று ஓலமிடுங்கால் ஜாதி, மதம், அந்தஸ்து என்று சீர்தூக்கிப் பார்த்தல் நீதியன்று. நான் உண்மையில் ஒழுக்கமுள்ளவனாயின் பெண் உருவைக்கண்டு பயப்படு வானேன்? இவள் வேறிடம் சேர்ந்து தீநெறிக்காளாய் விடின் அந்தப் பழி யாருக்கு? தாய் நாட்டினள் அயல் நாட்டில் அவதியுறுவதைக் கண்டும் கவனியாதிருத்தல் ஆண்மகனுக்கழகோ? எல்லாவற்றிற்கும் இவள் யார் என்

பதை விசாரிப்போம்' என நினைத்து "அம்மணீ! நீ யார்? எந்த ஊர்" என்றேன். "நான் புனித பூமியாகும் இந்தியா விற் பிறந்தேன். மோசக்காரன் ஒருவனால் நாடு கடத்தப் பட்டு முந்தின நாள் கப்பலில் இவ்வூர் வந்து சேர்ந்தேன். அத்துஷ்டன் என்னை அயல் நாட்டான் ஒருவனுக்குப் பெண்டாக விட்டுவிட நினைத்தான். அவனிடமிருந்து நான் தப்பித்துக்கொண்டு நான் பட்ட பாடு சொல்லத் திறமன்று" என பதிலளித்தாள் அப் பெண்ணரசி.

"அம்மணி! என்னிடம் உனக்கு நம்பிக்கை யிருக்கு மாயின் உன்னை நான் அழைத்துச் சென்று என் உடன் பிறந்தாளைப்போல் காப்பாற்றத் தடையில்லை. நீ அஞ் சாதே. இனி உனக்கு ஒருவிதக் கஷ்டமும் ஏற்படாது. ஐம்புலன்களையும் நமது ஸ்வாதீனத்தில் அடக்கி வைத் தாளக் கற்பதே கல்வியெனப்படும். பிறரால் பங்கம் ஏற் படா வண்ணம் முன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளலே புத்திசாலித்தனம். உன்னையும் உன் வார்த்தைகளையும் நம்பி நான் உன்னை அழைத்துச் செல்வதால் பரஸ்பரம் மனத்தடுமாற்ற மின்றி நடக்கவேண்டியது நம் இருவரின் கடமையாகும். மனக் காவலன்றி மதிற் காவல் என்ன செய்யும்? இதை மட்டும் நன்றாய் ஞாபகத்திலிருத்திக் கொள். வா, போவோம்" என்று கூறி எழுந்து நின்றேன்.

"அண்ணா! என் அன்புள்ள அண்ணா! என்னைப்பற்றி ஒரு சிறிதும் வித்தியாசம் பாராட்டாதே. நான் இன்று முதல் உன் தங்கை. என்னைக் காப்பாற்று. ஒரு காலும் என்னைக் கைவிடாதே" என்று கூறி ஓவென்றலறி என்னிரு கால்களையும் பிடித்த வண்ணம் குப்புற விழுந்து மூர்ச்சை யுற்றாள். நான் என் கால்களை விடுவித்துக் கொண்டு என்

உத்தரியத்தால் விசிறி அப்பெண்மணியை விழிக்கச் செய்தேன். என் மோட்டார்கார் நிற்குமிடம் வெகுதூரத்தில் இருந்தது. "அம்மணி! மெல்ல எழுந்திரு. கார் வெகு தூரத்திலிருப்பதால் அதுவரை நடந்து செல்லவேண்டும். நாழிகையாகிறது. வீடு செல்வோம்'' என்றேன். "அண்ணா! நான் உணவைக் கண்டு மூன்று நாட்களாயின. தலை சுற்றுகிறது. கண்களை விழிக்கக்கூடவில்லை. காதை யடைக்கிறது. பசிக் களையால் கால்கள் பதறுகின்றன" என்று அவள் கூறினாள். இரவு மணி பத்து அடித்துவிட்டது. ஜனங்களெல்லாம் வீடு சென்றிருந்தார்கள். கரையோரமாயுள்ள பெரிய விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டுவிட்டன. உதவி செய்வார் ஒருவருமில்லை. குடியர்களும் வெறியர்களும் தங்கள் ஆசை நாயகிகளுடன் ஒளிந்து ஒளிந்து உலவ ஆரம்பிக்கும் நேரம் கிட்டிவிட்டது. 'இனி இங்கு தாமதித்தல் சரியன்று. இப்பெண்ணோ பசிமேலீட்டால் களைத்திருக்கிறாள். இவளை வண்டியிடம் கொண்டு சேர்த்தாக வேண்டுமே' என்று சிந்தித்தேன். 'பாரதத்தாயே! பரிசுத்த அன்னையே! புனிதமுற்ற ஹிந்துமதமே! புண்ணிய சீலர்களான மதாச்சாரியர்களே! பரமஹம்ஸரை ஈன்ற பரிசுத்த நாடே! பெண்ணுலகைப் பெற்ற தாயெனப் போற்றிய மெஞ்ஞானியான விவேகாநந்தரை உதவிய புண்ணிய பூமியே! என்னைக் காப்பாற்றுங்கள். என் மனத் தூய்மைக்குப் பங்கம் விளையாது ஆசீர்வதியுங்கள். அனசூயை, சாவித்திரிபோன்ற கற்பரசிகளைப் பெற்ற என் தாய்நாடே! என் மனதைப் புனிதவழி நின்றும் வழுவாதிருக்கச் செய்வாயாக!' என்று தியானித்துக்கொண்டு தரையிற் படுத்துள்ள பெண்பாலை எழச்செய்து கைலாகு கொடுத்து என் தோளின்மீது அவளைச் சாய்த்துக்கொண்டு மெள்ள

மெள்ள அடிமேலடிவைத்து நடத்திவந்து கரையைச் சேர்ந் தேன். சுமார் அரைமைல் தூரம் நடந்துவந்ததால் "இனி என்னால் ஒரு அடியும் எடுத்துவைக்கமுடியாது" என்று அப்பெண் உட்கார்ந்துவிட்டாள். வேறு வழியின்றி அவளை என்னிருகைகளாலும் ஏந்திக்கொண்டு வண்டியிடம் சென் றேன். என் பரிதாப நிலைமையைக்கண்டு வண்டியோட்டிகதவைத் திறந்துவைத்தான். அவளை வண்டிக்குள் சாயவைத்து நானும் அருகில் உட்கார்ந்து 'மோட்டாரை வெகு வேகமாக ஓட்டி ஸ்பென்ஸர் ஹோட்டலில் நிறுத்து' என்று டிரை வருக்குக் கட்டளையிட்டேன். கார் வாயுவேகமாகப் பறந்து குறித்த விடத்தில் நின்றது. ஐஸ்கலந்த பாலைத் தருவித்து என் தங்கைக் களித்தேன். நெஞ்சும் நாவும் வரண்டு கிடந்தமையால் அதை அவள் விழுங்கமாட்டாது கஷ்டப் பட்டாள். எப்படியாவது வீடு சேர்ந்துவிட்டால் பிறகு வைத்தியரைக் கொண்டு கவனிக்கலாமென நினைத்தும் காரை முன்போல் வேகமாக ஓட்ட முடியவில்லை. அதற் குச் சிறிது பழுதுபார்க்க நேர்ந்தது. ஒருவிதமாகப் பன்னி ரண்டு மணிக்கு வீடுவந்து சேர்ந்தேன். வீட்டின் முன் புறமுள்ள தோட்டத்தில் உட்கார்ந்திருந்த எனது தண்டச் சோறு நண்பர்கள் அக்காலத்தில் தனிமையில் என்னுடன் ஒரு பெண்பாலிருப்பது கண்டு திடுக்கிட்டுப் பிறகு தமக் குள் சிரித்துக் கொண்டார்கள். என் வரவை எதிர்பார்த்து நின்றிருந்த மாதவன் வண்டிக்கருகில் ஓடிவந்து 'அண்ணா! வந்துவிட்டாயா' என்றான். "ஆம், நேரமாய்விட்டது, முந்தி உன் தங்கையை மெதுவாகக் கீழிறக்கு" என்றேன். நாங்கள் இருவருமாக அவளை நடத்திச் சென்று மெல்லெனப் படி யேறச்செய்து மெத்தைமீது வசதியாயுள்ள ஓர் அறையில் அவளைப் படுக்கவைத்தோம். மாதவன் உடனே டெலி

போன் மூலம் வைத்தியரை வரவழைத்தான். வைத்தியர் அவளை நன்றாய்ப் பரிசோதித்தபின் "இவள் அதிக பயத்தாலும், நடையாலும், பசிக்களைப்பாலும் சோர்ந்திருக்கிறாள். மூளைக்கு மெத்த அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒருவாரம் ஜாக்கிரதையாகக் கவனிக்காவிடில் மூளை கலங்கிவிடும். ஆகாரம் மிதமாயிருக்கட்டும்" என்றுரைத்து சில மருந்துகளையும் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார். மருந்தும் பாலும் உட்சென்றதும் அவள் கண்விழித்து 'அண்ணா! நீ என்னைக் காப்பாற்றாது கைவிட்டிருப்பின் என் கதி எப்படியோ' என்றுரைத்துக் கண்ணீர் சொரிந்தாள். இப்பரிதாபங் கண்டு மாதவனும் கண்ணீர் விட்டான். "சென்றுபோனதை நினைத்து மனங்கலங்காதே. இவ்வீட்டை உன் சொந்த வீடாக நினைத்துக்கொள். நீ சற்றும் அச்சமின்றி நிர்ப்பயமாக வசிக்கலாம். சற்று நேரம் நித்திரை கொள். உன் உடம்பு மெத்த பலவீனப்பட்டிருப்பதால் ஒருகால் காய்ச்சலுண்டாகக் கூடும். மனதைக் குழப்பிக்கொள்ளாமல் அயர்ந்து தூங்கு. நான் அடுத்த அறையிலேயே இருக்கிறேன். அடிக்கடி நான் உன்னை கவனித்துக்கொள்ளுகிறேன்" என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, 'உன் பெயர் என்ன?' என்று கேட்டேன். "அண்ணா! என் பெயர் மாலதி" என்றாள். இச்சம்பவங்கள் கண்டு என் கார் டிரைவரும் வீட்டிலுள்ள வேலையாட்களும் நண்பர்களும் ஏதேதோ கற்பனைகள் செய்துகொண்டு வாய்திறந்து கேட்கமாட்டாதவர்களாக அசட்டு விழி விழித்துக்கொண்டிருப்பதைக் கண்டு என்னால் பொறுக்கமுடியாது சிரித்தேன். என் வாழ்நாளையில் என்னையறியாது நான் நகைத்த நாள் அன்றே ஆகும்.

நானும் மாதவனும் உணவருந்தியபின் மாலதியைப் பற்றி மாதவனுக்குச் சுருக்கமாகத் தெரிவித்தேன். "சுய நலத் தியாக மென்ற உயர் குணத்தைப்பற்றி வாயால் பேசுவ தன்றி உண்மையில் சுயநலம் வெறுப்பார் மிகச்சிலரே ஆவர். ஆனல் மாலதியைக் காப்பாற்றுவதாக நீ அபய மளித்திருப்பதிலிருந்து உன் சுயநலத் தியாகத்தைப்பற்றி நான் பெரிதும் வியப்புறுகிறேன். எல்லோராலும் இவ் வாறு மனவுறுதியுடன் நடத்தல் சாத்தியமன்று. 'தனக் கென வாழார் பிறர்க்குறியாளர்' என்ற சொல்லை நீ மெய்ப் பித்துவிட்டாய்", என்று மாதவன் என்னை வியந்து கூறிப் பன் முறை புகழ்ந்தான். என் உயிர்போகுமுன் மாலதியை வஞ்சித்துக் கற்பழித்த பாதகனைக் கண்டுபிடித்து அவ னுக்கு நற்புத்தி புகட்டி மாலதியை மணக்கும்படிச் செய்து விடுவேனனல் என் வாழ்நாள் ஓர்விதத்தில் பயன் பெற்ற தாய்விடும் என்று என் எண்ணத்தை மாதவனிடம் வாய் விட்டுரைத்தேன். நிசிநேரமாய் விட்டதால் மாதவனைப் படுக் கச் சொல்லிவிட்டு மாலதி என்ன செய்கிருளெனக் கவனித் தேன். முகத்திற் புன்னகை தவழ மாலதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பாற்கடல்போல வெண்மையாயிருக்கும் படுக்கைமீது கரும்பாம்புபோல அவளது அளகபாரம் அவிழ்ந்து இறைந்து கிடந்தது. சந்திரன் பலகணி வழியே உள்நுழைந்து அயற் பெண்ணுயிற்றே என்ற அச்சம் சிறிது மின்றி அவ் வழகியின் முகத்தைத் தனது கிரணங்களால் ஸ்பர்சித்து அதன் அழகை இரட்டிக்கச் செய்துகொண்டி ருந்தான். அம்மின்னெளியாளின் கொவ்வைக்கனிபோன்ற உதடுகள் சொர்ப்பனவஸ்தையில் அடிக்கடி சலித்துக் கொண்டிருந்தன. தென்றல் காற்றினலும் உயர ஓடிக் கொண்டிருக்கும் மின்சார விசிறியாலும் அவளது மார்ச்

சிலே அங்குமிங்குமாக அலேந்தோடிக்கொண்டிருந்தது. பூங் கொடிபோன்ற உடம்பும் மெல்லிய இடையும் வெள்ளே உடையும் வேலேப்பழிக்கும் கண்களும் சந்திர மண்டலம் போன்ற முகமும் முத்துப்போன்ற பற்களும் பருத்து உயர்ந்து நிமிர்ந்துள்ள தனபாரமும் கடல் அலேகள் போன்று படிப்படியாகச் சுருண்டு குதிகால் வரையில் நீண்டுள்ள அடர்ந்த அளகபாரமும் கண்டோர் மனதை யுடனே கொள்ளே யிடுவனபோல விளங்கின. ஒரு கையைத் தலேயின் கீழ்வைத்து நித்திரைபுரியும் அம்மட மங்கையின் தோற்றம் ஆசையும் துறந்த முனிவர்களின் மனதையும் மயக்கக்கூடியதாக விருந்தது. ஆகா! அழகைத்திரட்டி ஓர் பெண்ணுருவாகப் படைத்த பிரமன் இவள் தலேயில் நல் லெழுத்தை எழுதாத காரணமென்ன? இவளே மோசடி யாகத் தாய்நாட்டினின்றும் கடல் கடத்தி அழைத்துவந்து நடுத்தெருவில் கைவிட்ட பாதகன் யாராயிருக்கலாம். அவன் மனம் கல்லோ, இரும்போ! என் கண்ணில் தென் படாது வேறு யாரிடமேனும் அகப்பட்டிருந்தால் இவள் கதி என்ன? மனோகரியின் அழகு அவ்வாறு இருக்கிற தென்றால் மாலதியின் தலேவிதி அதிலும் கேடுகெட்டிருக்கி றதே. கடவுளே! சர்வாங்க சுந்தரியாக விருக்கும் இப்பே தைக்கு அவளது எழிலுக்கொற்ற புத்தியையும் நல் நட வடிக்கையையும் என்றும் மாருதிருக்கும்படி அருள்புரியும். மனோகரியின் கஷ்டத்தை நான் தீர்க்க மாட்டாது போனு லும் என்னே நம்பி என்னிடம் அடைக்கலம் புகுந்துள்ள மாலதியாவது என்னுல் நிலே நிறுத்தப்படும்படி கருணே புரியும்" என்று கடவுளேத் தோத்தரித்து என் அறைக்குச் சென்று படுத்தேன். நான் கண்விழித்த சமயம் காலே ஏழு மணி அடித்திருந்தது. பெண்பாலிருக்கு மிடத்தில் வேலேக்

காரன் வரவேண்டாமென்ற எண்ணத்தால் எனக்குப் பலகாரம், காப்பி முதலியவைகளையும் மாலதிக்குப் பாலையும் மாதவன் தன் கைப்பட எடுத்து வந்து மேசைமீது வைத்து விட்டு என்னை எழுந்து பல் துலக்கச் சொன்னான். நண்பன் என்ற பதத்தை நாம் வாசாமகோசரமாகக் கண்ட கண்ட மனிதர்கள் மீது வாரி வாரி இறைத்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் மாதவனைப் போன்ற நண்பனை - ஆப்த நண்பனை—எங்கும் காண முடியாதென்பது திண்ணம்.

---

## 17-வது அதிகாரம்

மாலதி வந்தது முதல் என் வீடு ஒளி பெற்று விளங் கிற்று. இதுவரை அணி வகுத்து வைப்பாரற்று மூலைக்கு மூலைக்கு சிதறிக்கிடந்த வீட்டுச் சாமான்களும் விலையுயர்ந்த பொருள்களும் இப்போது ஒழுங்காயமைக்கப் பட்டிருந்தன. எஜமானி என்ற ஸ்தானத்தில் ஒரு பெண் பால் நிலைத்துப் படிப்படியாகவும் அடுக்கடுக்காகவும் வேலை களைத் திட்டப்படுத்தி வைப்பதால் பணியாட்கள் தங்கள் காரியங்களைப் பொறுப்புடனும் உற்சாகத்துடனும் காலா காலத்திற் செய்யத் தலைப்பட்டனர். உக்கிராண அறையில் இதுவரை ஏகபோகமாக அரசாட்சி புரிந்து சுகவாசம் செய்து எள்ளுப்பேரன் கொள்ளுப்பேத்திகளுடன் நிர்ப்பய மாக வாழ்ந்து வந்த எலிகள் கூண்டோடு இருந்த விடம் தெரியாது ஒழிந்துவிட்டன. மாதமொன்றுக்கு ஐந்நூறு ரூபாய் செலவழிந்தும் வேளா வேளைக்கு இல்லாதும் உருசி யற்றும் இருந்த உணவு தற்சமயம் முந்நூறு ரூபாயில் நள பாகமாகக் கிடைத்தது. வீட்டுப்பொருள்களையும் வருவார்

போவார்களையும் குடும்ப நிர்வாகத்தையும் மாலதி கவனித்து வந்ததால் முன்போல் வாரத்திற்கொரு சமையற்காரனைத் தேடவேண்டிய கஷ்டம் எனக்கேற்படவில்லை. எனக்கு வேளைக்கு உணவளித்தல், எனது தினசரி வேலையைக்குறித்து வைத்திருத்தல், அவைகளை அன்றுடம் எனக்கு ஞாபகப் படுத்தல், வரவு செலவுக் கணக்குகளை எழுதிவைத்தல் இவை போன்ற காரியங்களால் மாலதி எனக்குப் பேருபகாரியாக விளங்கினுள். நானும் மாதவனுமாக நாங்கள் எடுத்துள்ள விவகாரத்தைப்பற்றி ஆலோசிக்குங்கால் சமயோசிதமாக விவாதித்து எங்களுக்குப் புதிய யோசனையையும் குறிப்பு களையும் அவள் அளித்துவந்தாள். மாலதிக்கு சங்கீதத்திலும் நல்ல பயிர்ச்சி இருந்தது. மாலதி அவளது குயிலைப்பழிக்கும் குரலை எழுப்பி வீணைவாசித்தாலும் வாய்ப்பாட்டுப் பாடினு லும் பட்ட மரமும் சட்டெனத் துளிர்த்துப் பூவிடுமென் பதிற் சந்தேகமே இல்லை. பல காரணங்களால் நான் சில சமயம் கவலையுற்றிருப்பதை மாலதி அறிவாளாயின் "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்று பாரதியா ரின் பாடலைப் பாடுவாள். 'நாட்டிற்கும் சமூகத்திற்கும் ஆற்றவேண்டிய பணிகள் அளவுகடந்து கிடக்க நாம் நமது அற்பவாழ்க்கையிலுற்ற இடரை எண்ணி விசனித்தல் எத் தகைய மூடச்செயல்' என்று என் மனதைத் தெளியச்செய் வாள். மாலதியைக் காணுமுன் நான் சங்கீத இன்பத்தை அதிகமாக நுகருவதில்லை. அவலக்ஷண ஜாதகத்திற்கு ஆனந்தமயமான பொழுதுபோக்கல் எதற்கு? அனேக மாக சங்கீதத்தை மறந்திருந்தேன். மாலதி தேசியப் பாடல் களைப் பாடுங்கால் பித்தனைப்போல் நானும் கூடப்பாடுவேன். சிலசமயம் அவள் பாடுவதைக்கேட்டு ஆனந்தக்கண்ணீர் பெருக என்னை மறந்து சமாதிநிலையில் இருப்பேன்.

N34

"தேசமெங்கும் புகழ் வீசிடும் காந்தி" என்னும் பாட்டை மாலதி பாடியவண்ணமிருப்பாள். "அண்ணா! இதை உன்னைப்போல் என்னால் பாடமுடியவில்லையே, அன்று கடற்கரையில் நீ பாடிய உருக்கமும் நயமும் தன்னுள் ஓர் அற்புத தெய்வீகச் சக்தியை அமைத்துக்கொண்டிருந்ததே" என்பாள். அவள் முகத்தில் சிடு சிடுப்பையோ விசனக்குறியையோ காணமுடியாது. அவளது சிரித்த முகமும் விளையாட்டுப் பேச்சும் கம்பீரத்தோற்றமும் அமைதியான குணமும் என்னைத் துன்பக்கடலினின்றும் கைதூக்கிவிடுவனவாக இருந்தன. பொதுவாகக் கூறுமிடத்தில் மாலதி வந்ததிலிருந்து எனக்குப் புத்துயிர் உண்டாயிற்றென்பது மிகையல்ல. மாலதி தன் கஷ்டத்தை மறந்து என் கஷ்டத்தையும் மறக்கச் செய்ததால் அவள் எனக்கு ஜீவாதாரமாக விளங்கினாள். எனதாருயிர் நண்பன் மாதவனும் மாலதியைத் தன் சகோதரியாகவே நேசித்து வந்தான். எனது சோம்பேறி நண்பர்களெல்லாம் உண்பதும், உறங்குவதும், சீட்டாடுவதுமாக முன் கட்டிற் காலங்கழிப்பார்கள். நானும் மாதவனும்கோர்ட்டுக்குச்சென்ற சமயம் மாலதி தன் வேலைக்காரியுடன் மேல் மெத்தையில் இருப்பாள். பூப்போடல், பின்னல் பின்னுதல், படித்தல், தைத்தல், வீட்டைச் சீர்திருத்தல் இக்காரியங்களிற் பகற்பொழுதைப் போக்குவாள். அவள் தனது தோழிகளுடன் காற்றுலாவுதற்கும் கடைவீதி சென்று வருவதற்குமாக அவளுக்கென் ஒரு மோட்டார் கார் வாங்கிக் கொடுத்திருந்தேன். தோழிப் பெண்கள் வராத நாட்களில் என்னுடன் எனது காரில் கடற்கரைக்கு வருவாள். நானும் மாதவனும் மாலை கோர்ட்டிலிருந்து வந்ததும் உடைகளை மாற்றிக்கொண்டு மாலதியுடன் டீ சாப்பிட்டதும்கோர்ட்டில் நடந்த கேசுகளைப்பற்றிச் சிறிது

132 56

நேரம் வம்பளப்போம். இரவுச் சாப்பாட்டிற்கு வேண்டியதை ஆயத்தப்படுத்தி ஆட்களுக்குக் கட்டளையிட்டு விட்டு, கடற்கரை செல்வதற்குத் தயாராகப் புறப்படுவாள். அவள் வீட்டு வேலைகளை எப்படிச் செய்கிறாள், எப்போது செய்கிறாள் என்பதே புலப்படாது. மாலதி வந்த பின் நான் அதிகப்படியாகக் கேசுகளை உத்தேசித்து வெளியூர் செல்வதை நிறுத்தி விட்டேன். ஒருகால் என் தீர்மானத்தையும் மீறிப்போக நேரிட்டால் மாதவன் மாலதியை கவனித்துக் கொள்வான். இவ்வாறு நாங்கள் மூவரும் ஓர் தாயின் வயிற்றுமக்கள் போல் மெய்யன்பு கொண்டு வாழ்ந்ததுடன் எக்காரியத்திலும் ஒரே அபிப்பிராயம், ஒத்த தீர்மானம், ஒற்றுமைப்பட்ட நோக்கம் இவைகளைக் கொண்டு தூயவழியிற் காலங்கழித்து வந்தோம். மாலதியைப்பற்றி எனது போலி நண்பர்கள் வம்பு பேசிக் காலங் கழித்தனர். இதை நான் அறியாதவனன்று. தன் வயிற்றுக்குத் தன் கையால் உணவு தேடிக்கொள்ளச் சாமர்த்தியமற்றிருந்தும், தண்டச்சோறு தின்னும் தடிராமன்களாக என்னையண்டி நான் இடும் சோற்றுக்குக் கை ஏந்தி நின்றும் என்னைப்பற்றி என் வீட்டிலேயே வீண் வம்பு பேசிக் காலம் கழிக்கும் கயவர்களை என்னென்று சொல்வது! இனி இவ் வீட்டிலிருக்கக் கூடாது, வெளியே சென்று விடுங்கள் என்று நான் துரத்தி விடுவேனாயின் அவர்கள் பட்டினிகிடந்து மாளவேண்டியதே. இவ் விஷப் பூச்சிகள் கண்டவர்களை எல்லாம் கடித்துத் துன்புறுத்துவதைக் காட்டிலும் தீராக் கவலையால் புண்பட்ட மனத்தினனாகிய நானே இவ் வுபத்திரவத்தைப் பொறுத்துக் கொள்ளல் பரோபகாரச் செய்கையன்றோ? என்றேனும் வீண்போகும் அன்னத்தில் ஒரு கவளம் எறிந்தால் அதைத் தின்ற நாய்

வாலைக் குழைத்துக் கொண்டு நம்முடன் ஓடிவருவதுடன் நம் வீட்டையும் காக்கின்றது. அந்த நாய்க்குள்ள அறிவும் இவர்களுக் கில்லாதிருப்பின் இவர்கள் வயிற்றிலடித்துத் துரத்துவதிற் பயனென்ன? நான் வீட்டிலிருந்தாலும் இல்லாவிடினும் உண்டாலும் பட்டினிக்கிடந்தாலும் இவர்களுக்குக் காலா காலத்தில் காப்பி, பலகாரம், சாப்பாடு இவைகள் குறைவின்றி நடத்தும்படி நான் ஏற்கனவே என் வேலையாட்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன். இச் சமயம் மாலதியால் குடும்பம் கவனிக்கப்படுவதால் முன்னினும் சிறப்பாக இவர்களுக்கு உபசாரம் நடைபெறலாயிற்று. "ஐயோ பாவம், நன்றாய்த் தின்று தெறிக்கட்டும். தண்டச் சோறு தின்றால் அது ஜீரணமாகவேண்டாமா? பொழுதைப் போக்குவதற்கு வழியுமற்று வேறு கவலையுமற்றிருந்தால் வீண் வம்படித்துத்தானே நேரத்தைக் கழிக்க வேண்டும். இதனால் பாதகமில்லை. நன்றாகத் தின்று கொழுக்கட்டுமே! என்று நான் அவர்களைத்தான் நன்றாகக் கவனிக்கிறேன். காலை ஆறு மணிக்கு காப்பி, இட்டலி, நெய், சக்கரை. பகல் 11 மணிக்கு வறுவலும், பொறியலும், கை நெய்யும், எட்டுத் தயிருமாகச் சாப்பாடு. மாலை 3 மணிக்கு டீ, பஜ்ஜி, போண்டா, அல்வா வகையராக்கள். இரவில் சாம்பார், சட்னி, இடிமாஸ், அப்பளம் எல்லாவற்றுடன் நித்தியம் அவர்களுக்கு விருந்தளித்து வருகிறேன்" என்று மாலதி சொல்லிச் சிரிப்பாள். சத்திரமாக இருந்து வந்த என் வீடு மாலதிவந்தது முதல் பொறுப்புள்ள வீடாக மாறியதுடன் ஓர் குடும்பத்திற் குரிய ஒளிபெற்றும் விளங்கிற்று. மாலதிக்கு அளித்துள்ள உறுதிமொழியும் அவள் மனதிலுள்ள கோரிக்கையும் நிறைவேறல் சிரமசாத்தியமாயினும் அதுபற்றி நாங்களிருவரும் நம்பிக்கை யிழக்கா

மலும் அதையே நினைத்து மனக்கலக்க மடையாமலும் நற் காலத்தை எதிர்பார்த்துக் காலங்கழித்து வந்தோம். மாலதி யின்மீது எனக்குற்ற அன்பாலும் அவளால் என் இல்லம் சீரும் சிறப்புமாக விளங்குவதாலும் என் வீட்டிற்கு "மாலதீ விஹாரம்" எனப் பெயரிட்டு அதை அவள் பெய ருக்கே எழுதிவைத்தேன்.

---

## 18-வது அதிகாரம்

பௌர்ணமி சந்திரன் ஆகாயவீதியில் அமுத கிரணங் களை வீசிக்கொண்டு விளங்கினான். தென்னற் காற்று தேகத்தைப் பரவசப்படுத்திற்று. பழச்சோலைகளில் குயி லினங்கள் மனோகரமாகக் கூவிக்கொண்டிருந்தன. எனது உயிர்த்தோழனாகிய ஆங்கில கனவான் ஒருவரை அன்று என் வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தேன். நானும் மாதவனும் பாரிஸ்டர் பரிட்சைக்குப் படிக்கும் போது அவரும் எங்களுடன் படித்தார். அவருடைய தாய் தந்தையர் இந்தியாவிலேயே தங்கிவிட்டமையால் அவ ருக்கு இந்தியர்களிடத்தில் சோதரவாஞ்சையும் ஹிந்து மதத்தில் மெத்த கௌரவபுத்தியும் ஏற்பட்டிருந்தது. அவர் அடுத்த நகரத்தில் தங்கி பாரிஸ்டர் தொழில் புரிந்து வந்தார். சின்னாட்களாக தேக சுகத்திற்கென நான் இருந்த ஊரில் தங்கியிருந்தார். அவர் ஊருக்குச் செல்வதால் நான் அவரை விருந்துக்கழைத்திருந்தேன். சாப்பாடு முடிந்ததும் மாதவன் 'நாமெல்லோரும் கடற்கரை சென்று வருவோமா?' என்றான். என் தோழன் வாட்ஸனும் 'சரி போவோம்' என் றான். நானும் மாதவனும் மோட்டாரில் ஏறினோம்.

வாட்ஸன் என்னை விழித்துப் பார்த்து 'நமது தங்கையையும் அழைத்துப் போவோமே' என்றான். இவ்வாறு நாங்கள் நால்வரும் கடற்கரை சென்றோம். கரையோரத்திலுள்ள ஒரு மேடைமீது நாங்கள் அமர்ந்ததும் லோகாபிராமமாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். வாட்ஸன் சமீபத்தில் இந்தியாவிற்குச் சென்று வந்ததினால் அங்குள்ள அரசாங்க அமைப்பு, அரசியல் விவகாரம், பொது நல ஊக்கம், மாப்பெருந் தலைவர்களின் மரணம், மகாத்மா அவர்களின் திட்டம், பொது ஜனத்தின் ஆர்வம், போலித் தலைவர்களின் ஆர்ப்பாட்டம், முதலாளிகளின் பிடிவாதம், தொழிலாளர்களின் முயற்சி, பட்டதார்களின் பரிதவிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் இவைகளைப்பற்றி வரிசையாகப் பேசி முடித்ததும், விபசார விடுதிச் சட்டத்தைப்பற்றிய சம்பாஷணை எங்களைத் திருப்பிற்று. இதுவரையில் வாய்பேசாது உட்கார்ந்திருந்த மாலதி இப்பேச்சில் பங்கெடுத்துக்கொண்டாள்.

'உலகில் நடைபெறும் விபசாரத்திற்குக் காரணம் ஆடவனா பெண்மகளா' என்பது பற்றி எங்கள் விவாதம் ஆரம்பமாயிற்று. வாட்ஸனைப் பொதுவாகவிருந்து கவனிக்கும்படி நியமித்து நாங்கள் மூவரும் விவாதிக்க முற்பட்டோம். மாலதி 'விபசாரத்திற்குக் காரணம் ஆடவனே' என்றாள். பெண்மகளே மூலகாரணமென மாதவனுரைத்தான். இருவரும் காரணமென்று நான் கூறினேன். ஆணால் அழிந்தகுடி, பெண்ணால் சிதைந்த இல்லம், இருவராலும் ஒழிந்த குடும்பம், இவைகளைப்பற்றிப் பல உதாரணங்கள் எங்களால் எடுத்துரைக்கப்பட்டன. முடிவில் மாலதி எங்களை நோக்கி 'நீங்கள் ஆடவர்கள். நானோ பெண்பால். இக்காரணங்கொண்டு பட்சபாதமாகப் பேசாது நியா

யத்தை ஒப்புக்கொள்வதானல் என் மனதிலுள்ளதை நான் அச்சமின்றி வெளியிடுவேன்' என்ருள். "நீ சொல்வது சரியாயிருப்பின் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளத் தடையில்லே. நியாய விரோதமாக விருப்பினும் உன்னைக்கோபிக்க மாட்டோம். நீ தைரியமாகச் சொல், அஞ்சாதே" என்ருன். மாலதி "நம்மில் ஆடவன் தலைமைஸ்தானத்தை வகிக்கிருன். இவனுக்கு இளமைப் பருவமிருந்து கல்வி புகட்டப்படுகிறது. இஷ்டம்போல் வெளியிற் செல்லவும் பலரைக்கண்டு சம்பாஷிக்கவும் உரிமை பெற்றிருக்கிருன். ஒவ்வொரு ஆடவன் உள்ளத்திலும் பெண்களிடம் அனுதாபமும் இரக்கமும் இருக்குமானல் பெண்கள் நிலை ஒரு காலத்திலும் சீர்குலையாது சீரும் சிறப்புமாகவே இருக்கத் தடையென்ன? தனது பிழைகளை மறைத்துவிடக்கூடிய சௌகரியங்கள் பல சட்டத்திலும், சம்பிரதாயத்திலும், சமூகத்திலும் அமைந்திருப்பதால் ஆடவன் விபசாரத்தை ஈனச் செயலாக மதிப்பதில்லை. பெண்பால் ஒருத்தி விபசாரி யென்று கருதப்படுவாளாயின் சமூகம் உடனே அவளை விலக்கிவிடுகிறது. சொத்துக்களிலுள்ள உரிமையைச் சட்டம் அவளிடமிருந்து பறிக்கின்றது. பொதுவாக மக்கள் 'அவளை விபசாரி, விபசாரி!' என்று வாய்க்கு வந்தவரை தூஷித்துப் பறைசாற்றுகிருர்களன்றி அவளை இக்கதிக்காளாக்கிய கொடும்பாவி யார் என்பதைக் கவனிப்பதே கிடையாது. விபசாரத்தில் தங்களுக்குள்ள தேர்ச்சியை வாய்விட்டுக் கூறி பகிரங்கமாகப் பல பெண்களின் பெயரைக் குறிப்பிடுவதால் அச்சமடையக்கூடிய சந்தர்ப்பம் ஆடவர்களுக்கு இல்லவே இல்லை. அன்னர்களைச் சமூகம் விலக்குவதில்லை. சட்டம் சிட்சிப்பதில்லை. ஆஸ்தியின் உரிமை அகலுவதில்லை. இவ்வாறு

அவமதிப்பும், தண்டனையும் ஒருதலைப் பட்சமாக விதிக்கப் படும் வரை, விபசாரத்திலீடுபட்ட ஆடவனுக்கு அச்சமோ துன்பமோ ஒன்றுமே ஏற்பட வழியில்லாது இருக்கின்றது. தவிர, விபசாரத்திற்கு அடிகோலுவது ஆடவனே ஆவான். ஓர் உதாரணம் பாருங்கள்! ரயிலிலோ, டிராமிலோ, நடுத் தெருவிலோ, கடற்கரையிலோ, ஜனச் சந்தடியிலோ ஆட வர்கள் பெண்மக்களை யுற்றுப் பார்ப்பதுபோல பெண்கள் அவ்வாறு செய்வதில்லை. பெண்களில் எல்லோரும் நல்லவர் களென்றும் ஆடவர் எல்லோரும் துஷ்டர்கள் என்றும் நான் சாதிப்பதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. நாம் இப் பொழுது விபசாரமென்ற தீநெறி பற்றியே பேசுகிறோம். அதற்கு ஆதி கர்த்தா யார் என்பதும் அதற்கு விதிக்கப்படும் தண்டனை சமமாக இருக்கவேண்டாமா என்பதுமே நமது விவாதம். 'அப்பப்பா! பெண்கள் பொல்லாதவர்கள். விப சாரத்தால் ஊரைக் கெடுக்கிறார்கள்!' என்பதுபோல 'அம்மாடி! ஆடவர்கள் கொடியவர்கள். விபசாரத்தால் அறையிலடைத்துக் கிடக்கும் பெண்ணை அம்பலத்திலி ழுத்து முடிவில் சந்தி சிரிக்க விட்டு விடுகிறார்கள்!' என்று ஏன் சொல்லக்கூடாது. பொதுவாகக் கூறுமிடத்து பெண் கள் சீர்திருந்தி நல்வழிப்படுவதற்கு ஆடவர்களின் பரிசுத்த வாழ்க்கையே அடிப்படையாக அமைந்துள்ளது. மனை யாளைத் தவிர்த்து மற்றபெண்களைத் தாயைப்போல், உடன் பிறந்தாளைப்போல் பாவிப்பதென்ற ஒழுக்கம் ஆடவர்களி டத்தில் வேரூன்றினால் விபசாரமென்ற சொல்லுக்கு வழி ஏது? நம் வீட்டில் வேலை செய்யும் பெண்பிள்ளையைப் பாருங்கள். அவள் வயிற்றுக் கில்லாமல் ஓர் கனவான் வீட்டில் வேலைக் கமர்ந்திருந்தாள். அவருக்கு இவள்மேல் நோக்க முண்டாயிற்று. மனைவியைப் பிறந்த அகமனுப்பி

விட்டு இவளைக் கைவிடாது காப்பாற்றுவதாக ஆசை மொழி கூறி வசப்படுத்திக் கொண்டார். இவ்வூர் சட்டப் படி தனக்குப் பிறந்த குழந்தைக்கு பாகம் அளிக்க நேரிடு மாகையால் அப்பெண்ணின் கருவையழிக்கச் செய்தார். மனைவி வந்ததும் இவளைத் துரத்தியடித்ததுடன் இவள் அவ் வூரிலிருந்தால் தன் மானம் போய்விடுமென்று அஞ்சி மூன்று மனிதரைக் கொண்டு இவளைக் கப்பலேற்றி வேறிடமனுப்பி விட்டார். அவள் பலவாறு கஷ்டப்பட்டு, முடிவில் நம் மிடம் ஏவல்புரிய வந்திருக்கிருள். நல்ல வேளையாக அந்தக் கனவான் உத்தியோகமிழந்து அரசாங்கத்தால் தண்டிக்கப் பட்டு அந்தமான் தீவில் கல் உடைக்கின்ருராம்? இதனுல் நாமறிந்துகொள்ளும் செய்தி என்ன? வெளி உதாரண மெதற்கு? உங்களைப் போன்ற ஆடவன் ஒருவனுல் நான் ஏமாற்றப்பட்டேன். ஆடவனுகிய உன்னுல் காப்பாற்றப் படுகிறேன். மாதவனும் நீயும் என்னை உடன்பிறப்பாக மதித்து நடப்பதால் நான் பயமற்று என் கவலையை மறந்து நிம்மதியாகவும் சந்தோஷத்துடனும் காலங்கழிக்கிறேன். 'இல்லை என்ருல்' என் கதி என்ன?'' என்று மாலதி கூறிய தும் அவள் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் பெருகத் தொடங்கிற்று. துக்கந் தாங்காது விம்மி விம்மி அழத் தொடங்கினுள். அச் சம்பாஷணையை அத்துடன் முடித்து அவளைச் சமாதானப்படுத்தி வீடு சென்ருேம்.

---

## 19-வது அதிகாரம்

ஓர் இரவு ஒன்பது மணி யடிக்கும் சமயம் நானும் மாதவனும் என் வீட்டுப் பின்புறத்துள்ள பூந் தோட்டத்திலுள்ள சலவைக்கல் மேடைமீது எங்கள்

தொழில் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தோம். அன்று மாலை ஏழு மணிக்கே எங்கள் இராப் போஜனம் முடிந்து விட்டதால் மாலதி மேல்மெத்தையிலுள்ள அறைக்குச் சென்றுப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். எங்கள் சம்பாஷணை முடிவடைந்து மாதவன் எழுந்த சமயம் மாலதியின் அறையிலிருந்து வீணை ஒலிக்கத் தொடங்கிற்று. "சரிதான், இன்று தபாலில் பாரதியாரின் கீதப்புத்தகங்கள் கிடைத்தன வன்றோ. அதனுற்றான் இன்று மாலதி தோட்டத்திற்கு வராது சென்று விட்டாள் போலும்" என்றான். "பாரத நாடென்ற போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே!" என்றும் "கல்வி சிறந்த தமிழ் நாடு, உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்றும் மாலதி பாடி முடித்தாள். மாதவன் படுக்கைக்குச் சென்றான். எனக்கு நந்தாய் நாட்டை என்று காண்போம் என்ற ஏக்கமுண்டானதும், ஐயோ! அங்கு நமக்கென்ன வேலை என்ற வெறுப்பும் அடுத்துத் தோன்றியதால் மனவேதனையுடன் அவ்விடமே படுத்துவிட்டேன்.

நான் எவ்வளவு நேரம் தூங்கினேன் என்று எனக்குத் தெரியாது. சற்று அரைத் தூக்கத்தில் இருந்தேன். அச்சமயம் எனது தோள்மீது மெல்லிய கரங்கள் வைக்கப்பட்டிருப்பதாகத் தோன்றிற்று. ஏதோ கனவு என்று நினைத்தேன். மீண்டும் அக் கைகள் என் தோளைக் குலுக்கின. நான் திடீரெனக் கண் விழித்தேன். கொடி வீட்டிற் படர்ந்துள்ள மல்லிகைகளும் மற்றுமுள்ள பூஞ்செடிகளும் தங்கள் நறுமணத்தை வீசிக் கொண்டிருந்தன. தென்னற் காற்றால் செடி கொடிகள் மெல்லென அசைந்தாடிக் கொண்டிருந்தன. மணிக் கூண்டில் ஒரு மணி யடித்தது. தோட்டத்திலுள்ள மின்சார விளக்குகள் வழக்கம்போல் அணைக்

கப்படாது வெண்ணிலவுபோல் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இக்காலத்தில், அதிலும் இரவு நேரத்தில் 'என்னை எழுப்புவது யார்' என்று நோக்கினேன். மங்கையொருத்தி என் முகத்தருகிற் குனிந்த வண்ணம் இருந்தாள். என் முகத்திற்கும் அவள் முகத்திற்கும் இடை வெளி சிறிதே இருந்ததால் "இவள் யார்? எங்கிருந்து வந்தாள்? எப்படி வந்தாள்? ஏன் வந்தாள்? என்னை முத்தமிடக் குனிந்து விட்டாளே! என் செய்வேன்! எனது பிரம்மசரியத்திற்குப் பழுது நேர்ந்துவிடும் போலிருக்கிறதே" என்று கலங்கினேன்—நான் அவளை மீறிக்கொண்டு எழுவேனாயின் எனது உடல் அவள்மீது உராய்ந்து அவளைக் கீழே தள்ளி விட நேரிடும். இத்தரும சங்கடத்திற்கு வழிதெரியாது மிரளவிழித்தேன். கடவுளே! இவ்வாபத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்று தியானித்தேன். சிறிது நேரம் அவளைக் கூர்ந்து நோக்கியதில் அவள் மாலதி என்று புலப்பட்டது. "என்ன! மாலதியா! நமது மாலதியா! அவளா! இதென்ன விந்தை! இது கனவோ! நினைவோ! காண்பதும் பொய்யோ! 'பெண்மக்கள் அறிவிழந்தாலும் அவர்களுக்கு நற்புத்தி புகட்டித் தெளியச் செய்தல் ஆடவர்கள் கடமை அன்றோ' என்று பேசியதை இன்று பரிசோதிக்க வந்திருக்கிறாளோ" என்று திகைப்பூண்டைமிதித்தவன்போல் விழித்தேன். இதுவரை மௌனஞ் சாதித்திருந்த மாலதி என் காதுக்குள் 'அண்ணா! அவன்—அவன்! எழுந்து வா! ஓடிவா!' என்றாள். 'யாரவன்? உன் அறைக்கு எப்படி வந்தான்' என்றெழுந்தேன். 'இல்லை அண்ணா! நீ எழுந்திரு. பேசாது என்னுடன்வா,' என்றுரைத்து என் கைகளைப் பற்றிக் கரகரவென்று இழுத்துச்சென்று படிக்கட்டு ஏறி அவள் அறையின் சாளரத்தருகில் என்னை நிறுத்தி 'தெரு

வில் பார்! அதோ அங்கு பார்!' என்றாள். எட்டி எட்டிப் பார்த்தும் என் கண்களுக்கு ஒருவரும் புலப்படாததால் 'தெருவில் யாருமில்லையே!' என்றேன். மாலதி என்னை நோக்கி 'அண்ணா ! எனக்கு இன்று தூக்கம்பிடிக்கவில்லை. நீயோ இன்று தோட்டத்தில் தூங்குவதாக மாதவன் என்னிடம் கூறிச் சென்றான். நான் இச் சாளரத்தருகிலுட்கார்ந்து தெருவைக் கவனித்துக்கொண்டிருந்தேன். இரு ஆடவர் நமது வீட்டெதிரில் நின்றனர். விளக்கை யணைத்திருந்த தால் நான் அவர்களுக்குத் தென்படவில்லை. ஒரு வன் ' இதுதான் அவன் வீடு ' என்று சுட்டிக்காட்டினான். மற்றொருவன் 'வீட்டில் இன்னம் யார் இருக்கிறார்கள்' என்றான். ' அவனுடன் ஒரு பெண்பிள்ளையும் வசிப்பதாகக் கேள்வி' என்றான் முன்னவன். 'என்ன! என்ன! அவன் ஒரு பெண்ணை வைத்திருக்கிறானா? பலே பேஷ்!' என்று உரத்துக் கூறினான் மற்றவன். அக்குரல் ஆரம்பமிருந்து எனக்கு அறி முகமானதாகத் தோன்றிவந்ததால் அவனைக் கூர்ந்து நோக்கி னேன். என்னை ஏமாற்றிக் கற்பழித்து நடுத் தெருவில் விட்டவனும்,இரண்டாவது முறைஎனக்கு ஆசை வார்த்தை கூறிக் கப்பலேற்றி வந்து என்னை விபசாரத்தி லீடுபடுத்த வேண்டுமென்று முயற்சித்த மகாபாபியும் இவனே என்ப தறிந்தேன் ! உனக்குக் காட்டவேண்டுமென்று சத்தப்படுத் தாது ஓடிவந்தேன். பின் கட்டில் வேலையாட்கள் படுத் திருந்தார்கள். தோட்டக்காரன் வழியில் படுத்துத் தூங் கிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் கூட்டிலிருந்த கிளிகள் பேசத்தொடங்கின. உன்னை எழுப்புவதற்காக உன்னைத் தொட்டேன். நீ அசையவில்லை. பிறகு உன் தோளை யசைத்தேன். நீ கண்விழித்தாய். உன் காதோடு உரைப்பதற்காகக் குனிந்தேன் ! நீ அச்சமயம்

ஒன்றும் விளங்காது மிரள விழித்தாய்! அதுகண்டு எனக்குத் திகைப்புண்டாயிற்று. ஒருவாறு உன்னை இங்கு இழுத்து வருவதற்குள் அவன் சென்றுவிட்டான்!'' என்றாள். "அவன் இவ்வூரிலேயா இருக்கிறான்? அவனை இனி எப்படி அடையாளங் கண்டுபிடிப்பது? 'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை' என்பதுபோல தெருவாயிலில் நின்றவனை இன்னான் என்று அறிந்து கொள்ளமுடியாது போயிற்றே'' என்று மனங்கலங்கினேன். எங்கள் பேச்சுக் குரலைக்கேட்டு மாதவனும் அங்கு வந்தான். தோட்டத்தில் நடந்த செய்திகளை அவனிடம் விரிவாக எடுத்துரைத்தேன். அக்கதையைக் கேட்டு மாதவனும், மாலதியும் குலுங்க நகைத்தார்கள். "நல்லவேளை, நீ இன்று ஒரு பேராபத்திலிருந்து தப்பியது பற்றி சந்தோஷம்" என்று சொல்லி மாதவன் மீண்டும் சிரித்தான். மாலதியும் சிரித்தாள். என் அவிவேகத்தையெண்ணி நானும் நகைத்தேன்.

---

## 20-வது அதிகாரம்

"அண்ணா! அண்ணா!! எழுந்திரு, எழுந்திரு! இன்று கப்பல் வரும் நாள் ஆயிற்றே. அதிகாலையில் கப்பல்கரை பிடிப்பதாக லேபர் ஆபீசிலிருந்து நேற்றுத் தகவல் வந்ததை மறந்துவிட்டாயா? நேரம் ஆயிற்றே!" என்று மாலதி சத்தமிட்டு என்னை யெழுப்பினாள். நேற்றிரவு நெடுநேரம் கடற்கரையிலிருந்து குளிர் காற்றிலடிபட்டதால் உடம்பு அயர்ந்துவிட்டது. இன்றுபோகாமலிருந்து விட்டாலென்ன என்று நினைக்கிறேன். 'மற்றவர்கள் பார்த்துக்கொள்ளமாட்டார்களா' என்றேன். "என்ன அண்ணா! நீயும் சோம்பிக் கிடக்க ஆரம்பித்துவிட்டாயா? அல்லது உன் மனதிலுள்ள

அனுதாபம் அழிந்துவிட்டதா? இல்லை, இல்லை, நான் என்ன சொல்லுகிறேன் என்று என் வாயைக் கிளப்பப் பார்க்கிறாய். சென்ற கப்பலில் நான் அந்த ஜனங்கள் படும் பாட்டைக் கண்டபின் என் மனம் கலங்கிவிட்டதே! ஏன் அண்ணா! அந்த வேலைக்காரன் ஆண் பெண் என்று பாராது கூலிகளை ஏன் அப்படி இழுத்துத் தள்ளுகிறான். அம்மை குத்தி இருக்கிறதா என்று பெண்கூலிகளைப் பரிசோதிக்கவேண்டுமாயின் அதற்கொரு பெண்பிள்ளையை நியமிக்கக்கூடாதா? ஆண்பிள்ளை ஒருவன் நின்றுகொண்டு பெண்பிள்ளைகளின் தோளிற் கைபோட்டுக் கூச்சமின்றி அவர்கள் தோள்சேலையை விலக்கிக் காண்பிக்கிறானே? எவ் வேலையிலமர்ந்தாலும் பெண்பிள்ளைக்கு அளிக்கவேண்டிய கௌரவத்தைக் குறைக்கலாமா? இதுதானோ கற்றவர்களின் நாகரிகம்! தவிர, அதில் வரும் பெண்கள் எல்லாம் சொந்தக் கணவனுடன் வருவதில்லையாமே? பலர் கப்பல் விட்டிறங்கும்வரை ஒருவனுக்கு மனைவியென்று சொல்லி விட்டுப் பிறகு 'உனக்கு எனக்கு' என்று பங்கிட்டுக்கொள்ளும் பாதகர்களிடையே அகப்பட்டு அழிவார்களாமே? இவ்வூர் வாய்க்காலில் பொன் மணல் இருப்பதாகச் சொல்லக்கேட்டு வீட்டாரிடம் சொல்லிக்கொள்ளாது ஓடிவந்தவர் பலர் என்று கூறுகிறார்களே! இது நிஜமா? இதெல்லாம் கிடக்கட்டும். நீ சென்றால்தான் கூலிகளுக்கு ஆறுதலாயிருக்கும். சென்றமுறையில் "ஐயா, சாமீ! நான் ஏமார்ந்து வந்துவிட்டேன். இந்தப் பாவிப்பயல் என்னை இழுத்து வந்தான் சாமீ!" என்று அழுதவனை நீ திரும்பக் கப்பலேற்றி அனுப்பிவிட உத்தரவிட்டது நினைவிருக்கிறதா? இம்முறை எத்தனை பெயர்கள் அப்படி ஏமார்ந்து வந்திருக்கிறார்களோ? புறப்படு! புறப்படு. இக்காலத்தில் கோயில்

கட்டுவதாலும் குளம் வெட்டுவதாலும் பயனில்லை. சர்வ கலாசாலைகளை நிறுவியும் ஆங்கிலப்பட்டதாரிகளை ஆயிரக் கணக்காக நிர்மாணம் செய்தும் முடிவில் அவர்களை வேலை யற்ற திண்டாட்டத்தால் அதோகதி ஆக்குவதும் வீணே. நம்மில் இருவகையான தாழ்த்தப்பட்டவர்கள் இருப்பதில் ஒருவகையினரான ஹரிஜனங்களை முன்னேறச் செய்வதில் மகாத்மா முற்பட்டுவிட்டார். முதலாளிகள் கையிலகப் பட்டு, தேக வலிமையையும் உழைப்பையும் அவர்களுக்கே தத்தம்செய்து, அவர்களைப் பெரும் பணக்காரர்களாக்கி விட்டு முடிவில் கைகால் வீங்கி, சோகைபிடித்து, ஏனென்று கேழ்ப்பாரற்று, தர்ம ஆர்டருக்குப் பல்லையிளித்துக் கெஞ்சி கப்பலடியிலும், நடுக்கடலில் கப்பல் செல்லும்போதும் உயிர்விட்டு மடியும் தொழிலாளிகளை முன்னேறச் செய் வதே முக்கியக் கடமையாகும். அதிலும் பெண்தொழி லாளர் குறை செப்பத்திறமன்று. உன்னாலானவரை அவர் களுக்கு ஊழியம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் உனக்குக் கிட்டியிருக்க அதை நீ வீணாக்கலாமா?" என்று மாலதி என்னை வற்புறுத்தினாள். மாலதி என்னை இருக்கவிடாள்! ஆகையால் பரபரப்புடன் எழுந்து அவள் தயாராக வைத் திருக்கும் வெந்நீரில் பல்துலக்கி முகங் கழுவிப் பசியாறி விட்டுக் கப்பலடி சென்றேன். கரையில் ஜனக்கூட்டம் திரண் டிருந்தது. எனக்காக ஏற்பட்டுள்ள ஏணிமீதேறி கப்பலின் மேல்தட்டை யடைந்தேன். கூலிகள் சிலரே இம்முறை வந்திருப்பதாக எனது குமாஸ்தா கூறினான். முதல் வகுப் பில் சில ஐரோப்பியரும், இரண்டாம் வகுப்பில் பல கன வான்களும், மூன்றாவது வகுப்பில் சில பிரயாணிகளுமிருந் தனர். என் தாய்நாட்டிலிருந்து யாராவது வந்திருக்கி றார்களாவென நான் கவனிப்பதற்குள் "ஐயா, கூலிகளை

இறக்கவேண்டுமோம்? டாக்டர் துரை உங்களை யழைக்கிறார். தயவுசெய்து வாருங்கள்'' என்று ஒரு வேலையாள் என்னை துரிதப்படுத்தினான். வழக்கம்போல் ஆடவர்களையும் பெண்மக்களையும் சிறுவர் சிறுமிகளையும் பரிசோதித்துத் தள்ளிக்கொண்டிருந்தான் ஒருவன். இக் கோரக் காட்சி முடிந்ததும் நான் வீடு செல்ல எத்தனித்தேன். வழியில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் மூட்டை முடிச்சுகளுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையே ஓர் சிறுவனைக் கையிற் பிடித்துக் கொண்டு பெண்பால் ஒருத்தி நின்றிருந்தாள். மற்றவர்கள் அவளை இடித்துத் தள்ளிக்கொண்டு செல்வதையும் அவள் தனியே இருப்பதையும் கண்டு எனக்குப் பரிதாபமுண்டாயிற்று. உடனே நான் அவளருகிற்சென்று "அம்மா! உங்களுக்கு எங்கேபோகவேண்டும்? துணை யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"அண்ணா! நீதானா! யாரோவென்றெண்ணினேன். சௌக்கியமாயிருக்கிறாயா" என்று அவள் என்னை விசாரித்தாள். "என்ன! நீ மனோகரியா! இங்கு எப்படி வந்தாய்!" என்றேன். "அண்ணா! நான் சீக்கிரம் செல்லவேண்டும். தாமதிக்கக் கூடாது. என் கதையை ஆரம்பித்தால் ஆயிரம் வருஷமும் போறாது. நீ கார்த்திகேயனுடன் இங்குவந்ததும் சிறிது நாட்கள் நாங்கள் சௌக்கியமாகவே இருந்தோம். கார்த்திகேயன் என் புருஷனுக்குக் கடிதமெழுத வாரம்பித்தான். கடன்காரர் உபத்திரவத்தால் என் கணவனுக்கு வெளியில் தலை காட்டமுடியவில்லை. கொஞ்சகாலம் வாசுதேவனிட மிருக்கும்படி என் புருஷன் என்னை அனுப்பினார். அங்கு என் அண்ணன் மனைவி என்னை இகழ்ந்தும், அவமதித்தும், ஏசியும், தூற்றியும், உபத்திரவித்ததுடன் என்

அண்ணனுக்கும் எனக்கும் மனஸ்தாப முண்டாகும் வழி களையும் தேட முற்பட்டாள். இனி அங்கிருப்பது சரியல்ல வென்று என் கணவரில்லம் சென்றேன். அங்கு அவரைக் காணோம். வீடு பூட்டிக்கிடந்தது. அண்டை அயலில் விசாரித்ததில் எங்கள் சொத்துக்களை எல்லாம் கடன்காரர் ஏலம் போட்டுப் பறித்துக் கொண்டதாயும் என் கணவர் இந்த அவமானம் சகிக்காது வெளியூர் சென்றுவிட்டதா கவும் அறிந்தேன். தங்க விடமில்லாது உன் வீடு சென் றேன். உன் வேலைக்காரனுக்கு கார்த்திகேயன் விலாசம் தெரியுமாம். அவனைக் கொண்டு கார்த்திகேயனைத் தந்தி மூலம் விசாரித்தேன். அவர் சௌக்கியமா யிருப்பதாகப் பதில் கிடைத்தது. இனி அங்கிருக்க மனம் ஒப்புமா? மிருந்துள்ள அட்டிகையை விற்றேன். செட்டியும் தட்டானு மாக அதைக் கல்லிலுரைத்துப் பாதியைக் கரைத்து அதற்கும் பாதிவிலையைக் கொடுக்கும்பாடு போதுமென் றாய் விட்டது. சென்னையிலிருந்து கப்பலேறி இங்கு வந்தி ருக்கின்றேன். குழந்தை ஞானம் மெத்தக் கஷ்டப்பட்ட துடன் கப்பலிற் சாப்பாடு வசதியில்லாது இளைத்துவிட் டான். எப்படியோ நாங்களிருவரும் வந்து சேர்ந்துவிட் டோம்" என்று மனோகரி தன் கதையைச் சொல்லி முடித் தாள். "நல்லது! நீ என் வீடுவந்து சாப்பிட்டுக் களைப் பாறிய பின் உன் புருஷனிருக்கு மிடம் செல்லலாம்" என் றேன். "அண்ணா! முடியாது! முடியவே முடியாது. மீண் டும் என் கணவனுக்குக் கோபம் மூட்டிவிடாதே! என்னை இவ்விலாசத்திற்கு அனுப்பிவிடு" என்று ஓர் கடிதத்தைக் காட்டினாள். நான் எவ்வளவு மன்றாடியும் அவள் ஒரே பிடிவாதமாக "என்னை அனுப்பிவிடு. என்னை இங்கு நீ சந் தித்ததாகக் கூட அவர் அறியக் கூடாது. என் க்ஷேம சமாச்

சாரம் உனக்குத் தேவையானால் வேறு மனிதரைக்கொண்டு அறிந்து கொள். நீ அங்கு வரவே கூடாது. தெரிந்ததா! அவசரமோ, ஆபத்தோ நேர்ந்தால் நான் உனக்குத் தகவ லனுப்புகிறேன். என்னைப்பற்றி நீ கவலைப்படாதே. நீ நெருங்கினால் அவர் என்னைச் சந்தேகித்துத் திட்ட ஆரம் பிப்பார். எல்லாவற்றிற்கும் உன் விலாசம் எனக்குத் தெரிந் திருக்கட்டும். நானிவ்வாறு கூறுவது பற்றி என் மீது வருத் தங்கொள்ளாதே" என்று மனோகரி மன்றாடினாள். "எப்படி யாவது நீ கஷ்டப்படாமலிருப்பதே என் கோரிக்கை. இந்தா இந்த நூறு ரூபாயைப் பத்திரமாக உன் செலவுக்கு வைத்துக்கொள். தேவையானால் அடிக்கடி அனுப்பவும் தடையில்லை. கார்த்திகேயனை மட்டும் நம்பி விடாதே. அவனை இவ்வளவு அந்தஸ்துக்குக் கொண்டுவந்தவன் நானே. ஆனால் அவனுக்கு நன்றியில்லாது போயிருப்பதுடன் மெத்த அகம்பாவமும் ஏற்பட்டிருக்கிறது. அவன் இவ் வூர்ப் பெண் ஒருத்தியைக் கலியாணம் செய்து கொண்டி ருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவள் குணம் எப்படியோ? கார்த்திகேயன் மராமத்து இலாக்காவிலுள்ள ஆட்களை வசப்படுத்திக்கொண்டு கண்டிராக்டு மூலம் ஏராளமாகச் சம்பாதித்து வருகிறானாம்? எப்படியோ அவன் உன் புருஷனை விட்டுப் பிரிந்த பின் தனது துர்ப்பழக்கங்களை ஒழித்து சுகஜீவனம் செய்வதுபற்றி எனக்குச் சந்தோஷமே. அவனுக்கு நற்புத்தி ஏற்பட்டிருந்தால் உன் கணவனையும் பங்குக்காரனாகச் சேர்த்துக் கொண்டு பொருள் தேடலாம். ஆனால் கடவுள் செயலெப்படியோ!" என்றேன். "ஏதோ அன்றெழுதியதை அழிக்க முடியாது! நாழிகையாய் விட்டது! என்னை சீக்கிரமனுப்பு" என்று மனோகரி துரி தப்படுத்தினாள்.

கார்த்திகேயனிருக்கு மிடத்திற்கு ஓர் வண்டி பேசித் தக்க துணையுடன் மனோகரியை அவள் குழந்தையுடன் அனுப்பிவிட்டு சொல்லொணுக் கவலையுடன் வீடு சேர்ந்தேன். மாலதி 'அண்ணு இன்று என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு நேரம்? உன் முகமேன் வாட்டமடைந்திருக்கிறது?' என்று பற்பலக் கேள்விகளைச் சரமாரியாகக் கேட்க ஆரம்பித்தாள். நான் இதற்கு மறுமொழி யளிக்கத் தயங்கினேன். கப்பலடிச் சம்பவத்தைச் சொல்வதால் மாலதியின் மனமும் விசனப்படுமென்றே. இதனுலும் வேறு சில காரணங்களை யுத்தேசித்தும், "ஒன்றுமில்லை மாலதி! இன்று நமது நாட்டிலிருந்து வந்த சிலரைச் சந்தித்தேன். பழைய நினைவுகள் உண்டாயின.

"ஆரிய பூமியில் நாரியரும் நர
சூரியரும் சொலும் வீரிய வாசகம்
வந்தே மாதரம் வந்தே மாதரம்"

என நீ அடிக்கடிப் பாடிக்கொண்டிருப்பாயன்றே. அது தான் காரணம்" என்று பதிலிறுத்தேன்.

அன்று ஓய்வு நாள் ஆகையால் மாதவனைத் தனியே அழைத்துச் சென்று மனோகரியைப்பற்றிய முழு விவரங்களையும் தெரிவித்தேன். இதை மாலதிக்கு அறிவிக்காமலிருந்ததே மேல் என்றும் இனியும் தெரிவித்தல்கூடாது என்றும் மாதவன் என்னைத் திட்டப்படுத்தியதுடன் இது பற்றிக் கவலைப்படாதிருக்கும்படிக்கும் எதுவும் தலைவிதி போல் நடக்குமென்றும் எடுத்துரைத்து என் மனதைத் திடப்படுத்தினன்.

## 21-வது அதிகாரம்

நான் நேரிற் செல்லாது மாதவனைக் கொண்டு மஞ்ஞெகரியின் க்ஷேம சமாச்சாரத்தை அடிக்கடி அறிந்து வந்தேன். மஞ்ஞுகரி ஊர் வந்த சில மாதம் வரை அங்கு ஒரு விசேஷமும் ஏற்படவில்லை. அவ்விதமே இருந்திருப்பின் நான் இவ்வாறு மனமிடிந்து பரிதபிக்க வேண்டுவதில்லையன்றோ. "பழையகுருடி கதவைத்திறடி" என்று உமாபதி மீண்டும் குடிக்கத் தொடங்கினான். நாளுக்கு நாள் குடி அதிகரித்ததால் வெளியில் வேலைக்குச் செல்லாது வீட்டோடு விழுந்து கிடந்ததுடன் மஞ்ஞெகரியையும் துன்புறுத்த முற்பட்டான். மஞ்ஞெகரி என்ன செய்வாள். போதாக்குறைக்கு கார்த்திகேயன் மனைவியும் காலராகண்டு காலமானாள். இதனால் மஞ்ஞெகரிக்குப் பெண்துணையும் இல்லாது போய்விட்டது. அவள் இரு குடியர்களுக் கிடையில் கஷ்டப்பட்டுக் கண்ணீர்வடித்த வண்ணம் காலம் கழித்து வந்தாள். மீண்டும் இப்பரிதாபக் காட்சி என் காலின் கீழ் வரவேண்டுமோவென மனம் புண்பட்டு வருந்தினேன். மாலதி என்னைச் சரணமடைந்திருப்பினும் அவள் கோரிக்கையை நிறைவேற்றுதல் அவ்வளவு கடினமன்று. ஒருகால் அவள் விருப்பம் நிறைவேறாவிடினும் அவளைக் கண் கலங்காது காப்பாற்றிவிடலாமென்ற தைரிய மெனக்குண்டு. மஞ்ஞெகரியின் விஷயம் அப்படிக்கல்ல, அவளை என் வீட்டிற்கு ஒருமுறை அழைத்துவரவும் எனக்கு சுவாதீனமில்லை. உமாபதியோ கார்த்திகேயன் சொற்படி ஆடிவருகிறான். இந்நிலைமையில் மஞ்ஞெகரிக்கு நான் எவ்விதம் உதவி புரியமுடியும்? இக்கவலை நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. மாலதி கலக்கமுறக்கூடாதென்ற காரணத்தாலும், அவள்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளக்கூடா தென்ற பிடிவாதத்தாலும், மாதவன் தனிமையில் எனக்கு அறிவுருத்தி வந்த உபதேச மொழிகளாலும் நான் என் கவலையை வெளிக்காட்டாது என் மனதிலேயே அடக்கிவைத்துக் கொண்டிருந்தேன். மாலதி கற்றறிந்த பெண் ஆனதால் 'அகத்தினழகு முகத்தில்' என்றபடி என் மனக்கவலையை எளிதில் அறிந்துகொண்டாள். அவள் மாதவனை விசாரித்ததில் ஒன்றும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. முடிவில் ஒரு நாள் என் முன்னிலையில் கண்ணீர் உதிர்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். கடற்கரையிலிருந்து நான் அவளை என் வீட்டிற்கு அழைத்துவந்தபின் அவள் அன்றளவும் கண்ணீர் விட்டவளல்ல. அன்று அவள் கண்ணீர்விடுவது கண்டு 'மாலதி ! என்ன விசேஷம் ? ஏன் அழுகிறாய்' என்றேன்.

மாலதி :—அண்ணா ! நீ முன்போல சந்தோஷமா யிருப்பதில்லை. அதனால் எனக்கு அழுகை வருகிறது.

நான் :—அம்மா ! எனக்கு உன்னைப்பற்றிய கவலையன்றி வேறில்லை. இவ்வாறு உன் வாழ்நாள் வீணாய் விடுகிறதே என்று வருந்துகிறேன்.

மாலதி :—இதற்கு விசனப்பட்டு என்ன செய்கிறது. நான் பெண்பிறந்த நேரம். மோசக்காரன் பேச்சை நம்பி மானமிழந்தேன். அந்தப் பாவி இனி கண்ணுக்ககப் படப் போகிறானா ?

நான் :—அவனை எப்படி கண்டுபிடிப்பது ? அவன் உருவப் படமேனு மிருந்தால் பத்திரிகைகளிற் பிரசுரித்துத் தேடலாம். ஒருவழியுமில்லையே.

மாலதி :—அந்தச் சனியன் தொலேயட்டும். நீ யேன் கவலேப் படுகிருய். என்னே ஏமாற்றிய பாதகனேக் கடவுள் தண்டிப்பார் என்பது நிச்சயம்.

நான் :—அவனேக் கண்டுபிடித்து உன்னே மணந்துகொள் ளும்படி செய்வேனுயின் என் மனங்குளிரும். மஞே கரி விஷயத்தில் நான் ஒன்றும் செய்யமாட்டாது போயினும் உன்னேயாவது நல்ல ஸ்திதியில் வைக்க வேண்டுமென்பதே என் கோரிக்கை. கடவுள் எப் போது கருணேபுரிவாரோ ?

மாலதி :—மஞேகரி இப்போது எப்படி இருக்கிருளோ ! பாவம் ! நான் அனுதையாயிருந்தும் உன்னிடம் வந்த தால் கஷ்டமின்றிச் சீரும் சிறப்புமாக காலங்கழிக் கிறேன். அவள் என்ன செய்வாள். அவளேயும் இங்கே அழைத்து வந்துவிடேன். நானும் அவளும் அக் காள் தங்கைபோல இருக்கிறேம்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் என் மனம் கலங்கிற்று. “மஞேகரிக்குக் கணவன் இருக்கிருன். கணவன் மனே வியை வதைப்பதானல் இதில் மற்றவர் தலேயிடுதல் பொருந் துமா ?” என்றேன்.

“என்னேப்பற்றி இனி கவலேப்படாதே. நீ உள்ளவரை எனக்குக் குறை ஏது ? பாவம் ! தாயில்லா பெண் மஞேகரி தான் கஷடப்படுகிருள். இதை நினேத்தும் நீ கவலேப்படு கிருயல்லவா ” என்ருள்.

“ஆம், அதுவும் ஒரு காரணமே ” என்று பதிலளித் தேன்.

---

## 22-வது அதிகாரம்

மனோகரியின் பரிதாபவாழ்க்கையை நினைத்தும் மாலதியின் நிலைமையைக் குறித்தும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் சிந்திப்பதிலேயே சின்னாட்கள் கழிந்தன. ஒரு நாள் திடீரெனப் பெரும் புயல் வீசத் தொடங்கிற்று. விதியின் வலியை எதிர்ப்பார் யார். எனது ஜீவிய நாடகத்தின் கடைசிக்களம் ஆரம்பித்து விட்டது. முதல் அங்கத்தின் திரைச்சீலை விலகிற்று. ஒரு வேலைக்காரப் பெண் என் வீடு வந்து என்னைத் தனியே அழைத்து ஒரு கடிதத்தை என்னிடமளித்தாள். அக்கடிதம் மனோகரியால் அனுப்ப பெற்றிருந்தது. கார்த்திகேயனால் தனக்கு மானபங்கம் விளைந்துவிடக் கூடிய சந்தர்ப்பம் வருமுன் தான் தன் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புவதாயும் என்னை உடனே புறப்பட்டு வரும்படிக்கும் அக்கடிதத்தில் எழுதி இருந்தாள். வாசித்ததுதான் தாமதம்! வீட்டில் மாதவன் மாலதி ஒருவரிடமும் தெரிவியாது மனோகரியின் வீடு சென்றேன். இனி நடக்கவிருக்கும் கோரகிருத்தியத்தையும் பரிதாபக் காட்சியையும் காணச் சகியாதவன்போல் சூரியன் மேற்றிசைக் கடலில் மெல்ல அமிழ்ந்தான். உமாபதி அன்று வீட்டிலில்லை. அடுத்தவூர் சென்றிருப்பதாயும் இரவிலோ அல்லது மறுநாட் காலையிலோ திரும்பி வரக்கூடுமென்று அறிந்தேன். அவ்வீட்டின் முன் புறத்துள்ள அழகிய பூந்தோட்டத்தில் சிறுவன் ஞானநந்தன் தன் தோழருடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். ஒருவர் கண்ணிலும் தென்படாது பின்புறமாக அவ்வீட்டில் நுழைந்தேன். மனோகரி என்னைக் கண்டதும் ஓவென்று அலறி அழுது மூர்ச்சையடைந்தாள். வீட்டில்

வேலையாட்கள் ஒருவரையும் காணோம். நானே மனோகரியைத் தூக்கி எடுத்து ஆசுவாசப்படுத்தினேன். "அண்ணா! நீ என்னை உயிருடன் பார்ப்பது இதுவே கடைசி முறை" என்றழுது விம்மினாள்.

"விஷயமின்னதென்று விளக்கிக் கூறு. பிறகு அதற்கான வழி தேடலாம்" என்று மனோகரியைச் சிறிது சமாதானப்படுத்தினேன். "கார்த்திகேயன் தொலையவேண்டும்! அல்லது நான் மாளவேண்டும்!! இன்றிரவு இரண்டிலொன்று நடவாவிடில் என் கற்புக்குப் பங்கம் விளைவது நிச்சயம்! என் கணவன் இதற்கு உடந்தையா யிருக்கிறான் என்று எனக்குத் தோன்றுகிறது. இனி எனக்கு கதி மோட்சமில்லை! நான் பெண்களுக் கணிகலனாயுள்ள கற்பை இழந்து இப்புவியில் அரைக்கணமும் உயிர்வாழச் சகியேன்! கார்த்திகேயன் இவ்வீட்டை விட்டு அசையப்போவதில்லை. அவனைத் துரத்த முடியாது. அவன் தயவினாலேயே இச்சமயம் இக் குடும்பம் நடைபெறுகிறது. ஆகையால் வேறு பரிகாரம் கிடையாது. நான் இறந்துவிட்டால் குழந்தை ஞானானந்தனைக் கவனிப்பாரில்லையே என்ற ஏக்கம் என்னை வருத்தியதால் உனக்குச் சொல்லியனுப்பினேன். குழந்தை ஞானானந்தனைக் காப்பாற்று!" என்று மனோகரி என் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள். இதற்குள் வெளியே சென்றிருந்த வேலைக்காரியின் குரல் முன்கட்டில் கேட்டது. "மனோகரி! இன்றிரவு ஜாக்கிரதையுடனிரு. நாளையிலிருந்து கார்த்திகேயனால் உனக்கு ஒருவிதத் துன்பமும் ஏற்படாமல் நான் தக்க வழி தேடுகிறேன்" என்று கூறி அவசரமாக வெளிப்பட்டேன். மாலை வெளிச்சம் மங்கும்வரை வெளியில் சுற்றிவிட்டு இரவு எட்டுமணி சுமாருக்கு மனோகரியின் வீட்டில் என்ன நடக்கிறதென்

பதை அறியும் பொருட்டு ஒரு மரத்தின் கிளையிலுட் கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். தெருப்புறமாக வுள்ள அறையில் மனோகரி உட்கார்ந்திருந்தாள். அவளது அழகிய முகவொளியையும் மந்தகாசத்தையும் கவனித் தேன். நான் கடைசியாகக் கூறிய மொழிகேட்டு அவள் சற்று மனந்தெளிந்திருப்பதாக நினைத்து மனம் தெளியலானேன். இச்சமயம் ஞானநந்தன் ஓடி வந்து "அம்மா! இன்று எதிர்வீட்டின் ரேடியோவில் 'காலஹரணமேமிராஹரே' என்ற பாட்டை யாரோ பாடினாள். குரல் கழுதைபோல விருந்தது. நீ பாடு அம்மா!" என்று கூறி ஹார்மோனி யத்திற்கு சுருதிபோட வாரம்பித்தான். குழந்தையைத் திருப்தி செய்வதற்காக மனோகரி தனது தீங்குரலெடுத்து அப்பாட்டைப் பாடினாள். இது முடிவதற்குள் வெளியே சென்றிருந்த கார்த்திகேயன் அவ்வீட்டில் நுழைந்தான். அவனது தறுதலை வேஷமும் ஓய்யாரமும் அவன் இன்னான் என்று அறிய முடியாதபடி என்னை பிரமிக்கச் செய்தன.

"பேஷ்! பலே பேஷ்!! பாட்டு நன்றாயிருக்கிறதே! இன்று தான் உனக்கு மனந்தெளிந்தது போலும். எங்கே! "வேலவரே உம்மைத் தேடி ஒரு மடந்தை" என்ற பாட் டைப் பாடு, கேட்கலாம்" என்றான். இவனது துர்வார்த்தை யைக் கேட்டு தர்ம தேவதையின் மனம் பதறிற்றோ என்னும் படி திடீரென மின்சார விளக்குகளெல்லா மணைந்தன. ஊர் முழுதும் இருள் சூழ்ந்து கொண்டது. மங்கிய மண்ணெண்ணெய் விளக்குகள் இரண்டொன்று மட்டும் அவ்வீட்டில் எரிந்ததால் பிறகு அங்கு நடப்பதொன்றும் எனக்குத் தெரியவில்லை. மனோகரியிடம் அவன் காமா வேசத்துடன் பேசும் பேச்சுக்கள் மட்டும் என் செவிகளில் வீழ்ந்ததால் என் மனம் துடி துடித்தது. அவனைக் குத்திக்

கொலை செய்து விட்டால் என்ன! என்ற ஆத்திரமும் யோசனையும் உண்டாயிற்று. மனதைச் சற்று சாந்தப் படுத்திக் கொண்டேன். அச்சமயம் காற்று வீசத் தொடங் கியதால் மரத்தைவிட்டுக் கீழிறங்கி அவ்வீட்டின் மதிற் சுவரோரமாக நின்று கவனித்தேன். அடியிற்கண்ட சம் பாஷணை என் செவியிற்பட்டது:—

கார்த்திகேயன்:—என்ன மனோகரி? இன்று நீ பாடிக் கொண்டிருந்தது கண்டு நீ என் வழிக்கு வந்துவிட்டா யென்றல்லவோ நினைத்தேன்!

மனோகரி:—அட பாவி! சண்டாளா!! பிறன் மனைவிக்குத் தவறிழைக்க வெண்ணும் பெரும் பாதகா! உண்ட வீட்டுக் கிரண்டகம் செய்யும் துரோகி!!

கார்:—உம்! இக்காலத்தில் நடைபெருததை நான் சொல்ல வில்லை. விபசாரமென்பது தற்காலத்தில் கண் ணியத் தொழிலாகவே சிலரால் கருதப்படுகின்றது. உன் கணவனே சம்மதிக்கும்போது உனக்கென்ன?

மனோ:—நியாயமானதைக் கேட்பேனன்றி கெட்ட வழியில் கணவனுக்கும் கீழ்ப்படியவே மாட்டேன். ஏன் வீணாக என் வயற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளு கிருய்?

கார்:—இக் குடும்பமே என்னால் நடை பெறுகிறது. நீ கட்டி யிருக்கும் சேலையும் உன் கணவனும் மகனும் உண் ணும் உணவும் நான் அளிப்பவை. என்னிடமே உன் கைவரிசையைக் காட்டி விடாதே!

மனோ:—என் கணவன் சொத்தை எல்லாம் அழித்தவன் நீ! அபகரித்தவன் நீ! அவனுக்குக் குடிப்பழக்கம் செய்து வைத்தவன் நீ! உன் மனைவியை ஊராருக்கு

விட்டு இவ்வளவு பொருளையும் சேர்த்திருப்பதை இவ்வூர் முழுதும் அறியும்! உன் துர்ப்புத்தியை என் கணவன் கண்டு கொள்ளவில்லை. என் குடும்பத்திற்கு நீ ஒரு சனியனாக ஏற்பட்டிருக்கிறாய்!! நீ காசு சேர்த்த பெருமையை என்னிடமா காண்பிக்கிறாய்!!

கார்:—நீ உத்தம பத்தினியோ? ஊரிலிருக்கும்பொழுதும் அத்தை மகனுடன் அந்தரங்க நட்புக்கொண்டிருந் தாய்! இன்று மாலைகூட நீங்களிருவரும் சந்தித்ததை நான் மறைவிலிருந்து கவனித்தேனே. அவன்மேல் சாய்ந்துகொண்டு ஆனந்தமாகப் பேசினாயே! உமாபதி வரட்டும்! இதைச்சொல்லி உன் உயிரை வாங்கச் செய்கிறேன்!!

இவ்வார்த்தை என் செவியிற் பட்டதும் என் தலை கிறு கிறுவெனச் சுழன்றது! மனங்குழம்பிற்று! நெஞ்சு படபடத்தது! உடல் நடுங்கிற்று! வெறியனைப்போல் விழித்தேன்! பித்துப் பிடித்தவன் போல் உலாவினேன்! மேல் செய்யவேண்டியது என்ன வென்பதை நான் ஒருவாறு தீர்மானிக்க ஒரு மணி நேரமாயிற்று. அச்சமயம் தோட்டக்காரன் வெளியில் வந்தான். அவனை யழைத்து அவனிடம் இரண்டு ரூபா யளித்தேன். அவனிடம் நான் தெரிந்துகொள்ள வேண்டியதை விவரமாகத் தெரிந்து கொண்டேன். வேறு வழியில்லை என்பதாக மனதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

---

## 23-வது அதிகாரம்

அதிகாலை ஐந்து மணிக்கு நான் மனத்தெளிவை யடைந்ததும் 'நான் எங்கிருக்கிறேன்' என்று கவனிக்கலானேன்.

சமுத்திரத்தின் மெல்லிய அலைச் சத்தத்துடன் குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. "கோம காட மாரு" என்ற ஜப்பான் கப்பல் கரையோரத்தில் நின்றது. அதன் சர்வாதிகாரி என்னைக் கண்டதும் காலை வந்தனமளித்து க்ஷேமம் விசாரித்தார். எனக்கு தேக சுகமில்லை என்றும் கப்பல் பிரயாணம் செய்தால் நன்மை யென்றும் சொன்னேன். கப்பல் புறப்படும் சமயமாதலால் உடனே கப்பலேறும்படி அவர் எனக்கு தெரிவித்து என் பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். கப்பல் புறப்பட்ட ஒன்பதாவது நாள் ஷாங்காய் துறைமுகம் சேர்ந்தேன். கப்பற் பிரயாணம் மெத்த மனோகரமாக விருந்தும் என் மனம் மட்டும் சாந்தியற்றுத் தவி தவித்துக் கொண்டிருந்தது. சைனாவின் முக்கியத் துறைமுகப்பட்டினமாகிய ஷாங்காய் நகரத்தின் தோற்றம் என் மனக் கவலையைச் சிறிது தணித்தது. எனது ஐரோப்பிய நண்பன் வீட்டைத் தேடிச் சென்று அவனுடன் தங்கினேன். நான் மன வேதனையுடன் இருப்பதறிந்து என்னைப் பரிபூரணமாக ஓய்வெடுக்கும்படிச் செய்தான். சாப்பிடுவதும் தூங்குவதுமாக நான்கு நாட்களைக் கழித்தேன். ஐந்தாவது நாள் நான் சற்று மனந்தெளிந்திருப்பதைக் கண்டு என் நண்பன் என்னிடம் ஒரு சமாச்சாரப் பத்திரிகையை யளித்தான். நான் ஊரைவிட்டுவந்து இரண்டு வாரங்களாய் விட்டமையால் அவ்விடத்தியச் செய்திகளை யறியவேண்டுமென்ற அவா என்னைத் தூண்டலாயிற்று. பத்திரிகையைப் பிரித்ததும் அது என் ஊரில் வெளியாகும் வாரப்பத்திரிகையாக விருந்தது. பக்கங்களைப் புறட்டிக்கொண்டு போனேன். 5-வது பக்கத்தில் அடியிற்கண்ட சமாச்சாரம் கொட்டை

போன்ற பெரிய எழுத்தில் தலைப்பெயரிட்டு எழுதப்பட்டிருந்தது :—

## இரட்டைக் கொலை.

### சானுதாங் தோட்டத்தில் நடந்த விபரீதச் செயல்.

### போலீச்காரர் தீவிரமாக விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கார்த்திகேயன் என்பவரும் பார்வதி என்ற பெண்ணும்
கொலை செய்யப்பட்டு இருந்ததால் அச்சமயம்
வீட்டில் இருந்த உமாபதி என்பவரைப்
போலீசார் கைது செய்து ஜயிலில்
அடைத்திருக்கிறார்கள். பார்வதி
உமாபதியின் மனைவி என்
றும் கார்த்திகேயன்
அவர் நண்பன்
என்றும் சொல்
லப்படுகிறது.

இதைப் படித்ததும் எனக்குச் சிறிது நேரம் ஒன்றும் விளங்கவே இல்லை. தலைசுழல வாரம்பித்தது! கண்கள் இருண்டன! மெய்சோர்வுற்றது! மனந்தடுமாறிற்று! உடல் நடுங்கியது! மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது! சொல்லொணுத்துயரில் அழுந்தினேன்! ஏன்? என் அருமை மனோகரி கொலை செய்யப்பட்டபின் நான் உயிர் வாழ்தல் எங்ஙனம்?

பத்திரிகையில் 'பார்வதி' என்று இருந்ததால் முதன் முதலில் எனக்கு விளங்காமலிருந்தது. வேலைக்காரியின் பெயரோ வென எண்ணினேன். மனோகரியை உமாபதிக்குக் கலியாணம் முடித்ததிலிருந்து அவளுக்குப் பார்வதி என்று பெயரிடப்பட்டது. சிறுவயதில் அவளை நாங்கள்

"மன்னு" என்று செல்வப்பெயரில் அழைப்பது வழக்கம். என்னையும் அவள் தாயையும் தவிர்த்து மற்றவர்களெல்லாம் மனோகரியைப் பார்வதி என்றே அழைப்பார்கள். பலருக்கு அவள் பெயர் மனோகரி என்பதே தெரியாது. கொலை செய்யப்பட்டு இறந்தவள் மனோகரி என்று நான் அறிந்த பின் என் மனம் சகிக்குமா? இதே சமயத்தில் மாலதி எழுதியுள்ள கடிதமொன்றும் கிடைத்தது. நான் பல சமயம் திடீரெனப் புறப்பட்டு இங்குவருவது வழக்கமானதால் மாலதி எனக்கு இவ்விலாசமிட்டுக் கடிதமெழுதியிருந்தாள். அதில்,

"என் பிரியமுள்ள அண்ணா,

நீ திடீரென ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாது சென்ற காரணமென்ன? நானும் மாதவனும் சௌக்கியம். உன் ரோஜாச் செடிகளை வாடவிடாமல் தண்ணீர்விட்டு வருகிறேன். நீ இல்லாததால் நான் வெளியே செல்வதே இல்லை. இவ்வூர்ப் பத்திரிகையில் ஒருவன் படம் வெளியாயிருக்கிறது. அவன் தன் மனைவியைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டு ஜயிலில் அடைக்கப்பட்டிருக்கிறான். நீ எனக்கு நல்லகாலம் வருமென்று சொல்லிக்கொண்டிருப்பாயே. என்னை மோசம் செய்தவன் யாரெனத் தெரிந்து கொள்ள நீ முயற்சித்தாயல்லவா? அவனே இவன்! நீ ஒரு கால் ஜப்பான் சென்று இருந்தால் என்ன செய்கிறதென்று அவ் விலாசத்திற்கும் ஒரு கடித மெழுதும்படி மாதவன் யோசனை கூறியதால் அங்கும் எழுதியிருக்கிறேன். 'என்னை அபவாதத்திற்காளாக்கியவன் அகப்பட்டுக் கொண்டான்! உனக்கும் இச்செய்தி பெருமகிழ்ச்சி தருமென்ற காரணத்தால் இக்கடித மெழுதலானேன், உடனே புறப்படு. நீ புறப்பட்டதற்குத் தந்திகொடு" என்று எழுதப்பட்டிருந்தது.

## 24-வது அதிகாரம்

உமாபதிக்கு நான் வாதிக்கப் போவதாகச் சிறைச்சாலை அதிகாரியிடம் தெரிவித்தேன். அவனைத் தனியிற் கண்டு பேசுவதற்கு அனுமதியும் பெற்றேன். என்னைக் கண்டதும் உமாபதி என்னைக் கட்டிக்கொண்டு ஓவென அலறி மூர்ச்சையானான்.

மெத்த சிரமப்பட்டு அவனைத் தெளிய வைத்தேன். "ஐயோ! என் பார்வதியை யிழந்து விட்டேனே! இனி அவளை எங்கு காண்பேன்! என் குழந்தை அனாதையாகி விட்டானே! என் கண்மணியைக் கொலை செய்த பாவி யாரென்று தெரியவில்லையே!" என்று அலறினான். 'ஓகோ! அவளைக் கொலை செய்ததுமன்றி நம்மிடம் இவ்வாறும் ஜாலங்காட்டுகிறானே' என்று எனக்குக் கோபமுண்டாயிற்று.

'ஆனால், நீ அவளைக் கொலை செய்ததில்லை என்று சொல்கிறாய்?' என்று அவனை அதட்டிக் கேட்டேன். "ஐயோ! நீயுமா என்னைச் சந்தேகிக்கிறாய். நான் அவ்வாறு செய்வேனா! ஏதோ குடிவெறியால் சில சமயம் நான் அவளை அடித்துத் துன்புறுத்தியதுண்டு. ஆனால் அவளிடத்தில் எனக்களவுகடந்த காதலும் அன்பும் உண்டென்பதை நீ அறியமாட்டாய். அவள் இதை நன்கறிந்திருந்தாள். இதனாற்றான் என்னை விட்டு வந்து விடும்படி நீ அழைத்ததற்கும் அவள் அதை மறுத்து என்னுடனேயே இருந்து வந்தாள். கணவன் மனைவிக்குள் ஆழ்ந்த பற்றுதல் இருக்குமாயின் அதைக் கலைக்க ஒருவராலுமே முடியாது. அவர்களிடையே குடும்பவாழ்க்கையிற் பலவித மனஸ்தாபங்களிருப்பினும் மெய்யன்புடன் ஒருவரை ஒருவர் உற்றுநோக்கி ஒரு மனப்பட்டு உள்ளங்கசியுங்கால் மற்ற மாறுபாடுகளெல்லாம்

மாயமாய் மறைந்து விடுதல் உலக வழக்கம். அவளை நான் மெய்யன்புடன் காதலிக்கிறேன் என்பதை அவள் அறிந்து கொண்டு குடிவெறியால் நான் எவ்வளவு துன்புறுத்திய போதிலும் அதை மனதில் வைக்காது என்னை நேசித்து வந்தாளே! பாவி கார்த்திகேயன் எனக்கு ஏழரை நாட்டுச் சனியனாக வந்து தோன்றினானே! அவனை நம்பி நான் மோசம்போனேனே! எனக்கு இச்சமயம் தோன்றும் யோசனைகள் ஒரு மாதத்திற்கு முன் தோன்றியிருப்பின் நான் எவ்வளவோ உன்னத நிலையை அடைந்திருப்பேனே! கார்த்திகேயன் செத்தான், சனி தொலைந்தது. ஆனால், ஆனால் என் கண்மணியைக் கொலை செய்த பாவி யாரென்று எனக்குத் தெரியவில்லையே!" என்று கூறி உமாபதி இளம்பிள்ளைபோல் வாய்விட்டு அலறினான்; தேம்பியழுதான்; தலையில் அடித்துக்கொண்டான். இதைக்கண்டு என் மனம் சற்று இளக வாரம்பித்தது. "உமாபதி! நீ உன் மனைவியைக் கொல்லவில்லையா? உண்மைதானா? ஆனால் மனோகரி இறந்ததெப்படி? உண்மையை ஒளிக்காது என்னிடம் எல்லாவற்றையும் தெரிவி. நான் உன்னை இக்குற்றத்தினின்றும் தப்புவித்துக் காப்பாற்றுவதற்காகவே வந்திருக்கிறேன். நீ என்னை நம்பு. ஒருகால் நீ குற்றவாளியாயிருந்தாலும் பாதகமில்லை! நான் கடவுள் சாக்ஷியாக உன்னை மீட்பதற்கே வந்திருக்கிறேன். இது சத்தியம். நான் சொன்னசொல் தவறவே மாட்டேன். சிறிதும் என்மீது சந்தேகப்படாதே. உன் கையாலேயே மனைவியைக் கொன்றிருந்த போதிலும் அதை என்னிடம் ஒளிக்காதே. இறந்தவள் மீண்டும் உயிர்பெற்று வரப்போவதில்லை. கடவுள்மீது ஆணையிட்டு நீ நடந்ததை நடந்தவாறு கூறிவிடு! உன்னை இச்சிறையிலிருந்து மீட்டு

இனியாவது நீ நெறியுடனும் மதிப்புடனும் வாழக்கூடிய வழியைக் காட்டுகிறேன். உன் மானம் என்னுடையதன்றி வேறன்று. கெட்ட சகவாசத்தால் கெட்டுவிட்டோம் என்பதை நீ நன்கறிந்து விட்டதால் உன்னிடம் எனக்கு அளவு கடந்த அன்பு ஏற்பட்டிருக்கிறது. நீ இனி என்னை உன் உடன்பிறந்தவனாக எண்ணு! இனி மனோகரியைப்பற்றி நினைப்பது வீண். உண்மையை என்னிடமுரைத்து நான் கூறும் நிபந்தனைக்கு நீ முழுமனதுடன் கட்டுப்படுவாயாகில் நீ இனியாவது சிறப்பாக வாழலாம். சீக்கிரம் உண்மையைக் கூறு" என்று உமாபதியை வினவினேன். அகத்தினழகு முகத்தில் தெரியுமன்றோ! அவன் என் கைகளைப் பிடித்துக்கொண்டு "நீதான் எனக்கு குரு. நீயே என் தெய்வம். நான் தீநெறியுள்ளவனாயினும் என் நெஞ்சில் கல்மஷமே கிடையாது. மனோகரியை நான் முழு மனதுடன் காதலித்தேன். ஆனால் என் காதலுக்கு இடைஞ்சலாக நீ வந்து முளைத்தாயல்லவா? அவளை உனக்கு அளிக்காமலிருக்கும் பொருட்டு நான் செய்த சூழ்ச்சியை இன்று உனக்குச் சொல்லாது ஒளிப்பேனாயின் என் பாவம் தொலையாது. 'பெண்டாட்டியைக் கொலைசெய்து தூக்கில் மாண்டான்' என்ற அவசொல்லை யேற்படுத்தாது என்னை இக் கஷ்டத்திலிருந்தும் காக்க வந்திருக்கும் நீ கடவுள் உருவமன்றி வேறில்லை. விஷ்ணுபுரத்திலிருந்த வீரபத்திரன் மகள் மாலதியை மணந்துகொள்வதாகக் கூறி அவளை வேறிடத்தில் ஒளியவைத்து அப்பழியை உன்மீது சுமற்றினது நானே! மாறு பெயர் வைத்து நான் எழுதிய கடிதத்தை நம்பி உன்னை வெறுத்துத்தள்ளி உன் மாமி எனக்கு மனோகரியை மணம் முடித்தாள். உன்னை மோசம் செய்து நான் அவளை மணந்தேன்! அவள் என்னை மோசம்

செய்து மாண்டுவிட்டாள்! நான் செய்த சூழ்ச்சியால் நீ நித்தியப் பிரம்மச்சாரியானாய். 'தன் வினை தன்னைக் கொல்லும்' என்றபடி நான் இப்பொழுது கொலைகாரனெனப் பழி பூண்டிருக்கிறேன்" என்றான்.

இதுவரை மெத்தப் பொறுமையுடனிருந்து வந்த என் மனம் இச் சொல்லைக் கேட்டதும் துடி துடிக்க வாரம்பித்தது. என் வயிறு பற்றி எரிந்தது. நான் உமாபதியுடன் பேசக் கூடிய நேரம் கொஞ்சமே. இதனால் ஒருவாறு என் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "பிறகு அப் பெண்ணை என்ன செய்தாய்?" என்று கேட்டேன். "ஐயோ! அதை எனவென்று சொல்வேன். அப்பேதைப் பெண்ணின் கற்பை யழித்து அவளிடம் என் பெயரைத் தெரிவிக்காது ஏமாற்றி வெளியிலனுப்பிவிட்டேன். இம்மட்டோடு நான் நிற்கவில்லை. கார்த்திகேயன் என்னை இங்கு வரும்படி எழுதியிருந்தான். ஊரில் கடன்காரர்கள் என்னைச் சிறைச்சாலையிலடைக்க யத்தனம் செய்ததால் நான் தலை தப்பித்துக் கொண்டு இங்கு வரும்பொருட்டு சென்னைக்கு வந்தேன். அங்கு மாலதி என் கண்களில் தென்பட்டாள். அவள் என்னைக் கண்டதும் "பாபி! என்னைக் கெடுத்துத் தெருவில் விட்ட பாதகா! உனக்குக் கண்கள் தெரிகின்றதே? கடவுள் உன் அகம்பாவத்தை அடக்கமாட்டாரா" என்று பலவாறு என்னைத் திட்டிக் கொட்டி சபித்தாள். அவள் அங்கு உபாத்தித் தொழிலி லிருந்ததால் உடம்பில் நகைகளும், கையிற் பணமும் வைத்திருப்பாளென்று ஊகித்து அவளை மறுபடியும் ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றிக் கப்பலேற்றி இவ்வூருக்கு அழைத்து வந்தேன். பிரயாண காலத்தில் திருடர் பயமென்ற காரணங்காட்டி அவள் நகைகள் கையிலுள்ள ரொக்கம் இவைகளைக் கப்பலேறும்போதே

என் கைவசப்படுத்திக்கொண்டு விட்டேன். கப்பலடிக்குக் கார்த்திகேயன் வந்திருந்தான். அவனுக்கு மாலதிமேல் ஆசையுண்டாயிற்று. நான் மனோகரியை மணந்திருப்பதாக அவளிடம் சொல்லியிருந்தால் மாலதி என்னுடன் வந்திருக்க மாட்டாள். அவள் பொருளும் எனக்குக் கிடைக்காதன்றோ. மாலதியைக் கார்த்திகேயனுடன் வாழும்படி நான் வற்புறுத்தினேன். நாங்கள் மூவரும் ஓர் ஜப்பான்காரன் ஹோட்டலுக்குச் சென்றோம். மாலதி நான் சொன்னதை ஒப்புக்கொண்டவள்போல் காணப்பட்டாள். நானும் கார்த்திகேயனும் மாலதியுடன் அங்கு சிலநாள் தங்குவதாகத் தீர்மானித்தோம். நான் தூங்கி யெழுந்து பார்க்கும்போது மாலதி காணப்படவில்லை. கார்த்திகேயனை விசாரித்ததில் அவனும் தனக்குத் தெரியாதென்றான். நாங்களிருவரும் இரண்டு நாட்கள் முழுதும் இந்நகரைச் சுற்றி மாலதியைத் தேடியலைந்தோம். அவள் எங்களிடமகப்படாது மாயமாக மறைந்துவிட்டாள். அடடா! நான் மகாபாபி! சண்டாளன்! துரோகி! நான் செய்த தவறுகள் என்னை வதைக்கின்றன. சிறைச்சாலையிலிருப்பதால் என் குடிவழக்கம் நின்றுவிட்டது. இப்பொழுதே எனக்கு நல்லறிவு உண்டாகின்றது. அடடா! நான் சிநேகத் துரோகி! பந்துத்துரோகி!" என்று கூறி சிறு பிள்ளைபோல விம்மி விம்மி யழுதான். "நீ இப்பொழுது மாலதியைக் கண்டால் என்ன சொல்லுவாய்" என்றேன். "'உன்னை நான் வஞ்சித்து ஆசைகாட்டி மோசஞ்செய்ததால் இக்கதிக்காளானேன், கடவுள் என்னைச் சரியானபடி தண்டித்து விட்டார்' என்று அவளிடம் மன்னிப்பைக் கோறுவேன்" என்றான். உமாபதி விசனத்தாலும் மனவேதனையாலும் பீடிக்கப்பட்டுத் தான் சொல்லுவதைக் கோர்வையாக எடுத்

துரைக்கமாட்டாது திண்டாடினன். நடுவில் அழுவதும் என்செய்வேன் என்று புலம்புவதுமாக அவன் நடந்தவை களைச் சொல்லி முடித்தான். அவனை நான் வலுவிற் பல விதக்கேள்விகள் கேட்டு ஒருவாறு நடந்தவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டியதாயிற்று. தாறுமாருக அவன் சொல்லி வந்ததிலிருந்து அவன் கொலை நடந்தவன்று ஊரிலில்லை என்றும், அன்றிரவு இரண்டு மணிக்கு ரயில்விட்டிறங்கி வீடுசேர்ந்தான் என்றும், வேலைக்காரி தெருக் கதவைத் திறந்ததாயும், உமாபதி சிறிதளவு குடித்துவிட்டுத் மனோகரியைப் பன்முறை கூவியழைத்ததாயும், அவள் மறு மொழி யளிக்காதிருக்கவே கார்த்திகேயன் படுத்திருந்த அறைக்குட்ச் சென்று அவனை யெழுப்பும்போது கார்த்தி கேயன் பிணமாகவிருந்தானென்றும், அங்கிருந்து தள்ளா டிக்கொண்டு மனோகரியின் அறைக்குப்போய் அவளை விசா ரிக்கக் குனிந்தபோது அவளும் ரத்தவெள்ளத்தில் தோய்ந்து கிடந்தாளென்றும், அவள்மீதுள்ள வாஞ்சை யால் அவன் அவள்மீது விழுந்து அழுது எழுந்ததில் உடையிலும் கையிலும் ரத்தக்கரை ஏற்பட்டுவிட்டதாயும், "ஆகா! இப்படியா நடந்தது! என்னாலானவரை நான் ஒருகை பார்க்காமலிருப்பதில்லை" என்று உமாபதி சொல்லும் சமயம் வேலைக்காரி பாலைக் கையிற் பிடித்தவண்ணம் அவ்வறையில் நுழைந்ததாயும், அவள் இக்கோரக் காட்சியைக்கண்டு 'கொலை! கொலை!!' என்று கூச்சலிட்டதாயும், இதுகேட் டுத் தெருவில் ரோந்து சுற்றும் போலீஸ்காரன் சாளரத் தின் வழியே வீட்டுக்குள் குதித்துவந்து உமாபதியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஊதியதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்பட பலர் ஓடிவந்து அவனை விலங்கிட் டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்றார்கள்

என்றும், கொலையுண்ட சவங்கள் பரிசோதிக்கப்பட்டு வேறு திக்கில்லாததால் அனாதைப் பிணங்களாக அடக்கம் செய்யப்பட்டனவென்றும், குழந்தை ஞானாநந்தன்போலீஸ் கமிஷ்னரின் ஆதரவிலிருப்பதாயும், கொலைநடந்த மூன்று தினங்களுக்குப் பிறகு மாதவன் உமாபதியை சிறைச்சாலையிற் கண்டு பேசியதாயும் அறிந்துகொண்டேன். "நீ சற்றும் அஞ்சவேண்டாம். உன்னை இக்குற்றத்திலிருந்து விடுதலை செய்வித்தல் என் பொறுப்பு. ஆனால் — நான் உன்னை விடுவிப்பேனானால் — உன்னைக் கொலைக்குற்றத்திலிருந்து மீட்பேனானால் எனக்கு நீ செய்யவிருக்கும் பிரதியுபகாரம் ஒன்றுண்டு" என்றேன். "ஐயோ! பாவியாகிய என்னால் உனக்காகவேண்டியதென்ன விருக்கிறது! நீயோ நித்தியப் பிரம்மசாரி. லட்சாதிபதி. நல்லொழுக்கமுள்ளவன். நாடு முழுதும் புகழ்பெற்றவன். நீயும் என்னை இவ்வாறு பரிகசிக்கலாமா?" என்றழுதான் உமாபதி. "உமாபதீ! உன்னை நான் புண்ணிற் கோலிடுவதுபோல் பரிகசிப்பேனா! ஒருகாலுமில்லை. நீ சிறைவிட்டு மீண்டதும் மறு கலியாணம் செய்துகொள்ளவேண்டும். என்ன? நான் சொல்வது விளங்கிற்றா" என்றேன். "மனோகரியை இழந்தபின் மீண்டும் மணமா? கூடாது. முடியாது! முடியவே முடியாது, ஒருகாலும் முடியாது. மனோகரிமீது எனக்கேற்பட்டிருந்த ஆசையாற்றானே நிரபராதியாகிய உன்மீது அபவாதமேற்படுத்தி அவளை நான் மணந்து உன் வாழ்க்கையை வேறுடன் கெடுத்து மடித்தேன். நீ மனோகரிமீது வைத்திருந்தது அன்பு! ஆனால், நான் அவளிடமுற்றிருந்தது காதல்! அவள் உனக்கு மாமன் மகள். எனக்கு உயிர்க்காதலி. அவளை யிழந்தபின் நான் அரைக்கணமும் உயிர்தரியேன். கொலைக்குற்றத்திலகப்படுவேனாயின் என் குலத்திற்கும்

குழந்தைக்கும் மாருத அவமதிப்பு ஏற்பட்டுவிடுமே என்ற காரணங்கொண்டு நான் விடுதலையடைய விரும்புவதன்றி மனேகரியை இழந்து, அவள் கொலை செய்யப்பட்டிருப்பதைக்கண்டு இனியும் உயிர்வாழ வேண்டுமோ? ஆனல் நான் இனி உயிர்த்திருப்பேனயின், சிறை நின்றும் மீண்டு வருவேனயின் என் மனேகரியை—என் அன்பிற்கிருப்பிடமாகிய மனேகரியை—என் பிராண நாயகியாகிய மனேகரியைக் கொன்ற மகாபாதகனைக் கண்டு பிடித்தே தீருவேன்" என்ருன். 'கார்த்திகேயனைப்பற்றி என்ன நினைக்கிருய்' என்றேன். "அவன் குடியன், வெறியன், சூதாட்டத்திற் கைதேர்ந்தவனனதால் அவனுக்குப் பல விரோதிகள் இருப்பார்கள். அவன் தனது சட்டைப்பையிலும் தலையணைக்கு அடியிலும் கட்டுக் கட்டாக நோட்டுக்கள் வைத்திருப்பது வழக்கம். இது கண்டு திருடன் கொன்றிருக்கலாம்" என்ருன். 'அவனே மனேகரியைக் கொன்றிருந்தால்' என்றேன். 'ஆம்! நானும் அவ்வாறே சந்தேகித்த துண்டு. ஆனல் இதிலொரு ஆச்சரியமென்னவெனில் மனேகரியும், கார்த்திகேயனும் ஒரே சமயத்தில் குத்தப்பட்டிருக்கிருர்கள். நான் பூஞ்செடி கொடிகளை வெட்டிச் சீர்படுத்தும் நிமித்தம் வாங்கி வைத்திருந்த கத்தியாலேயே இவ்விரு கொலைகளும் நடைபெற்றிருக்கின்றன. எது முந்தி, எது பிந்தி என்று சொல்வது முடியாத காரியம் என்று சவத்தைப் பரிசோதித்தவர் கூறியிருக்கிருர்' என்ருன். "உன் வீட்டில் காவலாள் கிடையாதா" என்றேன். "அதையேன் கேட்கிருய்! தோட்டக்காரக் கிழவன் வீட்டோடு கிடப்பானே! அன்றிரவில் அவன் மிதம் மிஞ்சிக் குடித்து வெறித்திருந்ததால் தோட்டத்திலுள்ள பெரிய பள்ளத்தில் உருண்டு விழுந்து மாண்டு கிடந்தானும்?" என்ருன். "சரி!

எது எப்படியானாலும் சரி. உன்னை இப்பழியிலிருந்து காப்பாற்றுவதால் என்மீதுனக்கு வாஞ்சை யேற்படு மன்றோ. அதற்குக் கைம்மாறு நீ மாலதியை மணந்து கொள்ளவேண்டியதே! இல்லையெனில் என் மனம் சாந்தப் படாது'' என்றேன்.

“என் நண்பா! காதலிலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே இன்பம் எனப்படும். உனக்கு இதுபற்றி ஒன்றுமே தெரிய இடமில்லை. மனோகரியை இழந்த பின் மாலதியை நான் விரும்புதல் முடியாத காரியம். மாலதியிடம் எனக்கு விருப்பமுண்டாயின் அவளை இவ்வாறு ஏமாற்றுவேனா? நீயே யோசித்துப் பார்'' என்றான். ‘உமாபதி! மனோகரி என் மாமன் மகளாகையால் அவளை நீ அடித்துத் துன்புறுத் தாமல் இருக்கவேண்டுமென்றும் அவள் சுகமாக வாழ வேண்டுமென்றும் எண்ணினேன். அதற்காக உன் வாயால் வசைமொழிகளையும் பெற்றுக்கொண்டேன். ஆனால் மால தியை என் உடன்பிறப்பாக ஏற்று ஒரு சிறு குழவியை அதன் தாய் போற்றி வளர்ப்பதுபோல நான்கு வருட கால மாக அவளை என் வீட்டில் வைத்து ஆதரித்து வருகிறேன். அவளை நீ ஏற்றுக்கொண்டால் மனோகரியைப் பறிகொடுத்த துக்கத்தை சற்று மறக்க இடமுண்டு. நீ என்மீது கூறிய பழியையும் மறப்பேன். அதற்காக உன்னையும் மன்னித்து விடுவேன். என் குழந்தைபோன்ற மாலதியை நீ மணந்து கொள்ளத்தான்வேண்டும்’ என்று அவன் காலைப் பிடித்துக் கொண்டேன். “ஐயோ! எழுந்திரு! எழுந்திரு!'' என்று உமாபதி என்னைத் தூக்கி எடுத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டு “மாலதி உன் போஷணையிலிருப்பாளாயின்— அவளை நான் மணப்பதால் உன் மனங்குளிருமாயின்—உன் மீது நான் சுமத்திய வீண் பழியை இதனால் நீ மறப்பதா

யின்—என்னை நீ முழு மனதுடன் மன்னிப்பதாயின்—நான் உன் சொல்லை மறுப்பேனே. மனோகரியை மதியீனத்தால் நான் சில சமயம் துன்புறுத்தி வந்ததையும், என்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருப்பதையும் நீ மனதில் வைக்காது என்னைக் காப்பாற்ற முற்பட்டிருக்கும் உன்னை நான் வேறு எவ்விதத்தில் தான் திருப்தி செய்விப்பது? நான் மாலதியை மணந்து அவளைச் செவ்வனே ஆதரித்தல் சத்தியம்" என்றான். 'நீ மனோகரியின் கணவன் என்பதை அறிவாளாயின் மாலதி உன்னை விவாகிக்க விரும்ப மாட்டாள். அவள் உயிருள்ளவரை இந்த ரகசியம் வெளியாகக்கூடாது' என்று உமாபதியை எச்சரித்துவிட்டு குழந்தை ஞானநந்தனை காணச் சென்றேன்

---

## 25-வது அதிகாரம்

மனோகரி இறந்து இரண்டு வருடங்களாயின. உமாபதியும் மாலதியும், நகமும் தசையும்போலும், கண்ணும் இமையும்போலும் மனமொத்து ஒருயிரும் ஈருடலுமாக வாழ்ந்து வந்தார்கள். சமூகச் சீர்த்திருத்தத்தில் ஒப்பற்றதாயுள்ள இவ்விவாகத்தை அனைவரும் ஒப்புக்கொண்டு மனமாரக் கொண்டாடினார்கள். மனோகரியைப்பற்றி மாலதி ஒன்றுமே தெரிந்து கொள்ளவில்லை. உமாபதி, பார்வதி என்பவளை மணந்திருந்ததாயும் அவள் கொலை செய்யப்பட்டு இறந்தாளென்றும் உமாபதியைக் கொலைக் குற்றத்திலிருந்து நான் தப்புவித்ததாயும் உமாபதிக்குத் தன்மேல் இரக்க முண்டாகித் தன்னை விவாகம் செய்து கொண்டதாகவும் இவ்வளவே மாலதிக்குத் தெரிந்த விஷயங்கள். எனது ஆஸ்தியில் பாதியை உமாபதிக்கும் மாலதிக்குமாக எழுதி மறுபாதியை எனக்குப்பின் குழந்தை ஞான

நந்தன் பெயருக்கு எழுதி வைத்து, அவனைப் படிப்பிக்கும் பொருட்டு கல்கத்தா சென்று விட்டேன். சிறுவன் ஞானநந்தன் ஏதேனும் மனோகரியைப்பற்றி பிரஸ்தாபித்து விட்டால் ரகசியம் வெளிப்பட்டு மாலதியின் மனமும் உடைந்து விடுமன்றோ?

நான் கல்கத்தா சென்ற புதிதில் 'குழந்தை ஞானநந்தனை யழைத்துவா' என்று மாலதி எழுதுவாள். 'அவ்வூர் வந்தால் அவன் தாயின் நினைவு அவனுக்கேற்படும்' என்று நான் சாக்குக் கூறுவேன். 'பணத்தட்டாக விருக்கும் இச் சமயம் நாம் வெளிநாடு சென்றால் நமது பாங்கு (Bank) முறிந்துவிடும். பிறகு ஆகட்டும்' என்று உமாபதி மாலதியை யடக்கி விடுவான். மனோகரியின் கொலையைப்பற்றி சிந்திப்பதிலேயே என் உடல் உருகிவிட்டது. இதைப்பற்றி எனக்கும் உமாபதிக்கும் இடையே ஓயாது கடிதப்போக்கு வரத்து நடந்து கொண்டிருந்தது. மனோகரியைக் கொன்றவனைக் கண்டுபிடிக்கும்படி போலீஸ் இலாகாவுக்கு எழுதி வந்ததுடன் அதனால் எவ்வளவு செலவானாலும் நான் அதை ஒப்புக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தேன். உமாபதியும் இதுவே காரணமாக அலைந்து கொண்டிருந்தான். குழந்தை ஞானநந்தன் தன் தாயை ஒரு விதத்திலும் ஒரு சமயத்திலும் நினைவுறா வண்ணம் அவனை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தேன்.

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே,"

என்றபடி என் மனக்கவலையையும் துன்பத்தையும் வெளிக் காட்டாது பார்ப்பவர்களுக்கு ஒரு மனிதனாகக் காணப் பட்டேன்.

ஒரு நாள் இரவில் ஞானநந்தனை அருகிற் படுக்க வைத்துக்கொண்டு நான் அன்றையப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் கார்த்திகேயன் கொலை சம்பந்தமாக ஒருவனைப் போலீஸார் கைதி செய்திருப்பதாகக் கண்டிருந்தது. இத்தனை நாட்களாக மறைந்து கிடந்த இச்செய்தி மறுபடியும் பிரஸ்தாபிக்கப்படுவதைக் கண்டதும் எனக்குப் பழைய நினைவுகள் படிபடியாக உதிக்கத் தொடங்கின. என் உடல் முழுதும் நடு நடுங்கிற்று. என்னெஞ்சம் படபடத்தது. ஒன்றும் விளங்காது படுக்கையில் விழுந்து கிடந்தேன். நான் சற்று கண் அயர்ந்திருந்தேனோ அல்லது உண்மையில் நடைபெற்றதோ இரண்டும் தெரியாது. என் மனோகரி என்முன் வந்து நின்றாள். அவள் மார்பிலிருந்து ரத்தவெள்ளம் பெருகிக்கொண்டிருந்தது. அவள் தலைக்கூந்தல் அவிழ்ந்து அலங்கோலமாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அவள் சிறிது நேரம் என்னை உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். அவள் கண்கள் நீரை வடித்தன. "அண்ணா! காலம் குறுகிவிட்டது. நீ என்ன செய்வாய்! குழந்தை ஞானநந்தனைக் காப்பாற்று. அவனுக்காக நீ உயிர்த் தரித்திரு. நீ எனக்கு நன்மையைத் தான் தேடினாய்! ஆனால் நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை. நான் போகிறேன். எனக்கு தாகமாயிருக்கிறது! உன் கையால் குளிர்ந்த தண்ணீர் கொடு!" என்று தன் கையை நீட்டினாள். 'இதோ வந்தேன்!' என்று அவசரமா யெழுந்தேன். அருகில் ஞானநந்தன் தவிர்த்து மற்றொருவரும் தென்படவில்லை. இத்தோற்றம் என்னை மெத்தக் கலவரப் படுத்திற்று. "காலம் குறுகிவிட்டது! காலம் குறுகி விட்டது!" என்று எனக்குட் பன்முறை சொல்லிக்கொண்டேன். அன்று முதல் நான் கண் அயர்ந்தால் மனோகரி என்

எதிரில் முற்கூறியபடி நிற்பதுபோலிருக்கும்! நான் இதை என் மனத்தோற்றமென்று தள்ளி வந்தேன். தாயற்ற சேய்போல என்று ஞானாநந்தன் உறக்கங்கொள்ளாதபடி அவனைக் கவனிப்பதிலும், உற்சாக மூட்டுவதிலும், பாடம் கற்பிப்பதிலும், வெளியே அழைத்துச் செல்வதிலும், வேடிக்கை விநோதங்களைக் காண்பிப்பதிலும் என் பொழுதைச் செலவிட்டுக் காலங்கழித்தேன்.

---

## 26-வது அதிகாரம்

கல்கத்தாவில் நான் இருந்த வீட்டுக்கெதிர்வீட்டில் ராம் மோஹன் என்ற டாக்டர் குடியிருந்தார். அவர் மனைவி மாலினியும் டாக்டர் பரிட்சையில் தேறியவர். இவர்களுக்கு ஆனந்தன் என்று பெயருள்ள அருமைப் புதல்வன் இருந்தான். ஆனந்தனும், ஞானாநந்தனும் சம வயதுள்ளவர்கள். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பிற் படித்து வந்தார்கள். ஞானாநந்தன் தாயில்லாப் பிள்ளை என்பதால் அவர்களுக்கு அவனிடம் அளவற்ற அன்பு உண்டாயிற்று. இச் சிறுவர் இருவரும் இணைபிரியாத் தோழர்களாயினர். ஆனந்தன் அனேகமாக ஞானாநந்தனுடன் என் வீட்டிலேயே தங்கியிருப்பான். ஞானாநந்தனைப் போலவே ஆனந்தனும் நற்குணம், அமைதி, அடக்கம், சுறுசுறுப்பு, படிப்பதில் சுயமான சிரத்தை, வடிவு, பொறுமை இவைகள் அமையப்பெற்றிருந்தான். மாலினியும் உத்தியோகம் வகித்திருந்ததால் அவ்வீடும் பெண்கள் நாதியற்ற வீடுபோன்றிருந்தது. டாக்டர் ராம் மோஹனும், மாலினியும் என்னிடமும், ஞானாநந்தனிடமும் மெத்த பட்சத்துடனிருந்தனர். அவர்களுக்கு முழுவிவரமும் தெரியாதென்றாலும், பார்

வதி என் மாமன் மகள் என்பதும், அவள் குழந்தை ஞானநந்தன் என்றும், பார்வதி கொலைசெய்யப்பட்டாளென்றும், உமாபதிக்கு என்னுடைய முயற்சியால் மாலதியுடன் மறு மணம் நடந்துள்ளதென்றும், ஞானநந்தன் ஏக்கம் பிடிக்காது இருக்கும்பொருட்டே நான் கல்கத்தா வந்திருப்பதாயும், எனக்கு ஏராளமான சொத்துக்கள் உள என்றும் நன்கறிந்திருந்தார்கள். ஓய்வு நேரங்களில் நாங்கள் மூவரும் உலகியல்பற்றிப் பேசிப் பொழுதைப் போக்குவோம். எங்களிடையே பழக்கத்தைக் காட்டிலும் எங்கள் வீட்டுச் சிறுவர்களிடையே உள்ள பழக்கம் நாளுக்கு நாள், நாழிகைக்கு நாழிகை அதிகரித்துக்கொண்டே வந்தது.

ஆனந்தனைச் சிறுவயதிலேயே மேல் நாட்டிற்கனுப்பி அவ்விடமே கல்வி பயிலச் செய்ய வேண்டுமென்று அவன் பெற்றோர்கள் கருதியிருந்தார்கள். அதற்கேற்ற பொருள் அவர்களிடமிருந்தும் சிறுவனைக் கூடவிருந்து கவனிப்பார் யார் என்ற காரணத்தால் பேசாதிருந்தார்கள். 'ஞானநந்தனையும்,ஆனந்தனையும் சேர்த்து அனுப்புவோமே?' என்று ராம் மோஹன் அடிக்கடி என்னிடம் பிரஸ்தாபித்து வந்தார். எனக்கும் இந்த யோசனை சிலாக்கியமாகத் தோன்றிற்று. நான் கல்கத்தாவிலிருப்பதால் மாலதி என்னையும் ஞானநந்தனையும் பார்க்க வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறாள். கண்காணுவிடம் சென்றுவிடின் கவலையில்லை. தவிர, ஞானநந்தனுக்கும் படிப்பு சீக்கிரம் முடியும். தக்க வயது வந்துவிட்டபின் அவனிடம் குடும்ப ரகசியத்தைத் தெரிவித்தல் சிலாக்கியமாயிருக்கும் என்ற எண்ணத்தால் ஞானநந்தனை அயல் நாடு அனுப்புவது எனக்கும் சம்மதமாயிருந்தது. இதைப்பற்றியே எப்பொழுதும் யோசித்து வந்தேன். கண்விழித்திருக்கும்போது ஞானநந்தனின் அயல்நாடுப்

பிரயாணத்தைப்பற்றி சிந்திப்பேன். என்னையுமறியாமல் என் கவலைகளையும் மீறி நான் கண்ணயர்வேனுயின் மனே கரியின் தோற்றம் என் முன் நிற்கும். நான் இவ்வாறு கலங்கிக் கொண்டிருக்கும்போது என் தோழன் மாதவன் ஓர் கடித மெழுதியிருந்தான். தனக்கு தேகசுகமில்லை என் றும், என்னைப் பிரிந்தது முதல் அங்கிருக்கவும் பிடிக்க வில்லையென்றும், தேகசுகத்தின் பொருட்டு மேனுட்டிற் சிறிதுகாலம் வசிக்கும்படி டாக்டர்கள் கூறுவதாயும், என் னையும் ஞானநந்தனையும் தன் கூடவரும்படிக்கும், மாலதி யும், உமாபதியும் சௌக்கிய மென்றும் எழுதிவிட்டு அதில் ஓர் தனிக் கடிதமும் வைத்திருந்தான். அதில் “ மனேகரி யின் கொலையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதே வேலையாக உமாபதி ஓடித்திரிகிறுன். இதற்கெனப் பல துப்பறிவோரை யும் நியமித்திருக்கிறுன். உன் கடிதமும் அடிக்கடிக் கிடைத் துக் கொண்டிருப்பதாகப் போலீஸ் கமிஷனர் சொல்லு கிறுர். இதுபற்றி அவ்விலாகாவே சுறுசுறுப்பாக வேலை செய்துவருகின்றது. ஆனல், இரண்டு நாட்களுக்கு முன் இன்ஸ்பெக்டர் நரேந்திரனைக் கண்டு பேசினேன். “நடந்தது நடந்துவிட்டது. வருடங்கள் மூன்றுமாயிற்று. இதைப்பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? எங்கள் இலா காவை நெருக்கிப் பிழிந்து எங்கள் ஆட்களைத் தூண்டு வதால் என்ன பயன்? உலகில் நடைபெறும் குற்றங் களெல்லாம் உள்ளபடியே வெளியாகின்றது என்பதும் ஒப் பத்தக்க தன்று! பெயருக்கும், புகழுக்கும், தயவுக்குமாக அனேகம் கேஸ்கள் சிருஷ்டிக்கப்படவும் கூடும்! குற்றவாளி குசாலாய்த்திரிவான். நிரபராதி தூக்குமேடையில் தொங்கு வான். நீதிபதியும் சந்தர்ப்பச் சாட்சியங்களைக் கண்டு ஏமார்ந்து விடுவது மியல்பு. இக் கொலையாளியைக் கண்டு

பிடிப்பவர்களுக்குப் பதினுயிரம் ரூபாயளிப்பதாக விளம்பர மிட்டிருக்கிறீர்கள். 'பணத்தாசை பொல்லாது, பழியொரு புறம் பண்டம் மறுபுறமென்று' எவனுவது குற்றவாளியாக வந்து சேருவான். என் அனுபவத்தில் எவ்வளவோ குற்றங்கள் கண்டு பிடிக்கப்படாமலும் கண்டு பிடிக்க முடியாமலும் இருந்ததுண்டு. செத்தவர்கள் உயிர்திரும்பி வரப்போவதில்லை. பழிக்குப் பழி வாங்குவதில் நாம் அடையும் லாபமென்ன? 'சென்றதை மறந்து விடுவதே சிறந்தது' என்று வேதாந்தம் பேசினுர். அவர் உனக்குப் புதியவரல்லர். உன்னுல் முன்னுக்கு வந்தவர். பேருப காரியாக விருக்கும் உன்னிடம் அளவற்ற அன்பும் பணிவும் கொண்டவர். இப்படிக்கெல்லாமிருக்க அவர் இக்காரியத்தில் இப்படி நினைப்பது யாது காரணமென்று எனக்கு விளங்க வில்லை. அவர் மனம் வைத்தால் நிச்சயம் கண்டு பிடிப்பார். இக்கேசில் வேலை செய்யும்படி மேலதிகாரி கட்டளையிடும் சமயங்களில் அவர் ஏதேனும் சாக்குப்போக்குக் காட்டித் தப்பித்துக் கொள்வதாயும் உமாபதி சொல்லுகிறுன். நீ எல்லாவற்றிற்கும் விவரமாக இதுபற்றி நரேந்திரனுக் கெழுது. 'ஆறினகஞ்சி பழங்கஞ்சி' என்று இப்போதே மூன்று வருடங்களாயின. ஒன்று, தக்கபடி வழிதேட வேண்டும்; அல்லது, இக்காரியத்தை விட்டொழித்து விடவேண்டும். இரண்டுமற்று, உமாபதி நேரத்திற்கு ஊண் உரக்கமற்று அலைவது எதற்கு? நீ கண்டிப்பா யெழுதினுல் நரேந்திரன் இக்காரியத்தில் முன் நின்று கண்டுபிடிப்பான். ஆனுல், நீயொரு வேதாந்தி! உனக்குமேல் உன் நண்பன் நரேந்திரன் பரம வேதாந்தியாகவிருக்கிறுன். அஞ்ஞானி களாகிய நானும் உமாபதியும் அலைந்து திரிகின்றேம்! நான் இவ்வாறு எழுதியதற்கு நீ மனம் வருந்தாதே.

எனக்கும் சிற்சில சமயங்களில் இக்காரியத்தை இத்துடன் மறந்துவிடுவதே மேலென்று தோற்றுகிறது'' என்று எழுதியிருந்தான். இதைப் படித்ததும் என் மனதில் பொறுக்கொணு வேதனையுண்டாயிற்று. பெருமூச்செறிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன். என்னையறியாது என் கண்களில் கண்ணீர் பெருகவாரம்பித்தது. இதற்கிடையே "மாமா, இன்று சுதேசிக் காட்சிசாலைக்குச் செல்லவேண்டாமா? மணி ஒன்பதடித்துவிட்டதே. ஆனந்தன், அவன் அம்மா அப்பா எல்லாரும் தயாராயிருக்கிறார்களே. வா மாமா, புறப்படு மாமா, என்ன மாமா. நீயே இப்படித்தான் மாமா!'' என்று ஆயிரம் மாமாவை அடுக்கியவண்ணம் மாடிப்படி ஏறிவந்தான். அவன் என்னருகில் வருமுன் கண்களைத் துடைத்து முகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள எனக்கு சாவகாசமிருந்தது. ஏனென்றால் மெத்தைப்படி உயரமானது. முதற்படியில் கால்வைத்ததிலிருந்தே ஞானநந்தன் பேசஆரம்பித்துக் கடைசிப் படிக்குள் முடித்துவிட்டான்.

---

## 27-வது அதிகாரம்

வங்காளிகளுக்கு நவராத்திரித் திருவிழா முக்கியப்பண்டிகையாகும். எங்கும் கோலாகலமும், அலங்காரமும், விருந்தளிப்பும், சக்தி பூசையும், தோரணமும், வரவேற்புமாகவிருக்கும். மாலினி அடிக்கடி 'என் தமையன் கெட்டிக்காரன்' என்று சொல்லிக்கொண்டிருப்பாள். ஆனால், அவன் யார்? எங்கிருக்கிறான், அவனுக்கு என்ன உத்தியோகம்'' என்று நான் கேட்டதில்லை. 'மனோகரியை கவனித்தாயிற்று! மாலதியை விசாரித்தாயிற்று! மாலினியை நெருங்கிப்

பழகினல் என்ன நேரிடுமோ ’ என்று அதிகம் விசாரியாம லிருந்தேன். எந்தப் புற்றில் எவ்விதப் பாம்பு இருக்குமோ! யார் கண்டார்கள். ஆனல் இந்தப் புத்தி ஆரம்பத்திலேயே எனக் குதித்திருக்குமாயின் நான் பதை பதைத்து காலங்கழிப்பதெப்படி? உண்மையை அறிந்தும் அறியாதவன்போல நான் திரியவதெப்படி? மனோகரியின் மரணத்தை எண்ணி எண்ணி நான் மனம் சிதைவதெப்படி? உளுத்த மரம்போல் நான் உருகுவதெப்படி? உலகம் என் சரித்திரத்தை அறிவதெப்படி? ஒவ்வொருவரும் பல சந்தர்ப்பங்களில் என்னை மேற்கோளாகக் காட்டிப் பேசுவதெப்படி? இதனுற்றான் ‘கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா’ என்று ஓர் முதுமொழி ஏற்பட்டுள்ளது போலும்!

விஜயதசமியன்று டாக்டர் ராம் மோஹனும், மாலினியும் என்னை விருந்துக்கழைத்திருந்தார்கள். நான் அதைத் தட்ட முடியாதவனுக அங்கு சென்றேன். குழந்தை ஞானநந்தனை அன்று குறிப்பிட்டழைக்க நேரிடவில்லை. ஏனெனில் அவன் அல்லும் பகலும் அவர்கள் வீட்டிலேயே இருப்பவனன்றோ? மக்களை ஓர் ஆடவன் எவ்வளவு தூரம் கவனிப்பினும் ஓர் பெண்பாலின் அன்பும், மேற்பார்வையும், ஆதரவும் அணைப்பும் அவர்களுக்கு இன்றியமையாதவைகளா யிருக்கின்றனவென்பதை நான் நன்கறிந்து கொண்டேன். மாலதியை ஞானநந்தனும் ஆனந்தனைப் போலவே ‘அம்மா!’ என அழைத்து வந்தான். மாலினி அவனை மடிமீதிருத்தி உச்சிமுகர்ந்து முத்திடுங்கால் ஞானநந்தன் முகம் புதிய ஒளிகொண்டு பிரகாசிக்கும். அவள் மடியைப் பிடித்திழுத்தும் தோட்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டும் ஞானநந்தன் குதிப்பான். மாலினி ஞானநந்

தனை மூத்த குழந்தையாகவும், ஆனந்தனை அடுத்த பிள்ளை யாகவும் கருதி வந்தாள். பெரியவர்களுக்கு உணவளிக்கும் முன் இச்சிறுவர்கள் உண்டு விளையாடிக்கொண்டிருந்தனர். பகல் பதினோரு மணி வண்டிக்கு மாலினியின் தமையன் வருவதாகத் தந்தி வந்ததால் ராம் மோஹன் அவனை யழைத்து வரும்பொருட்டு ரயிலடி சென்றார். 'ஊரிலிருந்து வருபவன் நம்மை யாரென்று விசாரிப்பானோ' என்று யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அன்று அவ ரவர்கள் வீடுகளிலும் பண்டிகையாகையால் விருந் தாளியாக நான் ஒருவனே இருந்தேன். 'இலை போட் டாயிற்று! எழுந்திரு' என்று ராம் மோஹன் என்னை யழைத்துச் சென்றார். சாப்பாட்டறைக்குச் சென்றதும் "ஹல்லோ! நீயா! நீ இங்குதானிருக்கிறாயா! இங்கு உன்னைச் சந்திப்பேன் என்று நான் கனவிலும் நினைத்திருக் கவில்லையே! எனக்கு அன்னமிட்டு ஆதரித்தவள்ளலை நான் இன்று நேரிற்காண என்ன தவமியற்றினேனோ தெரியவில்லையே! அம்மா, மாலினி இவர் யார் தெரியுமா! எனக்கு உயிர்போன்றவர்! சோற்றுப் பிச்சையளித்தவர்! என் மானத்தைக் காத்தவர்! பிரபுவென்றாலும், ஒழுக்கத் திற் சிறந்தவரென்றாலும், சமூக ஊழியரென்றாலும், தன் னலம் மறந்தவரென்றாலும், ஜனோபகாரியென்றாலும், சாந்த குணமுள்ளவரென்றாலும், தேசாபிமானியென்றா லும், தலைவர் என்றாலும், பெருந்தியாகி யென்றாலும், பெருஞ் செல்வந்தரென்றாலும் இவருக்கே தகும்!" என்று சரமாரியாகப் பொழிந்தவண்ணம் நண்பன் நரேந்திரன் என்முன் நின்றான். "நீ எங்குவந்து முளைத்தாய்! மாலினி உனக்கென்ன முறையாக வேண்டும்! உன்னைப்பற்றியும் உனக்கு ஏற்பட்டிருக்கும் வேதாந்த ஞானத்தைப்பற்றியும்

மாதவன் ஒரு அத்தியாயமெழுதியிருந்தானே! நீ பெரிய வேதாந்தியாய் விட்டாய்போலும்! அதை எனக்கும் உபதேசிக்கக்கூடாதா" என்று நான் நரேந்திரனைக் கேட்டேன். "மாலினி என் தங்கை. அதெல்லாம் கிடக்கட்டும். முந்தி வயிற்றுப்பாட்டைப் பார்ப்போம், வா. லட்டு, ஜாங்கிரி, தூத்பேடா, குலேப்ஜான், ஹல்வா எல்லாம் சூடு ஆறுமுன் சாப்பிட்டால்தான் ருசியாயிருக்கும்,வா!வா!" என்றுஎன்னையழைத்துச்சென்று இலைமுன் உட்காரவைத்துத் தானும் என்னருகில் உட்கார்ந்தான். அவர்கள் வீட்டில் அன்று எனக்கு முன்னிலும் பதின்மடங்கு உபசாரங்கள் நடைபெற்றன. ஆனால் தூபதீபங்கள் மட்டும் கிடையாது! பண்டிகைச் சாப்பாடு முடிந்ததும் சந்தனம், தாம்பூலம், புஷ்பம் இவைகள் வழங்கப்பட்டன. குழந்தை ஞானநந்தன் நன்றாய் வளர்ந்தும் புத்திசாலித்தனத்துடனும் இருப்பதாக நரேந்திரன் சந்தோஷித்தான். "அண்ணா! அவனையுற்றுப் பார்க்காதே. குழந்தைக்குக் கண் திருஷ்டி பட்டுவிடப் போகிறது. பிறகு உன் காலடி மண்ணைச் சுற்றிப்போடுவேன், ஜாக்கிரதை!" என்றுமாலினி கட்டளையிட்டாள். கிராமபோன் பிளேட்டுக்கள் ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டிருந்தன. "இதை முந்தி வை. வேண்டாம்! இந்தப் பாட்டை வை! அடடா இது நன்றாயில்லையே! நான்தான் அது வேண்டாம் என்று சொன்னேனே! அதோ! அந்தப் புத்தகத்தை எடு. அதிலுள்ள ரிகார்டுகள் அம்மாளுக்குப் பிடித்தமானவை" என்றிவ்வாறு ஞானநந்தனும் ஆனந்தனும் என்ன பாடுகின்றதென்றே அறியவொட்டாது சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள். ராம்மோஹனெழுந்து "போதுமடா! உங்கள் கூப்பாட்டை நிறுத்துங்கள். அம்மாள் ஹார்மோனியம் வாசிக்கட்டும்" என்றார்.

எனக்கு ஹார்மோனியமென்றால் மகா வெறுப்பு. சிலர் அதை வாசிக்குங்கால் எனக்குத் தலைவலிகூட உண்டாவது வழக்கம். ஆனால் மாலினி அன்று அதை வாசித்ததில் ஹார்மோனியத்தையும் வாத்தியக் கருவிகளில் ஒன்றாகக் கணக்கிடலாமென்ற எண்ணம் எனக்கு உதித்தது. கை விரல்களில் அணிந்த வைர மோதிரங்கள் மின்ன, மாலினி மனோகரமாக அவ் வாத்தியத்தை வாசித்தாள். அவள் முகம் கோணாதும், தலை அசையாதும், உடம்பு குலுங்காதும், கண்ணைச் சுழற்றாதும், மெத்த கம்பீரத்துடனும் தானும் சொந்தத்தில் அனுபவித்தும் பாடினாள். துர்க்கா, லக்ஷ்மீ, சரஸ்வதி என்ற மூவரையும் முறையே வழிபடுவதான பண்டிகைக்கு ஏற்றபடி முறையே அவர்கள்மீது பாடிக் கொண்டு வந்தாள். நரேந்திரன் தட்டிலுள்ள வெற்றிலை முழுதையும் மென்று தின்று விட்டு, "மாலினி! அவருக்கு தேசிய கீதமென்றால் விருப்பமதிகம். அதைப் பாடு" என்று தன் தங்கைக்குக் கட்டளையிட்டான்.

"ஜயபாரத ஜயபாரத ஜய பாரத பூமிகோ
ஜய ஜய ஜய ஜய." என்றும்

"பாரத் ஹமாரா தேச ஹை."

என்றும் மாலினி பாடிவந்தாள். இச்சமயம் நாங்களனைவரும் மெய்மறந்து பாரதத்தாயை வணங்கினோம். "சரி, நீ தமிழில் ஒன்று பாடு, இவர்கள் கேட்கட்டும்" என்றான் நரேந்திரன். "இத்தனை நாட்களாக இவருக்குப் பாட்டுத் தெரியுமென்று எனக்குத் தெரியாதே! தமிழில் பாடத் தெரியாவிட்டாலும் நான் பிறர் பாடுவதை யறிந்துகொள்ளக் கற்றிருக்கிறேனே. என் தமிழ் உபாத்தியாயர் யார் தெரியுமா? இதோ இந்த மேதாவியிருக்கிறானே மாஸ்டர்

ஞானநந்தன்! இவன்தான் சொல்லிக்கொடுக்கிறான்'' என்றாள் மாலினி. நரேந்திரனின் பிடிவாதத்தாலும் மாலினி நச்சுப்படுத்தியதாலும் ராம்மோஹன் பன்முறை கேட்டுக் கொண்டதாலும் நான் பாடவாரம்பித்தேன்.

"ஞானத்திலே பரமோனத்திலே உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு
இந்த பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள் பாரத நாடு.''

என்ற பாட்டைப்பாடி பாரதியாரின் கவிச்சிறப்பை எடுத்துக் கூறினேன். "தமிழ் நாட்டார்களுக்கு பாஷாபிமானம் குறைவோ? உயிருடனிருந்தவரை பாரதியாரைப்பற்றி ஒரு பேச்சும் இல்லையே. எங்களைப் பாருங்கள்! வங்கக் கவிசார்வ பௌமரென்றும் கவிச் சக்கிரவர்த்தி என்றும் பெரியார் ரவீந்திரர் எப்படிப் போற்றப்படுகிறார் பாருங்கள்!'' என்று மாலினி நந்தமிழ் நாட்டினரைச் சுட்டிக்காட்டினாள்.

---

## 28-வது அதிகாரம்

விஜயதசமி கழித்து மறுநாள் நரேந்திரனை என் வீட்டிற்கழைத்து வந்தேன். ஊர்ச் செய்திகளைப்பற்றி நெடு நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருந்தேன். நரேந்திரன் பற்பல சமாச்சாரங்களைப்பற்றி சம்பாஷித்தானாயினும், மனோகரியின் மரணத்தைப்பற்றிப் பேசாமலும் நானாக அதைப்பற்றிப் பேசுங்கால் அதற்குச் சரியான விடையளிக்

காதும் அப்பேச்சை மாற்றியும் பேசி வந்தான். எனக்கு இதனால் ஆச்சரியமும் சிறிது மனவருத்தமும் உண்டாயிற்று. நரேந்திரன் தற்சமயம் எனக்கு நண்பனாகக் கருதப் பட்டானானாலும் எனக்குப் பணிந்தும், அடங்கியும் நடக்க வேண்டியவன் ஆவான். நரேந்திரன் சிறு வயதிலேயே தன் தாய் தந்தையர்களை இழந்து விட்டான். இவனை ஆதரிப்பாரில்லாமையால் வழிப் போக்கர்களுடன் ரங்கூன் சென்று அங்கும் பிழைக்க வழியின்றி நானிருக்கும் ஊருக்கு வந்து சேர்ந்தான். இவனைப் போலீஸ் இலாகாவில் ஓர் உத்தியோகத்தி லமர்த்தியதுடன், இவனுக்குத் தக்க சம்பளம் கிடைக்கும்வரை என் வீட்டிலேயே தங்கி யிருக்கச் செய்தேன். இவன் நல்ல புத்திசாலியாகையால் படிப்படியாக உத்தியோகத்தில் முன்னேறி இறுதியில் துப்பறியும் இலாகாவில் தலைமை ஸ்தானமும் வகிக்கலானான். பிற நாட்டினர் தம் நாட்டில் உத்தியோகத்திலோ, வியாபார முறையிலோ முன்னேற்றமடைவதைக் கண்டால், மனத்தாங்கல் உண்டாவது எந் நாட்டிலும் சகஜமானதே. இவ் வெண்ணம் முற்றி விடும் காலத்தில்தான் 'சுதந்திரம்' என்றும், 'சுயராஜ்யம்' என்றும், சொற்கள் தலை காட்டுகின்றன. எவனும் தான் தேடும் பொருளை தனது ஜன்ம தேசத்திற்கு எடுத்துச் செல்ல முயல்வானன்றி பிற நாட்டில் நிலைக்க விரும்பான் என்பது திண்ணம். மாதச் சம்பள மூலமாகவும் வியாபார மூலமாகவும் தங்கள் நாட்டுச் செல்வம் வெளியேறுமானால் அந் நாட்டினருக்கு இவைக்கு மூலகாரணமா யிருக்கும் அயல் நாட்டாரிடம் வேற்றுமையும் பொறாமையும் உண்டாகாம லிருக்குமா? பாரபட்சமின்றி நியாய புத்தியுடன் நிதானிப்போமாயின், இதற்கு மூலகாரணம் அவ ரவர்கள் உள்ளத்தில் ஆழ்ந்து கிடைக்கும் 'தேசாபி

மானம்' என்னும் உணர்ச்சியே யாகும். 'நான்' என்றும், 'என் வீடு' என்றும், 'என் வகுப்பு' என்றும், 'என் நாடு' என்றும், 'என் தாய் நாட்டுச் செல்வம்' என்றும் ஒவ்வொருவன் மனதிலும் உதிக்காவிடில் தேச முன்னேற்றமும், ஒற்றுமையும், சுபிட்சமும் எவ்வாறு நிலைப்படும்? பிற நாட்டினருடன் வேற்றுமையின்றி ஒற்றுமை பாராட்டல் ஒவ்வொரு நாட்டினருக்கும் இன்றியமையாததாயினும், தம் நாட்டின் அபிவிர்த்திக்கும், மக்களின் க்ஷேமத்திற்கும், நாட்டு வளப்பத்திற்கும், சுபிட்சத்திற்கும், மதிப்பிற்கும் அடிப்படையாக விருக்கும் நாட்டுச் செல்வமானது அறிந்தும் அறியாமலுமாக வெளிச்சென்று கொண்டிருக்குமாயின், உலகத்துடன் சமத்துவம் பாராட்டுவதெங்ஙனம்? ஆனால் உத்தியோக விஷயத்திலோ ஒவ்வொருவர் மனதிலும் சுயநலமே மேலிட்டுவிடுவதால் உள் நாட்டினருக்குள்ளாகவே பொறாமையும் மாற்சரியமும் உண்டாய்விடுகின்றன. நரேந்திரன் இந்தியன். வெகு சீக்கிரத்தில் உயர்ப்பதவியையுமடைந்து விட்டான். நெடு நாட்களாக உழைத்தும் சிறிதும் முன்னேறாது ஆரம்ப உத்தியோகத்திலேயே பலர் தாழ்ந்து கிடக்க இவன் மட்டும் குறுக்குவழியில் உயர்ப் பதவியடைந்ததைக் கண்டு அவ்விலாகாவிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பொறாமைப்பட்டது ஆச்சரியமன்று. இவனுக்கு மேலதிகாரிகளாகவுள்ள சிலர் மனதிலும் இப்பொறாமை பொங்கியெழுந்து இவனை எவ்வழியிலேனும் மடக்கிவிடவேண்டுமென்று அதற்கான சமயத்தை எதிர்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

நரேந்திரனிடம் பொய், பிறட்டு முதலிய அணுகக் கூடாது. மனச்சாட்சிக்கு விரோதமான வழியிற் செல்லவே மாட்டான். உண்மையும், சத்தியமும் இவனிடம் குடி

கொண்டிருந்தன. தன் தலை போவதானாலும் தகாத வழியிற் செல்லத் துணியான். தர்மமே ஜயமென்பது இவன் கொள்கை. பரமசாதுவாக டாம்பீகமின்றிக் காலங்கழிப்பவன். லஞ்சம் வாங்கலென்ற பேய் இவனிடம் தலைகாட்ட முடியாது தவித்தது. "இவனென்ன! முழுமூடனாக வன்றோ இருக்கிறான்! இவ்விலாகாவில் பிழைக்க வறியாது போனாலும் பிறரையும் பிழைக்க விடாது அவதிப்படுத்துகிறானே! நல்ல மனிதனப்பா! சனியனாகவன்றோ வந்து முளைத்திருக்கிறான்" என்றிவ்வாறு மற்றவர்கள் இவனைத் திட்டி முணு முணுக்கலானார்கள்.

இச்சமயம் அவ்வூரில் ஒரு விசேஷச் சம்பவம் நடைபெற்றது. குணசீலன் என்ற பிரபுவுக்கு ஏராளமாகத் தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. அவற்றில் வேலை செய்பவர்களில் பெரும்பாலார் இந்தியர்களாகவே இருந்தனர். அத்தோட்டத்திய குமாஸ்தாவான கந்தனின் மனைவி மெத்த அழகுவாய்த்திருந்தாள். குணசீலனுக்கு அவள்மீது நாட்டமுண்டாயிற்று. ஒரு நாள் அப்பெண் தனித்திருக்கும் சமயத்தில் தன் ஆட்களைக்கொண்டு அவளை அபகரித்துச் சென்றான். அப்பெண்ணின் கணவன் மனைவியைக் காணோமென்று போலீஸ்டேஷனுக்கு அறிவித்தான். ஒன்றிரண்டு சாட்சிகளால் அப்பெண் குணசீலன் வீட்டில் அடைபட்டிருப்பதாக வெளியாயிற்று. உடனே அவ்வீட்டைச் சோதிப்பதற்காகக் கந்தன் போலீஸ் தலைமையதிகாரியின் உதவியை நாடினான். இதற்குள் குணசீலன் அவ்வதிகாரிக்கு லஞ்சமளித்து வசப்படுத்திக் கொண்டதால் அவர் இதைக் காதிற் போட்டுக்கொள்ளாது இருந்துவிட்டார். நரேந்திரன் சத்தியவானென்று பலர் கந்தனுக்குத் தெரிவித்ததால் நரேந்திரனை உதவி செய்யும்படி கந்தன்

மன்றாடினான். நீதிபதி கண்டிப்பாக உத்திரவிட்டிருக்கும் போதும்பொலீஸ் அதிகாரி இதிற் பிரவேசியாது மௌனம் சாதிப்பதுகண்டு நரேந்திரன் ஆத்திரமடைந்தான். இவன் அவ்வதிகாரியைக் கண்டு கேட்டதில் "குணசீலன் பெரிய மனிதன். அவனிடம் குமாஸ்தாவாக விருக்கும் பிச்சைக் காரப்பயல் சொல்வதை நம்பக்கூடாது. ஏற்கனவே அவள் பேர்பெற்ற விபசாரிதானும். நானே பேசாதிருக்கும்போது உனக்கென்ன? நீயோ இவ்வூருக்குப் புதியவன். ஆழந் தெரியாது காலிட்டு விட்டுப் பிறகு விழிக்காதே" என்று அவர் மழுப்பிவிட்டார். கந்தனின் பரிதாபக்கோலம் கண்டு சகியாது நரேந்திரன் தானே நேரிற்சென்று குணசீலன் வீட்டை சோதித்தான். அவ்வீட்டில் அப்பெண் அகப் பட்டாள். அவளைப் பெண் வைத்தியரைக்கொண்டு பரிசோதித்துப் பார்த்ததில் பலாத்காரமாகக் கற்பழிக்கப் பட்டு அதனல் மெத்த கேவலமான நிலையில் இருப்பதாகத் தெரிய வந்தது. அவளை வைத்தியசாலைக்கனுப்பிவிட்டு குணசீலன்மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தான். கந்தன் மனைவி காய்ச்சல் கண்டு வைத்தியசாலையில் மாண்டு விட்டாள். "ஈட்டி எட்டினவரை, பணம் பாதாளம்வரை" என்று இருக்கிறதன்றோ! கொடியனான குணசீலன் இக்குற் றத்தால் தொலைந்தானென்று பலர் எதிர்பார்த்திருந்த சமயம் அவன் விடுபட்டான். கந்தன் மனைவியிடம் மரண வாக்குமூலம் வாங்கியது முற்கூறிய போலீஸ் அதிகாரி யாகையால் அவர் குணசீலனுக்குச் சௌகரியமாக எழுதி இருந்தார். அதில் அப்பெண் சம்மதப்பட்டே குணசீலன் வீடு சென்றதாயும், நரேந்திரன் அவளை பயமுறுத்தி வாக்குமூலம் வாங்கியிருப்பதாயும் கூறியிருந்தது. ஒருவன் மனைவி தனது சம்மதத்துடன் அயலானிடம் சென்றுவிட்

டால் அது ஒரு குற்றமாகக் கருதப்படமாட்டாதன்றோ! அவ்வூர்ச் சட்டப்படி மனைவியைப் பறிகொடுத்த கணவன் எதிரியிடமிருந்து கலியாணச் செலவை மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும். இக்காரணங்களால் நரேந்திரன் குற்றஞ் சாட்டப்பெற்று, குணசீலன் விடுதலை யடைந்தான். நரேந்திரன் குற்றவாளி அல்லவென்று நிரூபிப்பதில் நான் சிரத்தை எடுத்து இருபதினாயிரம் ரூபாய்வரை செலவழித்தேன். தலைமை யதிகாரி லஞ்சம்பெற்று பொய்வாக்குமூலம் சிருஷ்டித்ததற்காக தண்டனையடைந்து ஆயுள்முடிய வேலையிலிருந்து நீக்கப்பட்டார். குணசீலன் அந்தமான் தீவில் இன்றும் கல் உடைத்துக்கொண்டிருக்கிறான். இவ்வாறு சமயோபகாரம் செய்துள்ள என்னை நரேந்திரன் அலட்சியம் செய்வானா என்று எண்ணி, "நரேந்திரா! பார்வதியைக் கொன்றவன் யார் என்பதைக் கண்டுபிடிக்கமாட்டாயா? என் காரியத்தில் நீ அசிரத்தை காட்டலாமா" என்றேன். "அதுபற்றி நான் அசட்டையாயிருக்கவில்லையே. ஏற்கனவே கண்டுபிடித்து இருக்கிறேன். குற்றவாளியை வெளிப்படுத்த என் மனம் துணியவில்லை. கார்த்திகேயனைக் கொலைசெய்தவனைக் கண்டுபிடித்தாயிற்று. உமாபதி தலைகீழாக நின்றாலும் மற்றவனைக் கண்டுபிடிக்க முடியாதென்பது நிச்சயம். சென்றுபோனதை நினைத்து ஏன் வருந்துகிறாய்" என்றான் நரேந்திரன். "கூடாது, அது கூடாது. பார்வதியைக் கொன்றவனைத் தூக்கிலிடத்தான் வேண்டும். நீ ஏன் மௌனம் சாதிக்கிறாய்" என்றேன். "அதைப்பற்றித் தனிமையில் பேச வேண்டி இருப்பதால் இன்றிரவில் வருகிறேன். சாவகாசமாகப் பேசுவோம். வீண் கவலைப்பட்டுக் காலங் கழிக்கவென்றே நீ பிறந்திருக்கிறாய். தருமம் உன்னைத் தலை காக்கவில்லை.

விதி யாரைவிட்டது! இதெல்லாம் கிடக்கட்டும், என்னுடன் வா, பவானிபூர் வரை சென்று வருவோம். காளிதேவியின் தரிசனம் காணக்கிடைக்காது" என்று என்னைத் தன்னுடன் நரேந்திரன் அழைத்துச் சென்றான். நரேந்திரன் தமாஷ் பேர்வழி. எப்போதும் சிரிக்கச் சிரிக்க வார்த்தையாடுவான். அவனுடன் அன்று மாலைப்பொழுதைக் கழித்தேன்.

---

## 29-வது அதிகாரம்

அன்றிரவு நான்மட்டும் தனித்திருந்தேன். குழந்தை ஞானநந்தன் மாலினியுடன் சினிமா சென்றிருந்தான். நரேந்திரன் வரவை எதிர்பார்த்திருந்தேன். மணி எட்டடித்தது. நரேந்திரன் படிகட்டு ஏறிவரும் சத்தம் கேட்டு முன்வராண்டாவுக்கு வந்தேன். பிறர் வந்தால் தெரியுமாகையால் அங்கேயே உட்கார்ந்து பேச ஆரம்பித்தோம். "நரேந்திரா! என்னைப்பற்றி நீ ஆதிமுதல் அறிவாய். நான் உன்னை என் உடன்பிறந்தவன்போல் பாவித்து நடந்துவருவதையும் நீ அறிவாய். என் மனதிற்குச் சதா காலமும் சாந்தியில்லை என்பதையும் நீ அறிவாய். பார்வதியின் மரணத்தால் ஒரு குடும்பம் நிலைகுலைந்ததையும் நீ அறிவாய். அவள் கொலைசெய்யப்படாது சகஜமாக இறந்திருப்பின் நான் இவ்வாறு கலங்கமாட்டேன் என்பதையும நீ அறிவாய். எல்லாமறிந்திருந்தும்—துப்பறிவதில் நிபுணனாகவிருந்தும்—அவசியம் கண்டுபிடிப்பாயென நான் நம்பியிருந்தும்—மனம் வைத்தால் குற்றவாளியைக் கண்டுபிடித்தல் உனக்குச் சுலபமான காரியமாயிருந்தும் நீ இவ்விஷயத்தில் இவ்வாறு பாராமுகமாயிருத்தல் நீதியா? மௌனம் சாதிப்பது தர்மமா? சிரத்தை எடுக்காதது சிநேகபான்

மைக் கழகோ? நரேந்திரா! கொலைஞனைக் கண்டுபிடித் தாய்விட்டது என்கிறாயே! அவனை வெளிக்காட்டாத காரணம்யாது? உனக்கு என்மேல் இரக்கமென்பதில்லையா'' என்று கெஞ்சிக்கேட்டேன். இதுவரை வெற்றிலையை மென்று கொண்டிருந்த நரேந்திரன் நித்திரை விட்டு விழித்தவன் போல் கண் விழித்து நிமிர்ந்து உட்கார்ந் தான். அவன் மனம் எங்கோ சென்றிருந்தது. "என்ன! எனக்கு உன் மேல் இரக்கமில்லை யென்று சொன்னாய்? அவ்வாறு கனவிலும் எண்ணாதே'' என்றான். அவன் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் சொரிய லாயிற்று. வலதுகையால் மாரைத் தடவிக் கொண்டு பெரு மூச்செறிந்தான். "அடடா! நான் என் வேதனை தாங்காது சொன்ன சொல்லை நீ இவ்வாறு விபரீதமாகக் கருதி விசனப்படலாமா?'' என்றேன். "அன்னப் படி யளித்து, என்னை இவ்வுயர் பதவிக்குக் கொண்டு வந்து, பேராபத்திலிருந்து என்னைத் தப்புவித்து நிலை நிறுத்திய உனக்கு நான் செய்யும் கைம்மாறு ஈதன்று! அது மெத்த உயர்வுள்ளதாயும் ஒப்பற்றதாயு மிருத்தலவசியம். இதை நினைத்தே என் மனம் உருகுகின்றது. என் மெய் சோர்கின்றது. என் மனம் பதைக்கின்றது'' என்றான். "குழந்தை ஞானநந்தன் வரும் நேரமாயிற்று. அவன் வரும் முன் நமது பேச்சு முடிந்து விடவேண்டும். நீயோ நாளை ஊர்சொல்லப் போகிறாய். சுருக்கமாகவும் விளக்கமாகவும் உன் மனதிலுள்ளதை ஒளியாது உரைத்து விடு. அக் குற்றவாளி உன் பந்துவாயிருப்பின் அவனை மன்னித்து விடுவோம். கொலைஞன் யார் என்பது தெரிந் தாற் போதுமானது. ஒருகால் கார்த்திகேயன் செயலோ அல்லது உமாபதி செய்தானோ என்பதே என் சந்தேகம்.

அவர்கள் நிரபராதிகளாயிருப்பின் நான் இவ்வாறு நினைத்தல் பாவமன்றோ" என்றேன். "இல்லை, இல்லை. அவ்விருவர்களும் குற்றவாளிகளன்று" என்றான்.

"இவ்வளவு நிச்சயமாக நீ சொல்வதைப் பார்த்தால்"—

"ஆம். நான் கண்கூடாகக் கண்ட விஷயம்."

"ஆனால், முந்தி கொலை செய்யப்பட்டது யார்"?

"முந்தி கொல்லப்பட்டது பார்வதிதான்."

"பிறகு"—

"கார்த்திகேயன் கொலை நடந்தது."

"பார்வதி கொலை முந்தியும் கார்த்திகேயன் கொலை பிந்தியும் நடைபெற்றதென்று சொல்லுகிறாய்!"

"ஆம்."

"கார்த்திகேயனைக் கொன்றது யார்?"

"அவன் பகைவன். அவனிடம் வெறுப்புற்றவன். அவனைக் கொல்லவேண்டுமென்று தீர்மானித்திருந்தவன். உனக்கும் தெரிந்தவன்."

"பார்வதியை—"

"அவள்தான் முன்னதாகவே கொலை செய்யப்படிருந்தாளே."

"இல்லை. அங்கு நீ தவறுகிறாய். கார்த்திகேயன் முன்னும் பார்வதி பின்னும் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்."

"நான் சொல்வது சரிதான், தவறில்லை."

"பார்வதியைக் கொன்றவனை நீ ஏன் கைது செய்ய வில்லை?"

"இதுதான் எனக்கேற்பட்ட தர்மசங்கடம். அந்த இடத்தில்தான் தத்தளித்தேன்."

"குற்றவாளியை விட்டுவிடல் நியாயமா? குற்றங் கண்டுபிடித்துக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது தானே உன் தொழில். உன்னை இதற்குத்தான் நியமித்திருக்கிறார்களோ?"

"குற்றம் என்றால் எல்லாம் குற்றமாய் விடுமா? கொலை என்றாலும் அதற்கு மூலகாரணம் என்னவென்பதை கவனிக்க வேண்டாமா? குற்றஞ் சாட்டுமுன் அவன் நோக்கத்தை ஆராய்வதே என் வழக்கம்."

"கார்த்திகேயன் கொலைபற்றி நீ ஏன் மௌனம் சாதித்தாய். அவனை இப்பொழுது தானே கண்டு பிடித்திருக்கிறார்கள்."

"அவனை அச்சமயம்ம பிடித்திருந்தால் பார்வதி கொலையின் மர்மம் வெளியாய் விடுமே!"

"குடும்ப ரகசியத்தைக் காக்கும் நிமித்தம் ஒன்றையும் கவனியாது இருந்து விட்டாய்போலும்! ஆனால் அவன் இப்பொழுது பிடிபட்டிருக்கிறானே."

"அதனால் பாதகமே இல்லை."

"நீ அச்சமயம் அவனை விட்டது பற்றி மனச்சாட்சி உன்னைக் கண்டிக்கவில்லையா?"

"இருதலைக் கொள்ளிபோல் நான் தவித்து முடிவில் என் உத்தியோகத்தை ராஜீநாமா கொடுத்து விடுவதாகத் தீர்மானித்தேன்."

"பார்வதியைக் கொன்றதின் நோக்கம்?"

"பார்வதியைக் கார்த்திகேயனென்று கொலைஞன் தவருக எண்ணி விட்டான்."

"அதற்குக் காரணம்?"

"நீ தான் சொல்லவேண்டும்."

"ஏன்?"

"அவன் மெத்த யோக்கியன். மனமாற ஒரு பெண்ணைக் கொலை செய்யமாட்டான் என்பது சத்தியம்."

"நீ சொல்வது விடு கதைபோலிருக்கிறதே?"

"அப்படித்தானிருக்கும்."

"அதன் காரணம்?"

"என்னால் கூறமுடியாமலிருக்கிறது."

"என்னை யேன் குழப்புகிறாய்? இன்னதென்று உன் வாயாறச் சொல்லேன்!"

"முடியாது, என்னால் முடியாது. என்னால் எடுத்துரைக்க முடியாது. என்னை விட்டுவிடு! உனக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள். என்னை நிர்ப்பந்தப்படுத்தாதே!"

இதற்குள் ஞானாநந்தன் வீடு வந்து விட்டதால் எங்கள் சம்பாஷணை தலைகாலின்றி அப்படியே நின்றுவிட்டது. மறுநாட் காலையில் நரேந்திரன் ஊர் சென்று விட்டதாக அறிந்தேன். "அபத்தப் பஞ்சாங்கத்திற்கு அறுபது

நாழிகையும் தியாச்சியம்", "வெடியா மூஞ்சிக்கு வேலை கிடைக்காது; வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காது" என்றபடி நரேந்திரன் என்னை மீண்டும் சந்தேகத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்திச் சென்றான்.

நரேந்திரன் ஊர் சென்றதும் "நீ விரும்பிய குற்றவாளியின் படத்தை மறு கப்பலில் அனுப்புகிறேன். அங்கிருந்த கால் சுவடுகளையும், அடையாளங்களையும் நான் அழித்துவிட்டதால் நீ இனி எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் அக் கொலைஞன்மீது குற்றஞ் சாட்டமுடியாது! என்னாலும் இனி நிரூபிக்க முடியாது. இதற்குத் தீர்ப்புச் சொல்லக்கூடியவர் கடவுள் ஒருவரே. அவர் எல்லாவுடலிலும் நிறம்பி இருப்பதால் உண்மையை நன்கறிந்து கொள்வாரன்றி இம்மனிதன்மீது குற்றஞ் சுமற்ற மாட்டார்" என்று எழுதியிருந்தான்.

நாங்களிருவரும் சம்பாஷித்த பொழுது எனக்கொன்றும் விளங்கவில்லை. அவன் கடிதத்தால் ஒருவனே இருவரையும் கொலை செய்துவிட்டானென்றும், நான் எண்ணியிருந்தபடி நடக்கவில்லையென்றும் கருதினேன். இதனால் என் மனம் சாந்தி யடைந்தது.

---

## 30-வது அதிகாரம்

நரேந்திரன் கடிதத்தால் இனி மனோகரியைக் கொன்றவனைத் தூக்குமேடையில் நிறுத்தமுடியாதென்றும் அக்கொலைஞன் அவனுக்கு வேண்டியவனென்றும் தீர்மானித்தேன். அன்று வரும் தபாலை அளவற்ற ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். முதல் தபாலில் உமாபதி, மாதவன், மாலதி இவர்கள் எழுதிய கடிதங்கள் மட்டுமே கிடைத்தன. வழக்கம்போல "அண்ணா, நீ குழந்தையுடன்

எப்போது வரப்போகிறாய்'' என்று மாலதியும், "கொலைஞனைக் கண்டுபிடிக்கவில்லையே. நீ ஒருமுறை நேரில் வந்தாலன்றி முடியாது" என்று உமாபதியும், "நரேந்திரன் வாயைத்திறவாதவரை ஒன்றுமே வெளிப்படப் போவதில்லை. இக்கேஸ் வெளிப்படாமலிருப்பதே அவன் உத்தேசம்'' என்று மாதவனும் எழுதியிருந்தார்கள். நான் அன்று எதிர்பார்த்திருப்பது கொலைஞனின் படமன்றி இக்கடிதங்களன்று. 'அவன் யார்? அவன் யாராகவிருக்கலாம்? உமாபதி, கார்த்திகேயன் இருவரும் இல்லை என்றானே. ஒருகால் மாதவனோ! அடடா! ஏன் எனக்கு இத் துர்ப்புத்தி? அவனைச் சந்தேகித்தல் பெரும் பாவமன்றோ? நரேந்திரனுக்கு உயிர்போன்றவர்கள் யார்? அவன் ஏன் இவ்வாறு தடுக்கிறான்? கொலைஞன் இன்னான் என்று தெரிந்தபின் அவனைத் தண்டனைக்குள்ளாக்காது அவன் மனம் தயங்குவதேன். எல்லாம் கண்கட்டுவித்தை போலன்றோ விருக்கிறது. கடவுளே! கருணைக்கடலே! ஆயுள் முடிய இவ்வாறு என்னைத் துன்புறும்படி விதிக்கலாமா? எனது துன்பக் கடலுக்குக் கரை என்பதே கிடையாதோ?' என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் சமயம் ரிஜிஸ்டர் செய்த பார்சல் ஒன்றைத் தபாற்காரன் என்னிடமளித்துச் சென்றான். அதைப் பிரித்து அதிலுள்ள படத்தைக் கையிலெடுத்து உற்று நோக்கினேன்! என் கைகள் நடுக்குற்றன. கண் தெரியவில்லை. நான் ஆகாய வீதியிற் பறப்பதுபோல இருந்தது. அச்சமயம் என் மனம் பட்ட அவஸ்தையை என்னென்று உரைப்பேன். நெடுநேரங்கழித்து எழுந்தேன். மேல்நடக்க வேண்டியதைப் பற்றி சிந்தித்தேன். ஒருவாறு என் மனக்கவலையைப் பிறர் அறியாவண்ணம் அடக்கிக்கொண்டேன்.

இனி நான் தன்னந்தனியனாய் விட்டேன். எனக்கு ஓரிடத்திலும் இருப்புக்கொள்ளவில்லை. பித்தனைப்போல், பேய்பிடித்தவன்போல் அலைகின்றேன். என் மனதிலுள்ளவற்றை பகிரங்கமாகத் தெரிவித்து அதற்கேற்ற சிட்சையை நான் பெறுவேனாயின் மாலதியின் குடும்பம் இப்போதுள்ள சுக சந்தோஷங்களை இழந்துவிடுமே! ஏன்? அழிந்துவிடுமென்றே சொல்வேன். வெளியிடாதிருப்பேனாயின் என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது. தற்கொலையில் மாளவும் என் மனம் துணியமாட்டேன் என்கிறது. இமயமலை சென்று நல்லோர்களை தரிசித்துப் புண்ணிய நதியில் நீராடிக் காய்கனிகளுண்டு காலங்கழிக்கலாம். ஆனால் நான் அதற்கும் துணியமாட்டேன். பரம பாதகனாகிய என் கால்களை அப்புண்ணிய பூமியில் வைக்கலாமா? பாவியின் வாடை அங்குள்ள பக்தர்கள்மீது வீசலாமா? இச்சண்டாளனின் தேகத்தால் அப்புண்ணிய நதிகளைப் பரிசிக்கலாமா? கூடாது! கூடாது! கூடவே கூடாது. ஒருகாலும் கூடாது! கனவிலும் கூடாது! நினைக்கவும் கூடாது! செப்பவுங் கூடாது! வாய் தவறி உரைக்கவும் கூடாது!

வாசகர்களே! ஆரம்பம் முதல் என் அழுகுரலும் பிரலாபமும் கேட்டு உங்கள் மனம் சலித்துவிட்டிருக்கலாம். இன்னமும் உங்களைச் சந்தேகத்திலாழ்த்திவைக்க நான் விரும்பவில்லை. என் வாயைத் திறந்தால் அழுகையும் முறையிடலும் வெளிப்படுமின்றி சந்தோஷச் செய்தி சிறிதும் இருக்கப்போவதே இல்லை. நடந்த விஷயம் இன்னதென்று நான் உரைக்காதவரை உங்களுக்கு விளங்கப்போவதுமில்லை. ஐயோ! நான் என்னென்றுரைப்பேன்! எவ்விதமுரைப்பேன்! என் மனம் நடுங்குகிறதே! நா எழ

வில்லையே. அன்பர்களே! சற்றுப் பொருங்கள். தலைகால் தெரியாது நீங்களும் என்னுடன் கலங்குவதில் பயனென்ன? கவனமாகக் கேளுங்கள்.

அன்பை நான் தகாத வழியில் உபயோகித்தேன் என்று முன்னமே கூறியுள்ளேன். மனேகரியை நான் காதலித்து அவளை யடையமாட்டாது போனதில் அவளை நான் அத்துடன் மறந்து, எட்ட விலகிவிடாமல் அவளிடமே அவ்வன்பை 'சகோதரி' என்ற முறையிற் செலுத்தினேன். மாலதி விஷயத்திலும் இவ்வாறே நடந்து கொண்டேன். ஆனல் மனேகரியிடம் ஏற்பட்ட அன்பு இருவிதம். மாலதியிடம் வைத்த அன்பு ஒரேவிதம். ஒன்று என்பது உறுதியையும், இரண்டு என்பது விபரீதத்தையும் விளைவித்து விடுமென்பதற்கு மனேகரியும் மாலதியுமே தக்க சாட்சிகள். மாலதி என்னல் உருவாக்கப்பட்டாள்! மனேகரி உயிர் நீக்கப்பட்டாள்!! இதைக் காட்டிலும் வேறு அத்தாட்சி எதற்கு?

நரேந்திரனின் உள்ளத்தில் உள்ளதைக் கவனியுங்கள். மனேகரியைக் கொலை செய்தவன் யார் என்பதைக் கண்ணுரக்கண்டிருந்தும் அக்கொலையாளியை வெளிக்காட்டாவண்ணம் வாஞ்சை மெய்யன்பு என்ற இரு தெய்வீகத் தோற்றங்கள் அவனை யடக்கி விட்டன. ஆனல் இச்செய்கை தனது உத்தியோக தர்மத்திற்கு உறித்ததன்று என்று அவன் மனச்சாட்சி அவனை வற்புறுத்தியதால் மாதம் ஆயிரம் ரூபாய்ச் சம்பளம் பெற்று வந்த உயர்ப் பதவியை ராஜீநாமா செய்திருக்கிருன்! கார்த்திகேயன் பரமதுஷ்டன். அவனைப்பற்றி சிந்திப்பதும் பாவமே. அவன் எக்கேடுகெட்டா லென்ன?

கடைசியாக நீங்கள் மனோகரியின் கொலை, என் பிரலாபம் இவ்விரண்டிற்கும் உற்ற காரணம் யாதென்று கேட்கக்கூடும். இரண்டுக்குமிடையே வேறுகாரணமிருப்பதாகக் கருதவேண்டாம். அதற்கிடையே உள்ள காரணம் ஒன்றே! மனோகரியின் கொலையும் என் பிரலாபமும் ஒன்றேயன்றி வேறாக விருப்ப தெங்ஙனம்? நான் ஆரம்பத்திலேயே சொன்ன சொற்கள் உங்கள் மனதிற் பதிந்து கிடக்கின்றனவே. அவைகளை இப்பொழுது ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்! அப்படத்திலிருந்த உருவம் யார் என்று எண்ணுகிறீர்கள்? அதில் மனோகரியைக் கொன்ற கொலைகாரன் இருந்தான். அவன் நானே!

மனோகரியைக் கார்த்திகேயன் கற்பழிக்க முயன்றான். மனோகரி தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்துவிட்டாள். கார்த்திகேயனைக் கொன்று இவ்வாபத்தை விலக்கத் தீர்மானித்தேன். தோட்டக்காரன் மனோகரி படுக்கும் அறையை மாற்றிச் சொல்லிவிட்டான். ஆள் மாறாட்டமாக மனோகரியை என் கையால் குத்திவிட்டுக் கத்தியை எறிந்தேன். கார்த்திகேயனால் சூதாட்டத்தில் ஏமாற்றப்பட்ட ஒருவன் அச்சமயம் தோட்டத்திலிருந்தான். அவன் கார்த்திகேயனை அதே கத்தியைக் கொண்டு கொன்று விட்டான். அக்கொலைஞன் பெயர்பெற்ற 'கேடி' யானதால் அவனை நரேந்திரன் தொடர்ந்து வந்தான். என்னையும், நான் செய்த செயலையும், கத்தியை எறிந்துவிட்டுப் பைத்தியக்காரன்போல் சற்று உலாவியதையும் கவனித்துக் கொண்டிருந்தான். இதற்குள் கார்த்திகேயன் கொலையும் நடந்து விட்டது. அவனைப் பிடித்தால் என் செயலும் வெளியாய் விடுமன்றோ! இதுவே நரேந்திரனுக்கேற்பட்ட தர்ம சங்கடம். இதை நான் எப்படிப் பொறுப்பேன். இனி

எவ்வாறு உயிர் தரிப்பேன். ஆ! தெய்வமே! ஆகா என் தலைவிதியே! நான் ஒரு பாதகன்! கொலைகாரன்! அப்பா! எவ்வளவு பயங்கரமான செய்கை, எவ்வளவு பரிதாபகரமான முடிவு! அன்பின் பயன் கொலை. அன்பின் முதிர்ச்சி வதை, அன்பின் முடிவு கொலை. கொலை கொடுங்கொலை, படுகொலை, பெண்கொலை! ஆகா! என் விதியே! என் விதியின் பயனே!

"எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாது வேறொன்றறியேன் பராபரமே."

என்று காலங்கழிக்க வெண்ணிய நான் பாழும் நரகக் குழிக்கு ஆளாய்விட்டிருக்கிறேனே!

அன்பர்களே! அறிவாளிகளே! என்னை மன்னித்து என் பாபத்திற்குப் பரிகாரமான வழியை எனக்கு உபதேசித்து என்னைப் புனிதனாக்க முற்படுங்கள்! என் செயலை மறந்துவிடுங்கள்!! எனக்கு விடையளியுங்கள்!!! இனி எனக்கு மரணத் தீர்ப்பு அளிப்பவர் கடவுள்தான்.

முடிவில் நான் உங்களுக்குத் தெரிவிக்கும் நற்செய்தி என்னவெனில், குழந்தை ஞானாநந்தனை மாதவனுடன் ஜப்பானுக்கு அனுப்பிவிட்டேன். அவனுடன் ஆனந்தனும் படித்துக்கொண்டிருக்கிறான். அவன் விஷயத்திலாவது கடவுள் கிருபையும் உங்களது ஆசீர்வாதமும் பரிபூரணமாக விருக்கட்டும்.

[முற்றிற்று.]

# மண் பானை

---

"என்ன நான் சொல்வதை கவனிக்கிறீர்களா? ஏதோ சுவாமி கிருபையால் நமது குழந்தை இந்தமட்டும் தலையெடுத்து நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறான். அவன் சமர்த்தும் படிப்பும் உத்தியோகமும் அடக்கமும் யாருக் குண்டு. எல்லாம் அந்த உலகநாயகி அம்பாளின் கிருபை தான். அருமைப் பிள்ளையை சீமைக்கனுப்பிவிட்டு அவன் சௌக்யமாய் வீடு வந்து சேரவேண்டுமே என்று நான் பட்ட விசாரம் பிறருக்குத் தெரியுமோ! குழந்தைக்கு நல்ல உத்தியோகங் கிடைத்தால் அம்மனுக்கு நிலைமாலை வாங்கிச் சாத்தி குடம் பால் அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கொண்டேன். மாமியாருக்குச் சுமங்கிலிப் பிரார்த்தனை முடித்து ஏழைச் சுமங்கலிக்குச் சிகப்புப் புடவை வாங்கிக் கொடுப்பதாயும் பணம் முடிந்துவைத் திருக்கிறேன்" என்று பொன்னம்மாள் தன் கணவனிடம் சொல்ல ஆரம் பித்தாள்.

"சரி, இதெல்லா மெனக்குந் தெரியுமே. பிள்ளைக் குப் பரிக்ஷை தேறுமாவென்று பூசாரியை உடுக்கடிக்கச் சொன்னாய்! அவன் உன் கழுத்திலிருந்த கடியாரச் சங்கிலி யைக் காளியம்மன் கேட்பதாகச் சொல்லி உன்னையேமாற்றி அதைப் பறித்துக்கொண்டான். இதெல்லா மெனக்குந் தெரியுமே!" என்றார் கைலாசம்.

"அடியம்மா, நான் என்ன பச்சைக் குழந்தையா! பைத்தியக்காரியா. பிள்ளையின் பெருமை பெற்ற தாய்க் கன்றோ தெரியும். உங்களுக்கென்ன, ஒரு கவுளி வெற்றி

லையை ஒரு முறையில் போட்டுக்கொண்டு காலங்கழித்தீர்கள். நானல்லவா அவனுடைய க்ஷேமமே எண்ணமாக இருப்பவள். கோவில்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டேன். இதுவும் பிசகா! எத்தனை நாளானாலும் இந்த வேடிக்கைப்பேச்சுதானா உங்களுக்கு! என்னமோ சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் குறுக்கே பேசி நான் சொல்ல வந்ததைத் தடுத்துவிட்டீர்களே! வேறொன்றுமில்லை, நமது குழந்தை நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டான். நமக்கும் வயதாய்விட்டது இனி யவனை விட்டுப் பிரிந்திருக்கக்கூடாது. நான் சொல்வது சரிதானே." "ஆம் சரிதான். குழந்தை நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டான். உனக்கு ஏராளமாக நகை செய்துபோட்டிருக்கிறான். மோட்டாரில் ஊர் சுற்றவும் பெருமை பேசிக்கொள்ளவும் பொழுது சரியாயிருக்கிறது. இவைதானே நீ சொல்லப்போவது. மேலே சொல்" என்றார் கைலாசம். "வீட்டில் பெரியவர்கள் இருந்தால் சிறுவர்களுக்கும் தைரியமாகத்தானிருக்கும். தெருவில் விற்கும் பண்டம் வேண்டுமென்றால் நாட்டுப்பெண் என்ன செய்வாள்? பாவம்! அவளோ சிறுசு. வேலைக்காரர்கள் பொறுப்பாகக் குடும்பத்தை கவனிப்பார்களா? நானொருத்தி இதற்கெல்லாம் வேண்டித்தானிருக்கிறது. நேற்று வண்டியோடு சேலம் கத்தரிக்காய் வற்றல் கொண்டுவந்து தெருவில் விற்றான். அவனோடு ஒரு ஜாமம் ்போராடி விலை தீர்த்து நாலு மரக்கால் வற்றல் வாங்கி வைத்தேன்."

"சரிதான், அதற்குத்தான் 'ஆச்சி வேண்டுமோ ஆயிரம் பொன் வேண்டுமோ' என்பது. உனக்குச் சுக்காங்காய் வற்றலும், மூளிச் சாமான்களும்தான் வாங்கத் தெரியும்! மேலே சொல்" என்றார் பொன்னம்மாளின் புருஷன்.

"இதெல்லாம் எனக்குப் பெருமைக்காக நான் சொல்லிக்கொள்ள வரவில்லை. இனி நாம் இவ்விடமே இருந்து விட்டால்தான் சௌகரியம் என்பதற்காகச் சொல்லுகிறேன். எனக்கு ஒரு நாளும் பெருமை பேசிக்கொள்ளப் பிடிக்காது. இன்னொருத்தியானல் பிள்ளை ஆயிரம் ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகத்திலிருந்தால் என்னைப்போல் அடக்கமாயிருப்பாளா?" "நீ இப்பொழுது வீண் பெருமை பேசிக்கொள்ளவில்லை என்ற எண்ணமா? எனக்கு உன் சமாசாரம் தெரியாதா? நீ வெளியே செல்வதே தற்புகழ்ச்சிக்குத்தானே. தெருத்தெருவாய் சுற்றியடித்து மோட்டார் பெருமையையும் நகைப் பெருமையும் பேசத்தானே பொழுது சரியாயிருக்கிறது." "என் பெருமையை நானு சொல்லிக்கொள்ளுகிறது. ஊாரரல்லவோ சொல்லவேண்டும். நேற்று பார்த்தசாரதிக் கோவிலில் நம்ம ஊர் குப்பிப்பாட்டியைக் கண்டிருந்தேன். அவள் 'என்னடீ பொன்னம்மா! நீயன்றோ பாக்கியசாலி. உன் பிள்ளைக்கு ஆயிரம் ரூபாய் சம்பளமாமே! பில்லைப்போட்ட சேவகன் உன் வீட்டு வாயலில் நிற்கின்றனமே. நீ பெற்றதல்லவா பிள்ளை. மற்றதெல்லாம் அணிப்பிள்ளை, தென்னம்பிள்ளைகள்தான்' என்று நாலு நாழி வர்ணித்தாள். குழந்தை மோட்டார் வாங்கியிருப்பதாயும மற்ற வண்டியிற்போனல் பிள்ளை கோபிப்பானென்றும் இப்போதுகூட மோட்டாரில்தான் வந்திருக்கிறேனென்றும் நான் சொன்னதைக்கேட்டு பாட்டி என்னைக் கொண்டாடினள். ஊாரரெல்லாம் என் பெருமையைக் கொண்டாடுகிறார்கள். அதற்கு நான் என்ன செய்கிறது! அதுவும், நம்ம சேவகன் நாகப்பன் இருக்கிறனே, அவன் தான் கெட்டிக்காரன். கோவிலில் இருந்த பெண்டுகள் கூட்டத்தை ஒரு விநாடியில் தூரப்பிடித்துத் தள்ளிவிட்டு

எனக்கு சுவாமி தரிசனம் செய்வித்தான். பில்லை போட்ட சேவகனைக் கண்டால் குருக்களுக்கு எவ்வளவு பயம் தெரியுமா?"

கைலா: "சரி, பக்தியுடன் சுவாமி தரிசனம் செய்ய வரும் பெண்டுகளை விரட்டியடிக்கத்தான் நீ கோவில் செல்கிறாய் போலும்!"

"இல்லை இல்லை, நானா அப்படிச் செய்யச் சொன்னேன். என்மேல் பழி போடவேண்டாம். நான் சொல்வானேன். 'இதென்ன கஷ்டம்! கண்ட தரித்திரங்களெல்லாம் மேலே படுகின்றனவே' என்றேன். அவனாகத்தான் வழி விலக்கினான். இதையெல்லாம் குப்பிப்பாட்டி பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள்."

"சரி, நீங்கள் சொல்லவந்த விஷயம் இதுதானே! மெத்த சந்தோஷம்" என்றார் கைலாசம்.

"நான் சொல்லவருவதை முழுதுங் கேட்கக்கூடாதா? நமது ஊரிலுள்ள வீட்டை யாருக்காவது வாடகைக்கு விட்டால் மாதம் ஏழு ரூபாய் கிடைக்குமே. நாமோ இவ்விடமே இருக்கப்போகிறோம். ரூபாயிருந்தால் எவ்வளவோ காரியம் நடக்கும்" என்று பொன்னம்மாள் சொல்லி முடித்தாள்.

* * * *

கைலாசம் செங்கற்பட்டுக்கடுத்திருக்கும் நெம்மேலி என்ற கிராமத்திற் பிறந்தவர். இவர் தந்தைக்கு இரண்டொரு ஏக்கர் நிலமும் சிறிய வீடுமிருந்தன. மகனைப் படிப்பித்தால் மாதா மாதம் ஆயிரக்கணக்காகச் சம்பளம் பெற்று உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பான் என்றும் அவ்வருமானத்திலிருந்து பல ஏக்கர் நிலங்களை வாங்கி வீட்டைப் பெரிதாய்க் கட்டிக்கொண்டு சுகமாய் வாழ்ந்து

கொண்டிருக்கலாமென்றும் கைலாசத்தின் தந்தை மனப் பால் குடித்துவந்தார். முடிவில் மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறும்போது கைலாசத்திற்கு வயது இருபதுக்குமேல் ஆய்விட்டது. தெய்வானுகூலமாய் இவர் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தமையால் போலீஸ் கான்ஸ்டேபிள் வேலையில் அமர்ந்தார். கடவுள் கிருபையாலும் இவருக்கிருந்த நன்னெறியினாலும் அவ்வேலையில் படிப்படியாக உயர்ந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பதவியை யடைந்தார். கைலாசம் தனது ஏகபுத்திரன் தண்டபாணியை மெத்த அருமையுடன் வளர்த்து உயர்தரக் கல்வியும் பயிலச் செய்தார். தண்டபாணி இருபது வயதில் பீ. ஏ. பாஸ் பண்ணிவிட்டதுடன் அரசாங்கத்தில் உபகாரச் சம்பளம் பெற்றுச் சீமைக்குச்சென்று ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் முதன்மையாய்த் தேறியதால் ஆரம்பத்திலேயே இவன் முன்னூறு ரூபாய்ச் சம்பளமுள்ள உத்தியோகத்திலமர்ந்தான். பொன்னம்மாள் வயிறு செய்த புண்ணியத்தாலும் மனைவி பாக்கியலக்ஷ்மியின் அதிருஷ்டத்தினாலும் தண்டபாணி தற்சமயம் ஆயிரம் ரூபாய் சம்பளம் பெற்றுவருகிறான். இவ்வேலை கிடைத்ததும் தந்தையைப் பென்ஷன் எடுக்கச்செய்து தாய் தந்தை இருவரையும் தன்னுடன் வசிக்கச் செய்தான். ஏழைக்குடும்பத்தில் கஷ்டப்பட்டுத் தன்னை முன்னுக்குக் கொண்டுவந்த தாய் தந்தையரைப் பயபக்தியுடனும் பரிபூரண விசுவாசத்துடனும் தண்டபாணி நடத்திவந்ததற்கு அவன் மனைவி பாக்கியலக்ஷ்மியின் உயர் குணமே காரணமாயிருந்தது. பாக்கியலக்ஷ்மி ஹைகோர்ட் ஜட்ஜியின் ஏகபுத்திரியாயிருந்தும் மாமன் மாமியிடம் மெத்த விசுவாசத்துடனும் வணக்கத்துடனும் நடந்து கொள்வாள். மாதச் சம்பளத்தைத் தாய் தந்தையரிடமளித்து நமஸ்கரிக்

கும்படி கணவனுக்குச் சொல்வாள். பொன்னம்மாளின் காரியங்களும் பேச்சும் முழுக் கர்நாடகமாயிருந்தாலும் இவள் மாமியிடம் மதிப்புவைத்து நடப்பாள். 'பெற்றோர் மனங்குளிர்ந்தால் மற்றோர் தெய்வமெதற்கு' என்பதையே அடிக்கடி கணவனுக்கு உபதேசிப்பாள். தனக்குக் கிடைக்கும் படிப்பணத்தையும் தான் இருக்கும் அந்தஸ்தையு முத்தேசித்துத் தண்டபாணி ஆறாயிரம் ரூபாயில் மோட்டார் கார் ஒன்றை வாங்கியிருந்தான். ஆனால் அதைத் தனக்கும் தன் மனைவியின் உபயோகத்திற்கும் மட்டுமென்று இவன் எண்ணுவதில்லை. தனது தாய் தந்தையரின் உபயோகத்திற்கென்றே மோட்டாரை விட்டுவைத்திருந்தான். நாள் ஒன்றுக்கு நான்கு முறையாவது மோட்டாரில் வெளியே சென்றுவிட்டு வந்தால்தான் பொன்னம்மாளுக்குத் திருப்தி யேற்படும். இறைக்கும் வெய்யிலையும் பறக்கும் தூசியையும் சிறிதும் லக்ஷியம் செய்யாது வெளியிற் செல்வாள். பொன்னம்மாள் தனியே செல்லும்போது டிரைவரின்பாடு திண்டாட்டமாய் விடும். தனக்கு முன் பழக்கமுள்ள பெண்டுகள் யாரையேனும் கண்டுவிட்டால் பொன்னம்மாள் நடுத்தெருவில் உடனே மோட்டாரை நிறுத்தச் செய்வாள். தன் சிநேகிதியை யருகிலழைத்துப் பிள்ளை சம்பாதிக்கும் பெருமையையும் மோட்டார் வாங்கியிருப்பதையும் வர்ணிப்பாளன்றி அவளையும் வண்டியிலேற்றிக் கொள்ளவே மாட்டாள். தான் மோட்டாரில் செல்வதைப் பிறர் காணும்படி வண்டிக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டே செல்வாள். இவ்வாறு கண்டவிடத்தில் இவ்வண்டி பலமுறை நிறுத்தப்படும். அருகிலிருக்கும் போலீஸ்காரன் அதட்டுவான். 'வண்டியாருடையது தெரியுமா' என்று டிரைவர் மிரட்டுவான். சிற்

சில சமயம் தன்னை யொருவரும் பார்க்காமலிருந்து விடுவார்களோவென்று உற்சவ காலங்களில் பெருங் கூட்டத்திற்கிடையே மோட்டாரை விடச்சொல்லுவாள். கடை வீதி செல்லும்போதுதான் டிரைவருக்கு சிரம மதிகம். ஜனக்கூட்டமுள்ள சிறு சந்துகளில் மோட்டார் விடுவதென்றால் கஷ்டமன்றோ. கற்சட்டிக் கடையில் வியாபாரம் செய்வதில் ஏற்படும் சண்டையை வளரவிடாமல் இவன்தான் கடைக்காரனைச் சமாதானப்படுத்த வேண்டும். பெரிய வீட்டு மனிதரென்று கடைக்காரனை அடக்குவதா, இவ்வேடிக்கை கண்டு கூடும் கூட்டத்தை விலக்குவதா என்று தெரியாமல் டிரைவர் அவதிப்படுவான். பழக் கடை வந்துவிட்டால் அனர்த்தந்தான்! 'டஜன் ஐந்து ரூபாய் கொடுத்து மாம்பழம் வாங்குவார்களா?' என்பாள். 'உன்னுடையதாக விருக்கட்டும், ஒரு பழம் அதிகமாகக் கொடு' என்பாள். பெரிய வீட்டு அம்மாளாயிற்றே என்று பழக்காரன் நினைப்பான். அடுக்காயிருந்தவற்றை யெல்லாம் கலைத்துவிட்டு முடிவில் ஒன்றும் வேண்டாமென்று விடுவாள். மூளியாய்விட்ட ஜாடிகள், உடைந்த சீனிச்சட்டி, விரிந்துபோன இரும்புக் கும்மட்டி அடுப்பு இவைகளைக் கண்டால் பொன்னம்மாள் வாங்காமலிருாள். ஏனெனில் இவை சற்றுமலிவாய்க் கிடைக்கும். 'ஜாடி சற்று மூளியாயிருந்தாலென்ன? உடைந்த சீனிச்சட்டியை ஒரு புறமாய் சாய்த்து அடுப்பில் வைத்தாலாயிற்று! உடைந்த கும்மட்டியை அசையாது ஒரு புறத்தில் வைத்திருந்தால் பத்து வருஷத்திற்கிருதோ!' என்று பொன்னம்மாள் நினைப்பாள். இவ்வாறு கடை வீதியில் வாங்கப்படும் சாமான்கள் எல்லாம் டிரைவர் காலின் கீழ்தான் வைக்கப்படுவது வழக்கம். பொன்னம்மாள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும்போது அனேகமாய்க்

கடலோரத்தில் உலாவிக் கொண்டிருக்கும் மகனையோ கணவனையோ கூட அழைத்துச் செல்லவேண்டியிருக்கும். இச் சாமன்களை அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் வீடு சேர்ப்பிக்கும் பொருட்டு டிரைவர் கால் நீட்டி முடக்க முடியாமல் கஷ்டப்படுவான். இவைகளை யொரு புறமாக நகர்த்த முடியாமல் ஆத்திக்கட்டு ஐந்தாறு அடுக்கிக்கிடக்கும்! வீட்டிலிருக்கும் பசுமாட்டிற்கு ஆத்தி வாங்குதல் ஒளி மறைவில்லா விடினும் அதுவும் முன்புறமே வைக்கப்படும்! கரி மூட்டை முதல் விறகு கட்டுவரை எதை வாங்கினாலும் அதை மோட்டாரிலேயே எடுத்துச் செல்லவேண்டும் !

இவ்வளவு வைபவத்தில் பொன்னம்மாள் மோட்டாரிலேயே கிராமத்திற்குப் போய் வரவும் தீர்மானித்தாள். 'நெம்மேலியார் மோட்டாரைப் பார்த்ததே கிடையாது. இம்முறை நமது காரில் போய் வரத்தான் வேண்டும்' என்று கட்டாயப்படுத்தினாள். கரடு முரடான பாதையில் கார் கெட்டுவிடுமென்று கைலாசம் வாதாடினார். கிழவன் கிழவி யுத்தங் கண்டு மருமகள் கேலி செய்யாமல் 'அதற்கென்ன? அம்மாள் இஷ்டப்படியே ஆகட்டும்' என்று கூறினாள். நகர வாசத்திலேயே மூளி அகப்பையும் உடைந்த சாமான்களும்தானே பெரியம்மாளுக்குக் கிடைப்பது வழக்கம். சொந்த கிராமம் சென்றால் வண்டியில் என்னென்ன சாமான்கள் அடுக்கப்படுமோவென்று டிரைவர் சின்னசாமி வெகுவாய் அஞ்சினான்.

* * * *

மறுநாள் அதிகாலையில் கைலாசமும், பொன்னம்மாளுமாக மோட்டாரில் நெம்மேலி கிராமம் சென்றார்கள். பொன்னம்மாள் அங்கு சென்றதுதான் தாமதம்! அவ்வூரில் ஒருவீடு பாக்கியின்றிச் சென்று தன் பெருமையைப் பேசி

வருவதென்றால் அது சாமானியமா? பிள்ளையின் உத்தியோகம், மருமகளின் சீர்வரிசை, மகன் தனக்குச் செய்திருக்கும் நகைகளின் அட்டவணை, பில்லைபோட்ட சேவகன் பின் தொடர கோவிலுக்குச் செல்லல். இதற்கே ஒருநாள் முழுதும் போதாது. அதிலும் குக்கிராமமாகிற நெம்மேலிக்கு மோட்டாரில் வந்திருக்கிறாள். உண்மையிலேயே அவ்வூராரெல்லாம், மோட்டாரையும், பொன்னம்மாள் காது வயிர ஓலையையும், சரிகைக் கொட்டடிச் சேலையையும், கல்லிழைத்த அட்டிகையையும் கண்டு அனைவரும் அதிசயித்து நின்றனர். "வாடகை மோட்டாரில் போனால் நமது அந்தஸ்துக்குக் குறைவு, நீங்கள் சொந்தக்காரில்தான் செல்ல வேண்டுமென்று என் பிள்ளை சொன்னான்" என்று வீடு வீடாகப் சொல்லிவருவதற்குள் நேரங்கடந்து பகற் சாப்பாட்டிற்கே ஒரு மணியாய் விட்டது. வீட்டின் பல பாகங்களிலுமுள்ள சாமான்களை ஓர் அறையில் அடுக்கி விட்டு சீக்கிரம் புறப்படும்படி மனைவியைக் கைலாசம் துரிதப்படுத்தினார். மோட்டார் பிரயாணத்திற்குச் சித்தமாய் பம்! பம்! என்று ஊதிய வண்ணம் தெருவாயிலில் வந்து நின்றது. பொன்னம்மாள் ஒவ்வொரு சாமான்களையும் எடுத்து வரும்போதெல்லாம் அவைகளை வழி நடையிலுள்ள அறையில் வைப்பதாய்க் கைலாசம் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அவை எல்லாம் சிறுகச் சிறுக மோட்டாரில் அடுக்கப் பட்டுவந்தன. முன்புறம் முழுதும் அடைத்தாயிற்று. டிரைவர் இனி வண்டியிலுட்காருவதற்குத் கதவை திறக்க முடியாது. தாண்டிக் குதித்தே உட்காரவேண்டும். இதற்கு மேல் புது விளக்குமாற்றுக் கட்டொன்றும் வைக்க வேண்டியதாயிற்று! 'அம்மா, அதிலுள்ள ஊகாமுள்ளெல்லாம் என் உடையிற் பற்றிக்

கொள்ளுமே' என்று சின்னசாமி மறுதளித்தான். 'நீ இதை உனக்கருகில் வைத்துக் கொள்ளாவிட்டால் நான் என்ன செய்வேன் தெரியுமா? நீ ஒரு நாள் மோட்டாரில் உன் சிநேகிதனை ஏற்றிக்கொண்டதையும் நீ வண்டியிலுட் கார்ந்து பீடி பிடிப்பதையும் சின்ன எஜமானரிடம் சொல்லிவிடுவேன்' என்று பொன்னம்மாள் அவனை அதட் டியதால் விளக்குமாற்றுக் கட்டும் மோட்டார் ஏறிற்று. இனியுள்ளவற்றைத் தாங்கள் உட்காருமிடத்தில்தான் வைக்கவேண்டுமென்பதைப் பொன்னம்மாள் அறிந்தாள். "என்ன, உங்களைத்தானே! இந்தப் பெட்டியை நாம் உட்காருமிடத்தில் வைத்துக்கொண்டால் என்ன" என்று கணவனைக் கேட்டாள். "இதெல்லாமெதற்கு? ஊரில் வேண்டிய டிரங்குப் பெட்டிகள் அடுக்கிக் கிடக்கின்றன. பூட்ட முடியாத மரப்பெட்டி எதற்கு" என்றார் கைலாசம். "இதென்ன நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்களே? இது ஆவிவந்த பெட்டியாயிற்றே. இது வாங்கின மறுநாள்தான் உங்களுக்கு ஏட்டு வேலை கிடைத்தது. அந்த மாதத்தில் கிடைத்த சம் பளம் இருபத்தைந்து ரூபாயையும் இதில்தான் வைத் துப் பூட்டினேன். இந்தப் பெட்டியாலேதானே நமக்கு இவ்வளவு அதிருஷ்டமுண்டாயிற்று!" என்று பொன்னம் மாள் எடுத்துக் கூறி அதை வண்டியிலேற்றினாள். அதற் கடுத்தபடியாக மூடியில்லாத ஐந்தரைப்பெட்டி யொன்று வந்தது. "சென்னைப்பட்டணத்தில் தகர ஐந்தரைப்பெட்டி கிடைக்குமே" என்றார் கைலாசம். "நன்றாய்ச் சொன் னீர்கள்! அந்தப் பாழுந் தகரப்பெட்டியில் கடுகு, மிளகு வைப்பதினால்தான் இக்காலத்தில் உடம்பு கெட்டுப்போகின் றது! இதில் சாமான் வைத்தால் சீக்கிரத்தில் செலவாகாமல்

எனக்கு வளர்ந்து கிடப்பது வழக்கம்” என்று பொன்னம் மாள் கூறினாள். “ஐயோ ! இந்த மர உரலும் உலக்கையு மெதற்கு?” என்று கைலாசம் கூவினார். “உங்களுக்கென்ன தெரியும். அந்தப் பாழும் மிஷின் அரிசி தின்பதால் ஜீரண மாவதில்லை. இதில் அரிசி குத்திச் சாப்பிடும்வரை ஒரு குறைவுமில்லாமலிருந்தது. இனி வீட்டிலேயே அரிசி தீட்டிக்கொள்ளவேண்டும்” என்றாள். “அடடா ! இந்த எந் திரமும் வேண்டுமோ” என்று கைலாசம் திகைத்தார். “குடியானச்சி சரியாய் மாவரைப்பதில்லை. இதுவானால் தங்கம்போல் மெல்லிசாய் இருக்கும். நானே அரைத்துக் கொள்வேன்” என்று பொன்னம்மாள் சமாதானங் கூறினாள். “இந்த அம்மி எதற்கு?” “வீட்டிலுள்ள அம்மி ஆமையோடுபோல முதுகு தூக்கியிருக்கு. இதில் பருப்புத் துகையலரைத்தால் நிமிஷத்தில் மசிந்துவிடும்!” “பழம் பாய்கள் வேண்டாமே!” “உங்களுக்கென்ன தெரி யும். குழந்தை எல்லாரையும் தன்னைபோல் ஆயிரம் ரூபா சம்பளக்காரர் என்றே நினைத்து மரியாதை செய்கிறான். கண்டதரித்திரங்களுக்கெல்லாம் உயர்ந்த ரத்ன கம்பளத் தைக் கொடுத்துவிடுகிறானே. வீட்டில் வரும் விருந்தாளி களுக்கெல்லாம் படுக்க இந்தப் பாயை அங்கே கொண்டு போனால் சௌகரியம்.” இவ்விதமாகவே மண் அடுப்பு முதல் எல்லாச் சாமான்களும் வண்டிக்குள் வந்துவிட்டன. இனி வண்டியில் கால் வைக்கவும் இடமில்லை என்று கைலாசம் சத்தமிட்டார். “ சரி, ப்போனால் போகட்டும்! சற்று நெறுக்கி உட்கார்ந்து எனக்கு இடங்கொடுங்கள். இந்த மாங்காய்ப் பானையைக் கீழே வைத்தால் உடைந்து போம். என் மடியில் வைத்துக் கொள்கிறேன். இந்த ஊஞ் சல் பலகையை மட்டும் வண்டிக்குள் மேலாக வைத்துவிட்

டால் போதும்" என்றாள் பொன்னம்மாள். "இப்போதுள்ள சாமான்களே தலைக்குமேலுயரமா யடுக்கப்பட்டிருக்கிறதே" என்றார் கைலாசம். "தந்தம்போலக் கருங்காலி மரத்தில் இதைச் செய்தார் மாமனார். வெய்யில் தறுவாயில் இதில் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருப்பார். இதை எடுத்துப்போனால் கோடைகாலத்தில் காற்றோட்டமாக இதில் உட்கார்ந்துகொண்டிருப்பேன்" என்று பொன்னம்மாள் பிடிவாதம் செய்தாள். ஊஞ்சற் பலகையை எங்கே வைப்பது என்ற யோசனையுண்டாயிற்று. "நாம் வண்டியில் உட்கார்ந்துக்கொண்டு கதவை மூடிவிடுவோம். கதவுக்கு வெளியில் ஊஞ்சல் பலகையைச் சாய்த்து வைத்து விட்டால் நான் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்று பொன்னம்மாள் உபாயம் கூறினாள். எப்படியாவது புறப்பட்டாற் போதுமென்று கைலாசம் வண்டியிற் புகுந்து உட்கார்ந்துகொண்டார். உரலும், அண்டாவும் முழங்காலி லிடிப்பதையும் பொறுத்துக்கொண்டார். பொன்னம்மாளும் வண்டியிலுட்கார்ந்துவிட்டாளாயினும் கதவுக்கு வெளியிலுள்ள காலை உள்ளே இழுத்துக்கொள்ள மெத்த சிரமப்பட்டாள். கதவை மூட முடியாதலால் டிரைவர் கதவைக் கயிறுகொண்டு கட்டிவைத்தான். கால் வைத்து ஏறும் படிக்கட்டில் ஊஞ்சலைச் சார்த்தினான். பொன்னம்மாள் வண்டியிலிருந்தவாறு தன் மடியிலிருந்த மாங்காய்ப் பானையையும் வெளியிலிருந்த ஊஞ்சற் பலகையையும் இரு கைகளால் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். நடுவழியில் விழுந்துவிட்டால் என்ன செய்கிறதென்று கைலாசம் சொல்லிப் பார்த்தார். "நன்றாயிருக்கு! இதென்ன கட்ட வண்டியா. மோட்டார் விமானம்போல் பறக்காதோ" என்று பொன்னம்மாள் பெருமை பேசிக்கொண்டாள்.

வண்டி சற்று நகரவாரம்பித்ததும் "ஐயோ! மறந்து போய்விட்டேனே! வாசல் குறட்டில் சங்கிலிகளை வைத்திருக்கிறேன். சங்கிலி யில்லாமல் ஊஞ்சலென்ன பிரயோஜனம்" என்று பொன்னம்மாள் ஞாபகப்படுத்தினாள். கைலாசம் இறங்க முடியாத நிலையில் உட்கார்ந்திருப்பதால் வந்த கோபத்தை யடக்கிக்கொண்டு பேசாது இருந்தார். இதை கவனித்துக்கொண்டிருந்த மேலாத்து முத்துவய்யர் அச்சங்கிலிகளை யிழுத்துவந்து வண்டிக்குட் போட்டார். வண்டி செல்லச்செல்ல ஒவ்வொரு சாமானும் அசைந்து சரியத் தொடங்கிற்று. இனி காலைத் தொங்கவிடமுடியா தென்ற நிலைமையில் காலை மடக்கிக் கொண்டு கைலாசம் உட்காரவேண்டியதாயிற்று.

* * * *

என்ன செய்வார் பாபம்! எப்படியாவது ஊர் சேர்ந்தால் போதுமென்று பொறுமையுடன் இருந்தார். கூடுவாஞ்சேரிக்கருகில் வரும்போது மாலை மணி ஐந்தடித்துவிட்டது. டிரைவர் பொழுதுடன் திரும்பி விடலாமென்றதால் விளக்கை யெடுத்து வராமலிருந்துவிட்டான்.

எதிரில் வரிசை வரிசையாக வைக்கோல் வண்டிகள் வந்த வண்ணமிருந்தன. கட்டியிருந்த கயிறு அறுந்து கதவு திறந்து கொண்டது. அதில் சாத்தியிருந்த ஊஞ்சல் கீழேவிழுந்து விட்டதுடன் உள்ளிருந்த செப்புக்குடமும் பொன்னம்மாள் மடிமீதிருந்த, குங்கிலியம் கட்டிப் பழகிய மாங்காய்ப்பானையும் உருண்டு விழுந்தன. பொன்னம்மாளிட்ட கூச்சலினால் டிரைவர் வண்டியை நிறுத்தினான். கைலாசம் இருந்த விடம் விட்டசைய முடியாது டிரைவரை நோக்கினார். அவனும் இருக்கைவிட்டெழுந்திராமல் உட்கார்ந்திருந்தான். "என்னடா முட்டாளாயிருக்கிறாய்! கீழி

ரங்கி விழுந்த சாமானை யெடுக்காமல் வேடிக்கை பார்க்கிருயா '' என்று அதட்டினர். "சுவாமி, அசையவும் இடமில்லை '' என்று சின்னசாமி பதிலளித்தான். கைலாசம் மெத்த சிரமத்துடன் முற்பக்கத்தை எட்டிப் பார்த்தார். இரண்டுகூடை நிறைய கற்சட்டிகள், எண்ணெய்க்குடம் இரண்டு, பழையசாக்கு மூட்டை, கூடைகள், சல்லடை, முறம், கன்றுக்குட்டிச் சங்கிலி, விபூதிமுட்டான் நிறப்பிய கூடை, செம்மண் கட்டிகள், சுண்ணும்புப் பல்லாய், தயிர் கடையும் மத்து, தென்னங் கயிறு, பழைய உறிகள், பெரிய சந்தனக்கல், விளக்கு மாற்றுக் கட்டு, வைக்கோல் பிறிமணை கள், அகப்பைக் கூடு, சரகுகட்டுகள், தென்னேலைச் சுருள்கள், கற்சட்டிகள், தேங்காய் நார், உறுமட்டை நிரப்பிய சாக்குகள் முதலிய சாமான்கள் அடுக்கப்பட்டு அவைகள் நடுவில் டிரைவர் விளங்கினன். இந்தப்பரிதாபக் காட்சியைக் கண்டு கைலாசத்திற்குப் பிரமாதமாய்க் கோபம் மூண்டுவிட்டது. "உன் அற்பபுத்தி போகவில்லையே? காசு பெருத சாமான்களை எல்லாம் அடுக்கிவைத்திருக்கிருயே. கஷ்டப்பட்ட நாளெல்லாம் போருதா? உன்னைப் பிடித்த தரித்திரம் மட்டும் விடமாட்டேனென்கிறதே? பிள்ளை சம்பாதித்தும் பெரும் புத்தியைக் காணுேமே? இன்னமும் சாணிதட்டிய புத்தியை விடமாட்டேனென்கிருயே! மோட்டாரில் இதைத்தான் வைக்கலாமென்ற விவஸ்தை கிடையாதா! என் முழங்கால் முகத்தி லிடிக்கும்படி இங்கே வைத்த சாமான் போதாதா? டிரைவர் நகரவும் இடமில்லையே? கீழே விழுந்ததை யார் எடுப்பது? தரித்திரப் பிணமே, மூதேவி, கழுதை, முட்டாள், பீடை, சனியன், அற்பம்'' என்று சரமாரியாய்த் திட்டத் தொடங்கினர். அச்சமயம் எதிர்ப் புறத்திலிருந்து மோட்டாரில் வந்து

கொண்டிருந்த இரண்டொரு சுதேசி கனவான்கள் இவர்களைச் சற்றும் கவனியாமற் சென்று விட்டார்கள். இந்த மட்டும் அவர்கள் வண்டியிலுள்ளதைப் பாராமல் சென்றார்களே என்று கைலாசமும் சற்று மனம் தேறினர். அடுத்தாற்போல் மோட்டாரில் வந்த ஆங்கில கனவான் மட்டும் இக்கோலாகலத்தைக் கண்டு தமது வண்டியை நிறுத்தி 'என்ன விசேஷம்' என்று வலுவில் விசாரித்தார். வெட்கத்தை மனதிலடக்கிக் கொண்டு கைலாசம் தான் கிராமம் சென்றதையும் மனைவி எல்லாச் சாமான்களையும் அள்ளி வந்திருப்பதையும் தெரிவித்தார். இதைக்கேட்டதும் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு துரை விழுந்து விழுந்து சிரித்தார். ஒருவாறாகச் சிரிப்பை யடக்கிக்கொண்டு "பெண் பிள்ளைகள் என்றால் எங்கும் இப்படித்தான். வீட்டுச் சாமான்களில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். ஒன்றையும் விடமாட்டார்கள். இதிலென்ன குற்றம்" என்று பதிலளித்துத் தன் ஆட்களைக் கொண்டு விழுந்த சாமான்களை எடுத்து மீண்டும் அடுக்கி ஊஞ்சலைப் பின்புறத்தில் வைத்துக் கட்டச்செய்து 'குட்பை' சொல்லிச் சென்றார். இருட்டும் முன் வீடுசேர வேண்டுமே என்ற பயத்தால் சின்னசாமி வெகுவேகமாக மோட்டாரை ஓட்டிச் சென்றான். சென்னைக்கு இன்னம் நான்கு மைல்கள்தான் பாக்கி. "அடடா! இங்கே இருந்த முக்காலியைக் காணோமே. ஐயோ! அது ஆவிவந்த பொருளாயிற்றே! வழியில் விழுந்துவிட்டிருக்கிறதே" என்று பொன்னம்மாள் கூச்சலிட்டு வண்டியை நிறுத்தச் சொன்னாள். "முக்காலி போனால் நாற்காலி வருகிறது. இதற்கென்ன பிரமாதம். இனி நீ விழுந்துவிட்டால் கூட நான் எடுக்கப் போவதில்லை! உனக்கு ஆவிவராத பொருள் உண்டா!

விளக்கில்லாத வண்டியை வெளிச்சத்துடன் வீடு சேர்க்க வேண்டும்'' என்று கைலாசம் கர்ஜித்தார். இந்தக்ஷணம் வண்டியைத் திருப்பத்தான் வேண்டுமென்று பொன்னம் மாள் போருடினுள். கிழவனும் கிழவியும்போர் புரிவது கண்டு சகிக்காமல் டிரைவர் சின்னசாமி வண்டியைத் திருப் பினன். சாமான்கள் விழுந்தவிடத்தில் எவ்வளவு தேடியும் முக்காலி அகப்படவில்லை. சுதேசிக்கடையில் நல்ல முக்காலி கள் கிடைக்குமென்று கூறி சின்னசாமி வண்டியைச் சென் னைப்பக்கம் திருப்பினன். "குழந்தை பிறந்தபோது எங் கம்மாள் அதை சீர்கொடுத்தாள். நான் அதில் உட்கார்ந்து தான் குழந்தையைக் குளிப்பாட்டுவது. அதில்லாமல் தயிர் கடையவே மாட்டேன். ஆவிவந்த பண்டத்தை எடுத்துவந் தேனே. இது வந்தவேளை மாட்டுப் பெண்ணுக்குக் குழந்தை பிறக்கவேண்டுமென்றல்லவோ வேண்டிக்கொண்டு வந்தேன். அடியம்மா, கிராமதேவதை கோவிலில் இறங்கி நமஸ்காரம் செய்வது வழக்கமென்று சொன்னுல் கேட்டீர் களா? அதனுலே தான் அச்சானியம்போல முக்காலி கெட் டுப்போயிற்று. புருஷர்களாயிருந்தால் என்ன. பெண்டாட்டி சொல்வதைக் கேட்காவிட்டால் அந்த வீடு விளங்கவே மாட்டாது. 'எட்டிக்குப் போட்டி ராமனுக்குப் பாட்டி.' இப்படியே உங்களுடன் நான் காலங்கழித்து வருகிறேன்! என்னை அடக்கிய நாளெல்லாம் போதாதா? ஏதோ அவ ளுக்கும் வயதாகிவிட்டது என்று நீங்கள் எண்ணுவதில் லையே. கிராமத்திற்குச் சென்றுல் இஷ்டமித்திர பந்துக்க ளிடம் பேசவேண்டாமா? அங்கும் 'புறப்படு, புறப்படு' என்று அதட்டினீர்கள். சாமானை ஏற்றும்போது வேண்டாம் வேண்டாம் என்றுல் அது அபசகுனமில்லையா? அருமை யான பொருள் தொலைந்தது! போதும்! போதும்! இனிமேல்

என் ஜன்மாயுசுக்கும் உங்களுடன்கூட வெளியே வரப் போவதில்லை. மேலாத்து முத்து எதிரில் வந்தபோதே ஒற்றைப் பிராமணன் எதிரில் வருகிறானே என்று எண்ணினேன். அதற்கேற்றதுபோல கிளிபோலிருந்த மூக்காலி தொலைந்துபோயிற்று'' என்று பொன்னம்மாள் கோபித்தாள். “வேண்டவே வேண்டாம். இன்று பட்ட அவதி ஆயுள்முடிய எனக்கு நினைவிருக்குமே. ராமேசுவரம் சென்றும் சனீச்வரன் விவண்டுமா? இந்தத் தடவை எனக்கு புத்தி வந்துவிட்டது! இனி எங்கள் அப்பன் ஆணை! உன்னையழைத்துக்கொண்டு எங்கும் செல்லவே மாட்டேன்'' என்று கைலாசம் சொல்லி முடிப்பதற்குள் மோட்டார் வீட்டு வாயிலில் நின்றது. ஊர் சென்றவர்கள் இன்னம் வரவில்லையே என்று தண்டபாணி தெருவிலும் பாக்கியலக்ஷ்மி வழிநடையிலும் நின்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். வண்டி வந்து நின்றும் உள்ளிருந்தவர்கள் இறங்கி வரக்காணோம்! காரணத்தை வண்டியினருகில் வந்த பின்பே தண்டபாணி அறிந்து கொண்டார். அதில் அடைத்து வைத்திருந்த சாமான்களைக் கண்டதும் தன்னையறியாமல் உண்டான சிரிப்பை வாய்க்குள் அடக்கிக்கொண்டு வேலையாட்களை கொண்டு சாமான்களை ஒவ்வொன்றாய்க் கீழிறக்கினார். “ஏன் அம்மா, சாமான் கொண்டு வருவதாகச் சொல்லியிருந்தால் ஒரு ஆளை கூட அனுப்பியிருக்க மாட்டேனா'' என்று தாயைக் கேட்டார். “உன் அப்பா வண்டியில் பாதி அடைத்து உட்கார்ந்துகொண்டு அடித்த கூற்றுப் போறாதா? ஆள் ஒருவனும் வந்திருந்தால் இன்னம் இடமடைத்துக் கொண்டுவிடாதா'' என்று பொன்னம்மாள் பதிலளித்தாள். இந்த மட்டும் தப்பிப் பிழைத்தேனென்று கைலாசம் வண்டி விட்டிறங்கினார். பொன்னம்

மாள் மருமகளைக் கண்டதும் "அடியம்மா! இந்தக் கிழவரை யழைத்துப் போய் போதும் போதுமென்றாய்விட்டது. ஒரு சாமானையும் எடுக்கவிடாமல் அவதிபடுத்தினார். அழகான ஆவிவந்த முக்காலியைத் தொலைத்தாயிற்று. 'அடே! வண்டியை நிறுத்தடா! வழியில் முக்காலி விழுந்துவிட்டதே!' என்று கூவினேன். வண்டிக்காரன்மீது என்ன குற்றம். உன் மாமனார் வண்டியை நிறுத்தமாட்டேனென்று பிடிவாதப் படுத்தினார். உடனே சென்று பார்த்தாலல்லவா கிடைக்கும். ஆவிவந்த முக்காலி! அழகான முக்காலி! ஆசைப்ப பட்டு எடுத்துவந்தேன். சகுனத்தடைபோல ஒவ்வொரு சாமானையும் வேண்டாம் வேண்டாமென்றே தடுத்தார். முக்காலி கெட்டுப்போயிற்று" என்று கூறினாள். வழியில் விழுந்துவிட்டதாகப் பொன்னம்மாள் சாதித்த முக்காலி வண்டி வந்த வேகத்தில் உருண்டு அண்டாவிற்குள் கிடந்தது. அதுகண்டு பொன்னம்மாள் சந்தோஷித்தாளாயினும் குங்கிலியம் கட்டிப் பழக்கின மாங்காய்ப் பானை உடைந்து போன வருத்தத்தைமட்டும் மறக்கவே இல்லை! ஒவ்வொரு வருஷத்திலும் மாவடு ஊறுகாய் போடும்பொழுதெல்லாம் அந்த மண் பானையின் வடிவைப்பற்றியும் அழகைப் பற்றியும் வர்ணித்துக்கொண்டே இருந்தாள்.

மண் பானையை மறப்பதெங்ஙனம்?

[முற்றிற்று.]

# THE SRIMATHI PUBLISHING HOUSE,

TRIPLICANE, MADRAS.

*Dated,* ............................................ *1934.*

DEAR SIRS,

This is to bring to your kind notice that we have arranged to publish a Series of Novelettes and Short-stories from the pen of that well-known Author and Journalist, Sister V. Balammal. Her name and fame as the best of Short-story writers of the present times is so well established, that, the Books of the Series, well-got-up and very low-priced as they are, are sure to prove to be the best sellers throughout India, Burma, Malaya and Ceylon. The first three Numbers of the Series have already come out and have received the whole-hearted appreciation of one and all; we will be at present publishing at least two Numbers per month, one about the middle and the other at the end of every calendar month. The number of copies will be 2,000 per issue, with a likelihood of this figure being appreciably raised to the 5,000 limit in the near future; the real underlying merit of our present enterprise is so well-known that already a number of shrewd Business-Men have availed themselves of our present low rate to advertise their goods with vim and vigour.

We beg to suggest that your advertisement in our Publications will never fail to enhance the sale of your goods and products and thus give you every satisfaction in that respect; a Trial is earnestly solicited.

Please refer next page for Advt. rates.

Yours faithfully,

**The Manager.**

## ADVERTISING TARIFF.

Per Page (Double Crown 16 Vo. Space 6″ × 4″) Rs. 5
Per insertion.

1/2 Page ( do. do. Space 3″ × 4″) Rs. 3-8
Per insertion.

Wrapper Pages already engaged ; on orders for four insertions and above, a reduction of 20 per cent. on the above rates will be allowed. All charges payable strictly in advance. For special long term advertising, please enquire. Voucher copies will be duly forwarded as soon as published.